லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ கள்வனைக் காதலி... ★ முத்துலட்சுமி ராகவன்

முத்துலட்சுமி ராகவன்

கள்வனைக் காதலி...

லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ கள்வனைக் காதலி... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
கள்வனைக் காதலி...

Contents

அத்தியாயம்- 1
அத்தியாயம்- 2
அத்தியாயம்- 3
அத்தியாயம்- 4
அத்தியாயம்- 5
அத்தியாயம்- 6
அத்தியாயம்- 7
அத்தியாயம்- 8
அத்தியாயம்- 9
அத்தியாயம்- 10
அத்தியாயம்- 11
அத்தியாயம்- 12
அத்தியாயம்- 13
அத்தியாயம்- 14
அத்தியாயம்- 15
அத்தியாயம்- 16
அத்தியாயம்- 17
அத்தியாயம்- 18
அத்தியாயம்- 19
அத்தியாயம்- 20
அத்தியாயம்- 21
அத்தியாயம்- 22
அத்தியாயம்- 23
அத்தியாயம்- 24
அத்தியாயம்- 25
அத்தியாயம்- 26
அத்தியாயம்- 27

அத்தியாயம்- 28
அத்தியாயம்- 29
அத்தியாயம்- 30
அத்தியாயம்- 31
அத்தியாயம்- 32
அத்தியாயம்- 33

முத்துலட்சுமி ராகவன் எழுதிய கள்வனைக் காதலி...

அத்தியாயம்- 1

துள்ளிக் குதித்து ஓடிய வைகையாற்றின் நடுவில் இருந்த வட்ட வடிவமான பெரிய கற்களின் மீது கால் பதித்து ஓடினாள் பூர்ணிமா... கால் தடுக்கி விடாமலிருக்க லேசாக உயர்த்தியிருந்த பாவாடையின் விளிம்பின் கீழே தெரிந்த தாமரைப் பாதங்களின் மீது படிந்திருந்த வெள்ளிக் கொழுசின் மணிகள் கலகலத்து குதூகலித்தன.. அவற்றுடன் போட்டி போடுவதைப் போலக் கலகலத்துச் சிரித்தாள் அவள்.. அவளுடன் வந்திருந்த பூங்காவனமும் மல்லிகாவும் பொறாமையுடன் அவளை முறைத்தார்கள்.

"போதும்டி.." என்றாள் பூங்காவனம்..

"எதைப் போதும்ன்னு சொல்ற..?" சிரிப்புடன் கேட்டாள் பூர்ணிமா..

"உன் சிரிப்பைத்தான்.." கடுகடுத்தாள் பூங்காவனம்.

"ஏனாம்..?" இதற்கும் சிரித்தாள் பூர்ணிமா..

"குமரிப் பொண்ணும், கொழுந்து வெத்தலையும் ஒன்னாம்.." என்றாள் பூங்காவனம்.

"இந்தச் சொலவடையை யாரு சொன்னது..?" பூர்ணிமா கேட்டாள்..

"எங்க பாட்டி.." பூர்ணிமா எரிச்சலுடன் சொன்னாள்.

"ஏண்டி மல்லிகா.. ஒன் பாட்டி ஒரு சொலவடையைக் கூடச் சொல்லலியா..? நீ மட்டும் ஏன் உம்முன்னு வர்ற..?"

"பொம்பள சிரிச்சாப் போச்சாம்.. புகையிலை விரிச்சாப் போச்சாம்.." நொடித்தாள் மல்லிகா..

"சரிதான் போங்கடி.. வாயிருந்தா சிரிக்கத்தான் செய்வாங்க.. இதுக்குப் போயி சொலவடைகளைச் சுட்டு அடுக்கறிங்க.. பேசாம வருவீங்களா.."

"ஆத்தா பூர்ணிமா.. ஊரில உலகத்தில இருக்கிற குமரிப் பொண்ணுக சிரிக்கத்தான் செய்கிறாளுக.. உன்னைப் போல இம்புட்டு அழகாச் சிரிக்கலையே.."

"யாருடி சொன்னது..?"

"இந்த வயலூரே சொல்லுது.."

"வயலூருக்கு என்னடி.. சோழவந்தான் மூக்கையா தாத்தா கட்டிக்கிட்டு வந்த கல்பனாப் பாட்டி மாதிரி நான் கலரா இருக்கேன், அழகாச் சிரிக்கிறேன்னு பழமை பேசத்தான் செய்யும்.. அதுக்குன்னு கூட வர்ற ஜோட்டுப் பொண்ணுக அழகில்லன்னு ஆகிருமா.. உன் சிரிப்புக்கென்னடி பூங்காவனம்..? நீ சிரிச்சாப் பூவுசிரிக்கிறதைப் போல இருக்குதுடி.. அது தெரியாம என்மேல பொறாமைப் படறியே.."

"நிசமாலுமா..?" முகம் மலர்ந்தாள் பூங்காவனம்..

"நிசமாத்தான் சொல்றேண்டி.. பொய்யாச் சொல்வேனா..?"

"அப்ப நானு.." ஆவலுடன் கேட்டாள் மல்லிகா..

"நீ சிரிக்கிறப்ப உன் கண்ணிரண்டும் சேர்ந்தில்ல சிரிக்குது.."

"மெய்யாலுமா..?"

"மெய்தாண்டி.. பொய்யில்லை.."

"அப்பச்சரி.."

"எது சரி..? நான் சிரிக்கிறதா..?"

"நாம சிரிக்கிறது.."

தோழிகள் மூவரும் நாணல்கள் அடர்ந்த பாறைப் பகுதியை அடைந்து கையிலிருந்த அழுக்குத் துணிகளை நீரில் முக்கியெடுத்துச் சோப்புப் போட ஆரம்பித்தார்கள்.. ஆற்றின் கரையோரம் தார்ச்சாலை இருந்தது.. பூர்ணிமா அடிக்கடி சாலையைப் பார்த்தாள்.. அதைக் கவனித்த மல்லிகா..

"அங்கே என்ன கூத்தா நடக்குது..? துவைக்கிற வேலையை விட்டுட்டு ரோட்டையே பார்க்கிறவ..?" என்று கடிந்து கொண்டாள்..

"அங்கேயிருந்து பாத்தா இங்கே தெரியுமாடி..?" சஞ்சலத்துடன் கேட்டாள் பூர்ணிமா..

"என்னத்தத் தெரியும்..? ரோடு அங்கே இருக்கு.. நாம இங்கே இருக்கோம்.. நம்மள மறைச்சுக்கிட்டு நாணல் புதர் மண்டிக்கிடக்கு.. அங்கன இருந்து எக்கிப் பாத்தாத்தான் இங்கிட்டு இருக்க நாம தெரிவோம்.. ஏன் புள்ள ஒனக்கு இம்புட்டுச் சந்தேகம்..?"

"சும்மாதான்.."

"இவ சும்மா கேக்கறதைப் போலத் தெரியலையே.." பூங்காவனம் சந்தேகத்துடன் தோழியை ஆராய்ச்சிப் பார்வை பார்த்தாள்..

"போடி.. இவ பெரிசா கண்டுட்டா.." பூர்ணிமா ஆற்று நீரை அள்ளித் தோழியின் முகத்தில் வீசினாள்..

பதிலுக்குத் தோழிகள் பூர்ணிமாவின் மீது நீரை வாரி இறைத்து விளையாடினார்கள்.. சஞ்சலம் மறந்தவளாக பூர்ணிமா பேச்சும், சிரிப்புமாக துணிகளைத் துவைத்து அலசிப் பிழிந்து நாணல் புதரின் மீது விரித்து விட்டு உலர வைத்தாள்.. மற்ற தோழிகளும் அவளைப் பின்பற்ற வேலை முடிந்த விச்ராந்தியான மனநிலையுடன் மூவரும் நீரில் பாய்ந்து நீந்தி விளையாட ஆரம்பித்தார்கள்..

"வாடியம்மா வாடி..

வண்டாட்டம் வாடி..

சோழவந்தான் ஆத்துக்குள்ள

கபடி ஆட வாடி.."

தண்ணீருக்குள் நீந்தியபடி கபடியாட அந்த ஆற்றோடு பழகியவர்களால்தான் முடியும்.. ஆறு தனது பிரியமான தோழிகளை ரசிப்பதைப் போல சலசலப்புடன் ஓடிக் கொண்டிருந்தது.. தோழிகள் மூவரும் ஆற்றைக் கலக்கி உண்டு இல்லையென்று ஆக்கிக் கொண்டிருந்தனர்.

"வைகையாத்துத் தண்ணியைக்

குடிச்சு வளந்தவடி..

தென்னந் தோப்புக்குள்ள

வீடுகட்டி இருப்பவடி..

சடுகுடு.. சடுகுடு.. சடுகுடு.."

பூங்காவனம் மல்லிகாவைத் தொட்டு விட்டு விலகி நீச்சலடிக்க.. மல்லிகா பூங்காவனத்தைத் துரத்த ஆரம்பித்தாள்..

"மேலக்கால் தண்ணியில

வெற்றிலைக்கொடி நட்டவடி

வாழைத் தோப்புக்குள்ள..

காரைவீடு இருக்குதுடி..

கபடி.. கபடி.. கபடி.."

மல்லிகா பூங்காவனத்தின் காலைப் பற்றி இழுத்து விட்டாள்.. அகப்பட்டுக் கொண்ட பூங்காவனம் விலகி நீந்தி கரையைத் தொட்டு மூச்சிரைக்க பாறைமீது சரிந்தாள்.. அவள் பக்கத்தில் இளைப்பாறிய தோழிகள் முகத்திலிருந்த தண்ணீரை வழித்து விட்டு பூங்காவனத்தை தட்டி எழுப்பினார்கள்..

"இதான் சாக்குன்னு ஆத்துப் பாறைமீது தூக்கம் போட ஆரம்பிச்சுட்டாடி.." சிரித்தாள் பூர்ணிமா..

"இவளுக்குப் பூங்காவனம்ன்னு பேரு வைச்சதுக்குப் பதிலா தூங்காவனம்ன்னு பேரு வைச்சிருக்கலாம்.. பேரிலயாவது தூங்காம இருப்பா.. அடியே கும்பகர்ணி.. ஆத்துக்கு குளிக்க வந்து ஆறு மணி நேரமாச்சு.. பொழுது சாயுறதுக்குள்ள வீடு

போய் சேரனும்ங்கிற எண்ணமிருக்கா இல்லையா..?" மல்லிகா சப்தம் போட்டாள்..

"அடிப்பாவி..! அரை மணி நேரத்த ஆறு மணி நேரமாக்கிட்டயே.." கண் விழித்தாள் பூங்காவனம்..

"அரைமணி நேரம்தான் ஆகிருக்கா..? உனக்கே இது அடுக்குமாடி..? ஆத்தைப்பாரு.. நாம கால வைக்கிறப்பத் தேங்காத் தண்ணியப் போல ஆழத்தில இருக்கிற சரளைக் கல்லையும், மணலையும் தெள்ளத் தெளிவாக் காண்பிச்சுக்கிட்டு இருந்துச்சு.. இப்பக் காபித் தண்ணியயும், டீத்தண்ணியையும் சேந்து கலந்து அடிச்சாப்புல கலங்கிக் கிடக்குது.. பாவம்.. வாயிருந்தா அழுதுரும்டி.. மணிக்கணக்கில ஆத்தைக் கலக்கிச் சடுகுடு விளையாடிட்டு அரைமணி நேரம்தான்னு அபாண்டமாச் சொல்றியேடி.." மல்லிகா பிலாக்கணம் வைத்தாள்..

"தூங்காவனமாச்சே.. அப்படித்தான் சொல்லுவா.. நீ வாடி.. நாம வெரசா வீடு போய் சேரலாம்.. பொழுது சாய்ஞ்சுட்டா அம்மாகிட்டப் பாட்டுக் கேட்க முடியாது.. அப்பாகிட்ட வத்திக்குச்சியக் கொழுத்திப் போட்டிரும்.." ஈரப் பாவாடை கால் தடுக்க பூர்ணிமா கரையேறினாள்..

"உன் அம்மா வத்திக்குச்சியக் கொழுத்திப் போட்டா பத்திக்கும்ங்கிற..?" மல்லிகா கேட்டாள்..

"அம்மா கொழுத்திப் போடற வத்திக்குச்சியாச்சே.. பக்குன்னு பத்திக்கும்.." பூர்ணிமா கண் சிமிட்டினாள்..

"அத்தச் சொல்லு.. உன் அப்பாவுக்கு உன் அம்மா மேல இருக்கற மையல்பத்தி இந்த வயலூரே சொல்லுமே.. அந்தக் காலத்துல மூக்கையாவுக்குக் கூட கல்பனா பாட்டி மேல இம்புட்டு மையல் இருந்ததில்லையாம்.. அதையும் தாண்டி உங்கப்பா கோல் போடறாராமில்ல.." பூங்காவனம் கன்னத்தில் உள்ளங்கையை வைத்தாள்..

"இந்த வித்தாரத்தைப் பேசச் சொல்லு.. விடிய விடியப் பேசுவா.. இன்னும் பாறையை விட்டு எழுந்திருக்கிறாளான்னு பாரேன்.." பூர்ணிமா தண்ணீரை அள்ளித் தோழி மீது வீசினாள்..

"எதுக்குடி தண்ணியை வீசற..?"

"உன் தூக்கம் கலையட்டும்ன்னுதான்.."

"என் தூக்கம் கலையறது இருக்கட்டும்.. பாண்டி கோவிலில கடாவெட்டிப் பொங்க வெச்சு, ஊருக்கு கறி விருந்து வைச்சு, எங்கப்பனும், ஆத்தாளும் அழகா.. 'பூங்காவனம்'ன்னு பேரு வைச்சிருக்காக.. நீ அதை விட்டுப்புட்டு என்னத்தையோ ஒரு பேரைச் சொல்லிக்கிட்டு வர்றியே.. என்ன பேருடி அது..?"

"தூங்காவனம்டி.. தூங்குமூஞ்சி.."

உன்னிடம் பேசிக் கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது என்று பூர்ணிமா கரையேறி நாணல் புதர்களின் மறைவில் உலர்ந்த ஆடைகளுக்கு மாற ஆரம்பித்தாள்.. சாலையில் கார் ஒன்றின் ஹாரன் சப்தம் கேட்டதில் உடல் தூக்கிப் போட நாணல் புதருக்குள் முற்றிலுமாக மறைந்து கொண்டு சாலையைப் பார்த்தாள்.. நாவல்பழ வண்ண வெளிநாட்டுக் கார் ஒன்று அன்னப்பட்சியைப் போல நீண்டு விரைந்து சென்று கொண்டிருந்தது..

'அவன் தான்..'

பூர்ணிமா தாவணியை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.. அவளுக்கு அந்தக் காரையும் தெரியும்.. காரில் செல்பவன் எவன் என்றும் தெரியும்..

'கள்ளன்..'

அவளது முகத்தில் சுளிப்பு வந்தது.. அது செல்லச் சுளிப்பு அல்ல.. வெறுப்பும் கோபமும் கலந்த முகச் சுளிப்பு..

அவள் நாணல் புதரின் மறைவில் உடை மாற்றியதை சாலையில் செல்லும் காரில் இருப்பவன் பார்த்திருக்க வாய்ப்பே இல்லை.. அப்படியிருக்க மிகச் சரியாக ஹாரனை ஒலிக்க வைத்து அவன் காரில் செல்வதை அவளுக்கு அறிவுறுத்தியது எப்படி..?

'பார்த்திருப்பானோ..'

பூர்ணிமா நாணல் புதரை விட்டுத் தள்ளி வந்து நின்று பார்த்தாள்.. புதர் மறைவில் உடை மாற்றிக் கொண்டிருந்த மல்லிகாவைப் பார்க்க முடியவில்லை..

'தெரியலை..'

மனது நிம்மதியானது.. இருந்தும் அந்த இடத்தைக் கடக்கும் போது மட்டும் அவனது காரின் ஹாரன் ஒலிப்பது ஏன் என்ற சஞ்சலம் அவளை ஆட்கொண்டது..

அன்று மட்டும்தான் என்றில்லை... அவள் ஆற்றுக்குக் குளிக்க வரும் ஒவ்வொரு முறையும் அவனது கார் சாலையைக் கடக்கிறது.. அவளிருக்கும் இடத்தைக் கடக்கும் போது மட்டும் ஹாரன் ஒலிக்கிறது..

பூர்ணிமாவினால் மெல்லவும் முடியவில்லை... விழுங்கவும் முடியவில்லை.. தொண்டையில் முள் சிக்கிக் கொண்டதைப் போன்ற அவஸ்தை.. ஆற்றுக்குச் செல்லும் நாள்களை மாற்றிப் பார்த்தாள்.. பலனில்லை.. நேரத்தை மாற்றிப் பார்த்தாள்.. பயனில்லை.. அவள் எந்த நாளில் போனாலும் அந்த நாளில் அவன் வந்தான்.. எந்த நேரத்தில் போனாலும் அந்த நேரத்தில் அவனது கார் சாலையில் விரைந்தது... ஹாரனை ஒலிக்க வைத்து நான் இங்கிருக்கிறேன் என்று அவளுக்குத் தெரிவித்தது..

அவனுக்காக ஆற்றங்கரையை மறந்து இருப்பதா..?

பூர்ணிமா ஆற்றைப் பார்த்தாள்.. அவ்வளவு நேரமும் ஆற்றைக் கலக்கிக் கொண்டிருந்தார்களே என்ற கோபம் சிறிதுமின்றி ஆறு அசைந்தாடி அவர்களுக்கு விடை கொடுத்தது..

அதில் நீந்தி விளையாடி நீராடும் அனுபவத்தை எப்படி அவள் இழப்பாள்..? விவரம் தெரிந்த நாளிலிருந்து கும்மாளமிட்ட ஆற்றங்கரையல்லவா இது..

"என்னடி..? ஆத்தையே பாத்துக்கிட்டு இருக்கிறவ..?" மல்லிகா தோளைத் தட்டினாள்..

"ஒன்னுமில்லையே.." பூர்ணிமா ஈரத்துணிகளை ஆற்றில் அலசிப் பிழிந்து நாணல் புதரின் மீது விரித்து விட்டு உலர்ந்த துணிகளை மடிக்க ஆரம்பித்தாள்..

"இதுவும் நல்ல ஐடியாதான்.." மல்லிகா ஈரத்துணிகளை நாணல் புதரின் மீது விரித்து உலர வைத்தபடி சொன்னாள்..

"நாம காஞ்சிருக்கிற துணிகளை மடிக்கிறதுக்குள்ள இதுக பாதி காஞ்சிரும்.. தோளில போட்டுக்கிட்டு வீட்டுக்குப் போகிறதுக்குள்ள மீதியும் காஞ்சிரும்.."

பூர்ணிமா புன்னகைத்தாள்.. தோழிகள் மூவரும் பாதி உலர்ந்திருந்த துணிகளை தோளில் போட்டுக் கொண்டு மடித்து வைத்திருந்த துணிகளையும் சோப்பு டப்பாக்களையும் கையில் எடுத்துக் கொண்டார்கள்.. ஈரத் தலைமுடி விரிந்திருக்க கதை பேசியபடி ஆற்றங்கரையில் நடந்து சாலையின் மீது ஏறினார்கள்..

'இப்ப அவன் வருவான்..'

எதிர்பார்ப்பில் பூர்ணிமாவின் இதயம் படபடவென அடித்தது.. மாலை நேரத்தின் ஈரக்காற்றிலும் வியர்த்தது.. தொண்டை உலர்ந்தது.. கைவிரல் நடுங்கியது..

"ம்ம்ம்.." காரின் ஹாரன் ஒலி..

'வந்துட்டான்..' பூர்ணிமா மனதின் நடுக்கத்தை மறைக்க வெகுவாகப் பிரயத்தனப் பட்டாள்..

சாலையில் கார் தெரிந்தது.. மெதுவாக, மிக மெதுவாக ஊர்ந்து வந்த காரில் அவன் இருந்தான்.. காரை ஓட்டியபடி அவளையே பார்த்தான்.. பூர்ணிமாவின் கால்கள் பின்னின.. கண்ணோடு கண் நோக்கும் அந்தக் கள்வனின் பார்வையைச் சந்திக்க விரும்பாமல் பிடிவாதமாக வேறு திசையில் பார்த்தாள்.. மனதுக்குள் அவன்மீதான வெறுப்பும், கோபமும் கொந்தளித்தன..

அத்தியாயம்- 2

எதிரில் வந்த காரில் இருந்தவனின் கண்களை வெளிர் நீல நிறக் கூலிங் கிளாஸ் மறைத்திருந்தது.. அவனும் வெளீர் நீல நிறத்தில் டி-சர்ட்டை அணிந்திருந்தான்..

'அடர் நீலத்தில் ஜீன்ஸ் போட்டிருப்பான்..' பூர்ணிமாவின் மனம் ஆருடம் 'ஜொள்' ளியது..

'அடச்சீ.. அடங்கு..' மனதிற்கு கடிவாளமிட முயன்றாள் பூர்ணிமா.. அது அடங்க மறுத்துத் திமிறியது..

அவனைக் கண்டாலே அவளுக்கு ஆகாது.. வெறுப்பும், கோபமும் போட்டி போட்டுக் கொண்டு வந்து நிற்கும்.. அவனது கழுத்தை நெரிக்கும் வெறி ஏற்படும்.. அப்படிப்பட்ட வில்லாதி வில்லனைக் கண்டு அவளது மனம் அலைபாய்வதா..?

அது ஏன் என்று அவளுக்குத் தெரியவில்லை.. புத்தியும் மனதும் என்றுமே ஒரே நேர்கோட்டில் பயணிப்பதில்லை.. எதிரெதிர் திசைகளில்தான் பயணிக்கின்றன.. இது சொல்வதை அது கேட்பதில்லை.. அது சொல்வதை இது மதிப்பதில்லை.. இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்பட்டு முட்டி மோதிக் கொண்டிருக்கும் புத்தியையும், மனதையும் வைத்துக் கொண்டு பூர்ணிமா என்னதான் செய்வாள்..?

'ஒரு ஆணியையும் பிடுங்கித் தொலைக்க முடியாது.'

காரின் கண்ணாடி வழி அவன் தெரிந்தான்.. அவனது ஜீன்ஸ் தெரியவில்லை.. அது என்ன கலராக இருக்கும்..?

'இப்ப அதுதான் முக்கியம்..' பூர்ணிமா மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டாள்..

ஊடுறுவும் அவனது பார்வையை அவளால் உணர முடிந்தது.. துளைக்கும் பார்வை அது என்பதை அவள் அறிவாள்..

'லேசர் பார்வை..' அவளது உடல் சிலிர்த்தது..

கண்களைக் கண்ணாடி மறைக்காத பொழுதுகளில் அவனது மேய்ச்சல் பார்வையை அவள் சந்தித்திருக்கிறாள்.. பாதாதிகேசம் முதல் அளக்கும் பார்வை.. காய்ந்த மாடு ஒன்று கம்மங்கொல்லையை எப்படி ஆவலுடன் பார்க்குமோ அப்படிப் பார்க்கும் பார்வை..

'இந்தப் பார்வையை இவனோட அத்தை மக ரத்தினம் கிட்ட வைச்சுக்க வேண்டியதுதானே.. இவனுக்கு அவதான் லாயக்கு..' மனது நொடித்தபடி சோகம் கொண்டது..

'அந்த வித்தாரக்கள்ளி கூட இவனை இணை கூட்ட எனக்கு ஏன் மனசு வர மாட்டேங்குது..'

இதுதான் பூர்ணிமாவின் பயமே.. அவனைக் கண்டாலே அவளுக்கு ஆகாது.. எட்டிக்காயைத் தின்பதைப் போல இருக்கும்.. அப்படிப்பட்ட எதிரியிடம் அவளது மனம் மயங்கிக் கிறங்குவதா..?

"கூடவே கூடாது.." தன்னையும் அறியாமல் வாய்விட்டுச் சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள் பூர்ணிமா.

பேசாத வார்த்தைக்கு நாம் 'பாஸ்' பேசிய வார்த்தை நமக்கு 'பாஸ்..' இதை அறியாமல் வாய் விட்டு விட்டு பூர்ணிமா நாக்கைக் கடித்து என்ன பண்ண..? காலம்தான் கடந்து விட்டதே..

"எதுடி கூடாது..?" மல்லிகா சந்தேகத்துடன் கேட்டாள்..

காரில் வருபவனையே வைத்த பார்வை மாறாமல் பார்த்தபடி ஒயிலாக (?) நடப்பதாக நினைத்துக் கொண்டு ஒட்டகம் போல நடந்து கொண்டிருந்த பூங்காவனம்..

"என்னை அவன் ஆசையாய் பார்த்துக்கிட்டு வர்றானே.. அது கூடாதுன்னு சொல்றாளோ என்னவோ.." என்று கெத்தாகச் சொல்லி மல்லிகாவிற்கு நெஞ்சு வலியை வர வைத்தாள்..

"யாரு..? அவன்..? உன்னை ஆசையாப் பாக்கிறான்..? ஆனாலும் உனக்கு இம்புட்டுத் தன்னம்பிக்கை இருக்கக் கூடாதுடி பூங்காவனம்.. அந்த நினப்பிலதான் நீ காலில கத்தாழை முள்ளு குத்திட்டதைப் போல இப்புடி நொண்டியடிச்சுக்கிட்டு வர்றயா..? என்னடா இது.. இவ ரோட்டில நடக்கிறவளப் போல வராம, பாண்டி ஆடிக்கிட்டே வர்றாளேன்னு யோசிச்சேன்.. இந்த தோராமைக்குத்தான் இந்த ஆக்டிங்கா..? ஓவர் ஆக்டிங் உடம்புக்கு ஆகாதுடி பூங்கா.. பத்திரம்.."

"அத நீ எனக்குச் சொல்றியா..? அவன் என்னப் பாக்காம உன்னயா பாக்கிறான்..?"

"ஆமாண்டி இவளே.. அதுக்குத்தானே நான் தவமிருக்கேன்..? ரோட்டில போறவன் பாக்கனுமின்னு நீ

வேணும்னா ஏங்கிக்கிட்டு நிப்ப.. நான் நிக்க மாட்டேன்.."

இப்படிச் சொன்ன மல்லிகாவின் மனதில் எதிரில் வரும் காரை ஓட்டிக் கொண்டிருப்பவன் ஓரவிழிப் பார்வையிலாவது அவளை ஓர் கணம் பார்த்து விட மாட்டானா என்ற ஏக்கம் கடலளவு இருந்தது.. மனதில் இருப்பதை மறைத்து அவள் தலைவாழை இலையிலிருந்த சாதத்தில் தர்பூசணியை ஒளித்து வைத்தாள்..

"நம்பிட்டேன்.." அவள் மனதிலிருப்பதை படித்தவளாய் ஏளனச் சிரிப்புச் சிரித்து அவளை சோதித்தாள் பூங்காவனம்..

பெண்ணின் மனதில் ஒளித்து வைக்கப்படும் கள்ளத்தனங்களை மற்றொரு பெண் எளிதாக இனம் கண்டு விடுவதின் சூட்சுமம் வெகு எளிதானது.. இனம் இனமறியும்.. அவ்வளவுதான்..

கள்ளத்தனத்தை தோழி கண்டு கொண்டால் அதை உடனே ஆமாம் என்று ஆமோதித்து தலையாட்ட வேண்டுமா என்ன..?

"நீயெல்லாம் ஒரு ஆளு.. நீ என்ன நம்பனும்னுதான் நான் காத்துக்கிட்டு இருக்கேன்.. போவியா.." மல்லிகா இளக்காரமாக பார்த்து வைத்தாள்..

"இந்தாடி மல்லிகா.. ஆருகிட்ட உன் ஆணவத்தக் காட்டறவ..? இந்த பூங்காவனம் கவரி மானுடி.."

"சவுரி மானுன்னு வேணாச் சொல்லு.. ஒப்புக்கறேன்.. உன்னோட ஒன்றரைச் சாணு கூந்தலில ஒட்டு முடி வைச்சு இடுப்பத்தாண்டி விழற மாதிரி சடை பின்னி பூ வைச்சுக்கிட்டு சிலுப்பறவதான நீ.."

"எப்படி சிலுப்பினேன்..?"

"இப்பக் கூடத்தான் சிலுப்புற.. ஏண்டி.. ஆத்தில குளிச்சுட்டு வர்றவளுக்கு எதுக்குடி சவுரி முடி..? வீடு வரைக்கும் ஒட்டுமுடி இல்லாம வந்தா ஆகாதா..?"

மல்லிகாவின் இடக்கான கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறிப் போனாள் பூங்காவனம்.. எப்படி வருவாள்..? கர்ணனுக்குக் கவச குண்டலம் எப்படியோ..

அப்படி அவளுக்கு சவுரி முடி.. அதைப் பிரிந்து அவள் ஆற்றில் நீந்திக் குளித்ததே பெரிய விசயம்.. இதில் வீடுவரை அவள் சவுரி முடியில்லாமல் வருவதா..?

பூங்காவனத்திற்கு நீண்ட பின்னலின் மீது கொள்ளை ஆசை.. என்னத்தை ஆசைப்பட்டு என்ன பண்ண..? ஒரு பாட்டில் வருவதைப் போல ஏழைகளின் ஆசையும், கோவில் மணியோசையும் என்றுதான் ஒன்றுபட்டிருக்கிறது..? நீண்ட பின்னலுக்கு ஆசைப்பட்ட பூங்காவனத்திற்கு கடவுள் ஒன்றரைச் சாண் கூந்தலை நிர்ணயம் செய்து விட்டார்..

பாவம் பூங்காவனம்... அவள் நகரத்தில் பிறந்திருந்தால் கூந்தலைப் பற்றிக் கூந்தல் இழையளவு கூடப் பிரச்சனை இருந்திருக்காது.. நகரத்துப் பெண்கள் தான் நீண்ட கூந்தலைக் கூட கணப்பொழுதும் யோசிக்காமல் வெட்டி வீசிவிட்டு குட்டைமுடியுடன் வலம் வருகிறார்களே.. பூங்காவனமும் அதைப் போல முடியை விரிய விட்டுக் கொண்டு அலப்பறை பண்ணியிருப்பாள்..

அதற்கும் வழியில்லாமல் அவள் வயலூரில் பிறந்து விட்டாள்.. அங்கே நீண்ட பின்னலுடன் இருந்தால்தான் 'பெண்' என்ற கணக்கில் எடுத்துக் கொள்வார்கள்.. 'பாப்' கட்டிங்குக்கு நோ எண்ட்ரி..

பேதை பூங்காவனம் கூந்தலை வளர்க்கச் சகல விதமான தைலங்களையும் தேய்த்துப் பார்த்து விட்டாள்.. துளியளவு கூட அவளது கூந்தல் வளரவில்லை.. மாறாக கூந்தல் தைலங்களை அவள் வீசியெறிந்த தோட்டத்தில் இருந்த கத்தரி, வெண்டைச் செடிகள்தான் தழைத்து வளர்ந்து அவளை நோகடித்தன..

பூங்காவனத்தின் சோகத்தைப் பார்த்த அவளது அப்பாயிக்கிழவி வெத்தலைக் கும்பாவில் பாக்கை இடித்து வாயில் போட்டு மென்று துப்பியபடி மோவாயில் கை வைத்து வழி சொன்னாள்..

"இதுக்கேண்டி இடிஞ்சு போயி உக்காந்திருக்கவ..? உசிருக்குக் கவலப்படலாம்.."

அதையடுத்துப் 'அப்பாயி' சொன்ன வார்த்தையை அவை நாகரீகம் கருதி நாம் 'கூந்தல் இழை' என்று பொருள்

கொள்ள வேண்டியிருக்கிறது.. கூந்தல் இழைக்குக் கவலைப்படலாமா என்று அப்பாயி தனது பலத்த கண்டனத்தை தெரிவித்து விட்டு..

"ஓய்யாரக் கொண்டையாம் தாழம்பூவு.. உள்ளே இருக்குதாம் ஈரும் பேனும்.." என்று வேறு சொலவடை சொன்னாள்..

இருக்கும் துன்பம் போதாது என்று இந்தத் துன்பம் வேறா என்று பொருமி வெடித்த பூங்காவனம்..

"இந்தாரு.. ஆருகிட்ட ஈரையும் பேனையும் பத்திப் பேசற.. அதுகள்ளாம் உன் தலயிலதான் கூடு கட்டிக் குடியிருக்கும்.. என் தல கமகமன்னு வாசமா இருக்கிற தல.. பாத்துப் பேசு.." என்று பாய்ந்தாள்..

"அடி.. எவடி இவ.. கூறுகெட்ட கூதரையா இருக்கா.. முடியில்லன்னு சோறுதண்ணியில்லாமக் கிடக்கிறாளேன்னு ஒரு சொலவடையைச் சொன்னா.. எங்கேயோ போற மாரியாத்தா.. எங்க அப்பாயி மேல ஏறு ஆத்தான்னு ஏவி விடறா.. அடி விவரம் கெட்டவளே.. ஊருல உலகத்தில இருக்கற அத்தனை பொம்பளைகளும் ஆறடிக் கூந்தலோடவா இருக்காளுக..?"

'அப்பாயி'யின் அறிவு பூர்வமான கேள்வி பூங்காவனத்தின் பொங்கலைத் தணித்துச் சிந்திக்க வைத்தது.. அவள் மோவாயில் ஒற்றை விரலை வைத்து..

"அட.. ஆமா.." என்றாள்..

"அந்தக் கழுதைக்குத்தான் சொல்றேன்.. ஒட்டு முடியை வாங்கித் தலையில ஒட்ட வைச்சுக்க.. கட்டச் சடையோ குட்டச் சடையோ.. கழுதையில, உன் மனசுக்குப் பிடிச்சமாதிரிப் பின்னிப் போட்டுக்க.."

"ஆமா அப்பாயி.. குட்டச் சட பின்னிப் போடத்தான் நான் காத்துக்கிட்டு இருக்கேன்.. அதுக்கு என் முடியே போதுமே.. ஒட்டு முடி என்னத்துக்கு..?"

"ஆமாமில்ல.."

"புரியுதுல்ல.. இனியாச்சும் பெரிய அறிவாளியப் போல என்ன 'விவரம் கெட்டவ,' 'கூறு கெட்ட கூதர..'

அப்படின்னெல்லாம் அடைமொழி சொல்லாம வாயை அடக்கிக்கிட்டு வெத்தல பாக்க இடிச்சுக்கிட்டு திண்ணையில முடங்கு.."

"ஆத்தி.. ஒன்னும் தெரியாத சின்னக் கன்னியா ஒன்னரைச் சாண் முடியில முட்டியத் தொடற அளவுக்கு சடை பின்னிப் போடறது எப்படின்னு தெரியாம முழிச்சுக்கிட்டு இருந்தவ பேசற பேச்சப்பாரு.."

"உன் பேத்தியில்ல.. இதுவும் பேசுவேன்.. இதுக்கு மேலயும் பேசுவேன்.. கேக்கறியா..?"

"அந்தக் கோராமை எனக்கெதுக்கு..?"

"தெரியுதில்ல..? அடங்கு.."

அப்பாயிக் கிழவியை அடக்கி விட்டு பூங்காவனம் சோழவந்தானுக்கு வந்து டவுன் பஸ்ஸை பிடித்து ஏறி மதுரையில் போய் இறங்கி, ஊரை ஓர் கலக்குக் கலக்கி, கடை வீதியில் நீண்ட சவுரி முடிகளை ஒட்டு மொத்தமாகக் கொள்முதல் பண்ணிக் கொண்டு வீடு வந்து சேர்ந்து விட்டாள் அன்றிலிருந்து இன்றுவரை அவளுடன் இணை பிரியாமல் ஒட்டிக் கொண்டிருக்கிறது ஒட்டு முடி..!

பூங்காவனம் விதம் விதமான சவுரி முடிகளைக் கொண்டு நீண்ட பின்னலைப் பின்னித் தன் 'பின்னல் கலி' யைத் தீர்த்துக் கொண்டாள்.. முழங்கால்களைத் தாண்டித் தொங்கும் நீண்ட பின்னல், சவுரி முடியினால் பின்னப்பட்டது என்பதை கண்டு பிடிக்கவே முடியாது.. பூங்காவனத்தை முதன் முறையாகப் பார்ப்பவர்கள், 'இந்தப் பெண்ணுக்குத்தான் எத்துனை நீண்ட கூந்தல்..' என்று தான் வியந்திருக்கிறார்கள்.. அந்த அளவுக்கு சவுரி முடியுடன் பின்னிப் பிணைந்தவள் அவள்.. தூங்கும் போதுகூட சவுரிமுடிப் பின்னலுடன்தான் தூங்குவாள்..

பூங்காவனம் தனது பின்னலை சிலாகிக்கும் விதமே அலாதியானது.. இடத்திற்கு ஏற்றவாறு அவளது பின்னலை இடம் மாற்றி ஆளை அசத்துவதில் அவளுக்கு நிகர் அவளேதான்.. அதிகாலையில் எழுந்தவுடன் பின்னலைப் பின்னி.. தலையை லேசாக கலைத்து விட்டுக் கொள்வாள்.. அப்போதுதான் அவள் தலைவாரிக் கொண்டது

தெரியாதாம்.. பின்னலை முன்னால் விட்டுக் குனிந்து வாசலில் கோலம் போடும் அழகில் அறியாதவர்கள் மயங்கி விழுந்து விடுவார்கள்.. வயலூரில் வசிப்பவர்கள் அனைவரும் பூங்காவனத்தையும் அவளது பின்னலையும் நன்று அறிந்தவர்கள்.. அதனால் இதுவரை எவரும் மயங்கி விழவில்லை.. கோவிலுக்குச் செல்லும் போது பூங்காவனத்தின் பின்னல் பின்னால்தான் இருக்கும்.. இடுப்பைத் தாண்டி நீண்டு தொங்கும் பின்னல் முழங்கால்களைத் தொட்டு அவளது நடைக்கு ஏற்றபடி அசைந்து ஆடும்..

அப்பேற்பட்ட அழகு பின்னலை இப்போது அவள் முன்னால் விட்டு ஒயிலாக நடந்து வந்தாள்.. அவளது பின்னலின் அழகில் வெளிநாட்டுக் காரில் வருபவன் வீழ்ந்து விடவேண்டும் என்ற எதிர்பார்ப்பு மலையளவு அவளது மனதில் இருக்க அதை மறைத்து 'சவுரி மான்' ஆகிக் கொண்டிருந்தாள் அவள்..

ஆணழகன் ஒருவன் போதும்.. ஆத்மார்த்தமான தோழிகளுக்கு இடையே அடிதடி ரகளை உண்டாகி விடும்.

அத்தியாயம்- 3

"உன்னைக் கண் தேடுதே.."

பின்னலை பிடித்து வீசி ஆட்டியபடி மெல்லிய குரலில் பாடினாள் (?) பூங்காவனம்..

"உன் மாறு கண் ஏண்டி அவனைத் தேடுது..? நீ சும்மா இருந்தாக்கூட அவன்பாட்டுக்கு போய்த் தொலைவான்.. இப்படி உன் நொள்ளக் கண்ணு அவனைத் தேடுதுன்னு பாடி வைச்சேன்னு வைய்யி.. காராலே மோதி உன்னப் பாழுங் கிணத்தப் பாத்துத் தள்ளி விட்டுட்டுத்தான் வேற வேலயப் பாப்பான்.." மல்லிகா பயமுறுத்தினாள்..

சாலையோரம் இருந்த பாழுங்கிணற்றைப் பயத்துடன் பார்த்தாள் பூங்காவனம்.. அது அவளை 'வா, வா' என அழைப்பதைப் போல இருந்ததில் பயந்து போனவள் பாட்டை நிறுத்தி விட்டுத் தப்பித்தாள்..

'அஃது..'

வெற்றிப்பார்வை பார்த்த மல்லிகாவை பழிவாங்கும் வெறி பூங்காவனத்தின் மனதில் பொங்கியதில், அவள்

"ஏன் மல்லிகா.." என்று ஆரம்பித்தாள்..

பூங்காவனத்தைப் போட்டியிலிருந்து ஓட்டி விட்டு விட்ட மிதப்புடன் எதிரில் காரை உருட்டிக் கொண்டு வந்தவனை ஓரவிழிப்பார்வை பார்த்துக் கொண்டிருந்த மல்லிகா..

"ஊம்.." என்று குரல் கொடுத்தாள்..

"நான் கதயாடி சொல்றேன்..?"

"நீ சொல்ற எல்லாமே கட்டுக்கததான.? என்னைக்குடி பூங்கா நீ உண்மையைப் பேசியிருக்கிற..?"

"ஆஹா.. இவ அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரி.."

"அது நானில்லடி இவளே.. நீதான்.."

"நீ சொன்னாலும் சொல்லாட்டியும் அது நான்தான்.."

"இருந்துக்க.. யாரு வேணாங்கிறது.. இப்ப என்ன அலுவலுக்கு ஏண்டின்னு ராகம் பாடினவ..?"

"போனவாரம் உன்னைப் பொண்ணு பாக்க வந்த மாப்பிள்ளை வீட்டில உன்னப் பிடிக்கலன்னு சொல்லிட்டாங்களாமே.."

சட்டெனக் கனவு கலைந்து விட மல்லிகா நெருப்புப் பார்வையுடன் பூங்காவனத்தின் பக்கம் ஆத்திரத்துடன் திரும்பினாள்.. அவளது சுட்டுப் பொசுக்கும் பார்வையில் பூங்காவானத்தின் மனது ஜில்லெனக் குளிர்ந்தது..

"ஆமாண்டி.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?"

"ஒன்னுமில்லடி மல்லிகா.. வந்துட்டுப் போன மாப்பிள்ள எத்தனாவது மாப்பிள்ள..?"

பூங்காவனத்தின் எள்ளல் மிக்க இந்தக் கேள்வியில் மல்லிகாவின் மனது ரணமானது.. புறக்கணிப்பை விடக் கொடுமையானது எதுவும் உண்டோ.. ஒரு ஆணினால் புறக்கணிக்கப்படும் பெண்ணின் மனது வலிக்கும் வலியை உணர்ந்தவர் யார்..?

"அதைத் தெரிஞ்சுக்கிட்டு நீ என்ன செய்யப் போற..?"

"அதுக்கில்லடி மல்லிகா.. அவன் என்னவோ இருபதாவது மாப்பிள்ளையாமே..? இவனுக்குமா உன்னப் பிடிக்கல..?"

போட்டி என்று வந்து விட்டால் அங்கே ஈரமனம் இருக்காது.. எதிராளியின் மனதைக் காயப்படுத்த எதை வேண்டுமானாலும் பேசும்.. அதிலும் ஓர் ஆணுக்காக பெண்களுக்கு இடையே ஏற்படும் போட்டி யுத்தகளத்திற்கு நிகரானது.. அங்கே நியாய, அநியாயங்களுக்கு இடமிருக்காது..

மல்லிகா பல்லைக் கடித்தாள்.. பூங்காவனத்தின் வன்மத்தை அசைத்து உடைத்தெறியாவிட்டால் அவள் வயலூரில் பிறந்து வளர்ந்ததற்கு அர்த்தமென்ன இருக்கிறது..?

"என்ன இருபது மாப்பிள்ள பாக்க வந்து பிடிக்கலன்னு சொல்லிட்டுப் போனது இருக்கட்டும்.. உன்ன ஏண்டி ஒருத்தன் கூடப் பொண்ணு பாக்க வரலை..?"

குறி பார்த்து மல்லிகா எய்த அம்பு பூங்காவனத்தின் வாயைத் தைத்து விட்டது.. அவள் வார்த்தை வராமல்..

"அது.. அது.." என்று திணறினாள்..

"எதுடி..? மூஞ்சியப் பாரு.. உன் ஒட்டு முடிக் கத சோழவந்தானையும் வயலூரையும் தாண்டிச் சுத்துப் பட்டியிலயும் பரவி இருக்கே.. எவன் உன்னப் பொண்ணு கேட்டு வருவான்..?"

கேட்டாலும் கேட்டாள்.. கிடுக்கிப்பிடி கேள்வியாக கேட்டு வைத்தாள்.. மல்லிகா இப்படித்தான்.. பேச்சென்று வந்து விட்டால் நறுக்குத் தெறித்ததைப் போல நான்கு வார்த்தைகளில் வாயை அடைத்து விடுவாள்...

"இந்தாரு.. என்னப் பத்தி என்ன வேணும்னாலும் பேசு.. என் ஒட்டு முடியப் பத்திப் பேசின.. உனக்கு மருவாத இல்ல.. ஆமா.."

"நீ கொடுக்கிற மருவாதய வச்சுக்கிட்டு ஒரு வாதயும் பண்ண முடியாது.. போடி.. இருக்கிறது ஒன்றரைச் சாண் முடி.. இதில வாய் மட்டும் எட்டூருக்குக் கிழியுது.. குட்டை முடிய வைச்சுக்கிட்டு ஒட்டு முடியில பின்னலப் போட்டுக்கிட்டு ஊரை சுத்திக்கிட்டு இருக்கிறவளுக்கு வாய் இம்புட்டு நீளமா இருக்கக் கூடாதுடி.."

"அத நீ சொல்லக் கூடாது.."

"வேற யாரு சொல்லனும்..? உன்னப் பொண்ணுப் பாக்க வர்றவன் சொல்லனுமா..? அதான் எவனும் உன்னப் பொண்ணுப் பாக்க வர மாட்டேங்கிறானுகளே.. உன் ஒட்டு முடி அம்புட்டு ஃபேமஸ்டி.."

"நீள முடிய வைச்சுக்கிட்டு நீ என்னத்தடி சாதிச்ச..?"

"எம்புட்டோ சாதிச்சிருக்கேன்.. இருபது மாப்பிள்ளைகளை பொண்ணுப் பாக்க வர வைச்சேனே.. அதுவே சாதனைதான..?"

"ஒருத்தன் கூட உன்னப் பிடிக்குதுன்னு சொல்லல.. அத மறந்துட்டியே மல்லிகா.."

"மறக்கலடி பூங்காவனம்.. வந்த மாப்பிள்ளகளுக்கு என்னப் பிடிச்சிருந்தது.. எங்க அப்பனும், ஆத்தாளும் செய்யறதாச் சொன்ன சீர்வரிசதான் பத்தலை.. அதனால பொண்ணப் பிடிக்கலன்னு ஓடிப் போயிட்டானுக.. அத நீயும்

மறந்துட்டியேடி.. உன் வீட்டில இருக்கிற வசதி என் வீட்டில இருந்திருந்தா என்னைப் பொண்ணுப் பாக்க வந்த முத மாப்பிள்ளையே பொண்ணப் பிடிச்சிருக்குன்னு சொல்லி மறுமாசமே என் கழுத்தில தாலியக் கட்டியிருப்பான்.. என்னத்த செய்ய..? அந்த வசதியும் வாய்ப்பும் உன் வீட்டில இருந்து என்னடி பிரயோசனம்..? ஒருத்தன் கூட உன்னைப் பொண்ணு பாக்க வரலையே.."

தோழிகள் இருவரும் குடுமிப்பிடி சண்டை போடாத குறையாக வழக்கடித்துக் கொண்டிருக்க.. அதை விலக்கி விடும் நினைவு இல்லாமல் கனவில் நடப்பவளைப் போலக் காரைப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தாள் பூர்ணிமா.. அவளது முகமெங்கும் கோபம் விரவியிருந்தது.. கண்களைக் கூலிங்கிளாஸ் மறைத்திருந்தாலும் அவனது பார்வை அவளது முகத்தைத்தான் வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது என்பதை பூர்ணிமா அறிவாள்.. ஓர்முறை அவள் கோவிலுக்குப் போயிருந்த போது அவள் பின்னால் தொடுத்து வந்த இவன்..

"பூவைக் கண்டால் வண்டு வட்டமிடத்தான் செய்யும்.." என்று யாரிடமோ சொல்வதைப் போல உரக்கச் சொல்லி விட்டுச் சென்றான்.. இவள் பல்லைக் கடித்தாள்.

இவளது முகம் பூவாம்.. அவனது பார்வை வண்டாம்.. வட்டமிடத்தான் செய்யுமாம்.. இவள் முகத்தில் முள்ளைக் கட்டிக் கொண்டதைப் போல கடுகடுவென முகத்தை வைத்துக் கொள்ளக் கூடாதாம்.. எவ்வளவு திமிரிருந்தால் அப்படிச் சொல்லுவான்..!

'உடம்பெல்லாம் திமிர்.. யாரு இவன்..? இவனோட அத்தைகாரிக்கு இருக்கிற திமிரில பாதி இருந்தாக்கூடப் போதுமே.. இந்த உலகம் தாங்காதே..'

அவனது அத்தைகாரியான மேனகா ஆணவம் மிக்கவள்.. பூர்ணிமாவிற்கு தூரத்துச் சொந்தம்தான்... அவளுக்குச் சொந்தம் என்பதைவிட அவளுடைய பெற்றோருக்குச் சொந்தமென்று சொல்வது சாலச் சிறந்தது..

பூர்ணிமாவின் தந்தையான மாதவன் கம்பீரம் மிக்க அழகிற்கு பிரசித்தி பெற்றவர்.. ஆறடி உயரமும், வாட்ட

சாட்டமான தோற்றமுமாக இருப்பார்.. திருமண வயதில் மகளும் மகனும் இருக்கும் இந்த வயதிலேயே இவ்வளவு கம்பீரமான அழகுடன் இருப்பவர், வாலிப வயதில் எப்படி இருந்திருப்பார்..?

சுற்று வட்டார கிராமங்களில் இருந்த சுந்தரிகளின் மனம் கவர்ந்த கதாநாயகனாக மாதவன் இருந்தார்.. சோழவந்தான் வட்டாரத்தில் காணி நிலம் இருந்தாலே பிழைத்துக் கொள்ளலாம்.. இவரோ ஏக்கராக் கணக்கில் நிலங்களை வைத்திருந்தார்.. ஆற்றுப் பாசனம்.. வாழைத் தோப்பு, தென்னந்தோப்பு, நெல் வயல்கள் என்று செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்தவர்.. வீட்டிற்கு ஒரே மகன்.. சுற்றுப் பட்டிக் கிராமத்திலிருக்கும் பெண்ணைப் பெற்றவர்கள் இவருக்குப் பெண் கொடுக்கப் போட்டியிட்டார்கள்.. உள்ளூரில் பெரும் பணக்காரரான விசுவநாதனின் மகள் மேனகா அவரை அடைந்தே தீருவது என்ற வைராக்கியத்துடன் இருந்தாள்.. அவளுக்கு மாதவனென்றால் பித்து.. பித்து என்றால் வெறும் பித்தல்ல.. கல்யாணம் பண்ணிக் கொண்டால் மாதவனைத்தான் பண்ணிக் கொள்வேன் என்று சோழவந்தான் ஆற்றுப் பாறையில் வெயிலில் கால் பொசுங்க, ஒற்றைக் காலில் நின்று தவம் செய்யும் அளவிற்குப் பித்து..

மாதவன் தனக்குத்தான் என்று மனதார நம்பினாள் மேனகா.. சுற்றுவட்டாரத்தில் அவளது பெற்றோர் அளவுக்கு வசதியான பெண் வீட்டார் எவருமில்லை என்பதில் அவளது அகந்தை அதிகரித்தது.. மாதவனைப் போலவே அவளும் வீட்டிற்கு ஒரே மகள் என்பதினால் அவளைத்தான் மாதவனின் பெற்றோர் மருமகளாகத் தேர்ந்தெடுப்பார்கள் என்று ஊர் முழுவதும் சொல்லிக் கொண்டிருந்தாள்.. அவளது அசாத்திய தன்னம்பிக்கையையும், கனவுகளையும் மாதவன் பொடிப் பொடியாக தகர்த்து விட்டார்..

மேனகாவை நிராகரித்து அவர் பூமாவைக் கை பிடிப்பார் என்று மேனகா மட்டுமல்ல, எவருமே நினைத்தும் பார்க்கவில்லை.. மாதவனை மணக்கப் போட்டி

போட்ட பெண்களில் யாருமே பூமாவைப் போட்டியாக நினைத்ததில்லை..

பூமா ஏழ்மையான குடும்பத்தில் பிறக்கவில்லை என்றாலும் அவளது குடும்பம் வசதிமிக்க குடும்பமாக பேசப்பட்டதில்லை.. ஆறு ஏக்கர் நிலம் மட்டுமே அவர்களது குடும்பத்தின் சொத்தாக இருந்தது.. பூமாவுக்கு மூன்று அண்ணன்கள்.. இவள் நான்காவதாகப் பிறந்தவள்.. இவளுக்கும் இவளது அண்ணன்களுக்கும் இடையே வயது வித்தியாசம் அதிகமிருக்கும்.. மூன்று ஆண் பிள்ளைகள் மட்டும்தான் என்று அவளது பெற்றோர் முடிவு கட்டியிருக்க, அந்த முடிவை உடைத்து விட்டு நான்காவதாகப் பிறந்தவள் அவள்.. பூமா பிறந்த போது அவளது மூன்றாவது அண்ணனுக்கு வயது பனிரெண்டு.. மூத்த அண்ணனின் வயதோ பதினாறு.. இருவருக்கும் இடைபட்ட இரண்டாவது அண்ணன் பதினான்கு வயதில் இருந்தான்.

பூமா பருவம் எய்திய போது அவளது மூன்று அண்ணன்களும் திருமணமாகி தலா இரண்டு குழந்தைகளுடன் இருந்தார்கள்.. விவசாய வருமானம்தான் குடும்பத்தின் வருமானம் என்ற நிலையில் பொருளாதாரம் ஆட்டம் கண்டு கொண்டிருந்த நிலையில் பூமாவை மேனகா போட்டியாக நினைப்பாளா என்ன..? அவளை ஒரு பொருட்டாகக் கூட நினைத்தது இல்லை..

பூமா அமைதியான சுபாவம் கொண்டவள்.. ஆவாரம் பூவின் அழகு மிக்கவள்.. அவளது பெருமையை மாதவன் கண்டு கொண்டார்.. எங்கு தேடினாலும் கிடைக்காத பேரழகு, பூமாவின் பேரழகு.. அந்தப் பேரழகியின் மீது காதல் கொண்ட மாதவன் தன் வீட்டில் சொல்லி முறைப்படி அவளைப் பெண் கேட்டுச் சென்று பூமாவைக் கௌரவப் படுத்தினார்..

ஓர் வார்த்தையில்லை.. ஓர் ஜாடையில்லை.. மௌனம் நிரம்பிய பார்வைகள்.. அவற்றின் பரிபாஷைகள் மட்டுமே அவர்களைச் சேர்ந்தன.. அவர்கள் இருவருக்கும் இடையே நிலவிய உன்னதமான காதலை உணரும் பக்குவம் எவருக்கும் இல்லை.. அதி முக்கியமாக ஆணவமும்

அகங்காரமும் கொண்ட மேனகாவுக்கு அந்தப் பக்குவம் துளியளவும் இல்லை..

அவள் மாதவனிடம் பலமுறை தன் காதலை வெளிப்படுத்தியிருக்கிறாள்.. ஆற்றங்கரையில் அவரைச் சந்தித்து அவர்மீதான தனது மையலைக் கூறியிருக்கிறாள். அந்தத் தருணங்களில் எல்லாம் மாதவன் மௌனமாக இருப்பார்.. அவள் சொல்வதை ஏற்றுக் கொண்டு ஓர் வார்த்தை பேசியதில்லை.. மறுத்தும் பேசியதில்லை..

மேனகாவின் அழகுக்கும், பணத்துக்கும், பட்டினத்தில் இருந்து படித்த மாப்பிள்ளைகளாக பெண் கேட்டு வருகிறார்கள்... வெளிநாட்டில் வேலை பார்க்கும் மாப்பிள்ளைகள் வரிசை கட்டி அவளது பதிலுக்காக காத்திருக்கிறார்கள்.. அத்தனை இடங்களையும் நிராகரித்து அவள் மாதவனுக்காக காத்திருக்கிறாள்.. அது மாதவன் இப்பிறவியில் செய்த அதிர்ஷ்டம், மாதவனைப் பெற்றவர்கள் முற்பிறவியில் செய்த அதிர்ஷ்டம் என்ற ரீதியில் கெத்து காட்டுவாள்.. மாதவன் சலனமில்லாத பார்வையுடன் நகர்ந்து விடுவார்.

அத்தியாயம்- 4

சாலையில் ஊர்ந்த காரை ஓட்டுபவனுக்கு காரோட்டத் தெரியாதோ என்ற சம்சயம் அறியாதவர்களுக்கு ஏற்பட.. அவனது காரோட்டும் திறமையை அறிந்து வைத்திருந்த கன்னியர் மூவரும் அவனைப் பார்ப்பதும் அருகில் உள்ள வயலைப் பார்ப்பதுமாக அன்னநடை போட்டார்கள்.. அவர்களுக்குத் தெரியும்.. அவன் நினைத்தால் காற்றை விட வேகமாக காரை ஓட்டி கண்ணிமைக்கும் நேரத்துக்குள் மதுரையைத் தொட்டு விடுவான் என்பது..

"ஏய்.. இவன் என்னையே பார்க்கிறாண்டி.." பூங்காவனம் சாலையோரமாக இருந்த செடிகளின் இலைகளைக் கிள்ளினாள்..

"ஆசைக்கும் ஓர் அளவு இருக்கனும்டி பூங்காவனம்.. இவனாவது.. உன்னைப் பார்க்கிறதாவது.." மல்லிகா பூங்காவனத்தின் அதீத தன்னம்பிக்கையை கேலி செய்தாள்.

பூங்காவனத்திற்கு ரோசம் வந்து விட்டது.. அவன் அவளைத்தான் பார்க்கிறான் என்ற நம்பிக்கை அவளுக்குத் துளியளவும் இல்லை.. அவனது கண்களைக் கூலிங்கிளாஸ் மறைத்திருக்கிறது என்ற தைரியத்தில் வாய் விட்டாள்.. மல்லிகா அதை உடைத்து விட்டதில் அவளது சுயமரியாதை காயப்பட, அதை ஆற்றிவிட கோதாவில் இறங்கினாள்..

"என்னைப் பார்க்காம.. யாரைப் பார்க்கிறான்..? உன்னையா..?"

அப்படி இருக்கக் கூடாதா என்று ஏங்கிப் போனது மல்லிகாவின் மனது.. அவன் மல்லிகாவைப் பார்க்கிறானோ, இல்லையோ.. பூங்காவனத்தைப் பார்க்கவில்லை என்பது மட்டும் நிச்சயம்..

"ஆமாம்ன்னுதான் வைத்துக்கயேன்.."

"இதுதாண்டி பேராசை.. அடியேய் மல்லிகா.. அவன் கண்ணைப் பாரு.. அவன் என்னiத்தான பார்க்கிறான்னு தெள்ளத் தெளிவா புரிஞ்சுக்குவ.."

"அதான பாத்தேன்.. இவன் கருப்புக் கண்ணாடி போட்டுக்கிட்டு இருக்கான்ங்கிற தைரியத்தில வாயை விட்டியா..?"

'வித்தராக்கள்ளி.. கண்டு பிடிச்சுட்டாளே..' பூங்காவனம் மனதுக்குள் குமைந்தாள்..

"ஆனாலும்டி பூங்காவனம்.. நீ இம்புட்டு அறிவாளியா இருப்பேன்னு நான் நினைச்சுக்கூடப் பாக்கலடி ஆத்தா.."

"இந்தாரு... என் அறிவப் பத்திப் பேசின.. நான் சும்மா இருக்க மாட்டேன்.. ஏன்.. எனக்கு அறிவு இருக்கக் கூடாதோ.. கூமுட்டயாத்தான் இருக்கனுமோ.."

"அதுக்கில்லடி பூங்காவனம்.. ஐஞ்சாம் கிளாசில ஐஞ்சு தடவ பெயிலாப் போயிப் பள்ளிக்கூடம் பக்கமே தல

வைச்சுப் படுக்க மாட்டேன்னு சபதம் போட்டு வீட்டுக்குள்ள பதுங்கிக்கிட்டவளாச்சேன்னு சொல்லிப் புட்டேன்டி.."

மல்லிகா எதைச் சொல்லிக் காட்ட விழைந்தாள் என்பதை அவளது சிரிக்கும் கண்கள் புலப்படுத்தி விட்டதில் சினம் கொண்ட பூங்காவனம் காரிலிருப்பவனை மறந்து சண்டைக் கோழியாக தோழியின் பக்கம் திரும்பினாள்..

"என்னடி.. திருவேடகம் காலேஜீக்குப் போயிக்கிட்டு இருக்கிற திமிரில பேசறியா..? அங்கிருக்கிற சிவன்சாமி காப்பாத்திருவாருங்கிற எண்ணமா..?"

"திருவேடகம் காலேஜீக்கு சும்மா போய் வரலைடி பூங்காவனம்.. படிக்கப் போய்க்கிட்டு இருக்கேன்... சிவன் கோவிலை கும்பிட மட்டும் போய் வர்றன்னு சொன்னேனா..?"

"சொல்லித்தான் பாரேன்.."

"சொன்னா என்ன சொல்லுவ.. அதுக்கும் சேத்துத்தான் போய் வர்றேன்னு பசப்புவ.."

"அப்படிப் பசப்பினாலும் குத்தமில்லடி மல்லிகா.."

"பக்கத்தில இருக்கிற தேனூர் சிவன் கோவில கட்டி வைச்ச 'எளிய குரு' சித்தர் கோடிக்கணக்கில மாணிய நிலத்தக் கொடுத்துக் கோவிலயும் மானிபதாரர்கிட்ட ஒப்படைச்சாரு.. அந்த மனுசர் என்னடான்னா எளியகுரு சிவன் கோவில இடிய விட்டுட்டு மானிய நிலத்த மட்டும் உரிமை கொண்டாடிக்கிட்டு இருக்காரு.. அதயெல்லாம் யாரும் கண்டுக்க மாட்டிங்க.. தேனூரில இடிஞ்சு கிடக்கிற எளியகுரு சிவன் கோவில நினச்சுப் பாக்க யாருமில்ல.."

"நீயொருத்தி நினச்சுப் பாக்கறயில்ல.. அது போதும் போ.."

தோழிகள் இருவரும் வழக்கடித்துக் கொண்டிருக்க.. ஊர்ந்து வரும் காரை உற்றுப் பார்க்காததைப் போலப் பாவனை செய்தபடி பூர்ணிமா வயலைப் பார்த்தாள்.. அங்கிருந்த நாரைகள் என்னவோ அவள் அவைகளைப் பார்ப்பதைப் போலத் தலையை ஒரு பக்கமாகச் சாய்த்து ஒய்யாரமாக நோட்டமிட்டன..

'இதுகளுக்கு இருக்கிற குசும்பைப் பாரேன்..' பூர்ணிமாவிடம் சிரிப்பு வரவா என்று கேட்டது..

'ஆம்பளை நாரைகளாக இருக்குமோ..' சம்சயம் கொண்டாள்..

'அப்படித்தான் இருக்குமா இருக்கும்.. இல்லேன்னா இதுகளும் இவனைப் போல உத்து உத்துப் பாக்கும்களா..'

நாரைகளைப் பார்த்தால் வேலைக்கு ஆகாது என்று பாதையைப் பார்த்தாள்.. அதற்குக் காரணம் நாரைகளின் ஒய்யாரப் பார்வை மட்டும்தானா என்று அவளது மனம் நக்கலடித்தது..

'வேற என்ன காரணமாம்.. காரோட்டிக்கிட்டு வர்ற கள்ளனைப் பாக்கனும்னுதான் காத்துக்கிட்டு இருக்கேனாக்கும்..' பூர்ணிமா எரிச்சலடைந்தாள்..

'இவனைப் பார்த்துட்டாலும்..' மனதில் வெறுப்புப் பொங்கியது..

மற்றவர்களை அவன் எப்படிப் பார்ப்பான் என்பதை அவள் நன்கு அறிவாள்.. பார்வையில் உதாசீனம் பொங்கி வழியும்.. பட்டினத்தின் திமிரை அப்படியே காட்டுவான்.. 'எனக்கு நீங்களெல்லாம் நிகரா..?' என்ற ஆணவப் பார்வை.. அகங்காரப் பார்வை..

'இவன் என்னை சைட் அடிக்கிறான்னு நான் மகிழ்ந்து போகனுமாக்கும்..' சினம் கொண்டாள் பூர்ணிமா..

அவன்.. அந்த திமிர் பிடித்த கார்க்காரன்.. பூர்ணிமாவையே உற்று உற்றுப் பார்க்கும் கள்வன்.. அரவிந்தன்.. மேனகாவின் சொந்தக்காரன்.. அவளுடைய பெரியம்மா மகனுக்கு மகன். மேனகாவின் தாய் சென்னையில் பிறந்து வளர்ந்தவள்.. உறவினர் என்பதற்காகவும் மேனகாவின் தந்தைக்கு இருந்த சொத்துக்களுக்காகவும் மேனகாவின் தாயைத் திருமணம் செய்து கொடுத்தார்களாம்.. அந்தப் பெருமையில் திளைக்கும் மேனகாவின் தாய் வயலூரில் இருந்த உறவினர்களுடன் பேசக்கூட மாட்டாளாம்.. சதா சர்வ காலமும் சென்னையிலேயே இருப்பாளாம்..

"இப்புடி அப்பன் வீடே கதின்னு கிடந்தா ஒத்தைப் பிள்ளைக்கு மேலே எப்புடிப் பொறக்கும்.." என்று அங்கலாய்ப்பாளாம் மேனகாவின் தந்தைவழிப் பாட்டி..

அந்த ஒற்றை மகவும் திருமணமான புதிதில் கணவனுடன் புகுந்த வீட்டில் சில மாதங்கள் குடும்பம் நடத்தியதன் பலனாக உதித்தது என்பார்கள் ஊர் மக்கள்..

"தலப்பிரசவத்துக்குத் தாய் வீட்டுக்குப் போனா.. அதுக்கப்புறம் ஆடிக்கொருதரம், அம்மாவாசைக்கு ஒரு தரம்ன்னுதான் சோழவந்தான் பக்கம் எட்டிப் பார்ப்பா.." மேனகாவின் பாட்டி மூக்கைச் சிந்துவாளாம்..

இந்தக் கதையைக் கண்ணால் கண்டதின் பலனாக வயலூர் மக்கள் மதுரையைத் தாண்டிப் பெண்ணெடுக்கவே பயந்தார்கள்.. சுற்று வட்டாரத்திலேயே பெண் தேடினார்கள்..

"அடிச்சாலும், பிடிச்சாலும் நம்ம பக்கத்தில பொண்ணெடுக்கனுமப்பா.. கட்டி வைச்சாப் போதுமா.. இருந்து பொழைக்க வேணாமா..?"

இப்படியொரு கேள்வியை வயலூர் மக்களைக் கேட்க வைத்த பெருமை கொண்ட மேனகாவின் தாய்க்கு உடன் பிறந்த அக்காவின் பேரன்தான் இந்த

அரவிந்தன்.. பெற்றவர்கள் தாட்டியமாக இருக்கும்வரை சென்னையிலேயே இருந்த மேனகாவின் தாய் அவர்களது காலம் முடிந்த பின்னால்தான் வயலூரில் தேங்கி நின்றாள்.. சென்னையிலேயே வளர்ந்ததால் மேனகாவின் படிப்பு முழுவதும் சென்னையில்தான்.. ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்ததாகப் பீற்றிக் கொள்வாள்..

பூமாவும் பட்டப்படிப்பைப் படித்தவள்தான்.. அதை மேனகா ஒப்புக் கொள்ளவே மாட்டாள்..

"சாமியார் காலேஜும், ஸ்டெல்லா மேரிஸும் ஒன்னாகிடுமா..?" என்று எகத்தாளமாக கேட்பாள்..

ஒருமுறை மாதவனின் முன்னால் இதுபோல அவள் வாய் விட்டு விட.. அவளை ஏற இறங்க பார்த்த மாதவன்..

"அது எப்புடி ஒன்னாகும்..? திருவேடகம் காலேஜில படிப்போட பண்பாட்டையும், நம்ம நாட்டுக் கலாச்சாரத்தையும், ஆன்மீகத்தையும் சொல்லிக் கொடுப்பாங்க.. அதைப் படிச்சிருந்தா நீயேன் இப்புடி இருக்கப் போகிற..?" என்று நறுக்குத் தெறித்தாற் போலக் கேட்டு விட்டார்..

மேனகாவின் முகம் அவமானத்தில் சிறுத்து விட்டதென்று பூமா மகளிடம் சொல்லியிருக்கிறாள்..

"அவ உன் அப்பாவிடம் சண்டை போட்டிருப்பாடி.. கொஞ்சத் தூரத்தில அவளோட புருசன் வந்துக்கிட்டு இருந்தார்... அவர் காதில இந்தப் பேச்சு விழுந்தா மேனகாவுக்குத்தான் வசவு கிடைக்கும்.. அதனால வாயைப் பொத்திக்கிட்டா.. இல்லேன்னா அன்னைக்கு காடு காத்திருப்பா.."

'காடு காத்தல்..' என்பது அடைமழையைப் போல விடாமல் சண்டையிடுவது.. மேனகா வாயைத்திறந்தால் காடு காப்பதைத்தான் செய்வாள்.. அதுவும் பூமாவைக் கண்டு விட்டால் அவளது விழிகளில் தெறிக்கும் வன்மத்தீயில் பூர்ணிமாவே நடுங்கியிருக்கிறாள்..

'அம்மாமேல இந்தப் பொம்பளைக்கு இத்தனை கோவமா..?'

அந்தக் கோபம் மாதவனின் மீது வந்ததில்லை.. அது ஏன் என்று பூர்ணிமாவுக்குப் புரியவில்லை.. பூமாவிடம் கேட்டபோது..

"அது அப்படித்தான்.." என்றாள்..

அப்போது அவளது உதடுகள் துடித்த துடிப்பில் பூர்ணிமா பயந்து போனாள்.. பூமாவின் விழிகள் கலங்கியிருந்தன.. பார்வையில் ஓர் பதட்டம் இருந்தது.. அது தன் பொருள் களவு போய் விடக்கூடாது என்று ராப்பகலாக கண்விழித்துக் காவல் காக்க வேண்டிய தலையெழுத்து வாய்த்து விட்டதினால் வந்த பதட்டம்.. மனம் போல வாழ்வு அமைந்து விட்டால் மட்டும் நிம்மதி கிட்டி விடுமா என்ன..? அடுத்தவரின் மனம் கவர்ந்த வாழ்வை வாழ நேர்ந்து விட்டால் ஏற்படும் துயரத்திற்கு அளவுகோல் கிடையாது..

பூமா மேனகாவின் பார்வையில் பட மாட்டாள்.. ஒதுங்கியே இருப்பாள்.. விலகிப் போகிறவளைத் தேடி வந்து மேனகா

வம்பிழுப்பாள்.. அவள் பேசும் பேச்சுக்களுக்கு எவராக இருந்தாலும் பொங்கியெழுந்து குடுமிப்பிடி சண்டையில் இறங்கி விடுவார்கள்.. பூமா பதில் பேசவே மாட்டாள்.. யோகி போல அனைத்தையும் கேட்டுக் கொண்டு பேசாமல் நகர்ந்து விடுவாள்.. மேனகாவுக்குத்தான் பேசிப்பேசி நெஞ்சுவலி வந்து விடும்..

"ஏம்மா..?" பொறுக்க மாட்டாமல் பூர்ணிமா பொருமுவாள்..

மௌனப் புன்னகையோடு மகளை ஏறிட்டுப் பார்க்கும் பூமாவின் விழிகளில் தெரியும் துயரத்தில் விக்கித்துப் போய் விடுவாள் பூர்ணிமா..

'ஏனிந்த துயரம்..?'

பூமாவிடம் கேட்க முடியாத கேள்வி இது.. விடை கிடைக்காது.. விசித்திரம் நிறைந்தது மனித வாழ்க்கை.. பல சூட்சுமங்களை உள்ளடக்கியது.. விடை தேடித் தேடிக் களைப்பதை விட வாழ்வை அதன் போக்கில் எதிர்கொண்டு வாழ்ந்து பார்த்து விட வேண்டும்.. காலப் போக்கில் விதி வகுத்த விடையில்லாத பல கேள்விகளுக்கான மர்ம முடிச்சுக்கள் அறுபட்டு விடைகள் புலப்பட்டு விடும்..

பூர்ணிமாவுக்கும் அப்படித்தான்.. ஆறு வயதில் புரியாத பூமாவின் புன்னகைக்கான அர்த்தம் பதினாறு வயதில் புரிந்தது.. அது மேனகாவின் மனம் கவர்ந்த மாதவனின் மனதை பூமா கவர்ந்து விட்டதினால் உண்டான சோகம்.. எறும்புக்கும் தீங்கு நினைக்காதவள் பூமா.. அவளால் மேனகாவின் காதல் தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. மேனகா ஆசைப்பட்ட வாழ்வைப் பறித்துக் கொண்டு விட்ட குற்றஉணர்வு அவளது அனைத்துப் பேச்சுக்களையும் பொறுத்துக் கொண்டு மௌனப் புன்னகை புரிய வைக்கிறது..

"உம்மேல என்னம்மா குத்தம்..? நீ பேருக்கேத்ததைப் போல பொறுமையில பூமாதேவி.. அந்த மேனகா பொம்பள ராங்கி பிடிச்சது.. பணக்காரத்திமிர் வேற.. அப்பாவுக்கு அந்தப் பொம்பளய எப்படிம்மா பிடிக்கும்..? உன்னத்தான் பிடிக்கும்.. அத யோசிக்காம நீயேம்மா தாழ்ந்து போகிற.."

பூர்ணிமா மனம் தாளாமல் பதறுவாள்.. மகளின் கேள்வியை மௌனப் புன்னகையுடன் கடக்கும் மனைவியை ஆழ்ந்து பார்க்கும் மாதவனின் விழிகளில் காதல் மின்னும்.. இதுபோன்ற பூஞ்சை மனம் எவரிடம் உள்ளது..? குற்றமில்லா குணம் யாருக்கு வரும்..? இதுதானே மாதவனின் மனதைக் கவர்ந்தது.. பூமாவின் அழகு அவளது மென்மையான மனதிலும், குணத்திலும் உள்ளது.. அதை மேனகாவால் புரிந்து கொள்ள முடியாது.

அவள் பூர்ணிமாவை எதிரியாகப் பார்த்தாள்.. மாதவன் எதைச் செய்தாலும் எதிர்த்து நின்றாள்.. அவளது கணவரான தேவேந்திரன் மனைவி சொல்லைத் தட்ட மாட்டார்.. அவருக்கு மேனகாவின் சொல்தான் வேதம்.. அவள் பேச்சுக்கு எதிர் பேச்சை அவர் பேசியதே இல்லை..

ஊரின் பெருந்தனக்காரரான மாதவனுக்கு மேனகா அறைகூவல் விடுத்தாள்.. பரம்பரையாக அவருக்குக் கிடைத்து வந்த முதல் மரியாதையை கேள்வி கேட்டாள்.. அவர் நிர்வகித்து வந்த பொறுப்புக்களைத் தட்டிப் பறிக்க முனைந்தாள்..

மனைவியை அடக்கி வைக்க வேண்டிய தேவேந்திரன் அதைச் செய்யாமல் மனைவி சொல்லே மந்திரம் என்று அவளுக்குப் பாதபூஜை செய்து கொண்டிருக்கப் பற்றாக்குறைக்கு சென்னையிலிருந்து மேனகாவின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான் அரவிந்தன்..! மேனகாவின் ஒன்று விட்ட அண்ணன் மகன்..

அவன் வந்து இறங்கிய தோரணையை இன்று நினைத்தாலும் பூர்ணிமாவின் ரத்தம் கொதிக்கும்..

அத்தியாயம்- 5

'அடேங்கப்பா.. ஆளும், தோரணையும்... அப்படியே அத்தை காரிக்கு சளைச்சவனில்லன்னு சொல்லாம சொல்லுச்சே.. அதே திமிர்.. அதே கெம்பிரிக்கம்.. அதே இளக்காரப் பார்வை.. அத்தைக்கேத்த மருமகன்..'

காரில் வந்தவனை முறைத்தபடி வாய்க்குள் அவனைத் திட்டித் தீர்த்தாள் பூர்ணிமா.. மொண மொணவென அவள் முணுமுணுத்ததில் தோழிகள் இருவரும் சண்டையை நிறுத்திவிட்டு அவளை சந்தேகமாக பார்த்தார்கள்..

"யாரைடி வையற..?"

"உன்னைத்தான் வைவாளா இருக்கும்டி மல்லிகா.."

"ஏன் உன்ன வைய மாட்டாளா..? பூங்காவனத்துக்கு பூப் போடப் போறேன்.. மல்லிகாவ மட்டும் வையப் போறேன்னு உன்கிட்டச் சொல்லியிருக்காளா..?"

"சொன்னாத்தானா..? இந்த பூங்காவனத்தோட மனசு குத்தமத்ததுன்னு பூர்ணிக்கு நல்லாவே தெரியும்.."

"அப்ப என் மனசு குத்தமுள்ள மனசுங்கிற..?"

"அதனாலதான் குறுகுறுக்குதுங்கறேன்.."

"அடிங்.."

மல்லிகா பூங்காவனத்தை அடிக்கக் கையோங்க.. பூங்காவனம் பூர்ணிமாவின் பக்கம் அவசரமாக சாய.. பூர்ணிமா நகர்ந்து சாலையோரமாக கால் தடுக்கி விழுந்து விட்டாள்.. விழுந்தது கூட அவளுக்குப் பெரிதாக தெரியவில்லை.. காரில் வரும் கடன்காரனின் முன்னால் விழுந்து விட்டதைத்தான் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

'இவன் முன்னாடி விழுந்து தொலைச்சிட்டேனே..' வந்த எரிச்சலில் கை கொடுக்க வந்த தோழிகளின் கைகளைத் தட்டிவிட்டு..

"விடுங்கடி.. வித்தாரக் கள்ளிகளா.." என்று சீறினாள்.

"இவதான உன்மேல விழுந்தா.. என்மேல கோவிச்சுக்கறியே.." மல்லிகா மனத்தாங்கலுடன் கேட்டாள்.

"சுத்தி விடற பார்த்தியா.. நீ அடிக்க வந்ததினால தான நான் இவமேல விழுந்தேன்..? முழுப் பூசணிக்காய சோத்தில மறைக்கறதைப் போல அத நீ மறைச்சுட்டு நாயம் பேசறயேடி மல்லிகா.. இவ வித்தாரக் கள்ளின்னு உன்னச் சொன்னதில ஒரு குத்தமுமில்லடி.."

"சந்தடி சாக்கில பம்பரம் விடப் பாக்கறியா.. இவ வித்தாரக் கள்ளிகளான்னுதான் சொன்னா.. வித்தாரக் கள்ளின்னு சொல்லலை.. உன் காது என்ன செவிடா..?"

"உனக்குத்தான் டமாரச் செவிடு.. எனக்கு இல்ல.."

"உன் காதுதான் நொள்ளக் காது.. எனக்கு இல்ல.."

மறுபடியும் அவர்களுக்குள் யுத்தம் மூள.. அவர்கள் விழுந்து கிடந்த பூர்ணிமாவை மறந்து சண்டையில் கவனமானார்கள்.. பூர்ணிமா தன் கையே தனக்கு உதவியென்று கரம் ஊன்றி எழுந்து கொள்ள முனைந்த போது அவள்முன் வலிமையான ரோமம் அடர்ந்த கரம் ஒன்று நீண்டது..

"என் கையைப் பிடிச்சுக்கலாமே.." என்ற கம்பீரமான குரலும் ஒலித்தது..

திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்து பார்த்த பூர்ணிமா எழுந்து கொள்ளும் நினைவின்றி அப்படியே சிலையாக சமைந்து உட்கார்ந்து விட்டாள்.. அரவிந்தனின் கார் சாலையோரம் ஓரம் கட்டி நிறுத்தப் பட்டிருக்க, அவன் காரை விட்டு இறங்கி அவள் அருகில் வந்து நின்று கை நீட்டிக் கொண்டிருந்தான்..

அதுவரை அவனை அருகாமையில் பார்த்திராத மல்லிகாவும், பூங்காவனமும் சண்டையை மறந்து, வாய்க்குள் ஈ நுழைந்து வட்டமிட்டுத் திரும்புவதை அறியாதவர்களாக 'ஆ'வென வாய் பிளந்து அப்படியே நின்று விட்டார்கள்..

பூர்ணிமாவின் உடல் நடுங்கியது.. எதிரியின் உதவியை அவள் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை.. அவனது தைரியமும் துணிச்சலும் அவளை அச்சுறுத்தின..

'ஆடு பகை.. குட்டி உறவா..?' அவளது மனம் கொதித்தது..

அத்தைகாரிக்கு ஆதரவாக பூர்ணிமாவின் தந்தையை எதிர்த்து நின்று குரல் கொடுப்பானாம்.. கூடவே அவர் பெற்ற மகளை சரசமாகப் பார்ப்பானாம்..

'இவனோட கள்ளத்தனத்துக்கு வேற ஆளைப் பாக்கனும்.. என்ன ஆருன்னு நினைச்சான்..?' ஆத்திரம் கொண்டாள் பூர்ணிமா..

'வேற ஆள் எதுக்கு..? அதான் இவனோட அத்தை பெத்த தத்தை ஊர்மிளா இருக்காளே..'

அவளது மனம் பரிந்துரை செய்துவிட்டு..

'அவன் ஆரைக் கட்டினா உனக்கு என்ன..? உன்கிட்ட நான் ஆலோசனை கேட்டேனா..?' என்ற, பூர்ணிமாவின் கோபத்தை வாங்கிக் கட்டிக் கொண்டது..

"கம்மான்.. என் கையைப் பிடித்துக்க.."

உரிமையுடன் அவளை அவன் 'வா, போ' என்ற ஒருமையில் அழைத்ததை அவள் விரும்பவில்லை..

'இவனை ஆரு காரை விட்டு இறங்கி வரச் சொன்னா.. ஆராச்சும் பாத்து வைச்சுட்டு கதை கட்டி விட்டா என்ன செய்கிறது..? அண்ணன் அடிச்சே கொன்னுரும்..' பார்த்திபனின் நினைவில் பதறிப் போன பூர்ணிமா..

"ஏண்டி இஞ்சி தின்ன குரங்குகளா..! 'ஆ'ன்னு ஆகாசத்தப் பாத்துக்கிட்டு நின்னு தொலைக்காம கையை நீட்டித் தொலைங்கடி.." என்று தோழியின் காலில் ஒரு கிள்ளு கிள்ளினாள்..

கிள்ளு வாங்கியது பூங்காவனமாயிருக்க.. அவள் துள்ளிக் குதித்து சுய நினைவுக்கு வந்து..

"ஸ்ஆ.." என்று காலைத் தடவியபடி..

"இவள விட்டுட்டு என்ன மட்டும் கிள்ளறியேடி.." என்று நியாயம் கேட்டாள்..

"இப்ப அதுவாடி முக்கியம்..?" பூர்ணிமா பல்லைக் கடிக்க..

"எழுந்திரு பூர்ணி.." என்று கை கொடுத்து அவளைத் தூக்கி விட்டாள் மல்லிகா..

"வாங்கடி போகலாம்.." பூர்ணிமா விரைந்து நடக்கப் போனாள்..

"ஒன் மினிட்.." அவளுக்கு குறுக்கே கைநீட்டி மறித்த அரவிந்தன்..

"ஹெல்ப் பண்ண வந்தவனோட ஹெல்ப்பை ஏத்துக்கத்தான் மறுத்துட்ட.. அட்லீஸ்ட் ஒரு தேங்க்ஸாவது

சொல்லலாமே.. அந்த கர்ட்டஸிகூட உனக்கு இல்லையா..?" என்று கேட்டான்..

மல்லிகாவும் பூங்காவனமும் மறுபடியும் வாய் பிளந்து இமை கொட்டினார்கள்.. அரவிந்தன் காரைவிட்டு இறங்கி வந்து அருகில் நின்று பேசுவதை அவர்களால் நம்பவே முடியவில்லை..

'இங்கே என்னடி நடக்குது..?' மல்லிகாவின் பார்வை கேட்க..

'என்னென்னவோ நடக்குதுடி..' என்று பூங்காவனத்தின் பார்வை புலம்பியது..

பூங்காவனத்தின் சவுரிமுடிப் பின்னலுக்கு மயங்காதவன் பூர்ணிமாவின் வெறுப்பான கடுப்புப் பார்வைக்கு மயங்கியிருக்கிறானே.. அப்படி பூங்காவனத்திடம் இல்லாத அழகா பூர்ணிமாவிடம் இருக்கிறது..?

பூங்காவனத்தின் மனம் புலம்பிய புலம்பலை மட்டும் மல்லிகா அறிந்திருந்தால் உனக்கு மனச்சாட்சியே இல்லையாடி என்று ஆரம்பித்து வண்டை வண்டையாகக் கேட்டுக் கழுவி ஊற்றியிருப்பாள்..

மனதுக்குள் நினைக்கும் நினைவுகளை மற்றவர் அறிய முடியாது என்பது எத்துனை வசதியானதாக இருக்கிறது..

"கர்ட்டஸியைப் பத்தி யார் பேசறதுங்கிற வரைமுறை இல்லாமப் போச்சு.." பூர்ணிமா சீறினாள்..

"வொய்..?" அரவிந்தன் புருவங்களை உயர்த்தினான்..

அந்த அழகில் மயங்கிப் போன மல்லிகாவும் பூங்காவனமும் இவனுடன் சண்டை போட வேண்டாம் என்று பூர்ணிமாவிடம் பரிந்துரை செய்ய அவா கொண்டார்கள்.. அப்படி அவர்கள் பரிந்துரை செய்தால் பூர்ணிமா..

"உங்க சங்காத்தமே வேணான்டி.." என்று ஏழு எருக்கலையை வைத்து அவர்களைத் தள்ளி வைத்து விடுவாள் என்பதினால் வாயை மூடிக் கொண்டு

பேசாமல் நின்றிருந்தார்கள்.. பூர்ணிமாவோ பொரிந்து கொண்டிருந்தாள்.

"என்னத்த 'வொய்' நொய்ன்னு வம்பு வளத்துக்கிட்டு..? அடுத்த வீட்டுப் பொண்ணுககிட்ட 'வாங்க, போங்க'ன்னு

மரியாதையாப் பேசனும்ங்கிற கர்ட்டஸி இல்லாம 'வா, போ' ன்னு பேசறது என்ன பழக்கம்..?"

"ஓ.. நீ அதைச் சொல்கிறியா..?"

"மறுபடியும் 'வா, போ' தானா..?"

"அறியாத லேடிஸை வாங்க, போங்கன்னு கூப்பிடலாம்.. ஃபார் எக்ஸாம்பிள்.. இதோ நிற்கிறாங்களே.. உன் பிரண்ட்ஸ்.. இவங்களை வாங்க, போங்கன்னுதான் பேசுவேன்.. நீயே பாரேன்.. ஹலோ.. எப்படி இருக்கீங்க..?"

அரவிந்தன் மல்லிகாவிடம் நலம் விசாரிக்க அவளுக்குக் கண்ணைக் கட்டி மயக்கமே வந்து விட்டது..

"நான்.. நான்.." வாய் குளற, பக்கத்தில் நின்றிருந்த பூங்காவனம்..

"என்கிட்டப் பேசலையே.." என்று பறந்தாள்..

"பேசிட்டாப் போச்சு.. நீங்க எப்படி இருக்கீங்க..?" பாரபட்சமில்லாமல் அவளிடமும் நலம் விசாரித்து பூங்காவனத்தின் மனக்குறையைத் தீர்த்து வைத்தான் அரவிந்தன்..

"நல்லா இருக்கேங்க.. நீங்க எப்படி இருக்கீங்க..? எங்க ஊர் உங்களுக்குப் பிடிச்சிருக்கா..?" மல்லிகாவைப் போல மயக்கம் போடாமல் கிடைத்த வாய்ப்பை இறுக்கிப் பற்றிக் கொண்டு உரையாடலைத் தொடர்ந்தாள் பூங்காவனம்..

"ஃபைன்.." ஒற்றை வார்த்தையில் பட்டுக் கத்தரித்த அரவிந்தன் பூங்காவனத்தைப் பார்ப்பதைத் தவிர்த்து பூர்ணிமாவை மையலுடன் பார்த்தான்..

"பார்த்தியா.. உன் பிரண்ட்ஸிடம், நீங்க, வாங்க, போங்கன்னுதான் பேசினேன்.."

"அப்படியே என்னிடமும் பேசித் தொலைக்கிறதுக்கு என்னவாம்..?"

"எப்படி பூர்ணிமா பேசுவேன்..? உன்னை நான் தேர்ட் பெர்சனாவே நினைக்கலியே.."

பூர்ணிமா பதறி விட்டாள்.. அரவிந்தன் பேசும் பேச்சுப் போகும் திசை அவளை பயமுறுத்தியது.. அதுவரை தள்ளி

நின்று பார்வையிலேயே பேசிக் கொண்டிருந்தவன் இப்போது பக்கத்தில் வந்து வார்த்தையில் பேச ஆரம்பித்து விட்டான்.. இது எதில் போய் முடியப் போகிறதோ.. இதை முனையிலேயே கிள்ளிவிட வேண்டுமே..

"அத்தைகாரிக்கு இருக்கிற கொழுப்பு அப்புடியே மருமகன்கிட்டயும் இருக்கு.. இந்த ஊரில உங்க அத்தை குடியிருக்காங்க.. அவ்வளவுதான்.. ஊரையே ராஜ்யம் கட்டி ஆளர ராணியம்மாவ இல்ல.. அந்தம்மாவுக்கு அப்படித்தான் மனசுக்குள்ள நினப்பு.. மருமகனாவது புத்தியோட பொழைச்சுக்கிட்டா வந்த இடத்தில மரியாதையைக் காப்பாத்திக்கிட்டுப் பட்டணம் போய் சேரலாம்.."

சினத்துடன் பேசிய பூர்ணிமாவை..

"இல்லைன்னா..?" என்ற அரவிந்தனின் நிதானமான கேள்வி உசுப்பி விட்டது..

"இல்லேன்னா உதை வாங்கிக் கிடக்க வேண்டியதுதான்.." என்று சொல்லி விட்டாள்..

"உதையா..?" புருவங்கள் சுருங்க.. கண்கள் இடுங்க ஒரு தினுசான குரலில் கேட்டான் அரவிந்தன்..

"உதையேதான்.." கோபமும் வெறுப்பும் ஒன்று சேர பல்லைக் கடித்தபடி சொன்னாள் பூர்ணிமா..

"என்னை உதைக்கும் தைரியம் யாருக்கும் இல்லை.."

"ஏன் இல்லை.. என் அண்ணன்கிட்ட மட்டும் இங்கே நடந்ததைச் சொன்னா போதும்.. அது புரட்டி எடுத்துரும்.."

"ஓ.. அதுசரி.. இங்கே என்ன நடந்தது..?"

அரவிந்தனின் அடுத்த நிதானமான கேள்வியில் பூர்ணிமா தடுமாறிப் போனாள்..

"சொல்லு.. இங்கே என்ன நடந்தது..? நான் உன்னைத் தொட்டேனா..? கட்டிப் பிடித்தேனா..? முத்தம் கொடுத்தேனா..? கையைப் பிடித்து இழுத்து தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டேனா..?"

அவன் பேசப்பேச பூர்ணிமாவின் உடலுக்குள் பூகம்பம் புகுந்து விட்டதைப் போல அதிர்வு உண்டாகியது.. அவளையே ஊடுறுவுவதைப் போலப் பார்த்தபடி

அவன் பேசிய பேச்சுக்கள் உண்மையாகவே நடக்கும் நிகழ்வுகளைப் போல அவளது உடலை கூசச் செய்தன.. தோழிகளை மறந்து அவள் சிட்டாகப் பறந்து விட்டாள்..

"ஏய்ய்.. பூரணி.. இருடி.. நாங்களும் வர்றோம்.."

பின்னால் ஓடிவந்த தோழிகளை அவள் கவனிக்கவே இல்லை.. பேய் துரத்துவதைப் போல அவனது பேச்சு அவளைத் துரத்தியதில் ஊருக்குள் நுழைந்த பின்பும் ஓட்டத்தை நிறுத்தாமல் வீட்டுக்குள் புகுந்தாள்..

"பூரணி.. ஏம்மா இப்படி ஓடி வர்ற..?" வியப்புடன் கேட்ட பூமாவிடம்..

"அம்மா.." எனப் பயந்து கழுத்தை கட்டிக் கொண்ட பூர்ணிமாவின் நடுக்கம் நிற்க வெகு நேரமாகியது..

அத்தியாயம்- 6

அரவிந்தன் காலையில் பூர்ணிமாவிடம் பேசிய விவரம் யாருக்கும் தெரியாமல் மறைக்கப்பட்டது..

"அண்ணனுக்குத் தெரிஞ்சா அவ்வளவுதாண்டி.."

அச்சத்தில் கண்கள் விரிய பூர்ணிமா சொன்ன விதத்தில் மல்லிகாவும் பூங்காவனமும் 'அமுக்குனி'யாகி விட்டார்கள்.. மல்லிகா எவருக்கும் அடி பணிய மாட்டாள்.. தோழியாக இருந்தாலும் உன் அண்ணனுக்குக் கோபம் வந்தால் எனக்கென்ன என்று ராங்கித்தனமாக கேட்டு விட்டு உண்மையைப் போட்டு உடைத்திருப்பாள்.. பூங்காவனத்தின் வாயோ.. சோழவந்தானில் மட்டுமல்ல, சுற்று வட்டாரங்களிலும் பிரசித்தி பெற்றது.. உலை வாயை மூடினாலும் மூடலாம்.. ஊர் வாயை மூட முடியாது என்பது சொலவடை.. ஊர்வாயை மூடினாலும் மூடிவிடலாம்.. பூங்காவனத்தின் வாயை மூடவே முடியாது என்பது புதுவடை.

அப்பேற்பட்ட தோழிகள் இருவரும் தம்தம் திருவாயை மூடிக்கொண்டு மௌனம் சாதித்தது பூர்ணிமாவிற்காக

அல்ல... அவளது அண்ணன் பார்த்திபனுக்காக..

பார்த்திபன் மாதவனின் பிரதிபிம்பம்.. பூர்ணிமா எவ்வாறு அழகிலும், குணத்திலும் தன் தாயைக் கொண்டிருக்கிறாளோ அதுபோல பார்த்திபன் கம்பீரத்திலும் கோபத்திலும் தன் தகப்பனைக் கொண்டிருந்தான்.. பார்த்திபனின் கண்ணசைவுக்காக காத்திருந்த கன்னியர்கள் ஏராளம்.. அந்தப் பட்டியலில் மல்லிகாவும் பூங்காவனமும் இருந்ததினால் பூர்ணிமாவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு பேசாமல் இருந்து விட்டார்கள்..

"இவ சொல்றதும் சரிதாண்டி.. இவ அண்ணனுக்கு மட்டும் விசயம் தெரிஞ்சிருச்சுன்னா வெட்டுப்பழி, குத்துப்பழின்னு ஆகிரும்.."

"ஆமாண்டி மல்லிகா.. ஆரு அது..? மதுரை வீரனில்ல.. அருவாளைத் தூக்கிக்கிட்டு மலையேறிருச்சுன்னா ஊரே ரெண்டு பட்டிருமே.."

பூங்காவனத்தின் சிலாகிப்பை விரும்பாதவளாக நொடித்தாள் மல்லிகா.. அவள் ரசிக்கும் பார்த்திபனின் வீரத்தை பூங்காவனமும் ரசிப்பதை அவள் விரும்பவில்லை.

'ரோட்டில போற கார்க்காரன் முதக் கொண்டு, வீட்டுப் பக்கம் இருக்கிற பார்த்திபன் வரைக்கும் எவனையும் நான் நினச்சுப் பாத்துறக் கூடாது.. எல்லாத்திலயும் இவ போட்டிக்கு வந்து நிப்பா..' கைவிரல்களை நெரித்துத் தன் கோபத்தை வெளிப்படுத்தினாள் மல்லிகா..

பூங்காவனம் பார்த்திபனின் கோபத்தையும் வீரத்தையும் சிலாகிப்பதற்காகத்தான் சொன்னாள் என்றாலும் அவளது வார்த்தைகளில் உண்மை இருக்கத்தான் செய்தது..

நடந்ததை அறிந்தால் பார்த்திபன் ரத்தம் கொதித்து அருவாளைக் கையில் எடுத்திருப்பான்.. அரவிந்தனை உண்டு இல்லையென்று பண்ண அவனது சட்டையைப் பிடித்து இழுத்துக் கட்டிப் புரண்டிருப்பான்.. அரவிந்தனும் பார்த்திபனுக்குச் சளைத்தவனல்ல.. பதிலுக்குத் தன் கைவரிசையைக் காட்டியிருப்பான்.. சேதாரம் ஒருவனுக்கு மட்டும் ஏற்படாது.. இருவருக்குமே ஏற்பட்டு விடும்..

'வேண்டவே வேண்டாம்..'

பூர்ணிமா மனதுக்குள் அனைத்தையும் போட்டுப் பூட்டி மறைத்தாள்.. என்ன ஆகுமோ.. ஏது ஆகுமோ என்ற பயம் மனதை அரித்துக் கொண்டே இருந்தது.. அடங்க மறுத்த பரபரப்பு 'திக்,திக்' எனும் திகில் உணர்வு..

பூர்ணிமா இப்படி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்க, மல்லிகாவும், பூங்காவனமும் பொறாமையில் வெந்து போனார்கள்..

"இவ மச்சக் கன்னிடி.."

"அதச் சொல்லு.. அவன் கார விட்டு இறங்கி வந்து கைய நீட்டறான்.. என்னால நம்பவே முடியலடி மல்லிகா.."

"இவ என்ன சொக்குப் பொடியப் போட்டாளோ.."

"அதச் சொல்லு.. அந்தப் பொடியில கொஞ்சத்த உனக்கும் எனக்கும் கொடுத்தா ஆகாதா..?"

"மந்திரிச்சு விட்ட சிங்கத்தப் போல இவ பின்னாலயே சுத்திச் சுத்தி வர்றானே.."

"அதச் சொல்லு... அந்த மந்திரத்த உனக்கும் எனக்கும் ஓதினா நாம அவன் பக்கம் ஓத மாட்டோமா..?"

"ஒன்னும் தெரியாத சின்னக்கன்னியா கண்ணக் கண்ண சிமிட்டிக்கிட்டு அவன எப்படிக் கண்ணுக்குள்ள கட்டிப் போட்டிருக்கான்னு பாத்தியா.."

"அதச் சொல்லு.. இவ 'சிமிட்டி' டீ.."

பொறாமை என்பது தோழமையையும் ஜெயிக்க வல்லது.. அடுக்கடுக்காக அடைமொழிகளைச் சூட்டிய மல்லிகாவும், 'அதச்சொல்லு, அதச்சொல்லு..' என அவற்றை ஆமோதித்த பூங்காவனமும் யாரோ, எவரோ அல்ல.. பூர்ணிமாவின் தோழிகள்..

'இதுகளையும் எதிரிக்காரிகளா ஆக்கிட்டானே..'

பூர்ணிமா அந்தக் கோராமைக்கும் அரவிந்தனையே பொறுப்பாளியாக்கினாள்.. அநியாயத்திற்கு அவனை வெறுக்கும் அளவிற்குத்தான் அரவிந்தனும் இருந்தான்.. அவனுடைய கெட்ட நேரமோ என்னவோ.. பூர்ணிமா அவனை முதன் முதலாகப் பார்த்த போதே ஒரு வில்லனாகத்தான் அவளுக்கு அறிமுகமானான்.. அந்த

நாள் இன்றும் பூர்ணிமாவின் நினைவில் கடுப்படிக்கும் நாளாக பதிந்திருக்கிறதே..

பூர்ணிமாவின் தந்தையான மாதவன்தான் ஊர் பெருந்தனக்காரர்.. கோவிலின் தர்மகர்த்தாவும் அவர்தான்.. ஊரின் ஏரியைக் குத்தகைக்கு எடுத்து அதில் வரும் வருமானத்தை ஊரின் நலனுக்காகப் பயன் படுத்துவார்.. போட்டியின்றி ஊர் பிரசிடெண்டாக ஒவ்வொரு முறையும் தேர்ந்தெடுக்கப்படும் அளவிற்கு ஊர் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றவர்... அதுவரை அவருக்குப் போட்டியாக ஏரியை எவரும் குத்தகைக்குக் கேட்டதில்லை.

அந்த வருடமும் அதுபோல்தான் நடக்கும் என்று பூர்ணிமா நினைத்தாள்.. எப்போதும் ஊர்க் கூட்டத்தை வேடிக்கை பார்க்கப் போவதைப் போல ஏரியை ஏலம் விடுவதை வேடிக்கை பார்க்கப் போனாள்.. மாதவன் தான் ஏரியை குத்தகைக்கு எடுப்பார் என்ற மெத்தனத்துடன் ஏரிகக்ரையோர புளியமரத்தின் மீது சாய்ந்து நின்று.. ஏரித் தண்ணீருக்குள் சிறுசிறு கூழங்கற்களை வீசியெறிந்து கொண்டிருந்தாள்.. மாதவன் ஏரியை ஏலத்திற்கு எடுப்பதில் எந்தவித மாற்றமும் ஏற்படாது என்று மனதார நம்பினாள்.. அதில் ஏதாவது சிக்கல் ஏற்பட்டுவிடக் கூடும் என்ற சந்தேகமே அவளுக்கு வரவில்லை.. மாதவனின் ஆளுமை ஆட்டம் காணக்கூடும் என்று அவள் நினைத்தும் பார்க்கவில்லை.. அப்படித்தான் இருந்திருக்க வேண்டும்.. அதுநாள்வரை மாதவனின் பொறுப்பில் இருந்த அனைத்தும் மாறாமல் இருக்கும் என்ற பூர்ணிமாவின் கனவு மெய்ப்பட்டிருக்க வேண்டும்..

அவ்வாறு நடக்கவில்லை.. மாதவன் ஏலத் தொகையை கூறியவுடன் 'ஒருதரம், இரண்டு தரம், மூன்று தரம்' என்று ஒப்புக்குக் கூவிவிட்டு பத்திரம் எழுத ஆரம்பித்து விடுவார்கள் இம்முறை அவர்..

"ஐம்பதாயிரம்.." என்று கூறியவுடன் 'ஒருதரம்' என்ற குரல் கேட்பதற்கு முன்பே..

"ஒரு லட்சம்.." என்ற குரல் ஒலித்தது..

கனத்த ஆண்குரலின் கம்பீரத்தில் 'எவன் அவன்..?' என்று திரும்பிப் பார்த்தாள் பூர்ணிமா.. முகத்தில் கடினம் விரவியிருக்க, பாறை போன்ற சலனமற்ற இறுக்கமான முகபாவமும், தீட்சண்யம் மிக்கப் பார்வையுமாக அவன் வந்து நின்றான்..

"யாருப்பா நீ..?"

ஊரில் மாதவனுக்கு அடுத்த முக்கியஸ்தரான வேதநாயகம் புருவங்களை நெரித்தார்.. ஏரிக்கான ஏலத்தொகை நிர்ணயம் செய்யப்பட்ட ஒன்று.. அதிக பட்ச தொகை ஐம்பதாயிரம்.. அதற்கு மேல் அதில் வருமானம் எடுக்க முடியாது..

அப்படியிருக்க லட்ச ரூபாய் ஏலம் என்பது புதிதான ஒன்று.. அவ்வாறு அதிகப்படியான விலையை நிர்ணயம் செய்வது ஊர் நலனுக்கு உகந்ததல்ல..

"அரவிந்தன்.." அலட்சியமாக அவன் பதில் சொன்னான்..

"எந்த ஊர்..?" வேதநாயகத்திற்கு அவன் பதில் சொன்ன முறையும் விதமும் பிடிக்கவில்லை.. எனவே அதட்டும் தொனியில் கேட்டார்..

"சென்னை.." அதே அலட்சியத்துடன் அவன் பதில் சொன்னான்..

"அசலூர்க்காரங்கள்ளாம் எங்க ஊர் ஏரியை ஏலம் எடுக்க முடியாதுப்பா.. இது உங்க பட்டணமில்ல.. எங்க ஊரு.. கட்டுப்பாடு அதிகம்.. அதனால ஓரமா நின்னு வேடிக்கை பாத்துட்டு பட்டினத்தப் பார்த்துப் பத்திரமாப் போய் சேரு.."

கண்டிப்பும் கேலியுமாக வேதநாயகம் பேச பார்த்திபன் உரக்கச் சிரித்தான்.. அவனுடைய தகப்பனாருக்குச் சவால் விட்ட அரவிந்தனை தூக்கிப் போட்டு மிதித்துப் பந்தாடி விடத் துடிக்கும் கோபச்சிரிப்பு அது..

பார்த்திபனின் சிரிப்பை வெறித்துப் பார்த்த அரவிந்தனின் விழிகளில் கடுமை தெறித்தது..

"எங்கே வந்து ஆரைப் பாத்து முறைக்கிற..?" பார்த்திபன் வேட்டியை மடித்துக்கட்ட..

"பொறு பார்த்திபா.." என்ற மாதவனின் குரல் அவனை அடக்கியது..

"மகனைக் கட்டுப்படுத்தனும்னு அவசியமில்ல.. இவன் என்ன பெரிய சண்டியரா..? மோதிப் பாக்கச் சொல்லு அரவிந்த்.. இவனா, நாமளான்னு பார்த்திருவோம்.." குரல் கொடுத்தபடி அங்கே வந்து நின்றாள் மேனகா..

அவளைக் கண்டதும் கூட்டத்தில் சலசலப்பு உண்டானது.. அவளருகே அவள் மகன் மகேந்திரன் நின்றிருந்தான்.. பார்த்திபனை அவன் யதேச்சையாகப் பார்த்து வைக்க பார்த்திபன் முறைத்த முறைப்பில் பயந்து போனவனாக மேனகாவின் முதுகிற்குப் பின்னால் பம்மிக் கொண்டான்..

அரவிந்தன் அதைக் கவனித்து விட்டான்.. அவன் முகத்தின் கடுமை கூடியது.. பார்த்திபனை இவன் முறைக்க.. பதிலுக்கு அவன் முஷ்டியை மடக்க.. அங்கே கைகலப்பு உருவாகும் சூழல் ஏற்பட்டு விட்டது..

"அம்மா மேனகா.. இது என்ன புதுப்பழக்கமா இருக்கு..?" வேதநாயகம் முகம் சுளித்தார்..

"எல்லாமே பழைய பழக்கமா இருந்தா எப்படிங்க..? பழக்கத்தை மாத்தனுமில்ல.. அதுக்குத்தான் வந்திருக்கேன்.." பூடகமாகப் பேசினாள் மேனகா..

"நீ வந்ததைப் பத்தி அப்புறமாப் பேசலாம்.. இது ஆரு..? பபட்டினத்துக்காரப் பையனுக்கு நம்ம ஊருக் கூட்டத்தில என்ன வேல..? இந்த ஊரு ஏரிய ஏலம் கேட்க இவன் ஆரு..?"

"அவசரப்பட்டு வார்த்தையை விட வேணாம்.. இவன் என்னோட ஒன்னு விட்ட அண்ணன் மகன்.. என் சார்பில ஏலம் கேட்க வந்திருக்கான்.. இதில ஒன்னும் தப்பு இல்லையே.. இவன்தான் வெளியூர்காரன்.. நானும் என் புருசனும் இந்த ஊர்க்காரங்கதான..? ஏலம் எடுக்க எங்களுக்கும் உரிமை இருக்கில்ல..?"

"இத்தனை நாளா வராத உரிமைப் பிரச்னை இப்ப ஏம்மா வந்திருக்கு..? வழக்கமா என்ன தொகைக்கு ஏலம் போகுமோ, அதே தொகைக்குத்தான ஏலம் விட்டிருக்கோம்..?"

"தொகையை மட்டும் சொல்றீங்களே.. ஆளைச் சொல்ல மாட்டேங்கறிங்களே.. வழக்கமா வருசாவருசம் ஏலம் எடுக்கிற ஆளுக்கே இந்த வருசமும் ஏரியைக் கொடுத்தா எப்படி..?"

"அவரு ஊருக்காக ஏலம் எடுக்கிறாரும்மா.."

"நானும் இந்த ஊருக்காகத்தான் ஏலம் எடுக்கறேங்க அவரு மட்டும்தான் ஊருக்கு நல்லது செய்யனுமா..? நாங்க செஞ்சா ஊரு ஜனம் ஏத்துக்காதா..?"

ஏற்றுக் கொள்ளாது என்று சொல்லி விடலாமா என்ற கோபம் வந்தது வேதநாயகத்துக்கு.. ஊர் மக்கள் என்ன முட்டாள்களா..? யார் செய்தாலும் ஏற்றுக் கொள்வார்களா..? நன்மை செய்வதற்கும் ஓர் தராதரம் வேண்டும்.. அது மேனகாவிடம் இல்லையே..

"நீ வம்பு வளக்கனும்னே வந்திருக்கிறம்மா.. இது வாக்குவாதத்துக்கு அஞ்சாத ஊரு.. தெரியுமில்ல.."

"தெரியும்ங்க.. நானும் இந்த ஊர்க்காரிதான்.."

"உங்கப்பா இந்த ஊர்க்காரருங்கிறதினால நீ இந்த ஊர்தான்னு சொல்லிக்கலாம்மா.. பிறந்து வளர்ந்தது இந்த மண்ணிலயா..? இல்லயே.. பட்டினத்தில பிறந்து அங்கேயே படிச்சு வளந்த.. இந்த ஊர்க்காரன் தேவேந்திரனக் கட்டிக்கிட்டாலும் உங்க அம்மாவைப் போல பட்டினத்திலேயேதான இருக்க..? எப்பவோ ஒரு தரம் வந்து போற உனக்கு இந்த ஊரைப் பத்தியும் ஊரு ஜனத்தப் பத்தியும் என்ன தெரியும்..?"

வேதநாயகம் 'நச்' சென்றுதான் கேள்வி கேட்டார்..

அத்தியாயம்- 7

மேனகா வயலூருக்கு எப்போதாவது ஓர் முறைதான் வந்து போவாள்.. அது ஊர்த்திருவிழாவாக இருக்கும்.. அவளைத் திருமணம் செய்து கொண்ட தேவேந்திரன் மனைவி சொல்வதைச் சிரமேற்கொண்டு செய்து முடிப்பவர்..

மாதவனைத் திருமணம் செய்து கொள்ள முடியாத தோல்வியின் வலியை மேனகாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவள் வயலூரரை வெறுத்தாள்..

"நான் மெட்ராஸில இருந்து பழகிட்டவ.. என்னாலே இங்கே குப்பை கொட்ட முடியாது.. எனக்கு எங்க அம்மாவீடு சென்னையில இருந்தாலும் என் வீடுன்னு ஒன்னு இருக்கனும்.."

"அதுக்கென்ன கண்ணு.. உனக்கு மெட்ராஸில பங்களா வாங்கித் தர்றேன்.." உடனடியாக வாக்குக் கொடுது விட்டார் தேவேந்திரன்..

ஆற்றுப்பாசன வாயல்களில் ஒரு பகுதி விற்கப்பட்டு சென்னையில் பங்களாவாகவும் காராகவும் உருமாறியது.. உள்ளூரில் தேவேந்திரனின் வசதி குறைந்ததில் அவரைப் பெற்றவர்கள் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டனர்.

"பரம்பரை பரம்பரையா நம் கையிலே இருந்த வயல்கள்டா.. பொன் விளையற பூமி.. இதை வித்து பட்டிணத்தில வீடு வாங்கறயே.. நீ புத்தியக் கடன் கொடுத்திட்டியா..?"

"எனக்கு என் பொண்டாட்டியோட சந்தோசம்தான் முக்கியம்.." என்று சொல்லி விட்ட தேவேந்திரனை பெற்றவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை..

மேனகா சென்னையில் வசிக்க ஆரம்பித்தாள்.. தேவேந்திரன் மாதத்திற்கு இருமுறை சென்னை சென்று வருவார்.. மகேந்திரன், ஊர்மிளா என இரு குழந்தைகளுக்குத் தாயான பின்னரும் மேனகா வயலூருக்குத் திரும்பவில்லை.. பிள்ளைகளின் பள்ளி விடுமுறை நாள்களில் வயலூருக்கு வருவாள்.. என்னவோ பட்டிக்காட்டைப் பார்த்திராத பட்டிணத்து வாசியைப் போல முகத்தை வைத்துக் கொண்டு ஊரை வலம் வருவாள்.. திமிர் பிடித்தவள் என்று ஒருவரும் அவளிடம் பேச்சுக் கொடுக்க மாட்டார்கள்..

அந்த மேனகா இப்போது வயலூரில் தேங்கியிருப்பதைக் குறித்து எவரும் பேசிக் கொள்ளவில்லை.. அவர்கள் பேசுவதற்கு ஆயிரம் விசயங்கள் உள்ளன.. தினமும் மாறும்

நாட்டு நடப்பு இருக்கிறது.. அழியாமல் காக்க வேண்டிய விவசாயம் இருக்கிறது.. ஊர்த்திருவிழா இருக்கிறது.. ஊர் ஒன்றுபட்டு செய்ய வேண்டிய எத்தனையோ செயல்பாடுகள் இருக்கின்றன.. இவற்றையெல்லாம் விட்டு விட்டு மேனகா ஏன் சென்னைக்குப் போகாமல் சோழவந்தானிலேயே முற்றகையிட்டிருக்கிறாள் என்று பேசுவார்களா என்ன..?

மேனகாவின் மகன் மகேந்திரனுக்கு பார்த்திபனின் வயதுதான்.. பார்த்திபன் திருவேடகம் கல்லூரியில் எம்.எஸ்.ஸி பிஸிக்ஸ் படித்து விட்டு மதுரையில் பி.எட் படித்தான்.. ஆசிரிய நியமனத் தேர்வை எழுதித் தேர்ச்சி பெற்று சோழவந்தான் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறான்.. வேலை நேரம் போக வயலில் இறங்கி உழவு வேலை செய்யும் உழவன் மகன் அவன்..

மகேந்திரன் அப்படியல்ல.. அவன் உழைக்கப் பழகவில்லை.. சேறு படாமல் வளர்ந்தவன் விவசாய வயல்களின் பக்கம் பார்க்கக் கூட மாட்டான்.. ஆறு ஓடும் சோழவந்தானின் ஈரப்பசை மிக்க குளுகுளு தென்றல் காற்றை அனுபவிக்காமல் இருபத்தி நான்கு மணி நேரமும் ஏஸியில் இருப்பவன் அவன்.. என்ஜினியரிங் படித்து விட்டு வேலை ஏதும் செய்யாமல் ஊரைச் சுற்றுபவன்..

அவனது தங்கை ஊர்மிளா எம்.பி.ஏ படித்தவள்.. சதாசர்வகாலமும் மேக்கப் போட்டுக் கொள்வதிலேயே கவனமாக இருப்பாள்.. திமிரில் மேனகா எட்டடி பாய்ந்தால் இவள் எட்டாயிரம் அடி பாய்வாள்.. அவளது அழகுக்கு சென்னையே ஈடாகாது.. சோழவந்தான் ஈடாகுமா என்று புலம்பிக் கொண்டிருக்கிறாள்..

இப்படி வயலூரில் இருக்க மறுத்து அடம் பிடிக்கும் மகனையும், மகளையும் இழுத்துக் கொண்டு வந்து சோழவந்தானில் இருக்க வைத்து கொடுமை செய்யும் அளவுக்கு ஊர்ப் பற்றுடையவள் அல்ல மேனகா.. பின் எதற்காக அங்கே வந்திருக்கிறாள் என்று எவருக்குமே தெரியாது.. அதைத் தெரிந்து கொள்ள எவரும் ஆர்வம் காட்டவுமில்லை..

அந்த மேனகா.. தன் வீர மகனுடன் (?) ஏரியை ஏலம் எடுக்கும் இடத்திற்கு வந்து நின்ற போதுதான் அவளது திட்டம் எதுவாக இருக்கும் என்று துளியளவு வரைபடம் பூர்ணிமாவுக்குக் கிட்டியது.. அதையும் பார்த்திபன்தான் சொன்னான்..

"சோழியன் குடுமி சும்மா ஆடாதும்மா.. அந்தப் பொம்பள ஏரிய ஏலம் எடுக்கறதில போட்டிக்கு வந்ததோட நிறுத்திக்க மாட்டா.. பட்டிணத்த விட்டுட்டு வயலூருக்கு அவ சும்மா ஒன்னும் வரல.. காரியமாத்தான் வந்திருக்கா.."

"அவ, இவன்னு சொல்லக் கூடாது பார்த்தி.. வாத்தியாரு வேல பாக்கிற.. நீயே மரியாதையைக் கைவிட்டா உன்கிட்ட படிக்கிற புள்ளைகளுக்கு எப்புடி நல்லது, கெட்டதை சொல்லிக் கொடுப்ப..? ஆயிரம்தான் இருந்தாலும் அவ உனக்கு அம்மா முறையாகனும்.. அத நினப்பில வைய்யி.." பூமா மகனைக் கண்டித்தாள்..

"அவளுக்கெல்லாம் என்னால மரியாதை கொடுக்க முடியாதும்மா.. இன்னைக்கு ஏரிக்கரையில அவ பேசுன பேச்சுக்கு அங்கேயே சங்கை அறுத்திருப்பேன்.. அப்பா என் கையக் கட்டிப் போட்டுட்டாரு.."

"ஆத்தி.. படிச்சவன் பேசற பேச்சாடா இது.. இதுக்காடா மகனே உன்ன வம்பாடு பட்டு படிக்க வச்சோம்..? கவர்ண்மெண்டு பள்ளிக்கூடத்தில எம்மகன் பெரிய புள்ளகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கிற வாத்தியாரா இருக்கிறான்னு நான் பெருமப்பட்டுக் கெடக்கிறேன்.. நீ என்னடான்னா படிக்காத தற்குறிப் பய மாதிரி சங்க அறுக்கப் போறன்னு சொல்ற.. இதக் கேக்கவா உசிர வைச்சுக்கிட்டு இருக்கேன்..?"

அன்று பூமா புலம்பிய புலம்பலில் பார்த்திபன் அந்தலை-சிந்தலையாகிப் போனான்... முரட்டு பார்த்திபனைக் கட்டுக்குள் வைத்திருக்க பூமா கையாளும் யுக்திகளில் இதுவும் ஒன்று..

"ம்மா.. அந்த மேனகாப் பொம்பளயோட அண்ணன் மகன்னு தெனாவெட்டு புடிச்ச சண்டியரு ஒருத்தன் வந்திருக்கான்..

அவனும் இவளும் சேர்ந்து இன்னைக்கு ஏலத்தில ஆடின ஆட்டத்தப் பாத்திருந்தா இப்படிப் பேச மாட்ட.."

பார்த்திபன் பொருமினான்.. அவன் பொருமிய பொருமலுக்குச் சற்றும் குறையாத பொருமலும் கோபமும் பூர்ணிமாவின் மனதில் மையமிட்டிருந்தன.. அன்று மேனகா ஆடிய ஆட்டம் அப்படிப் பட்டதுதான்.. அவளது பாதுகாவலன் போல கூட நின்ற அரவிந்தனும் சப்தம் போட்டான்.. இது எதற்கான அறிகுறியென்று பூர்ணிமா கலவரம் கொண்டாள்.. அவளது தந்தையின் முதன்மைக்கு போட்டி வந்து விட்டதா..?

"மெட்ராஸில குடியிருந்தா வயலூர விட்டு ஒதுக்கி வைச்சுருவீங்களா..?" மேனகா கண்கள் இடுங்கக் கேட்டாள்.

பெண்களிடம் வாக்குவாதம் செய்வதா என்று வேதநாயகத்துக்கு கடுப்பான கடுப்பு..

'இந்தப் புள்ளய இங்க பத்தி விட்டுட்டு அந்த தேவேந்திரன் வீட்டில உக்காந்துக்கிட்டு என்னத்த வெட்டி முறிக்கிறான்..?'

"நான் கேட்கிறதுக்குப் பதில் சொல்லுங்க.."

"ஏம்மா.. உன் புருசன் எங்கே..?"

"ஏன்..? அவர் வந்தாத்தான் பதில் சொல்வீங்களா..? என்னைப் பாத்தா ஆளாத் தெரியலையா..?"

'பேசாமல், ஆமாம்மா, அப்படித்தான்னு சொல்லிரலாமா..?' வேதநாயகம் யோசித்துக் கொண்டிருக்கும் போது..

"தெரியலைன்னு சொல்லிருங்க பெரியப்பா.." என்று குரல் கொடுத்தான் பார்த்திபன்..

கூடியிருந்த கூட்டம் கொல்லெனச் சிரித்ததில் முகம் சிவந்து போனாள் மேனகா..

"ஹேய்.. பல்லைத் தட்டிக் கையில் கொடுத்துருவேன்.. பார்த்துப் பேசு.." அரவிந்தன் உறுமினான்..

"அட.. பட்டிணத்து சூரப்புலி என் பல்லைக் கழட்டிக் கையில் கொடுத்துருமாமில்ல.. டேய்.. ஆம்பள சிங்கம்.. பல்லக் கழட்டிக் கையில கொடு பாப்போம்.." பார்த்திபன் அரவிந்தனின் சட்டையைப் பிடித்து விட்டான்..

அரவிந்தன் பார்த்திபனின் நெஞ்சில் கை வைத்துத் தள்ள.. அவன் அரவிந்தனின் தோளில் கை வைத்து தள்ளி விட்டான்.. இருவரும் கட்டிப் புரள ஊர்மக்கள் ஊடே புகுந்து விலக்கி நிறுத்தினார்கள்..

"அமைதியா இரு பார்த்திபா.." மாதவன் மகனைக் கண்டிக்க..

"அடிடா அரவிந்தா அவனை.." என்று மேனகா அண்ணன் மகனை உசுப்பி விட்டாள்..

"அடிச்சுப் பார்க்கட்டும்.. அப்புறம் தெரியும்.. இந்த ஊர்க்காரங்க கைவரிசை எப்படியாப்பட்டதுன்னு.. என்னம்மா அசலூர்க்காரனைக் கூப்பிட்டுக்கிட்டு வந்து இந்த ஊர்க்காரன் கிட்ட மோத விடறியா..? ஊருக்காரங்க பாத்துக்கிட்டு சும்மா இருப்பாங்கன்னு நினைச்சியா..?" வேதநாயகம் சப்தம் போட்டதில் கலவரம் கொஞ்சம் அடங்கியது..

"அது என்னங்க.. ஒவ்வொருதரமும் அவரே ஏலம் எடுக்கிறது..? இந்த முறை நான் எடுக்கறதா இருக்கேன்.."

"அவரு ஊரு பிரசிடெண்டும்மா.."

"இன்னைக்கு வேணும்னா அவர் பிரசிடெண்டா இருக்கலாம்.. நாளைக்கே எலக்சன் வந்தா நானும் பிரசிடெண்ட ஆகலாம்.."

"அதுக்கு ஊருசனம் ஓட்டுப் போடனுமே.."

கூட்டத்தில் இருந்த ஒருவன் குரல் கொடுக்க மறுபடியும் கொல்லென்ற சிரிப்பு சப்தம் உருவானது..

"ஹீ இஸ் தட் மேன்..?" அரவிந்தன் கத்தினான்..

"தமிழ்ல பேசுடா.." கூட்டத்தில் ஒருவன் பதிலுக்கு கத்தினான்..

"சும்மா இருங்கப்பா.." கூட்டத்தை அதட்டிய வேதநாயகம் அரவிந்தனின் பக்கமாக திரும்பி..

"பாருப்பா.. உன்னோட ஒறவு மொறய எல்லாம் உன் அத்த வீட்டோட வைச்சுக்க.. இப்புடி ஊர்க் கூட்டத்துக்கு வர்றது.. ஏலத் தொகையக் கூட்டி விடறது.. எங்க ஊருக்காரன் மேல கைய வைக்கிறது.. எங்க பயலுகள பாத்துச் சத்தம்

போடறதுன்னு சலம்பல் பண்ணினே.. நடக்கிறதே வேற.. விருந்தாடியா வந்திருக்கிறதினால சும்மா விடறோம்.. அடக்க ஒடுக்கமா நிக்கிறதுன்னா நில்லு.. இல்லேன்னா உன் அத்த வீட்டப் பாத்துப் போயிரு.." என்று அதட்டினார்..

அப்போது அரவிந்தனின் முகம் பயங்கரமாக மாறியதை இப்போது நினைத்துப் பார்த்தாலும் பூர்ணிமா பயத்தில் உறைந்து போவாள்.. கண்கள் கோவைப் பழமாக சிவக்க நின்றிருந்தவனின் பார்வை யதேச்சையாகத்தான் பூர்ணிமாவின் பக்கமாக பாய்ந்தது.. மிரண்டு விழித்தவளின் மான்குட்டிப் பார்வையில் தெரிந்த பயத்தில் அவனது புருவங்கள் உயர்ந்தன.. மின்வெட்டும் நேரத்திற்குள் அவனது பார்வையில் இருந்த கடுமை மறைந்து போய் கனிவு வந்தது.. லேசாக இதழ்களை வளைத்துச் சிரித்து வைத்தான்..

பூர்ணிமா அரண்டு போய் புளிய மரத்தின் பின்னால் பதுங்கிக் கொண்டாள்.. அவன் பார்க்கிறானா என்று பார்த்தாள்.. புளியமரத்தின் மறைவில் ஒன்றியிருந்ததால் அவனது பார்வையிலிருந்து அவள் தப்பித்திருக்கிறாள் என்பதில் தற்காலிக நிம்மதி வந்தது.. தடதடத்த இதயம் சீராக சில நொடிகளானது.. திணறிய சுவாசம் சரியானது.. இப்படியே இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்..!

'கள்ளன்.. எங்கண்ணன் மேல கையை வைச்சுட்டு என்னப் பாத்து சிரிக்கிறானே.. இவனுக்கு எம்புட்டு நெஞ்சழுத்தம் இருக்கனும்.. எங்கப்பா ஏலம் எடுக்கிறதக் கெடுக்க வந்திருக்கவன் என்ன வைச்ச கண்ணு வாங்காம பாத்து வைக்கிறான்.. கொழுப்பு.. என்ன ஆருன்னு நினச்சான்..? அழிச்சாட்டக்காரன்..'

பூர்ணிமா புளிமரத்தை விட்டுத் தலையை இந்தப் பக்கம், அந்தப் பக்கம் நகர்த்தவில்லை.. செதுக்கி வைத்த சிலைபோல அசையாமல் நின்ற இடத்தில் நின்றபடி காதுகளை மட்டும் தீட்டி நடக்கும் வாக்குவாதத்தை கேட்டுக் கொண்டிருந்தாள்..

மேனகா ஏரியை ஏலம் எடுத்தே தீருவேன் என்று அடம் பிடித்தாள்.. ஊர்க் கூட்டம் அதற்கு அனுமதிக்க வில்லை..

அது எப்படி நியாயமாகும் என்று அரவிந்தன் கேட்டான்.. நீ யார் அதைக் கேட்க என்று ஊர் மக்கள் கேட்டார்கள்..

அத்தியாயம்- 8

"நான் கேட்காம வேற யாரு கேட்பாங்க..?"

இந்தக் கேள்விதான் அரவிந்தனை பூர்ணிமாவுக்கு எட்டிக் காயாக்கி விலக்கி நிறுத்தியது.. மண் மணக்கும் சோழவந்தானில், கன்னியரின் மனம் மயக்க சென்னையிலிருந்து வந்து இறங்கியிருக்கும் கதாநாயகன் அவன்..

"ஆத்தி.. ஆனாலும் ஒரு ஆம்பளக்கு இம்புட்டு அழகு இருக்கக் கூடாதுடி.. சுண்டினா ரத்தம் கொட்டறாப்புல செக்கச் செவேல்ன்னு இருக்கானே.."

எண்பது வயதிலும் கண்பார்வை மங்காத காத்தாயிக் கிழவி மோவாயில் கைவைத்து அதிசயப் பட்டுப் போனாள்.

"ஏன் அப்பத்தா.. நீயென்ன சுண்டி விட்டுப் பாத்தியா..?" வயதுப் பெண்களில் ஒருத்திக் குறும்பாக கேட்டாள்..

"கிழவிக சுண்டி விடத்தான் அவன் கன்னத்தக் காட்டுவானாக்கும்..?" கிழவி எதிர் கேள்வி கேட்டாள்..

"அப்பக் குமரிப் புள்ளைக சுண்டி விடக் கன்னத்தக் காட்டுவான்னு சொல்ற..?" கேட்டவளின் மனதின் குறுகுறுப்பு விழிகளில் அப்பட்டமாகப் பளிச்சிட்டது..

"நீ வேணும்னாக் கேட்டுப்பாரு புள்ள.."

"போ அப்பத்தா.. நான் எதுக்கு அவன்கிட்டப் பேசப் போறேனாம்.."

"அப்புடியா..? ஒன்மனசில அந்த ஆசை இல்லயா..?"

"இல்ல அப்பத்தா.."

"போடி.. பொய் சொல்லி..!"

கிழவியின் பட்டம் சூட்டுதலில் அந்தக் குமரி சீறிப் பாயவில்லை.. அவளது கள்ளத்தனத்தைக் கிழவி கண்டு

கொண்டாள் என்பதில் செல்லமாக சிணுங்கினாள்..

"ம்ஹீம்.. பொம்பளைக்கு இருக்க வேண்டிய மூக்கும், முழியும் லட்சணமும் செக்கச் செவேல்ங்கிற நெறமும் ஆம்பளைக்கு இருந்து தொலைக்குது.. சீமைத்துரை மாதிரி ஒருத்தன் ஊருக்குள்ள வந்தா குமரிப்புள்ளைக மனசு அலபாயத்தான செய்யும்..?"

காத்தாயிக் கிழவி வெற்றிலையை இடிக்க ஆரம்பித்தாள்.. பூர்ணிமா புளியமரத்தின் பின்னாலிருந்து லேசாக எட்டிப் பார்த்தாள்.. அரவிந்தன் தெரிந்தான்.. காத்தாயிக் கிழவியின் வர்ணனை அவனை ஊன்றிப் பார்க்கத் தூண்டியது..

'கெழவி சொன்னதப் போலதான் இருக்கான்..'

மயங்க யத்தனித்தது மனது.. கன்னியரின் மனதை சலனப்படுத்த வந்த கள்வன் அவன் என்று கோபம் கொண்டாள் பூர்ணிமா.. அவளது அன்புத் தந்தையின் ஆளுமையைக் கேள்வி கேட்கக் கிளம்பி வந்திருக்கிறான் ஒருவன்.. அவனுடைய சட்டையைப் பிடித்துப் புழுதியில் தள்ளிக் கட்டிப் புரண்டானே பார்த்திபன்.. அவனுக்குத் தங்கையென்றால் வந்திருக்கும் கள்வனின் அழகில் மதுவுண்ட மலராக அவள் மயங்கி நிற்கலாமா..?

'ச்சே..!'

பூர்ணிமா கூசிப்போனவளாக பின்வாங்குவதற்குள் அரவிந்தன் அவளைப் பார்த்து விட்டான்.. ஒளிந்திருந்து அவனை அவள் பார்க்கிறாள் என்பதில் அவன் கண்களில் மின்னல் வந்தது..

'ஆத்தி..'

பூர்ணிமா ஒடுங்கிப் போனவளாக மரத்துடன் மரமாக ஒட்டி நின்று விட்டாள்.. அவளது நெஞ்சம் பதறியது..

'என்னை என்னன்னு நினச்சான்.. இவன் வைக்கிற கண்ணியிலே சிக்கிக்குவேன்னா..?'

கண்களில் அவன் வலை விரிப்பதில் பயந்து போன பூர்ணிமா மரத்தின மறைவை விட்டு வெளியே

வரவேயில்லை.. அரவிந்தன் நொடிக்கொருதரம் மரத்தைப் பார்த்தபடி ஊர் மக்களுடன் மோதிக் கொண்டிருந்தான்..

"இவரு பெரிய எம்.ஜி.ஆரு.. தட்டிக் கேக்க வந்துட்டாரு.." பார்த்திபன் ஏளனமாகச் சொன்னான்.. கூட்டம் சிரித்து மகிழ்ந்தது..

"உங்கண்ணன் சரியாத்தான் சொல்றான் புள்ள.. இவன் எம்.ஜி.ஆரு மாதிரி செக்கச் செவேல்ன்னுதான இருக்கான்..?" காத்தாயிக் கிழவி கடுப்பேற்றினாள்..

"சும்மாயிரு அப்பத்தா.. அசலூர்க்காரன உசத்தியாப் பேசாத.." பூர்ணிமா சிடுசிடுத்தாள்..

"பேசினா என்னடி பண்ணுவ..?"

"கல்லத் தூக்கி மண்டையில போட்டிருவேன்.. பாத்துக்க.."

"அடியாத்தி.. நீ செய்தாலும் செய்வேடி.. நேத்துச் சாயங்காலம் என் மருமகளோட பழமை பேசினவதான நீ.. அவ சொன்னாளா..?"

"என்னத்தச் சொல்லுச்சு..?"

"என் மண்டையில கல்லத் தூக்கிப் போடச் சொன்னாளாங்கிறேன்.. ஆள வைச்சு அடிக்கப் பாக்கிறாளா..?"

"உம்மண்டையில கல்லத் தூக்கிப் போட உம்மருமக தூண்டி விடனுமாக்கும்..? ஊரே உன்மேல கொலை வெறியிலதான் இருக்கு.. எங்கக் கல்லக் கண்டாலும் தூக்கிப் போட உன்தல எம்புடுதான்னுதான் தேடுது.. அதனால.."

"அதனால..?"

"நீ வாயை மூடிக்கிட்டு வெத்தலய இடிச்சுக் கொதப்பறதோட நிப்பாட்டிக்க.. ஊரை இடிச்சு.. வாயில போட்டுக் கொதப்புற சோலிக் கழுதய விட்டுப்புடு.."

"எவடி அவ.. என்னப் பாத்து ஊர் வம்பு பேசறவன்னு சொல்றவ..? இந்தக் காத்தாயிக் கெழவி வாயத் திறந்தா அம்புட்டுத்தான்.. நாறிப்புடும் நாறி.."

"அடங்கு கிழவி.. இப்ப என்னாத்துக்கு ஆட்டம் காண்பிக்கற.. நீ ஊர் வம்பு பேசறதே இல்லயாக்கும்..?

எப்பப்ப ஆர்ஆருகிட்ட நீ ஊரை இடிச்சு உலையில போட்டேன்னு எடுத்து விடவா..? அதுக்கப்புறம் தெரியும்.. ஆரு மணம் பெத்துப் போறா.. ஆரு நாறிப் போறான்னு.. வாயிருந்தா நீ என்ன வேணும்னாலும் பேசிருவியா..? இருக்கு கிழவி உனக்கு.."

"என்னடி இருக்கு..?"

"பஞ்சாயத்து இருக்குன்னேன்.. இப்ப ஓடற பஞ்சாயத்து முடியட்டும்.. அடுத்த பஞ்சாயத்து உன்மேலதான்.. ஊரு விட்டு ஊரு வந்து ஒருத்தன் சவுண்டு விட்டுக்கிட்டு இருக்கான்.. அவன நம்பியாருன்னு சொல்லாம எம்.ஜி.ஆருன்னா சொல்ற..? எம்.ஜி.ஆரு மட்டுமா செக்கச் செவேல்ன்னு இருந்தாரு..? நம்பியாரும் அந்தக் கலருதான்.."

"சரி.. இப்ப என்ன உனக்கு..? இந்தப் பயல நானு எம்.ஜி.ஆருன்னு சொல்லக் கூடாது.. நம்பியாருன்னு சொல்லனும்.. அம்புட்டுத்தான.. சொல்லிட்டாப் போச்சு.. இதுக்கு ஏன்புள்ள பஞ்சாயத்தக் கூட்டனும்னு சொல்ற..?"

"இம்புட்டுத்தானா உன் வீரம்..? நீயெல்லாம் சோழவந்தான் மூக்கையாவுக்குச் சொந்தம்ன்னு சொல்லிக்காதே.."

"நீயென்னாத்தா.. இப்படிக்கா போனா.. அப்படிக்கா வர்ற.. அப்படிக்கா போனா இப்படிக்கா வர்ற.. இப்ப என்ன என்னதான் செய்யச் சொல்ற..?"

"ஊம்.. வாய மூடிக்கிட்டு இருக்கச் சொல்றேன்.."

பூர்ணிமா காட்டிய சைகையில் காத்தாயிக் கிழவி வாயை இறுக்கமாக மூடிக்கொண்டு வெத்தலை பாக்கை இடிக்க ஆரம்பித்தாள்.. அந்த வெத்தலைக் கும்பாவில் பூர்ணிமாவைப் போட்டு இடிக்க முடியாத வெறி அதன் ஓசையில் வெளிப்பட்டது..

'அம்புட்டுக் காண்டு..?' பூர்ணிமாவின் விழிகள் கேட்க.. காத்தாயிக் கிழவி பூர்ணிமாவுக்கு புறமுதுகு காட்டித் தப்பித்தாள்..

'அஃது..' பூர்ணிமா ஏரியை ஏலம் எடுக்கும் பஞ்சாயத்து என்னவானது என்பதைக் கவனிக்கத் திரும்பினாள்..

"கேட்டுக்க அரவிந்தா.. இந்த ஊர் இன்னும் எம்.ஜி.ஆர் காலத்தில இருந்தே வெளியே வரலை.. புரியும்ன்னு நினைக்கிறேன்.." மேனகா இடக்காக சொன்னாள்..

"புரியுது அத்தை.." அரவிந்தன் சொன்னதற்கு..

'ஜால்ரா தட்டறான்...' என்று பல்லைக் கடித்தாள் பூர்ணிமா..

"இது சுதந்திர நாடு.. பரம்பரைப் பெருமையைப் பேசிக்கிட்டு பதவியில ஒட்டிக்கிட்டு இருக்கிறதெல்லாம் இனிமேலும் செல்லாது.. காலிப் பெருங்காய டப்பாக்களை யெல்லாம் தூக்கிக் குப்பைத் தொட்டியில போடனும்.. கோபுரத்தில வைக்கக் கூடாது.." மேனகாவின் பார்வை மாதவனின் முகத்தை வலம் வந்து அவள் யாரைச் சொல்கிறாள் என்பதை இனம் காட்டியது..

"இந்தாரு.. பொம்பளையாச்சேன்னு பாக்கறேன்.. இல்லேன்னா பொளந்து கட்டிருவேன்.. விட்டா நீ விடிய விடியப் பேசிக்கிட்டு இருக்க.. யாரு காலிப் பெருங்காய டப்பா..? இது மணக்கிற பூந்தோட்டம்.. சோழவந்தான் ஆத்துத் தண்ணிய விட்டு அகலாம இந்த மண்ணிலேயே நிலைச்சு நிக்கிற பூந்தோட்டம்.. உன்னப் போல பொன்னு விளயற பூமிய வித்து அதில பட்டிணத்தில பங்களா வாங்கிக் குடியிருந்துக்கிட்டு வருசத்துக்கொரு தரம் தலையை காட்டிப்புட்டுப் போற வர்க்கமில்ல.. ஊர்ப் பெருமயப் பேச உனக்கென்ன அருகத இருக்கு..?"

பார்த்திபன் போட்ட சப்தத்தில் அரவிந்தன் ஆள்காட்டி விரலை உயர்த்தி அவனை எச்சரித்தான்..

"மைண்ட் யுவர் பிஹேவியர்.."

"ஹை இங்கிலிபீஸீ..! நீ படிச்சவன்னு காட்டிக்கிறயாக்கும்.. இங்க இருக்கிற யாரும் படிக்காத வெம்போட்டுப் பயலுக இல்லடா மச்சான்.. பக்கத்திலேயே திருவேடகம் காலேஜ் இருக்கு.. அத்தன பயலுகளும் அங்க படிச்சு பட்டம் வாங்கினவனுகதான்.. படிச்சா உன்னப் போல தஸ்ஸீ புஸ்ஸீன்னு வேசம் கட்டனும்னு அவசியமில்லடா.. காட்ட வேண்டிய இடத்திலதான் எங்க பவுஸைக் காட்டுவோம்.. மத்த இடத்தில நாங்க மண்ணின் மைந்தர்கள்டா.. வெள்ளாமை விளையற வயக்காட்ட வித்து பட்டிணத்தில

பங்களா வாங்கின பொம்பளைக்கு அண்ணன் மகன்தான நீ.. இப்படித்தாண்டா இருப்ப.."

"எப்படி இருக்கிறேன்..?"

"அட.. இப்ப மட்டும் மாப்பிள்ள வாயில தமிழ் நுழையுது.. சோழவந்தான் பஞ்சாயத்தில இப்படித்தான் பேசனும்.."

"பேசிட்டாப் போகுது.."

"பேசுடா பேசு.. நீயும் உன் அத்தையும்தான் மைக்கு இல்லாமலே பேசித் தள்ளறீங்களே.."

"என் அத்தையைப் பற்றித் தேவையில்லாமல் பேசாதே.. அவங்க தனியா வரலை.. கூட நானும் வந்திருக்கிறேன்.."

"உன் அத்தை மகனும் வந்திருக்கானே.. நீ அதைச் சொல்லலை பார்த்தியா.. அப்பா அரவிந்தா.. நீ அசலூர்க்காரன்.. எங்க ஊரு பஞ்சாயத்தில நீ வியாக்கினம் பேசாதே.. உன் அத்தைமகன் என்ன ஊமையா..? அவனப் பேசச் சொல்லு.. அவன் பேசினாக்கூட வயலூர் தேவேந்திரனோட மகன் பேசறான்னு கேட்டுக்கலாம்.. நீ யாருடா எங்க ஊரு பஞ்சாயத்தில வெட்டி நாயம் பேசறவன்..? வாயைக் கிழிச்சு வீட்டுக்கு அனுப்பி வைச்சிருவேன்.. ஒழுங்கா இருந்துக்க.."

"என்னிடமே இந்த மாதரி பிஹேவ் பண்றீங்களே.. மகேந்திரன் பாவம்.. சின்னப் பையன்.. அவனிடம் எப்படி பிஹேவ் பண்ண மாட்டிங்க..?"

"சின்னப் பையனா..? உன் அத்தை மகனா..? பாருடா.. என் ஜோட்டுப் பய இவன்.. கல்யாணத்தப் பண்ணி வைச்சா குறைபிரசத்திலயே பிள்ளயப் பெத்துக்க வைச்சுருவான்.. இவன் சின்னப் பையனாம்.. கேட்டுக்கங்கடா.."

கூட்டம் மறுபடியும் சிரித்ததில் மகேந்திரன் சங்கடப்பட்டுப் போனான்.. அரவிந்தனின் முகத்தில் கோப ரத்தம் பாய்ந்தது.. விழிகள் சிவக்க..

"வேண்டாம் பார்த்திபன்.. நான் பொல்லாதவன்.." என்று எச்சரித்தான்..

புளிய மரத்தடியில் இருந்தக் குமரிப் பெண்கள் மத்தியில் அரவிந்தனின் பேச்சைச் சிலாகிக்கும் பேச்சு எழுந்தது..

"அடியே பார்வதி.. ரஜினிகாந்து படத்துல நான் பொல்லாதவன்னு பாட்டுப் பாடுவாரில்ல.. அது போல இருக்கில்ல இந்த மெட்ராஸ்காரரு சொல்றது.."

"ஆமாண்டி கோமளம்.. அச்சு அசல் இவரு சூப்பர் ஸ்டாருதான்.. என்ன ஒன்னு.. அவரு கருப்பு.. இவரு செக்கச் செவேல்ன்னு சந்தனத்தக் கரைச்சு அப்பின மாதிரியில்ல இருக்காரு.."

"அதான் எம்.ஜி.ஆரு கணக்கான்னு சொன்னேனில்ல.." காத்தாயிக் கிழவி வாய் விட்டு விட்டு பூர்ணிமாவின் நினைவு வந்தவளாக வாயை அடக்க இடித்து வைத்திருந்த வெத்தலைக் குவியலை அள்ள வாய்க்குள் திணித்துக் கொண்டாள்..

பூர்ணிமாவுக்கு வந்த ஆத்திரத்தில் கிழவியின் பின்னந்தலையில் கையை வைத்து ஒரு தள்ளு தள்ள, கிழவி..

"ஆத்தி.." என்று வெற்றிலை கும்பாவின் மீது கவிழ்ந்தாள்..

"அப்புடியே இருக்கனும்.. அசையக் கூடாது.." ஆனை பிறப்பித்தாள் பூர்ணிமா..

"நீ பொல்லாதவன்னா நான் மட்டும் நல்லவனா..? இந்த சோழவந்தான் சுத்து வட்டாரத்தில கேட்டுப்பாரு... நான் பொல்லாதவனுக்குப் பொல்லாதவன்ங்கிறதைச் சொல்லுவாங்கடா.."

பார்த்திபன் ஏரிக்கரையிலிருந்து குதித்து இறங்கி சரிவில் நின்றிருந்த அரவிந்தனிடம் ஆவேசமாகப் போக..

"பார்த்திபா.." என்று தடுத்து நிறுத்தியது மாதவனின் குரல்..

"என்னடி பூர்ணி.. உங்கப்பா சண்டையைப் பாக்க விடாம அழிச்சாட்டியம் பண்றாரு.. புதுசா வந்திருக்க பட்டிணத்து ஹீரோவும், நம்ம ஊரு ஹீரோவும் கட்டிப் புரண்டு சண்டை போடறதைப் பாத்துப்புடனும்னு நாங்கள்ளாம் எம்புட்டு ஆவலாக் காத்திருக்கோம்..? சரியா உங்கண்ணன் வேட்டிய மடிச்சுக் கட்டறப்ப உங்கப்பா 'பார்த்திபா'ன்னு சத்தம் போட்டு நிப்பாட்டிப் புடறாரே.." அலுத்துக் கொண்ட

அகிலாண்டம் பூர்ணிமாவிடமிருந்து செமமாத்து வாங்கிக் கட்டிக் கொண்டாள்..

அத்தியாயம்- 9

"சண்டையப் பாக்கனும்னா உங்கம்மா தண்ணிக்குப் போகிறப்பக் கூடப் போயிப் பாரு.. குழாய்டி சண்டையில உங்கம்மாதான் சோழவந்தானுக்கு மங்காத்தா.. அதை விட்டுட்டு எங்கண்ணன் எவனோ ஒருத்தன்கூட ஏரிக்கரையில கட்டி உருளனும்.. அதைப்பாத்து கை தட்டனும்னு கனாக் கண்ட.. பல்லு பதினாறும் எகிறிரும்.. பாத்துக்க.."

பூர்ணிமாவுக்கு ஆத்திரம் அடங்கவில்லை.. மேல்மூச்சும் கீழ்மூச்சும் வாங்க புளியமரத்தின்மீது சாய்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.. வெற்றிலைக் கும்பாவின் மீது தலை குப்புற விழுந்து கிடந்த காத்தாயிக்கிழவி, பூர்ணிமாவிடம் மாத்து வாங்கியவளின் தாவணியைச் சத்தமில்லாமல் பிடித்து இழுத்து வாயில் ஒற்றை விரலை வைத்துப் பேசாமலிருக்கும்படி சமிக்ஞை செய்தாள்.. கொதித்துப் போயிருந்த அந்தத் தோழி பதிலுக்கு கையை விரித்து 'ஏனாம்..?' என்று சமிக்ஞை செய்ய காத்தாயிக்கிழவி தலையில் அடித்துக் கொண்டு கழுத்தில் ஒற்றை விரலை வைத்து இழுத்துக் காண்பித்தாள்.. கொலையும் செய்துவிடுவாள் பூர்ணிமா அன்று அந்த சமிக்ஞை தெள்ளத் தெளிவாக விளக்கியதில் அரண்டு போன அந்தத் தோழி வாயை இறுக மூடிக் கொண்டு காத்தாயிக் கிழவிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து விட்டாள்.. துணைக்கு ஒருத்தி உட்கார்ந்து விட்டதில் ஆறுதல் கொண்ட கிழவி சப்தமில்லாமல் சண்டையை வேடிக்கை பார்க்குமாறு அறிவுறுத்தி விட்டு தானும் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்..

"வார்த்தை தடிக்குது வேதநாயகம்.. ரொம்ப நேரத்துக்கு பார்த்திபனோட கையை நான் கட்டிப் போட முடியாது.. ஏரியோட ஏலம் முடிஞ்சிருச்சா.. இல்லையான்னு

தெரிஞ்சுக்கிட்டா நான் ஆகிறதைப் பாப்பேன்.." மாதவன் பல்லைக் கடித்தபடி பேசினார்..

"அதுதான் ஒரு லட்சம்ன்னு ஏலத்தொகையைக் கூட்டிக் கேட்டிருக்கோமில்ல.. அப்புறம் என்ன..? ஏலம் முடியலை.. கண்டினியூ ஆகுது.." சட்டமாகச் சொன்னான் அரவிந்தன்..

"இது எங்க ஊர் விவகாரம் தம்பி.. நீ ஓரமா நில்லு.." அதட்டினார் வேதநாயகம்..

"அரவிந்தன்தான் வெளியூர்காரன்.. நான் இந்த ஊர்தானே.. ஏலத்தை நான் கண்டினியூ பண்றேன்.." மேனகா அதிகாரமாகச் சொன்னாள்..

"நீ நினைச்சபடி மாத்தி அமைக்கிறதுக்கு இது ஒன்னும் உன் வீடில்லம்மா.. ஊர்க் கட்டுப்பாடு.. ஏரியை ஏலம் விட்டு முடிச்சாச்சு.. அம்புட்டுத்தான்.. மாதவா.. நீங்க பணத்தைக் கட்டுங்க.."

மாதவன் ஏலத்தொகையான ஐம்பதாயிரத்தை எடுத்துக் கொடுக்க அதை எழுத்துப் பூர்வமாக பதிவு செய்ய ஆரம்பித்தார் வேதநாயகம்..

"இது அநியாயம்.." மேனகா சீறினாள்..

"எங்களுக்கு இதுதான் நாயம்.." என்றார் வேதநாயகம்..

"இந்த ஆள் ஊர் பிரசிடெண்டா இருக்கிறதினால தான இந்த அநியாயம் பண்றீங்க..? எலக்சன் வரட்டும்.. எதுத்து நின்னு ஜெயிச்சுக் காட்டறேன்.." சூளுரைத்தாள் மேனகா..

"ஒத்தை ஓட்டுக்கூட விழுகாது.." அலட்சியமாகச் சொன்னான் பார்த்திபன்..

"ஏன் விழுகாது..? ஊர் முழுக்க உங்கப்பாவுக்கு மட்டும்தான் சொந்தமோ..?" மேனகா முறைத்தாள்..

"ஆமா.. சந்தேகமிருந்தா நீயே போய் வீடு வீடாக் கேட்டுப்பாரு.. ஒத்தை ஆள் பாக்கியில்லாம அத்தனை பேரும் எங்கப்பாவைச் சொந்த பந்தம்ன்னு தலைமேல தூக்கி வைச்சுக் கொண்டாடுவாங்க.. உன் வீட்டு ஓட்டு வேணும்னா உனக்கு விழுகலாம்.. மத்த ஓட்டுகள்ல ஒத்தை ஓட்டுக்கூட உனக்கு விழுகாது.." ஆணித்தரமாகச் சொன்னான் பார்த்திபன்..

"அதையும் பார்த்துரலாம்.." மேனகா சவடால் விட்டுக் கொண்டிருக்க அரவிந்தனோ தன்னையும் அறியாமல் புளியமரத்தை விட்டு அகன்று எட்டிப் பார்த்து விட்ட பூர்ணிமாவைப் பார்த்துக் கொண்டிருந்தான்..

மெலிதான கொடி போன்ற உயரமான உடல்வாகும், வட்ட முகமுமாக அவள் தேவதையைப் போல இருந்தாள்.. அரக்கு வண்ண பாவாடை தாவணியில் அப்சரஸ் போல அவனைக் கவர்ந்தாள்.. மைதீட்டிய விழிகளும்.. நெற்றியிலே அரக்கு வண்ண ஸ்டிக்கருமாக வசீகரித்தாள்.. நீண்ட பின்னலும், தலையில் சூடியிருந்த மல்லிகைப் பூவுமாக பெண்மையின் தன்மையுடன் மிளிர்ந்தாள்..

அதுவரை அரவிந்தன் பாவாடை தாவணிப் பெண்களைப் பார்த்ததில்லை என்றே சொல்லலாம்.. அவன் சென்னையில் பிறந்து வளர்ந்தவன்.. பட்டப் படிப்புக்கு வெளிநாட்டிற்குப் பறந்து விட்டவன்.. அவனறிந்த பெண்கள் ஜீன்ஸீம், டாப்ஸீமாக விரித்து விடப்பட்ட குட்டை முடியும், நுனிநாக்கு ஆங்கிலமுமாக இருப்பவர்கள்.. பூர்ணிமாவைப் போல எண்ணை தடவி, தலைவாரி, நீண்ட பின்னலிட்டு, பூச்சூடி, பாவாடை தாவணியுடன் இருக்கம் பருவ மயிலை அவன் பார்த்ததே இல்லை..

'வாட் எ கிளாஸிக் பியூட்டி..' வியந்தது அவன் மனம் கை தேர்ந்த ஓவியன் ஒருவன் வரைந்த ஓவியம் போல அவள் இருந்தாள்.. அவளது அழகும், வனப்பும் அவனைக் கட்டிப் போட்டன.. யார் அவள் என்று அறியும் ஆவல் கொண்டான் அவன்.. மேனகாவிடம் அதைக் கேட்க முடியாது.. அவள் ஊர்மிளாவை அரவிந்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்து விட வேண்டும் என்ற கனவோடு இருப்பவள்..

அரவிந்தனுக்கு மேனகாவின் மீது பாசம் அதிகம்.. ஊர்மிளாவின் மீது அத்தை மகள் என்ற வாஞ்சையுண்டு.. ஈர்ப்பு இருந்ததில்லை.. அதில் மேனகாவுக்கு மனத்தாங்கல் உண்டு.. அரவிந்தனிடம் வாக்குவாதம் செய்வாள்..

"ஊர்மிளாவுக்கு என்ன குறை அரவிந்த்..?"

"ஒரு குறையுமில்லை அத்தை.."

"அப்புறம் எதற்காக என் மகளை மேரேஜ் பண்ணிக்க மாட்டேன் என்கிற..?"

"மேரேஜ் என்கிறது வேறு வகையான ஃபீலிங் அத்தை.. அதில் லவ் இருக்கனும்.."

"ஊர்மிளா உன்னைக் காதலிக்கிறா அரவிந்த்.."

'என் ஸ்டேட்டஸையும் இமேஜையும்தான் காதலிக்கிறா அத்தை..'

அரவிந்தன் பதில் சொல்லாமல் முறுவலிப்பான்.. அவன் தேடும் உணர்வு ஊர்மிளாவின் மீது வரவில்லை.. தோழமைதான் வந்தது.. இதை மேனகாவுக்குப்

புரிய வைக்க முடியாது.. ஏனென்றால் அவளே அந்த உணர்வுகளை உணர்ந்திருக்கவும் மாட்டாள், அவளது கணவருக்கு உணர்த்தியிருக்கவும் மாட்டாள்.. அது போன்ற உணர்வுகளுக்கு அவள் என்றுமே இடம் தந்ததுமில்லை.. முக்கியத்துவம் கொடுத்ததுமில்லை.. அவள்தான் அப்படியென்றால் ஊர்மிளா அவளுக்கும் மேல் இருந்தாள்.. எல்லாவற்றிலும் கணக்குப் போட்டுக் காய் நகர்த்தினாள்.. மேனகாவின் மகள் எப்படி இருக்க வேண்டுமோ அதைவிட பன்மடங்கு அதிகமான புத்திசாலித்தனத்துடன் ஊர்மிளா இருந்தாள்..

"ஹாய் அத்தான்.. யு லுக் வெரி ஸ்மார்ட் டுடே.."

"ஊஹீம்.. இதற்கு முன்னால் நான் ஸ்மார்ட்டா இருந்ததே இல்லையா..?"

"குட் ஜோக்.. பட்.. இன்றைக்கு இந்த ஜீன்ஸிம் கூலிங்கிளாஸீம் அட்ராக்ட்டிவ்வா இருக்கு.. ஃபாரின்ல வாங்கினதா..? என்ன பிரைஸ்..? நீங்க என்ன லோ பிரைஸிலா வாங்கியிருக்கப் போகிறிங்க..?"

"வொய்..? லோ பிரைஸா இருந்தா நான் ஸ்மார்ட்டா இல்லைன்னு சொல்லிருவியா..?"

"மறுபடியும் ஜோக்கா..? உங்க ஸ்டேட்டஸ்க்கு லோ பிரைஸ் திங்ஸை யூஸ் பண்ண மாட்டிங்கன்னு எனக்குத் தெரியுமே.. உங்க கையில கட்டியிருக்கிற வாட்ச் ஸ்டைலிஷா இருக்கு.. இதுவும் வெளிநாட்டில் வாங்கினதுதானே..?"

'நான் ஸ்டைலிஷா இல்லையா..?' அரவிந்தன் நமட்டுச் சிரிப்போடு நகர்ந்து விடுவான்..

ஊர்மிளாவுடன் உரையாடுவதைப் போன்ற மண்டை காயும் விசயம் வேறு எதுவும் இல்லை என்பது அவனுடைய அபிப்ராயம்.. இப்படிப் பேசுபவளின் மீது காதல் போன்ற மென்மையான உணர்வுகள் எப்படித் தோன்றும்..?

மேனகாவின் தாயும் அரவிந்தனின் அப்பா வழிப் பாட்டியும் உடன் பிறந்தவர்கள்.. அரவிந்தனின் தந்தையான ராமகிருஷ்ணன் மேனகாவிற்கு பெரியம்மா மகன்.. ஒன்றுவிட்ட அண்ணன்..

ராமகிருஷ்ணனின் தாயும், மேனகாவின் தாயும் பாசமலர்கள்.. தாய், தகப்பனின் சொத்துக்களுக்கு இவர்கள் மட்டும்தான் வாரிசு என்பதினால் சென்னையிலிருந்த சொத்துக்களை இரண்டாகப் பிரித்துக் கொண்டார்கள்.. மேனகாவின் தாய் சோழவந்தானில் வாழ்க்கைப்பட்டவள்.. ராமகிருஷ்ணனின் தாயோ சென்னையில் ஒரு தொழிலதிபருக்கு வாழ்க்கைப்பட்டவள்.. செல்வச் செழிப்பில் ராமகிருஷ்ணனின் தாய் உச்சத்தில் இருக்க.. மேனகாவின் தாயோ மத்தியில் இருந்தாள்.. சோழவந்தானில் வேண்டுமானால் அவள் பணக்காரியாக அடையாளம் காணப்படலாம்.. சென்னையில் மத்தியதர வர்க்கம்தான்.. பிறந்த வீட்டுச் சொத்தில் மேனகாவின் தாய்க்கு வீடு கிடைத்தது..

ராமகிருஷ்ணனின் குடும்பத்திற்கு அவருடைய தாய் கொண்டு வந்த பிறந்த வீட்டுச் சீதனம் எல்லாம் பெரிதான ஒன்றல்ல.. கடலில் கலக்கும் ஓர் துளி நீர் போன்றதுதான் அது.. தனக்கு வந்த பங்கான ஷாப்பிங் காம்ப்ளெக்ஸை தங்கைக்கே விட்டுக் கொடுத்து விட்டாள் ராமகிருஷ்ணனின் அம்மா.. அவளது புகுந்த வீட்டில் அதைப் பாராட்டித்தான் பேசினார்கள்.. ஆட்சேபிக்கவில்லை..

அப்படி ராமகிருஷ்ணனின் தாய் விட்டுக் கொடுத்த ஷாப்பிங் காம்ப்ளெக்ஸின் வாடகையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு சென்னை வீட்டில் தங்கி விட்டாள்

மேனகாவின் தாய்.. மாதவனைத் திருமணம் செய்து கொள்ள முடியாத தோல்வியோடு தேவேந்திரனுக்குக் கழுத்தை நீட்டிய மேனகா சென்னைக்குத் திரும்பிவிட.. மாமியார் வீட்டில் மனைவியை விட்டு வைப்பது தனக்கு இழுக்கு என்று தேவேந்திரன் பொன் விளையும் பூமியில் பாதியை விற்று மனைவியின் பெயரில் சென்னையில் பங்களாவும், காரும் வாங்கித் தந்தார்..

இது போதாதா மேனகாவுக்கு..? அவள் தன் தாயுடன் பங்களாவுக்கு இடம் மாறினாள்.. மேனகாவின் அம்மா பெயரில் இருந்த வீட்டை வாடகைக்கு விட்டாள்.. ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் வாடகையும், வீட்டு வாடகையும் சென்னையில் ஆடம்பர வாழ்வு வாழ்வதற்கான பண வசதியைக் கொடுத்தன.. வருடாவருடம் கிடைக்கும் விவசாய வருமானத்தை முனை முறியாமல் மனைவியின் கையில் கொடுத்து விடுவார் தேவேந்திரன்..

மேனகா வசதியைப் பெருக்கிக் கொண்டாள்.. ரமாகிருஷ்ணன் குடும்பத்திற்கு ஒற்றை மகனாய் இருந்தது அவளுக்கு வசதியாகப் போனது.. 'அண்ணா, அண்ணா' என்று உடன்பிறந்த தங்கை போல உறவாடி ஒட்டுப் புல்லைப் போல ராமகிருஷ்ணனின் குடும்பத்துடன் ஒட்டிக் கொண்டாள்.. அரவிந்தனின் மீது அன்பைப் பொழிந்தாள்.. அவனும் 'அத்தை.. அத்தை' எனப் பிரியமாக இருப்பான்..

அரவிந்தனின் தாயான அனுபமா பணக்கார குடும்பத்தில் பிறந்தவள்.. ராமகிருஷ்ணனைப் போல இவளும் குடும்பத்திற்கு ஒற்றை வாரிசு என்பதினால் பணம் பணத்தோடு சேர்ந்தது.. அனுபமாவின் அப்பாவுக்கு கோயம்புத்தூரில் மில் இருந்தது.. சென்னையில் ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் இருந்தது.. இரண்டும் ராமகிருஷ்ணனுக்கு வந்து சேர்ந்ததில்..

"இவன் யோகக்காரன்டி.. ம்ஹீம்.. இவனோட அம்மாவோட தலையெழுத்து நல்லா இருந்ததினால இவனோட அப்பனுக்கு வாழ்க்கைப் பட்டிருக்கு.. என் அம்மாவோட தலையெழுத்து.. சோழவந்தானில போய் மாட்டனும்னு விதிச்சிருக்கு.." என்று மகளிடம் புலம்பியவள்தான் மேனகா..

நேரில் ராமகிருஷ்ணனைப் பார்க்கும் போது பெறாமையின் சாயல் துளியும் இல்லாமல் வெள்ளையாகச் சிரித்து பசப்புவாள்.. இவளது பொய் முகத்தை மிகச் சரியாக இனம் கண்டு கொண்டிருந்தது அனுபமா மட்டும்தான்.. அவள் மேனகாவிடம் முகம் கொடுத்துப் பேச மாட்டாள்.. மனைவியின் மீது உயிரை வைத்திருக்கும் ராமகிருஷ்ணனிடமும், மருமகளைக் கொண்டாடும் ராமகிருஷ்ணனின் தாயிடமும் அனுபமாவைப் பற்றிப் புகார் சொல்லி விட்டு மேனகா அவர்களின் வீட்டு வாசல்படியை மிதித்து விட முடியாது..

மேனகாவின் வாழ்வாதாரத்திற்கு அடித்தளமான ஷாப்பிங் காம்ப்ளெக்ஸின் வருமானம் கையை விட்டுப் போய் விட்டால் என்ன செய்வது என்ற பயத்தினால் அனுபமாவின் உதாசீனத்தை மேனகா கண்டு கொள்ளவே மாட்டாள்..

ஆதாயம் வேண்டும் என்றால் சுயமரியாதையைப் பார்க்கக் கூடாது என்பது அவள் கற்று வைத்திருக்கும் பாடம்.. எங்கே ஆடவேண்டும், எங்கே அடங்க வேண்டும் என்பதெல்லாம் அவளுக்கு கை வந்த கலையாயிற்றே..

அத்தியாயம்- 10

வெளிநாட்டில் படித்து முடித்து சென்னைக்குத் திரும்பியிருக்கும் அரவிந்தன் தாய், தந்தையரின் தொழில்களை இம்போர்ட் அண்ட் எக்ஸ்போர்ட் கம்பெனியையும் கோயம்பத்தூரில் இருக்கும் மில்லையும் நிர்வகிக்கும் பொறுப்பை விட்டு விட்டு ஒன்று விட்ட அத்தையின் பாதுகாவலனாக மண் மணக்கும் சோழவந்தானுக்கு வந்து இறங்கியிருக்கிறான் என்பதை பார்த்திபன் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.. ஏரிக்கரைப் பஞ்சாயத்து மாதவனுக்குச் சாதகமாக அமைந்தாலும் அவர் முகத்தில் ஓர் சஞ்சலம் குடி கொண்டு விட்டது.. அதை பார்த்திபனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அன்று இரவு பூமா பரிமாற அவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது.

"அவன் வேல வெட்டி இல்லாதவனில்லம்மா.. பெரிய பிஸினெஸ் மேன்.. மூச்சு விட நேரமில்லை மெட்ராஸீக்கும் கோயம்பத்தூருக்கும் பறந்துக்கிட்டு இருக்க வேண்டியவன் எதுக்காக இந்த வெட்டி ஜம்பம் காட்டற மேனகாவுக்குக் குடை பிடிச்சுக்கிட்டு சோழவந்தானில டேரா போட்டிருக்கான்..?" என்று சிந்தனையுடன் கேட்டான்..

"அவங்கப்பாவுக்கு ஒடன் பிறப்பு இல்லயாம் பார்த்தி.. ஒற்றைப் புள்ளயாம்.. இவ சொந்தச் சின்னம்மா மகளாப் போயிட்டா.. மெட்ராஸில கூடவே வளந்தவ.. அந்தப் பாசத்தில அந்த மனுசன் இவளக் கூடப் பொறந்த பொறப்பா நெனக்கறாப்புலயாம்.."

"இவனும் ஒற்றைப் புள்ளதான் போல.."

"ஆமாண்டா பார்த்தி.. ஒடன் பொறப்புன்னு யாருமில்லாம ஒற்றைப் புள்ளயா வளந்தது இவகிட்ட அத்தை, அத்தைன்னு பாசம் காட்டுதாம்.."

வாஞ்சையுடன் சொன்ன பூமாவின் முகத்தில் மிளிர்ந்த தாய்மை கலந்த காருண்யத்தில் தலையில் அடித்துக் கொண்டான் பார்த்திபன்..

"உன்ன என்னன்னு சொல்றது..? அவன் நமக்கு எதிரிக்காரன்ம்மா.. விட்டா அவனுக்கு நிலாவக் காட்டி சோறு ஊட்டிருவ போல இருக்கே.."

"போடா.. உங்க பகைய எல்லாம் உங்களோட வைச்சுக்கங்க.. வீட்டுக்குள்ள கொண்டு வராதீங்க.. மக்க மனுச மேல பாசம் அத்துப் போச்சுன்னா நாம ஆத்தோர சோழவந்தானில பொறந்து வளந்ததுக்கு அர்த்தமில்லாம போயிரும்டா மகனே.."

"உன்னத் திருத்தவே முடியாதும்மா.."

"இந்த விசயத்தில நான் திருந்தவே வேணாம்.. நீ தட்டப் பாத்துச் சாப்பிடு.. வயித்தில சோறு விழுகிறப்ப வேற சிந்தனை மனசில வரக்கூடாதுடா மகனே.. சோத்தில மட்டும் கவனம் இருக்கனும்.. வக்கணையாச் சோறு சாப்பிடற பரம்பரையில பொறந்துட்டு நீ தட்டு முன்னால உக்காருகிறப்பதான் ஊரில இருக்கிற அத்தன பஞ்சாயத்தையும் கொண்டு வர்ற.."

"அதுக்கில்லம்மா.. எனக்கென்னவோ இவன் சோழவந்தானுக்கு வந்திருக்கிறதில வேற ஏதோ ஒரு சோலி இருக்குன்னு தோணுதும்மா.."

"எப்படித் தோணுதுன்னு கேக்கறேன்.."

"மனசுக்குள்ள ஒரு பட்ஷி கூவுது.."

"அதப் போயி சோழவந்தான் தென்னந்தோப்பில 'குக்கூ'ன்னு கூவச் சொல்லு.. வேல வெட்டியில்லாம உன் மனசுக்குள்ள ஏண்டா வந்து கூவுது..?"

அன்னையின் வியாக்கினத்தில் வாய் விட்டுச் சிரித்து விட்டான் பார்த்திபன்.. பூமாவுக்கு அதுதானே வேண்டும்.. மகனுக்கு வாய்க்கு ருசியாக சமைத்து வைத்துக் காத்திருப்பவளுக்கு அவன் வயிறார உண்டு எழுந்தால் தானே மனம் நிறையும்.. அவள் சாப்பிடுகிறாளோ இல்லையோ.. குடும்பத்தில் உள்ளவர்கள் சாப்பிட வேண்டும்.. அவர்களது வயிறு நிறைந்தால் அவள் பட்டினியாகப் படுத்தாலும் பசிக்காது.. மனது நிறைந்திருக்கும்..

இந்தியத் திருநாட்டின் பெண் குலம் இப்படித்தான் இருக்கிறது..

'பந்தி வைச்ச வீட்டுக்காரி..

பாத்திரத்தக் கழுவிட்டு

பட்டினியாப் படுப்பா.. அதுபோல..'

என்று அவர்களின் மனநிறைவை ஓர் திரைப்படப் பாடல் சொல்லும்..

"அயிரை மீன் குழம்பு நல்லா இருக்கும்மா.."

பூமாவின் முகம் மலர்ந்து விட்டது.. மகனது தட்டில் அயிரை மீன் மிதக்கும் குழம்பை ஊற்றியவள்..

"நம்ம ஊரு ஆத்தில பிடிச்ச அயிரை மீன் ராசா.. குறைச்சலாவா இருக்கும்..? விரால் மீன் வறுவல் எப்படியிருக்கு..?" என்று ஆவலுடன் கேட்டாள்..

"நீ வைச்சக் குழம்பும் வறுவலும் மெதமாவா இருக்கும்..? அசத்துதும்மா.." பார்த்திபன் சுவைத்துச் சாப்பிட்டான்..

பூர்ணிமாவுக்குத்தான் தூக்கம் பிடிக்கவில்லை.. பார்த்திபனிடம் அவன் சொன்னதைப் பற்றிக் கேட்கவும் முடியவில்லை.. அவன் பூமாவுடனோ மாதவனுடனோ பேசும் போது அவள் கேட்டுக் கொள்ளலாம்.. தமையனிடம் தனியாக எதையும் விசாரித்து விட முடியாது.. உனக்கு எதற்கு இந்தப் பேச்சு என்று அதட்டி விடுவான்.. வயலூரில் பூர்ணிமா அளவுக்குச் சுதந்திரம் கிடைத்த பெண்கள் யாருமில்லை.. அவளுக்கே இப்படியெனும் போது மற்ற பெண்களின் நிலை பற்றிச் சொல்லவே வேண்டாம்.. ஆற்றிலே குளிக்கப் போகும் போது அலப்பறை பண்ணலாம்.. சந்தன மாரியம்ன் கோவிலுக்குச் சாமி கும்பிடப் போகும்போது ஜோட்டுப் பொண்களாக ஜோடி போட்டுக்கொண்டு ஊர்க்கதைகளைப் பேசலாம்.. ஊர்ப் பஞ்சாயத்து, ஊர்க் கூட்டங்களில் ஒதுங்கி மறைவாக நின்று மெல்லிய குரலில் 'லந்து' பேசிச் சிரிக்கலாம்.. வீட்டு ஆண்பிள்ளைகளிடம் வெளி விவகாரங்களைப் பேசி விடக் கூடாது.. பல் பதினாறும் எகிறி விடும் என்ற பாட்டுக் கிடைத்து விடும்..

கிராமத்துப் பெண்களின் சுதந்திரம் வரையறுக்கப் பட்டது.. அவர்களும் அந்த வரையறைக்குக் கட்டுப்பட்டு எல்லைக் கோட்டுக்குள் நின்று எவ்வளவு அலம்பல் பண்ண முடியுமோ அந்த அளவுக்குச் சலம்பல் பண்ணித் தீர்த்து விடுவார்கள்.. சுட்டிப்பெண்கள், கிராமத்துப் பெண்கள்..

அரவிந்தன் என்ற ஆணழகன் எதற்காக வயலூருக்கு வந்து இறங்கியிருக்கிறான் என்ற மர்மம் வெகுநாள்களுக்கு நீடிக்கவில்லை.. ஓர் தைத்திருநாளில் வெளிப்பட்டு விட்டது..

அறுவடை செய்து கொண்டிருந்த விவசாயிகள் ஒன்று கூடி மாதவனிடம் ஓடி வந்தார்கள்.. களத்து மேட்டில் கருது அடிப்பை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தவர் அப்போதுதான் 'அக்கடா' என்று கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தார்.. கருதறுப்பை மறந்து களத்து மேட்டுக்கு ஓடி வந்த விவசாயிகளின் பதட்டம் அவரையும் தொற்றிக் கொள்ள..

"என்னப்பா.. ஏய்.. எதுக்காகப்பா இப்புடி ஓடி வர்றீங்க.. எது வந்தாலும் எதுத்து நிக்கிற வயலூர் மண்ணில

பொறந்துட்டுப் பதட்டப்படலாமா..? எதுவா இருந்தாலும் பாத்துப்புடலாம்ப்பா.. சோழவந்தான் ஆத்துத் தண்ணியக் குடிச்சு வளந்தவங்கப்பா, நாம.. வீரம் விளைஞ்ச மண்ணு, இந்த மண்ணு.. என்னான்னு சொல்லுங்கப்பா.. ரெண்டில ஒன்னு பாத்துப் புடலாம்.." என்று மீசையை முறுக்கியபடி எழுந்து நின்றார்..

"பிரசிடெண்டு ஐயா.. இந்தக் கோராமையைக் கேட்டிகளா..?" முனியன் அலறினான்..

"சொன்னாத்தானப்பா கேக்க முடியும்..?" என்றார் மாதவன்..

"தேவேந்திரன் வீட்டுக்கு விருந்தாடி வந்திருக்கானே.. மெட்ராஸ்காரன்.." கோதண்டம் இழுத்தார்..

மாதவனின் முகம் சுருங்கிவிட்டது.. அறுவடை சமயம் என்பதால் அவர் மறந்திருந்த ஏரிக்கரை ஏலம் நினைவுக்கு வந்ததில் முகம் மாறினார்..

"அவனுக்கென்ன..?"

"அவன் சும்மா ஒன்னும் சோழவந்தானுக்கு வரலய்யா.."

'இதத்தான பார்த்தியும் சொன்னான்..?'

மாதவனின் பார்வை மகனின் பக்கம் பாய்ந்தது.. பள்ளி முடிந்ததும் வீட்டுக்குச் சென்று பேன்ட், சட்டையிலிருந்து கைலி, சட்டைக்கு மாறி புல்லட்டில் களத்து மேட்டுக்கு வந்து விட்ட பொறுப்பான பார்த்திபனின் பார்வையும் மாதவனின் பார்வையும் சந்தித்து மீண்டன..

"எதுக்கோ வந்துட்டுப் போறான்.. நமக்கு என்ன..?"

"அப்புடி நமக்கென்னன்னு விட்டுட்டுப் போனா நாதியத்துப் போயிருவோம்ய்யா.."

"என்ன சுப்பையா.. நீ என்னென்னவோ சொல்ற..? சொல்றத விளங்கச் சொல்லுங்கப்பா.."

"நம்ம சோழவந்தான் ஆத்துத் தண்ணி எப்படியிருக்கும்ய்யா..?"

"தேங்காத் தண்ணியப் போல இருக்கும்.."

"அதச் சாயத் தண்ணியாக்கனும்னு வந்திருக்கான்ய்யா.."

"என்னது..?"

மாதவனின் ரத்தம் கொதித்து விட்டது.. அவருக்கென்று வந்த போது பொறுமை காத்த மகராஜன் அவர்.. ஊருக்கொன்று என்ற போது புஜங்கள் துடித்தன..

"சாயத் தண்ணியா மாத்த வந்திருக்கானா..? விட்டிருவோமா.. பொளந்து விடமாட்டோம் பொளந்து..?"

"அதத்தான் செய்யனும்ங்க ஐயா.. இந்த தேவேந்திரன் கட்டிக்கிறதுக்கு நம்ம ஊரு சனத்தில ஒருத்தி கிடைக்காமப் போயிட்டாளா..? இவன் உலகத்திலேயே இல்லாத ரதின்னு அந்த மேனகாப் பொம்பளைக்குத் தாலியக் கட்டினான்.. வினை வயலூருக்கு வந்து நிக்குது.."

"இவ என்ன செஞ்சாப்பா..?"

"இவ பகட்டா மெட்ராஸில குடியிருக்கப் பங்களாவும் காரும் வேணும்ன்னு பொன் விளையற பூமியில பாதிய விக்க வைச்சா.. இப்ப மிச்சம் மீதியிருக்கிற வயல்கள இந்தப் பயலுக்கு கிரயம் பண்ணிக் கொடுக்கப் போகிறாளாம்.."

"அடப்பாவமே.. தேவேந்திரன் கிட்ட பரம்பரை நிலம் ஒரு காணிகூட மிஞ்சாதா..? ம்ச்சு.. அதுக்கு நாம என்னப்பா பண்ண முடியும்..? இது அவுக குடும்ப விவகாரம்.. ஊர்ப் பிரச்னையில்லயில்ல.."

"ஐயா.. இது ஊர்ப் பிரச்னைதானுங்க.. வாங்கப் போறவன் அந்த நிலத்தில விவசாயம் பண்ணப் போறதில்லங்க.."

"பின்னே.."

"குடிக்கிறதுக்கு சில்லுன்னு இனிப்பைக் கலந்த தண்ணிய பாட்டில்கள்ல ஊத்திக் கடைத்தெருவில விக்கறானுகள்ல.."

'இவன் என்னத்தைச் சொல்றான்..?' புரியாமல் மாதவன் பார்த்திபனைப் பார்க்க.. அவன்..

"கூல் டிரிங்ஸைச் சொல்கிறார்ப்பா.." என்று புளி போட்டு விளக்கிச் சொன்னான்..

"அதுவா..? அத எதுக்கு சொல்லிக்கிட்டு இருக்க..? உடம்பு சூட்டைத் தணிக்க இளநி வெட்டிக் குடிக்கிற சனங்க நாம.. கண்டதையும் கலப்படம் பண்ணி விக்கிற சில்லுத் தண்ணிப் பத்திப் பேசி நம்ம பொழப்பக் கெடுத்துக்கனுமா..? கருதடிக்கிற வேல இருக்கில்ல.."

"அந்த சில்லுத்தண்ணியத் தயாரிக்கற பேக்டரியக் கட்டத்தான மேனகாகிட்ட அவ அண்ணன் மகன் நிலத்த வாங்கப் போறானாம்.."

"என்னது..?"
இந்த 'என்னது..' தீப்பிழம்பாக வெளிவந்தது..

"ஆரு ஊரில ஆரு வந்து சாயத்தண்ணி பேக்டரியக் கட்டறது..? சுத்தமான காத்தையும், தண்ணியையும் ஆண்டவன் கொடுத்திருக்கான்.. அதப் பாழாக்க மனுசக் கழுதைக்கு உரிமையில்ல.. இந்த சோழவந்தான் ஆத்துத் தண்ணி சுத்துப்பட்டி கிராமங்களோட சொத்து.. குலசாமி..! அதில கை வைக்க நெனச்சா சூறையாடிருவோம் சூறையாடி.. எந்தக் காட்டு மனுசனோ இங்கன வந்து பேக்டரியக் கட்டி ஆத்துத் தண்ணிய நாசம் பண்ணுவான்.. அதப் பாத்துக்கிட்டு நாம சும்மாயிருப்போமா..? ஊருக்காட்டப் பாத்து வெரட்டியடிப்போம் வாங்கப்பா.."

மாதவன் பொங்கினார்.. மகன் யூகித்தது சரியாகத்தான் இருக்கிறது என்பதில் தந்தையின் பெருமிதம் தளும்பியது.. மகனைத் தட்டிக் கொடுக்கும் பார்வை பார்த்தார்.. அவன் யோசனையுடன்..

"திட்டம் போட்டுக் காய் நகர்த்தறான்ப்பா.. ஆத்தோரமா கூல்டிரிங்ஸ் பேக்டரி கட்டினாத் தண்ணிக்குப் பஞ்சமிருக்காது.. கழிவு நீரை ஆத்தில கலந்து விட்டிரலாம்.. இதை ஊர் மக்கள் எதுக்கக் கூடாதுங்கிறதுக்காக ஊருக்குள்ள செல்வாக்கத் தேடிக்க ஏரிய ஏலம் எடுக்கிறது, முதல் மரியாதைக்குப் போட்டிக்கு வர்றது, பிரசிரெண்டு

எலக்சனில நின்னு ஜெயித்து பதவியை கையில வைச்சுக்கிறதுன்னு ஆரம்பிச்சிருக்காங்க.. என்னடா.. மெட்ராஸ் கம்பெனியையும் கோயம்பத்தூர் மில்லையும் விட்டுட்டு இவன் வயலூருக்கு வந்து நின்னு வெட்டிப் பஞ்சாயத்தப் பேசிக்கிட்டு இருக்கானே.. இவன் இப்படியாப்பட்ட ஆளில்லயேன்ன நெனச்சேன்.. என் நெனப்பு சரியாத்தான் இருக்கு.." என்று சொன்னான்..

"அவன் திட்டம் போட்டா நாம கட்டம் கட்டி அவன உள்ளார நிறுத்துவோம் பார்த்தி.. இந்த மண்ணையும் ஆத்தையும் எவன் மாசு படிய வைக்க நெனச்சாலும் இந்த மாதவன் பாத்துக்கிட்டு நிக்க மாட்டான்.. சரியான பதிலடியக் கொடுப்பான்.." சிங்கமெனச் சீறினார் மாதவன்..

அவரது தலைமையில் ஊர்கூடி அரவிந்தனைத் தேடிச் சென்றது..

அத்தியாயம்- 11

பூர்ணிமாவும் அவளுடைய தோழிகளும் அப்போது ஆற்றில் குளித்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.. அரவிந்தனின் கார் அவர்களைக் கடந்து சென்றது.. காரின் ஹாரன் ஒலியில் பூர்ணிமா துணுக்குற்றாள்.. அவளைக் கவனிக்கச் சொல்வதைப் போல காரின் ஹாரன் ஒலிக்கிறதே.. அப்படியென்றால் அவன் அவளைக் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்றல்லவா அர்த்தமாகிறது..

"ஏய்.. இது அந்த மெட்ராஸ்காரன் காருடி.." பூங்காவனம் குதித்தாள்..

"காரைப் பார்த்தியா.. எம்மாம் நீளம்.. ஆத்தி.. அன்னப்பறவ போலயில்ல இருக்கு.." மல்லிகா விழிகளை விரித்தாள்..

"வெளிநாட்டுக் காருல்ல.. இப்படித்தான் இருக்கும்."

"இவ காரைக் கண்டவ.. ஏண்டி இவளே.. உனக்கு உள்நாட்டுக் காரைப் பத்தியே ஒன்னும் தெரியாது.. இது வெளிநாட்டுக் காருன்னு கண்டு புடிச்சிட்டியாக்கும்.."

"வெளிநாட்டில படிச்சவனாம்.. அப்பக் காரும் வெளிநாட்டுக் காராத்தான இருக்கும்..?"

"சும்மா சொல்லக் கூடாதுடி பூங்காவனம்.. உன் புத்தி உன்னோட சவுரி முடியப் போல நீளமாத்தான் யோசிக்குது.."

"இப்ப என்னத்துக்கு என் சவுரிமுடிய இழுக்கிறவ..?"

"அந்தக் கருமத்த ஏண்டி நான் இழுக்கப் போறேன்.. அத உன்னப் பொண்ணுப் பாக்க வர்றவங்க செய்வாக.."

"இந்தாரு.. என் சவுரியப் பத்தியே பேசிக்கிட்டு இருந்த.. நான் சும்மாயிருக்க மாட்டேன்.. சொல்லிட்டேன்."

"சும்மா இருக்க முடியலைன்னா ஆடுடி.."

"அப்படிங்கற.. அப்ப அந்தக் காரில போறவனக் கூப்பிடு.."

"எதுக்குடி..?"

"ஆடலுடன் பாடலைக் கேட்டுன்னு அவன்கூட ஆடிப்பாடத்தான்.. அதான் காத்தாயிக்கிழவி அவன ஏரிக்கர பஞ்சாயத்தில பாத்தப்பவே சொல்லுச்சே.."

"என்னன்னு..? பூங்காவனம், பூங்காவனம்.. இவன்கூட ஆடிப்பாடுடின்னு சொல்லுச்சா..?"

"அவன் எம்.ஜி.ஆர் மாதிரி இருக்கான்னு சொல்லல..?"

"அதுக்கு..?"

"நான் தனியா ஆடுனா நல்லாயிருக்காதுல்ல.."

"நீ அவன்கூட ஆடுன்னா அதவிட நல்லாயிருக்காதுடி.."

"அத நீ சொல்லக்கூடாது.."

"வேற யாரு புள்ள சொல்லனும்..?"

"அவன் சொல்லனும்.."

"அவன் காதுக்கு மட்டும் நீ ஆடக் கூப்பிட்டங்கிற விசயம் போச்சுன்னு வைய்யி.. கண்டமானிக்கு காடு காத்திருவான்.. சூதானமா இருந்துக்க.."

"உனக்கு பொறாமைடி.."

"இந்தக் கோராமைக்கெல்லாம் நான் ஆளாக மாட்டேன்டி.. சவுரி முடியப் பத்திச் சொன்னா எங்க வந்து நிக்கிறா

பாரேன்.."

தோழிகள் வழக்கடித்துக் கொள்வது பூர்ணிமாவின் காதுகளில் விழவில்லை.. அவள் கலவரத்தில் இருந்தாள்.. காரில் போனவன் ஜன்னல் கண்ணாடியை இறக்கி விட்டு அவளைப் பார்த்துக் கையசைத்து விட்டுப் போனதில் அவளுக்கு மயக்கமே வந்து விட்டது.. ஏரிக்கரையில் கள்ளப்பார்வை பார்த்ததை இன்னும் நினைவில் வைத்திருக்கிறானா..?

ஆசையா, கோபமா என்று இனம் காண முடியாத உணர்வுப் பந்து அவளது வயிற்றில் உருண்டது.. அவளது தந்தையின் முகத்தில் சஞ்சலத்தை விதைத்தவன்.. அவளது அன்புத் தமையனுடன் சண்டையிட்டுக் கட்டி உருண்டவன்.. அவளை ஆசையுடன் பார்க்கிறான்.. இதில் அவள் மகிழ்ந்து போவாளா என்ன..?

தொலைவில் ஊர் மக்கள் கூட்டமாக வருவது தெரிந்தது.. சண்டையிட்டுக் கொண்டிருந்த தோழிகள் இருவரும் சட்டென சண்டையை மறந்து ஒன்று பட்டனர்.

"ஆத்தி.. அம்புட்டு சனமும் இந்தப் பக்கமா இல்ல வருது.. என்னவா இருக்கும்..?" பூங்காவனம் கேட்டாள்..

"ஒருவேள.. நீ காருக்காரன்கூட ஆடிப்பாட நினச்சது அவங்களுக்குத் தெரிஞ்சிருச்சோ..?" மல்லிகா பூங்காவனத்தின் வயிற்றில் புளியைக் கரைத்து ஊற்றினாள்..

"என்ன புள்ள குண்டத் தூக்கிப் போடற.. இங்க பேசினது ஊராளுகளுக்கு எப்புடிக் கேட்டிருக்கும்..?" பயந்து போனாள் பூங்காவனம்..

"எனக்குத் தெரியாது புள்ள.. அவுக வர்ற வேகத்தப் பாத்தா இங்ஙனவே பஞ்சாயத்தக் கூட்டிப் புடுவாகன்னு தோணுது.." மல்லிகா பயமுறுத்துவதைத் தொடர்ந்தாள்..

பூர்ணிமா நின்று விட்டாள்.. ஊரே கூடி ஒன்று திரண்டு வருகிறார்கள் என்றால் விபரீதமாக எதுவோ நடந்திருக்க வேண்டும்..

'அது என்னவா இருக்கும்..?'

அரவிந்தனின் காரை ஊர் மக்கள் மறித்ததில் தோழிகள் மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"அவுக அவனத் தேடி வந்திருக்காகடி.. அவன் கார மறிக்கிறாக.."

அவளது ஆடலும் பாடலும் நிகழ்ச்சி நிரலுக்காக ஊர் மக்கள் ஒன்றுகூடி அவளை மொத்த வரவில்லை.. என்பதில் நிம்மதியடைந்தாள் பூங்காவனம்..

"பூர்ணி.. அங்க பாரு.. உன் அப்பாவும் அண்ணனும் வந்திருக்காக.." மல்லிகா சுட்டிக் காட்டினாள்..

"வாங்கடி.. பக்கத்தில போய் பார்க்கலாம்.."

தோழிகள் சிட்டாகப் பறந்தோடிக் கூட்டத்துடன் கூட்டமாக கலந்து விட்டார்கள்.. அரவிந்தனின் காரை வழி மறித்து முற்றுகையிட்ட கட்டம் காரின் கண்ணாடி ஜன்னல் கதவைத் தட்டித் திறக்கச் சொன்னது..

"ஆத்தி.. இவுக இருக்கிற கோபத்தப் பாத்தாக் கார விட்டு அவன் இறங்கி வந்தா அடிச்சுத் துவைச்சுக் காயப் போட்டிருவாக போல இருக்கே.."

"ஆமாண்டி மல்லிகா.. அவன் கார விட்டு இறங்கினா சட்னிதான்.."

பூர்ணிமாவுக்குப் பயமாகி விட்டது.. அவளது அப்பாவையும் அண்ணனையும் பாதித்தவன் அடி வாங்கட்டும் என்று நினைக்க அவளால் முடியவில்லை.. அது ஏனென்றும் தெரியவில்லை.. கள்ளத்தனமான அவனது பார்வைக்கு அவ்வளவு சக்தி இருக்கிறதா..?

"பிரசிடெண்டு ஐயா இருக்காரு புள்ள.. அடிதடியில இறங்க விடமாட்டாரு.." என்ற மல்லிகாவின் வார்த்தைகளில்..

'ஆமாமில்ல..' என்று ஆறுதலடைந்தது பூர்ணிமாவின் உள்ளம்..

அஞ்சாநெஞ்சனாக அரவிந்தன் கார்க்கதவைத் திறந்து இறங்கியதை மல்லிகாவும் பூங்காவனமும்

வியந்து பேசினார்கள்.. பூர்ணிமா அவர்கள் பேசுவதைக் கவனிக்காமல் கூட்டத்தினர் பேசுவதைக் கவனித்தாள்..

"இந்தாரு.. எந்தக் காட்டுப் பயலும் எங்க ஊரில பேக்டரி கட்ட முடியாது.." எச்சரித்தான் பார்த்திபன்..

"ஏன் முடியாது..?" நிதானமாகக் கேட்டான் அரவிந்தன்..

"ஏம்ப்பா.. ஏய்.. பார்த்தி.. இவன்கிட்டயெல்லாம் நின்னு பேசக்கூடாதுப்பா.. மெட்ராஸிக்காரன் நம்ம ஊரு ஆத்துத்தண்ணிய பாழடிக்க வந்திருக்கான்.. அவன்கிட்ட நின்னு பேசிக்கிட்டு இருக்க.. அப்புடியே ஓங்கி ஒரு குத்த விட்டு மூக்காந்தண்டயப் பேக்காம பேச்சுவார்த்த நடத்திக்கிட்டு இருக்க.." கூட்டத்திலே ஒருவன் குரல் கொடுத்தான்..

அதைத் தொடர்ந்து அங்கே பிரளயம் வெடித்தது..

"அடிடா அவன.."

"கையக் கால முறிச்சு வீசுங்கடா.."

"வித்தாரம் பேசற அந்த வாயக் கிழிங்கடா.."

"பல்ல உடைங்கடா.."

ஆளுக்கொரு பக்கமாக சப்தம் போட்ட கூட்டம் அவனை அடித்து நொறுக்க ஆவேசம் கொள்ள மாதவன் கைகளை விரித்து மறித்து அவர்களைத் தடுத்தார்..

"நான் ஒருத்தன் இங்க இருக்கிறப்ப ஆளுக்காளு நாட்டாம பண்ணினா என்ன அர்த்தம்..? அதுக்கு நான் ஏம்ப்பா உங்ககூட வரனும்..? களத்து மேட்டில காவலுக்குப் படுத்திருக்கலாமில்ல..? கருத போட்டுப்புட்டு உங்க பின்னால வந்தது அடிதடிய வேடிக்க பார்க்கிறதுக்கா..?"

"அவன் திமிராப் பேசறான் பிரசிமெண்டு ஐயா.."

"திமிர அடக்கத்தான் வந்திருக்கோம்.. அதுக்கு அடிதடியில இறங்கனும்னு அவசியமில்ல.. ஒற்றை ஆளுகிட்ட கூட்டமா நின்னு வீரத்தக் காண்பிக்கிறது நம்ம ஊர் மண்ணுக்கு அழகில்ல.."

மாதவனின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு ஊர் மக்கள் தள்ளி நின்றதை கூர்மையான பார்வையுடன் அவன் கவனித்துக் கொண்டிருந்தான்.. தீட்சண்யம் மிக்க அவனது விழிகள் ஊர் நடப்பையும் மாதவனின் ஆளுமையையும்

கணக்கெடுத்தன.. அதை பார்த்திபன் நோட்டமிட்டு மனதுக்குள் குறித்துக் கொண்டிருந்தான்..

"இந்தா பாருப்பா.." மாதவன் பேச்சு வார்த்தையை ஆரம்பித்தார்..

"என் பேரு அரவிந்தன்.." மிடுக்காக அவன் சொல்ல."விளக்குமாத்துக்குப் பேரு பட்டுக் குஞ்சலமாம்.." என்று கூட்டத்திலிருந்து ஒரு குரல் கேட்டது..

அரவிந்தனின் முகம் இறுகியது.. மல்லிகாவும் பூங்காவனமும் கேலிப் பேச்சை மறந்து திகில் பிடித்தவர்களாக நின்றிருந்தார்கள்.. பூர்ணிமாவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்ற அச்சத்தில் அவள் இருந்தாள்.

"சும்மாயிருங்கப்பா.. பேசிக்கிட்டு இருக்கேனில்ல.." மாதவன் கூட்டத்தைப் பார்த்து அதட்டல் போட்டு விட்டு.. அரவிந்தனின் பக்கம் திரும்பினார்..

"நீ பட்டிணத்துக்காரன் தம்பி.."

"ஸோ வாட்..?"

"உன்னப் பத்திக் கேள்விப் பட்டிருக்கோம்.. ஊருப்பட்ட சொத்து இருக்குதுன்னு சொன்னாங்க.. மெட்ராஸில கம்பெனி, கோயம்பத்தூரில மில்ன்னு இத்தன தொழில் இருக்கிறப்ப நீ எதுக்காக எங்க ஊர் வயலுகள வாங்கி அந்த இடத்தில பேக்டரி கட்டனும்னு பேசிக்கிட்டுத் திரியற..?"

"இதில உங்களுக்கு என்னங்க அப்ஜெக்சன்..?"

"ஆயிரம் ஆட்சேபனை இருக்குப்பா.. இருக்கிற தொழிலப் பாக்கவே உனக்கு நேரம் பத்தாது.. இதில பொன்னு விளையற பூமியில கட்டிடத்தக் கட்டித் தொழில் நடத்தனும்னு ஏன் கிளம்பி வந்த..?"

"அது என்னுடைய விருப்பம்.. அப்பா, தாத்தா தொழில்களைப் பார்த்துக்கறதில எனக்கென்ன பெருமை இருக்கு..? அது அவங்க உருவாக்கின தொழில்..எனக்கு நான் உருவாக்கின தொழிலை நடத்தனும்.. வின் பண்ணிக் காட்டனும்.. அதுதான் எனக்குப் பெருமை.."

பூர்ணிமாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.. பார்த்திபனும் இப்படித்தான் பேசுவான்..

"அப்பன் காசில உக்காந்து சாப்பிடறவன் ஆம்பளையா..?" என்று கேட்பான்.. அரவிந்தனும் அப்படிப் பேசியதில் அவள் பார்த்திபனின் முகத்தைப் பார்த்தாள்.. அதில் பாரட்டுத் தெரிந்ததில் அவள் மனம் பெருமிதம் கொண்டது..

'என் அண்ணன்..!'

அவளது அண்ணன் கோபக்காரன்தான்.. ஆனால் நியாயக்காரன்.. எதிரியின் குணாதிசியத்தை ரசிக்கத் தெரிந்தவன்..

"நல்ல விசயம்தாம்ப்பா.. அதுக்கு எங்க ஊர்தான் உனக்குக் கிடைச்சதா..? நீ தொழில் ஆரம்பிக்கனும்னா உன் வீடு இருக்கிற மெட்ராஸில ஆரம்பிக்கலாமே.. உன்னோட மில்லு இருக்கிற கோயம்பத்தூரில ஆரம்பிக்கலாமே.."

"என் தொழிலை எங்கே ஆரம்பிக்கனும்னு நான்தான் டிசைட் பண்ணனும்.. நீங்க பண்ணக் கூடாது.."

"இந்தச் சட்டமெல்லாம் தெரியுதில்ல.. நெல் விளையற வயலை வாங்கி அதில கட்டிடம் கட்டி விவசாய வயலைப் பாழடிக்கக் கூடாதுன்னு ஏன் உனக்குத் தெரியல..? ஆத்தில ஓடற தண்ணி ஆண்டவன் கொடுத்ததுப்பா.. அதில அழுக்குத் தண்ணியக் கலந்து பாழடிக்கக் கூடாதுன்னு உனக்கு ஏம்ப்பா தெரியல..?"

"லுக் மிஸ்டர் வில்லேஜ் பிரசிடெண்ட்.. விவசாயத்தில வர்ற வருமானத்த விட பேக்டரியில அதிகமா வருமானம் வரும்.. உங்க ஊர் ஆள்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.. அதை ஏன் நீங்க புரிந்துக்க மாட்டேங்கறிங்க..?"

"எல்லாம் எங்களுக்கும் புரியும் தம்பி.. இங்கே யாரும் கிழிச்சுப் போட்டுக்கிட்டு நிக்கல.. வேல வெட்டியில்லாம ஊரைச் சுத்திக்கிட்டு அலயல.. விவசாய நிலத்த அழிச்சு வர்ற வேல வாய்ப்பு எங்களுக்கு வேண்டாம்.. கையகல நிலமானாலும் அதில உழைச்சு விளையற நெல்ல வித்துப் பொங்கிச் சாப்பிடற வர்க்கம் எங்க விவசாய வர்க்கம்.. நாட்டுக்கே சோறு போடற தொழில் எங்க தொழில்.. காசு பணத்த பொங்கிச் சாப்பிட முடியாது தம்பி.. அரிசி பருப்பில

ஆக்கினாத்தான் அது சோறும் குழம்பும்.. கரன்ஸி நோட்ட வைச்சு சோறு குழம்ப வாங்கலாம்... ஆக்கித் திங்க முடியாது.." மாதவன் ரௌத்ரமாக குரலை உயர்த்திப் பேசினார்..

அத்தியாயம்- 12

"விவசாய நிலம்ன்னா உங்களுக்கு ஈஸியாப் போச்சு.. விவசாயிகள்ன்னா உங்களுக்கு இளக்காரமாப் போச்சு.. டவுனுக்குள்ள கையகல இடம் இருந்தாப் போதும்.. அவன் காசுக்காரன்.. பட்டிக்காட்டில இருக்கிற இருபது ஏக்கர் நிலத்துக்கு அந்தக் கையகல நிலம் சமானம்.. இது வயித்துப்பசியைத் தீக்கிற தாய்ப்பா.. அது ஏன் உங்களுக்குப் புரிய மாட்டேங்குது..? காசு கொடுத்தா அரிசியை வாங்கலாம்.. அது கம்மியான விலைக்குக் கிடைக்கனும்ல்ல..? ஒரு கிலோ அரிசி ஒரு லட்சம் ரூபாய்ன்னு ஆனா என்ன பண்ணுவீங்க..? கோடிக்கணக்கில பணம் சம்பாதிக்கிறவன் லட்சக் கணக்கில காசைக் கொடுத்து அரிசி வாங்கிச் சோறாக்கிச் சாப்பிடுவான்.. ஏழைபாழை என்னத்தச் செய்வான்..? அதப் பத்தியெல்லாம் உங்களுக்குக் கவல கிடையாது.."

அருள் வந்து விட்டதைப் போல மாதவனின் உடல் ஆடியது.. அவர் ஆராதிக்கும் விவசாயத்தொழிலின் மேன்மை புரியாமல் பேசும் அரவிந்தனை என்ன செய்தால் தகும் என்ற ஆத்திரம் அவரது விழிகளில் வழிந்தது..

"பேக்டரியில சம்பளத்த அள்ளிக் கொடுப்ப.. அதில வேல பாத்துப் பழகினவன் விவசாய வேலய மறந்து போவான்.. அவனோட நிலம் தரிசாக் கிடக்கும்.. காலப் போக்கில அதைக் கட்டிடம் கட்ட வித்துட்டு இவன் சம்சாரித் தொழிலுக்கு ஒரு கும்பிட்டைப் போட்டு ஒதுங்கிப் போவான்.. இப்புடி ஒவ்வொருத்தரா ஒதுங்கிப் போனா விவசாயம் எப்படி நடக்கும்..? கோடிக்கணக்கில மக்கள் இருக்கிற நாட்டில உணவு உற்பத்தி குறைஞ்சுக்கிட்டே

வருது.. அதப் பத்தி பட்டினத்தில இருக்கிற படிச்ச மனுசங்க யோசிச்சுப் பாத்திகளா..?"

அரவிந்தன் புருவங்கள் நெரிய மாதவனைப் பார்த்துக் கொண்டே நின்றான்.. அவரது ஆற்றாமை அவன் மனதில் ஏறியதா இல்லையா என்று ஒரு மண்ணும் புரியாமல் திகைத்து விழித்தாள் பூர்ணிமா.. விவசாய வர்க்கத்தின் ஆற்றாமைக் குரல் ஏன் மேல்தட்டு வர்க்க மனிதரின் காதுகளில் ஏறுவதில்லை..? பாடுபடும் விவசாயி உடலில் புழுதி படிய மண்ணைக் கொத்திப் பிழைக்கும் பிழைப்பைக் கைவிடக் கூடாதென்று ஏன் போராடுகிறான்..? மற்ற தொழில்களைவிட விவசாயத் தொழிலில் லாபம் குறைவு.. உடல் உழைப்பு அதிகம்.. இருந்தும் அவன் சோர்வதில்லை.. நாள் முழுக்கக் காடுகரையில் பாடுபடுபவன் பொழுது சாய்ந்ததும் உறக்கம் வருவதற்காக மதுபானத்தைத் தேடிப் போவதில்லை.. கொதிக்கக் கொதிக்க வெந்நீரை அண்டாவில் விளாவிக் குளித்து விட்டு.. அப்போதுதான் ஆக்கி வைத்திருக்கும் சுடு சோறை இரண்டு தட்டு சாப்பிட்டு விட்டுக் கயிற்றுக் கட்டிலை எடுத்துப் போட்டுப் படுத்தவுடன் குறட்டை விட்டுத் தூங்கி விடுவான்.. அந்தத் தூக்கம் பட்டினத்து வாசிகளுக்குக் கிட்ட வேண்டுமென்றால் அதற்கு ஏஸி இருக்க வேண்டும்.. இன்னும் சிலருக்கு தூக்க மாத்திரை இருக்க வேண்டும்..

"ஏம்ப்பா.. பட்டினத்துக் கட்டிடங்கள இடிச்சு விவசாயம் பண்ணப் போறோம்ன்னு நாங்க உங்க ஊருப்பக்கம் வர்றோமா..? நாங்க உண்டு.. எங்க நிலம் உண்டு.. உழைச்சுப் பிழைக்கிற எங்க உழவுத்தொழில் உண்டுன்னு ஒதுங்கியிருக்கிறோமில்ல.. எங்க ஊருக்குத் தேடி வந்து ஏம்ப்பா தொந்தரவு பண்றீக..?"

மாதவனின் கோபத்தில் இருந்த நியாயம் அரவிந்தனின் மனதைத் தொட்டிருக்கும் என்றுதான் பூர்ணிமா நினைத்தாள்.. அவனும் மனிதன்தானே.. படித்தவன்.. ஏதோ புரியாமல் விளைநிலங்களை விலை பேசி விட்டான்.. விவசாயிகளின் ஆதங்கம் புரிந்தால் அதை விட்டு விடுவான் என்று எண்ணினாள்..

அதுதான் இல்லை.. அரவிந்தன் வாயைத் திறந்து பேசிய பேச்சில் பூர்ணிமாவுக்கு வெறுத்துப் போனது..

"என்ன செய்கிறது..? எங்க ஊரில ஆறு ஓடலையே.."

'இவன் திருந்த மாட்டான்..' பூர்ணிமாவுக்கு சாலையில் கிடக்கும் கல்லை எடுத்து அவன் தலைiயில் போடவேண்டுமென்று வெறி வெறியாக வந்தது..

"ஏன் இல்லை..?" எகத்தாளமாகக் கேட்டான் பார்த்திபன்..

"உன்னோட ஊருல ஆறு இருந்துச்சுடா மடையா.. அழகான ஆறு.. கூவம் ஆறு.. அதத்தான் சாக்கடையா மாத்தி வைச்சிருக்கீங்களே.. உங்க ஊரை நாறடிச்சது பத்தாதுன்னு எங்க ஊருப்பக்கம் வந்திருக்கியா..? அதுக்கு நாங்க விட்டிருவோமா..?"

"விடாம என்ன பண்ணுவ..?"

"எதுவும் பண்ணுவோம்.. எங்க ஊரு ஆத்தில ஒரு சொட்டு அழுக்குத்தண்ணியக் கூடக் கலக்கவிட மாட்டோம்.."

"இந்த ஆற்றை உங்களுக்கு ரெஜிஸ்ட்டர் பண்ணிக் கொடுத்திருக்காங்களா..? ஓடுகிற தண்ணீர் உலகத்துக்கே சொந்தம்.."

"இதக் கர்நாடகாவில சொல்லிப் பாரு... கன்னடத்துக்காரன் உன்னக் கட்டம் கட்டி அடிக்க வருவான்.. அவன் உழவுக்கேத் தண்ணி தர மாட்டேங்கிறான்.. நீ என்னடான்னா எங்க ஊரு தண்ணிய உறிஞ்சி கூல்டிரிங் பேக்டரி நடத்தி, அதில வர்ற கழிவுத் தண்ணிய ஆத்துத் தண்ணியில கலந்து மாசு படுத்தலாம்ன்னு கிளம்பி வந்திருக்க.. என்ன தைரியம்டா உனக்கு.."

"என் தைரியத்தின் லெவலை நீ இன்னும் பார்க்கலை.. நான் ரைட் அண்ட் ராயலாத்தான் இங்கே பேக்டரி கட்டப் போறேன்.. முறைப்படி பெர்மிசன் வாங்கியிருக்கேன்.."

"நாங்க அதுக்கு ஸ்டே வாங்குவோம்டா.. என்ன பாக்கிற..? உழவன் மகனெல்லாம் படிக்காத தற்குறியில்ல.. எங்க உழவுத் தொழிலை உயிராய் நினைக்கிறவங்க நாங்க.. எங்களுக்கும் சட்டம் தெரியும்.. சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும் தெரியும்.. ஊரே கூடி எதுத்து நின்னா நீ ஒரு ஆணியையும் பிடுங்க முடியாது.. தெரிஞ்சுக்க.. வெளிநாட்டுக்குப் போய் படிச்சுட்டு வந்தா நீ பெரிய பருப்பா..? இது வயலூர்டி.. பருப்புக் கடைஞ்சிருவோம் பருப்பு.. தப்பிப் பிழைச்சுக்க.."

"என் கை ஒன்னும் பூப்பறிக்காது பார்த்திபன்.."

"அது பூப்பறிச்சா எங்களுக்கு என்ன..? புல்லைப் பறிச்சா எங்களுக்கென்ன..? பறிக்கிற சோலிய உங்க ஊருப்பக்கம் வைச்சுக்கப்புன்னுதான் நாங்க சொல்றோம்.. இங்க வந்து களை பறிக்கனும்னு நினச்சாக்கூட அது நடக்காதுடி மாப்பிள்ளை.. ஊரப் பாத்துப் பொட்டியக் கட்டு.."

பார்த்திபன் சண்டை போட்டுக் கொண்டிருக்க பூங்காவனம் பூர்ணிமாவிடம் மகத்தான அந்த சந்தேகத்தைக் கேட்டாள்..

"ஏண்டி பூர்ணிமா.. உன் அண்ணன் எதுக்கெடுத்தாலும் இந்தப் பட்டினத்துக்காரன்கிட்ட 'வாடி மாப்பிள்ள..' 'போடி மச்சான்'னு வித்தாரம் பேசறாரே.. உன்னப் பொண்ணு, கிண்ணு கொடுக்கப் போறாரா..? மெட்ராஸ்காரனுக்கு உன்னக் கட்டிக் கொடுத்துரலாம்ன்னு நினைக்கிறாரோ என்னவோ.."

பூர்ணிமாவுக்கு சுர்ரென்று கோபம் தலைக்கு ஏறி விட்டது.. கூட்டத்தில் கலந்து நிற்பதை மறந்து பூங்காவனத்தின்

கையில் அழுத்தமாகக் கிள்ளி விட்டாள்.. அவள் 'ஆ' வென அலற வாயைத் திறக்க மல்லிகா சமயோசிதமாக அவளது வாயை மூடிச் சத்தம் வெளி வராமல் தடுத்து விட்டாள்..

"உனக்கு மண்டையில ஏதாச்சும் இருக்குதாடி பூரணி..? இவளப் பத்திதான் உனக்குத் தெரியும்ல்ல.. இவளப் போயிக் கிள்ளி வைக்கறியே.. இவ அலறி ஊரைக் கூட்டினா இங்க இருக்கிற அத்தன பேரும் நம்மளத் திரும்பிப் பாப்பாகங்கிற அறிவுகூட உனக்கு இல்லயா..?"

"இவ பேசற பேச்சுக்கு பல்லத் தட்டிக் கையில கொடுக்கனும்டி மல்லிகா.. என்ன பேச்சுப் பேசறான்னு கேட்டியில்ல.."

"இவளே கூறு கெட்ட கூதரை..! இவ பேச்சையெல்லாம் நீ கணக்கில எடுத்துக்கற பாத்தியா.. ஏண்டி.. இந்த வயலூருக்கு வேணும்ன்னா நீ பெரிய வீட்டுப் பொண்ணா இருக்கலாம்.. மெட்ராஸ்காரனுக்கு அப்புடியா..? இவனோட காரு வில பெறுமாடி உங்க சொத்து பத்தெல்லாம்..? இவனுக்குப் பொண்ணுக் கொடுக்க உன்னோட அண்ணன் ராவினாலும் இவன் அகப்படுவான்ங்கிற..? எந்தக் கோடிஸ்வரி இவனுக்காக காத்திருக்காளோ.. இவன் உன்னத்தான் காணோம்ன்னு அலையறானாக்கும்.. கேழ்வரகில நெய் வடியுதுன்னு சொன்னா கேக்கிறவளுக்கு எங்கே போச்சு புத்தி.."

மல்லிகா சமாதானப் படுத்திய லட்சணத்தில் பூர்ணிமாவுக்கு வெறி வெறியாக வந்தது.. பேச்சுக்குக்கூட அரவிந்தனை பூர்ணிமாவின் மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்ள மல்லிகா தயாராக இல்லை என்பதை அவளது விளக்கவுரை தெளிவு படுத்தியதில் பூர்ணிமாவுக்குச் சிரிப்பதா, அழுவதா என்றே தெரியவில்லை..

'இவனச் சொல்லனும்..'

ஒன்றாக இருந்த தோழிகளின் மனதில் நஞ்சை விதைத்து விட்ட அரவிந்தனின் மீது அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது.. எல்லாம் அவனால்தான் என்று அவள் பொருமினாள்..

'இவன் ஊருக்குள்ள எந்த நொடியில் கால வைச்சானோ, அந்த நொடியில இருந்து ஊரோட நிம்மதியும் சந்தோசமும் கேள்விக்குறியா ஆகிருச்சு..'

இவனை யார் வயலூர் பக்கம் வரச் சொன்னது என்று ஆத்திரம் கொண்டாள் பூர்ணிமா.. வெளிநாட்டுக்குப் படிக்கப் போனவன் அங்கேயே இருந்து தொலைத்திருக்க வேண்டியதுதானே.. எதற்காக திரும்பி வந்தான்..? இப்படி சோழவந்தான் பக்கம் வந்து வயலூர்வாசிகளின் நிம்மதியைக் கெடுப்பதற்கா வந்து தொலைத்திருக்கிறான்.?

'அப்பன், பாட்டன் சொத்தில உக்காந்து சாப்பிட மாட்டானாம்.. வித்தாரம் பேசறான்.. உன் வீட்டுச் சொத்தில உக்காந்து சாப்பிட முடியலன்னா ஓடிக்கிட்டே சாப்பிடு.. அதுக்கு எதுக்குடா எங்க ஊர்ப்பக்கம் வந்து உயிரக் குறைக்கிற..?'

பூர்ணிமாவின் மனம் பொருமிய பொருமல் அவன் காதுகளில் விழுந்து விட்டதோ என்னவோ, அரவிந்தன் கூட்டத்தின் மத்தியில் இருந்த அவளைப் பார்த்து விட்டான்.. அந்த நிலையிலும் அவன் கண்களில் வந்த மின்னலில் அவள் ஸ்தம்பித்தாள்..

'அடக் கோராமையே.. என்னக் கண்டா இவன் கண்ணில ஏன் பல்பு எரியுது..?'

பூர்ணிமா கலவரம் அடைந்தாள்.. அவன் பார்க்கும் பார்வையை பாத்திபன் பார்த்து விடக் கூடாது என்று

அவளுக்குப் பயமாக இருந்தது.. இளந்தாரி பார்த்திபன் வெகு எளிதாக இந்தப் பார்வையை இனம் கண்டு விடுவான்.. ஆற்றை மாசு பண்ண வந்திருப்பவனின் ஆசைப் பார்வை அவனுடைய தங்கையின் மீது படிகிறது என்றால் சும்மாவா விடுவான்..?

'டேய்.. அங்கிட்டுத் திரும்பித் தொலைடா..'

பூர்ணிமாவின் பதட்டத்தை அவளது விழிகளில் படித்து விட்டதினாலோ என்னவோ.. அரவிந்தன் திரும்பி விட்டான்..

'ஆத்தாடி.. அந்தப் பக்கமாத் திரும்பிட்டான்.. அப்படியே இருந்து தொலைடா..'

பூர்ணிமாவுக்குத் 'திக்,திக்' என்று இருந்தது.. எந்த நேரம் அவன் அவள் பக்கம் திரும்பித் தொலைப்பானோ என்று பயந்து பயந்து நிற்பதற்கு வீட்டைப் பார்த்து ஓடி விடலாம்.. ஆனால் நடந்து கொண்டிருக்கும் ஊர்பஞ்சாயத்து அவளை நகர விடாமல் கால்களுக்குத் தளையிட்டு நிற்க வைத்திருக்கிறதே.. அவள் வயலூரில் பிறந்தவள்.. சோழவந்தான் ஆற்றுத் தண்ணீரில் நீந்தி வளர்ந்தவள்.. அவர்களது வாழ்வாதாரமாக இருக்கும் ஆற்று நீரின் தூய்மையைக் காக்க நடக்கும் போராட்டத்தில் அவள் கலந்து கொள்ள வேண்டாம்.. என்ன நடக்கிறது என்று நின்றாவது பார்க்கலாமல்லவா..?

பூர்ணிமா நகர்ந்து மல்லிகாவின் முதுகிற்குப் பின்னால் ஒளிந்து கொண்டாள்.. தோழியை விசித்திரமாகப் பார்த்த மல்லிகா..

"என்னடி..?" என்றாள்..

"ஒன்னுமில்ல.." என்றாள் பூர்ணிமா..

அரவிந்தன் பார்க்கிறான், அதனால் உன் முதுகிற்குப் பின்னால் மறைந்து நின்றிருக்கிறேன் என்று சொல்ல முடியாது.. மல்லிகா அதை ஒர்நாளும் ஒப்புக்கொள்ள மாட்டாள்.. 'அவனாவது, உன்னைப் பார்க்கிறதாவது, வீணாய் கற்பனை பண்ணிக் கொள்ளாதே' என்பாள்.. அவன் தகுதிக்கு அவன் கோடிஸ்வரியைத்தான் பார்ப்பான்.. வயலூரரின் விவசாயி மகளைப் பார்க்க மாட்டான் என்று தெளிவுரை, பொழிவுரையைப் பொழிவாள்.. தேவையா..?

"முடிவாச் சொல்றோம்.. கேட்டு ஊரைப் பாத்து ஓடிப் போயிட்டன்னா உனக்கு நல்லது.. அத விட்டுட்டு ஆத்துப் பாசன வயல அழிச்சுட்டு அதில பேக்டரியக் கட்டுவேன், ஆத்து நீரில கழிவுத் தண்ணிய விட்டு அழுக்காக்குவேன்னு அடம் பிடிச்சா அப்புறம் ஆரு நாங்கன்னு காட்டிருவோம்.. பாத்துக்க.." எச்சரித்தார் மாதவன்..

ஊர் கூடித் தகவல் அனுப்பியதால் ஓடி வந்த தேவேந்திரனைக் கூட்டம் பிடிபிடியெனப் பிடித்துக் கொண்டது..

"மனுசனாய்யா நீ..? பொண்டாட்டி ஆசப்பட்டா பூவ வாங்கிக் கொடு.. சேல வாங்கிக் கொடு.. நக நட்ட வாங்கிக் கொடு.. அத விட்டுட்டு பொன்னு விளயற பூமிய இந்தா புள்ள.. வித்துத் தின்னுன்னு கையிலத் தூக்கிக் கொடுத்திருக்கியே.. இந்த வயலூரிலதான் நீ பொறந்தியா..?"

தேவேந்திரன் விக்கித்து விட்டார்.. அவரது முன்னோர்கள் கட்டிக் காத்து வந்த பரம்பரை கௌரவம் அவர் முன்னால் கை கொட்டிச் சிரிப்பதைப் போல இருந்தது..

அத்தியாயம்- 13

"பரம்பரையா வந்த நிலம் நீ சம்பாரிச்ச சொத்தா..? உன் பாட்டன், முப்பாட்டன் சம்பாதிச்சது.. அத முதல்ல சொத்துன்னே நினைக்கக்கூடாது.. பொன் விளையற இந்த பூமி, நாம கையெடுத்துக் கும்பிடற சாமிய்யா.. அந்த நினப்பு உன் மனசில அத்துப் போச்சா தேவேந்திரா..? சாமியப் போயி விக்கறேங்கறியே.. அதுவும் எதுக்கு..? நம்ம ஊரு ஆத்துத்தண்ணியப் பாழடிக்கிறதுக்கு.. நீயெல்லாம் இந்த மண்ணில பொறந்தவன்னு வெளியில சொல்லிக்கிட்டுத் திரியாதே.. ஆமாம்.. சொல்லிட்டேன்.."

காறி உமிழாத குறையாக ஊரார் பேசிய பேச்சில் தேவேந்திரன் கையெடுத்துக் கும்பிட்டு மன்னிப்புக் கேட்டார்..

"இல்லப்பா இல்ல.. என் மச்சினன் மகன் நம்ம ஊர முன்னேத்த ஏதோ தொழிற்சாலக் கட்டப் போறேன்னு சொன்னாரப்பா.. அதுக்காகத்தான் என் நெலத்த விக்க நான் ஒப்புக்கிட்டேன்.. நம்ம ஊரில தொழிற்சாலை வந்தா நம்ம ஊருக்கு முன்னேற்றம்தானப்பா.."

"இப்ப மட்டும் பின்னேற்றத்திலா நம்ம ஊரு இருக்கு..? இந்தாப் பாரு தேவேந்திரா.. கேப்பயில நெய் வடியுதுன்னு ஒன் மச்சனின் மகன் சொன்னா, கேக்கிற உனக்கு எங்கேய்யா போச்சு புத்தி..? புல்லு மேயப் போயிருச்சா..?"

"நம்ம ஊரு ஆளுகளுக்கு வேல தருவேன்னு சொன்னாரப்பா.."

"இங்க எவன்ம்ப்பா வேல வெட்டியில்லாம சுத்திக்கிட்டு இருக்கான்..? முப்போகம் விளயற பூமியில விவசாய வேல பாக்கவே ஆள் கெடைக்க மாட்டேங்குது.. தென்னையில காய் இறக்க.. மட்டை கழிக்க.. வாழைத்தார் இறக்க.. வெத்தலைக் கொடியில வெத்தலய நறுக்கி, அடுக்கிச், சந்தையில வித்துட்டு வரன்னு நிக்க நேரமில்லாம சக்கரம் கட்டிக்கிட்டு ஓடிக்கிட்டு இருக்கவனப்பா.. நம்ம ஊருக்காரன்.. அவனுக்கு ஒன் மச்சினன் மகன் வேல போட்டுத் தரப் போறானா..?"

தேவேந்திரன் தவித்தார்.. வாழையடி வாழையாக வம்சப் பெருமையைக் காப்பாற்றி வந்த அவரது குடும்பம், அவரது

தலைமுறையில் அப்பெருமையைக் காப்பாற்றத் தவறி விட்டது என்ற பெயர் வந்து விடுமோ என்று நடுங்கினார்..

"எதச் செய்யறதா இருந்தாலும் ஊராளுகள ஒருதரம் கலந்துக்கிட்டுத்தான் செய்வேன்ய்யா.. இன்னும் பத்திரம் பதிவாகல.. இம்புட்டுக் கோவம் வேணாம்.."

அவர் வணங்கிக் கேட்டுக் கொண்டதில் ஊராரின் கோபம் மட்டுப் பட்டது.. அரவிந்தன் புருவங்களை உயர்த்தினான்..

"வாட் இஸ் திஸ் அங்கிள்..? ஆண்ட்டி என்னிடம் அட்வான்ஸ் வாங்கியிருக்காங்க.. மறந்துட்டிங்களா..?"

மட்டுப்பட்டிருந்த ஊராரின் கோபம் மடையுடைத்து விடுமோ என்று பயந்து போன தேவேந்திரன் அரவிந்தனின் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தார்.. எதிரிக்காரனிடம் பேசுவதைப் போல..

"நிலம் என்னோடது மாப்பிள்ள.. நான் ஒன்னும் உங்ககிட்டக் கைநீட்டி அட்வான்ஸ் வாங்கலையே.." என்று சொன்னார்..

"ஓ.." கேலியாக உதடுகளைக் குவித்த அரவிந்தன்.

"இதே ஸ்டேட்மெண்டை ஆண்ட்டியின் முன்னால் நீங்கள் சொல்லி விடுவீங்களா..?" என்று கேட்டான்..

"எலே மாப்பிள்ள.. எங்க வந்து ஆரை மிரட்டரவன்..? ஒன் வீட்டுப் பஞ்சாயத்த வூட்டுக்குள்ள வைச்சுக்க.. இது வெளியிடம்.. எங்க கண்ணு முன்னால எங்க ஊருக்கார

ஆள 'லந்து' பண்ற வேய வைச்சுக்கிட்ட, ஒழுங்கா ஊரு போயிச் சேரமாட்ட.. பாத்துக்க.." கூட்டத்தில் சண்டைக்குரல் எழுந்தது..

"அதான.. அசலூருக்காரன் வந்து வயலூர்க்காரன மிரட்டரதா..? என்னடி மாப்பிள்ள.. கையும், காலும் பத்திரமா இருக்கனும்னா வாயக்கட்டி வைச்சுக்க.. எக்குத்தப்பா வார்த்தய விட்ட... நாங்க பதிலுக்கு பேசிக்கிட்டு நிற்க மாட்டோம்.. எங்க கைதான் பேசும்.." அடுத்த குரல் வந்தது..

"என் கை என்ன பூவையா பறிச்சுக்கிட்டு இருக்கும்..?" அரவிந்தன் ஆக்ரோசமானான்..

"அதச் செய்யுடி மாப்பிள்ள.. எங்க சோழவந்தான் வயலூரில ஆத்துக்கும் பஞ்சமில்ல.. கரையோரப் பூவுக்கும்

பஞ்சமில்ல.. வேணும்கற மட்டும் பூவப் பறிச்சுக்கிட்டு பொட்டியக் கட்டு.. ஆரு வேணாம்ன்னு சொன்னது..?" பார்த்திபனின் கேலியில் கூட்டம் சிரிக்க அரவிந்தன் உக்கிரமானான்..

தேவேந்திரன் அரவிந்தனின் கோபத்தைப் பொருட் படுத்தவில்லை.. தான் ஒரு போதும் தனது நிலங்களை அரவிந்தனுக்கோ.. வேறு ஒருவருக்கோ விற்க மாட்டேன் என்று சத்தியம் பண்ணாத குறையாக அவர் மன்றாடியதில் கூட்டம் கலைந்து அவரவரின் வீட்டுக்கு என்று பிரிந்து சென்றது.. அப்போதுதான் தங்கையைக் கவனித்த பார்த்திபன்..

"இங்க உனக்கு என்ன வேல..?" என்று அதட்டினான்.

"இல்லேன்னா நான் வேடிக்க பாக்க வரல.. மல்லி, பூங்காவனத்தோட ஆத்தில குளிச்சுட்டு வர்றேன்.." அச்சத்துடன் மருண்டு விழித்தாள் பூர்ணிமா..

"சரி.. சரி.. வண்டியில ஏறு.. வீட்டுக்குப் போகலாம்.." பார்த்திபன் புல்லட்டைக் கிளப்பினான்..

"அதுசரி.. அயித்தானுக்கு தங்கச்சிய மட்டும் கண்ணுக்குத் தெரியுது.. அவகூட நிக்கிற அயித்த மகளுகளக் கண்ணுக்குத் தெரியலயாக்கும்..?" நொடித்தாள் மல்லிகா..

"அப்புடித் தெரிஞ்சிருந்தா அயித்த மகளுகள அம்போன்னு ரோட்டில விட்டுப்புட்டுத் தங்கச்சிய மட்டும் புல்லட்டில உக்காரச சொல்லுவாரா..? ஏன் மல்லி.. நாம உக்காந்தா புல்லட்டு நகராதா..?" உதட்டைக் கடித்து ஒரு மார்க்கமாகப் பார்த்திபனைப் பார்த்தபடி சவுரி முடி பின்னலைத் தூக்கி முன்னால் போட்டுக் கொண்டாள் பூங்காவனம்..

'இவ சும்மா இருந்தாலாவது அயித்தான் இவள ஒரு பார்வ பாத்து வைக்கும்.. ஒட்டுமுடிப் பின்லைத் தூக்கி ஒய்யாரமா முன்னாடி போட்டுக்கிட்டு போஸீ கொடுத்தா விட்டாப் போதும்ன்னு வீடு வரைக்கும் திரும்பாம ஓடியே போயிரும்ல்ல.. அடியே பூங்காவனம்.. உனக்கு வெளியில இருந்து ஆரும் வந்து சூனியம் வைக்க வேணாம்டி ஆத்தா.. உனக்கு நீயே சூனியம் வைச்சுக்குவ..' மல்லிகாவுக்கு சந்தோசமாக இருந்தது..

பூங்காவனத்தின் பின்னல் வீச்சில் பார்த்திபனின் முகம் ஒரு அண்டா விளக்கெண்ணையை ஒரே மூச்சில் குடித்தவனைப் போல ஆகி விட்டது.. இப்படி இம்சை செய்கிறாளே என்று வெறுத்துப் போய் விட்டான்..

"இவுக தங்கச்சிய ஒத்தையில ஆத்தில குளிக்க விடக்கூடாதுன்னு சோட்டுப் பொண்ணுக மாதிரி நாம துணைக்கு வருவோமாம்.. வழியில பாக்கிற நம்ம அயித்தான் தங்கச்சியோட பாதம் மட்டும் நோகக்கூடாதுன்னு புல்லட்டில கூப்பிட்டுக்கிட்டுப் போயிருவாராம்.. எப்புடியிருக்கு கத..? நம்மளப் பாத்தா அயித்தானுக்கு கேணச்சிகளப் போலத் தெரியுதாக்கும்..?"

"உன்னப் பாத்தா அயித்தானுக்கு அப்புடியெல்லாம் தெரியுமோ என்னவோ.. என்னப் பாத்தா தேவதயப் போலத் தெரியும் புள்ள.."

"அப்புடிங்களா அயித்தான்..? பூங்காவனத்தோட அழகில அயித்தான் சொக்கிப் போனிகளாக்கும்.. அப்புடி எங்ககிட்ட இல்லாத எது இவகிட்ட இருக்கு அயித்தான்..? ஒட்டு முடியா..?"

அப்பாவிபோல இமை கொட்டி மல்லிகா சந்தேகம் கேட்டதில் பார்த்திபன் சிரித்து விட்டான்.. பூங்காவனத்தின் முகம் சிறுத்து விட்டது.. அவள் ஆத்திரத்துடன் மல்லிகாவிடம் சண்டைக்குப் போனாள்..

"இப்ப எதுக்குடி என் முடியப் பத்திப் பேசறவ..?"

"அயித்தான் ஒன் சடையழகில சொக்கிப் போனாரோன்னு என் மனசில ஒரு சம்சயம் பூங்கா.. அதத்தான் கேட்டேன்.."

"அடியேய்.. ஒனக்கு மல்லிகான்னு பேரு வைச்சிருக்கக் கூடாதுடி.."

"வேற என்ன பேரடி வைச்சிருக்கனும்..? ரோஸ் நிறத்தில நான் இருக்கறதினால ரோசான்னு பேரு வைச்சிருக்கனுமோ..?"

பார்த்திபனை ஓரக்கண் பார்வை பார்த்தபடி மல்லிகா 'ஜொள்ளியதில்..' வெறியேறிப் போன பூங்காவனம்..

"இது வேற ஒனக்கு நெனப்பா..? ஒன் குணத்துக்கு சூர்ப்பநகன்னுல்ல பேரு வைச்சிருக்கனும்..?" என்று வெகுண்டாள்..

"ஆருடி சூர்ப்பநக..?"

"நீதான்.. லங்கிணி.. இதில இவ ரோஸ்நிறத்தில இருக்காளாம்.. ரோசான்னு பேரு வைக்கனுமாம்.. ஒன் நெறத்தப் பாத்துப் பேரு வைக்கிறதா இருந்தா கருப்பின்னு வைச்சிருக்கனும் புள்ள.."

"இவ பெரிய சிகப்பி.."

"பின்னே..? இல்லயா..?"

"இல்லடி.. போடி ஒட்டுமுடி.."

"நீ போடி சூர்ப்பநக.."

"வாயாடி.."

"ஆமாமாம்.. இவ பேசாமடந்ததான்.. அப்ப வாயத் திறந்தவ.. மூடாம பேசித் தள்ளிக்கிட்டு இருக்கா.. இதில என்ன நொட்டன சொல்ல வந்துட்டா.."

தோழிகளிடையே சண்டை களை கட்ட ஆரம்பித்தது..

"நீ போண்ணே.. நான் எப்பவும் போல இதுகளோட சேந்து வர்றேன்.." பூர்ணிமா பார்த்திபனைக் கிளப்பி விட்டாள்..

அவனுக்கும் வேறு வழியிருக்கவில்லை.. பூர்ணிமாவை மட்டும் அவன் புல்லட்டில் ஏறச் சொல்வது முறையாய் இருக்காது.. மல்லிகாவும், பூங்காவனமும் சண்டைக்கு வருவார்கள்.. அவர்களிடம் மாட்டிக் கொண்டால் தப்பிப்பது மிகவும் கடினம்..

பெண்கள் முற்றுகையிட்டால் எப்பேற்பட்ட வீராதி வீரனும் தப்பித்து ஓடத்தான் முனைவான்.. பார்த்திபனும் அதையேதான் செய்தான்.. கவனமாக தங்கையை மட்டும் பார்த்தபடி..

"வெரசா வீட்டுக்கு வந்து சேரும்மா.. பராக்குப் பாத்துக்கிட்டு நிக்காத.. ஊரு முன்ன மாதிரியில்ல.. கண்ட காவாலிப் பயலுகளும் சொந்த, பந்தம்ங்கிற பேரில ஊருக்குள்ள ரோந்து சுத்திக்கிட்டு இருக்கானுக.." என்று ஜாடையாக அரவிந்தன் காரில் இருப்பதை அறிவுறுத்தி விட்டுப் புல்லட்டில் பறந்து விட்டான்..

"அயித்தான் போயிட்டாக.."

'வட போச்சே..' என்ற ரீதியில் சண்டையை மறந்து தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினாள் பூங்காவனம்..

"ம்ஹீம்.. இப்பத்தான் வண்டியக் கௌப்பினாக.. அதுக்குள்ள பறந்து போயிட்டாக.."

'அவன் பறந்து போனானே.. என்னை மறந்து போனானே..' என்ற ஏக்கப் பார்வையுடன் பெருமூச்சு விட்டாள் மல்லிகா..

"பாத்தியாடி மல்லிகா.. அவுக தங்கச்சின்னா மட்டும் புல்லட்டு நிக்குது.. அதுவே நாமளும் ஏறிக்கலாம்ன்னு நெனைக்கறப்ப புல்லட்டு பறந்து போயிருது.. அயித்தான் மனசிலதான் எம்புட்டு வினயம் பாரு.."

"பாத்துக்கிட்டுத்தாண்டி இருக்கேன்.. அவுகளச் சொல்லக் கிளம்பிட்டயே.. இங்கன ஒன்னும் தெரியாத சின்னக்கன்னி மாதிரி முழிச்சுக்கிட்டு நிக்கிறாளே.. இவள மறந்திட்டயே... வீட்டுக்குள்ள தேமேன்னு கெடந்ததுகள வாங்கடி ஆத்துக்குக் குளிக்கப் போகலாம்ன்னு கூப்பிட்டுக்கிட்டு வந்துட்டு அண்ணன்காரனக் கண்டதும் நம்மள வழியோட விட்டுட்டுப் பகுமானமா புல்லட்டில ஏறப் போனவதானடி இவ.."

"அதச்சொல்லு.. ஒரு வார்த்த, நமக்காக இவ அண்ணன்கிட்டப் பேசியிருப்பாளா..? வாயத் தெறந்தா வைரமா உதுந்து போகும்ன்னு கேக்கறேன்.. அண்ணாச்சி,

அண்ணாச்சி.. இதுக ரெண்டும் நமக்கு அயித்த மக முறையாகனும் அண்ணாச்சி.. நான் புல்லட்டில பின்னாடி உக்காந்துக்கறேன்.. உன்ன ஒட்டிப் பூங்காவனம் உக்காந்துக்கட்டும்.. எனக்கும் அவளுக்கும் நடுவில மல்லிகா உக்காந்துக்கட்டும்.. எங்கள நீயா சுமக்கப் போற.. புல்லட்டுத்தான சுமக்கப் போகுதுன்னு சொல்லுறதுக்கு நாம சொல்லித் தரனுமா..?"

"இப்புடிப் பேச உனக்கு என்ன சொல்லியா தரனும்..? அதென்னடி அயித்தான ஒரசிக்கிட்டு நீ உக்காந்துக்கிறது..? ஒனக்குப் பின்னாடி நான் உக்காந்துக்கிறது..? நான் அவுகள ஒட்டிக்கிட்டு உக்கார, நடுவில நீ உக்காந்தா ஆகாதோ..?"

"ஒரு பேச்சுக்கு சொன்னேன்டி மல்லிகா.. இப்ப என்ன உன்னயும் என்னயும் அயித்தான் புல்லட்டில உக்காரச் சொல்லிட்டாரா என்ன..?"

"அதுக்குன்னு உன் ஆசையச் சொல்லிருவியா..? பல்லப் பேத்திருவேன்.. பேச்சுக்குக் கூட அப்புடிச் சொல்லாத.. சொல்லிப்புட்டேன்.."

"ஆமாண்டி.. அவரு உனக்குத் தாலி கட்டின புருசன் பாரு.. நான் ஒரசிக்கிட்டு உக்காரனும்னு ஆசைப்பட்டுட்டேன்னு ஆட்டம் போடற.. அடங்குடி.. ஆத்தில போற தண்ணிய நீ அள்ளிக் குடிச்சா என்ன.. நான் அள்ளிக் குடிச்சா என்ன.."

அந்தப் பெண்களின் கலந்துரையாடலை காரில் சாய்ந்து நின்றபடி அரவிந்தன் ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தில் சங்கடப்பட்டுப் போனாள் பூர்ணிமா.. இப்போதுதான் ஊரே ஒன்று கூடி அவனது காரை வழி மறித்துச் சண்டையிட்டுச் சென்றிருக்கிறது.. அதைப் பற்றிய கவலையேதுமின்றி இவனால் எப்படி இயல்பாக இருக்க முடிகின்றது..

"அடங்குங்கடி.." தோழிகளை அதட்டினாள் பூர்ணிமா..

"எங்கண்ணன் ஒன்னும் ஆத்தில ஓடற தண்ணியில்ல.. ஆரு வேணும்னாலும் அள்ளிக்குடிக்க.. கிணத்துத் தண்ணி.. பட்டாப் போட்டவ மட்டும்தான் சொந்தம் கொண்டாட முடியும்.."

"அந்தப் பட்டாவ நான் போட மாட்டேனா..?"

"இந்தப் பூங்காவனம் மட்டும் குறஞ்சவளா..? நான் பட்டா போட்டா அயித்தான் வேணாம்ன்னு சொல்லிருவாரா..?"

"அடிங்.. வீட்டுக்கு வாங்கடி.. உங்களுக்குத் திருவிழா கொண்டாடறேன்.. ஆட்டமா போடறிங்க..?"

தோழிகளை விரட்டியபடி வீட்டைப் பார்த்து நடக்க ஆரம்பித்த பூர்ணிமா உள்மனதின் குறுகுறுப்பில் திரும்பிப் பார்த்துத் தொலைத்து விட்டாள்.. அங்கே அவளையே பார்த்தபடி நின்றிருந்த அரவிந்தன் கையசைத்து விடை கொடுத்தான்..

'ஆத்தி..'

அரண்டு போன பூர்ணிமா விதிர்த்துப் போய் திரும்பிவிட்டாள்.. அன்று நடுங்கிய நடுக்கத்தை இன்று மறுபடியும் அவளை உணரச் செய்து விட்டானே.. எவ்வளவு தைரியமிருந்தால் வழியில் போகிறவளிடம் வம்பு வளர்ப்பான்..?

அத்தியாயம்- 14

சந்தன மாரியம்மனுக்குத் திருவிழா..! கோவில் வாசலில் மக்கள் கூட்டம் திரண்டிருக்க.. ஊரே விழாக் கோலம் பூண்டிருந்தது.. வயலூரின் கதாநாயகனும், ஆணழகனுமான பார்த்திபன் அக்கினிச் சட்டி ஏந்தி வருவதைப் பார்க்க, நான், நீயென்று கன்னியர் கூட்டம் முண்டியடித்து வரிசை கட்டிக் காத்திருந்தது..

"அம்பிகையே..! ஈஸ்வரியே..! - எமை
ஆள வந்து கோவில் கொண்ட குங்குமக்காரி..!

ஓங்காரியே..! வேப்பிலைக்காரி..! - ஒரு
உடுக்கையிலே பகை விரட்டும் முத்துமாரி..!"

காத்திருந்த கன்னியர் கூட்டத்தின் கடைக்கண் பார்வையை சிறிதளவும் கண்டு கொள்ளாமல் ஊரைக் காக்கும் காவல் தெய்வமாக உடுக்கையைக் கையில் வைத்திருக்கும் சந்தன முத்துமாரியம்மனின் சாந்தம் தவளும் தோற்றத்தை மட்டும் மனதில் வைத்துப் பக்தி பரவசத்துடன் பாடி வந்தான் பார்த்திபன்.. அவனோடு சேர்ந்து அக்கினிச்சட்டி ஏந்தி வந்தவர்கள் அருள் வந்து ஆடினார்கள்..

"வேலையிலே மனசு வைச்சோம் முத்துமாரி-இப்போ
வெற்றிக் கொடி நாட்டுகிறோம் முத்துமாரி
ஆலமரம் போலிருக்கும் எங்கள் கூட்டம் - எம்மை
ஆதரிச்சு வாழ்த்துதடி முத்துமாரி.."

பூர்ணிமாவுக்குப் பெருமையாக இருந்தது.. பார்த்திபனின் பின்னால் திரண்டிருந்த கூட்டம் வயலூர் மக்கள் அவனை எந்த அளவுக்கு நேசிக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லியதில் அவளது நெஞ்சம் பெருமிதத்தில் நிறைந்தது..

"ஏழைகளை ஏய்த்ததில்லை முத்துமாரி - நாங்க
ஏமாத்திப் பொழைச்சதில்லை முத்துமாரி..
வாழ விட்டு வாழுகிறோம் முத்துமாரி - இனி
வருங்காலம் எங்களுக்கே முத்துமாரி.."

கண்களில் நீர் துளிக்கத் தமையனின் பாடலைக் கேட்டுக் கன்னத்தில் போட்டுக் கொண்டவள் தற்செயலாகத்தான் எதிர் வரிசையைப் பார்த்தாள்.. பார்த்தவள் திடுக்கிட்டாள்.. அங்கே அவளையே பார்த்தபடி அரவிந்தன் நின்றிருந்தான்.. பூர்ணிமாவின் வயிற்றுக்குள் பயப்பந்து

உருண்டது.. பிரளயம் வெடித்தது.. ஆற்றுக்குக் குளிக்கப் போய் விட்டுத் திரும்பியவள் சாலையில் விழுந்தபோது யாரேனும் பார்த்து விட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல் அவள் எழுந்து கொள்ளக் கை நீட்டியவன், 'உன்னைக் கையைப் பிடித்து இழுத்தேனா..?' என்று ஆரம்பித்து என்னென்னவோ கேட்டானே.. அவள் தூக்கமிழந்து தவித்தாளே.. அவற்றையெல்லாம் மறந்து விட முடியுமா என்ன..?

"சிவகாமி உமையவளே..! முத்துமாரி..! - உன்
செல்வனுக்கும் காலமுண்டு முத்துமாரி..!
மகராஜன் வாழ்கவென்று வாழ்த்துக்கூறி - இந்த
மக்களெல்லாம் போற்ற வேண்டும் கோட்டைஏறி.."

பார்த்திபன் பாடலைப் பாடியபடி கோவிலுக்குள் சென்று அக்கினிச் சட்டியைச் செழுத்தினான்.. பூர்ணிமா அப்போதைக்கு அரவிந்தனை மறந்தவளாக பூமாவுடன் மஞ்சள் தண்ணீர் குடத்தை ஏந்தி பார்த்திபனின் தலைமீது ஊற்றி விட்டாள்.. அம்மனுக்கு அபிஷேக ஆராதனை முடிந்ததும் குடும்பத்துடன் கோவிலை விட்டு வெளியில் வந்த பூர்ணிமாவின் பார்வை அரவிந்தன் அங்கே இருக்கிறானா இல்லை போய் விட்டானா என்று தேடியது..

கோவிலின் முன்னாலிருந்த கூட்டத்தில் அவன் தென்படவில்லை.. 'அப்பாடி..' பூர்ணிமாவின் சுவாசம் சீரானது..

மனதில் பொங்கிய விடுதலையுணர்வு உற்சாகத்தைத் தர பூமாவிடம் எதையோ சொல்லிச் சிரித்தவாறு திரும்பியவள் உறைந்து போனாள்.. அங்கே மரத்தின் மறைவில் சாய்ந்து நின்றபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் அரவிந்தன்..

'இவன் ஏன் என்னையே சுத்திச் சுத்தி வர்றான்..' பூர்ணிமா கலவரமானாள்..

"சுத்திச் சுத்தி வந்தீக..
சொக்குப் பொடியப் போட்டிக..
ஹைய்யோ.. என் நாணம்
அத்துப் போக.."

ஒலிபெருக்கியில் ஒலித்த பாடல் அவளது கலவரத்தை அதிகப்படுத்தியது.. ஒரே ஓட்டமாய் வீட்டுக்கு ஓடிவிட வேண்டும் போலத் தோன்றியதில் அவள்து கால்கள் பின்னின..

எதற்காக அவன் பூர்ணிமாவையே சுற்றிச் சுற்றி வருகிறான்..?

பூர்ணிமா பூமாவின் முதுகிற்குப் பின்னால் மறைந்து நடந்தாள்.. அரவிந்தன் அவளை நோட்டமிடுவதை எவரேனும் கவனித்து விட்டால் என்ன ஆவது என்று மனது பதைத்தது..

'முதலாவதா இவனுக்கு டின் கட்டி விடுவாக.. ரெண்டாவதா என்ன வீட்டுக்குள்ள போட்டு பூட்டி வைச்சுட்டு தடாலடியா மாப்பிள்ளையப் பாத்துக் கல்யாணம் கட்டி வைச்சு அவன் பின்னால என்ன ஓட்டி விட்டுருவாக..'

அவளது சுதந்திரத்தைப் பறிப்பதற்காகத்தான் அவன் வேலை மெனக்கெட்டு வயலூருக்கு வந்து டேரா போட்டிருக்கிறானா..?

பலத்த ஹாரன் ஒலியுடன் கார் ஒன்று வந்து நின்றது.. ஊர் மக்களில் ஒருவர்கூட அதைத் திரும்பிப் பார்க்கவில்லை.. அவர்களுக்குத் தெரியும்.. வயலூரில் கார் வைத்திருப்பது மேனகா மட்டும்தான்.. இப்போது கூடுதலாக அவளது ஒன்று விட்ட அண்ணனின் மகன் சென்னையிலிருந்து காரில் வந்து இறங்கியிருக்கிறான்.. அரவிந்தனின் தந்தையான ராமகிருஷ்ணனை தனது பெரியம்மாவின் மகன் என்று சொல்லாமல் ஒட்டிப் பிறந்த உடன் பிறப்பைப் போல மேனகா பீற்றிக் கொண்டிருப்பாள் என்பது வேறு விசயம்.. அவளைப் பொறுத்தவரை அரவிந்தன் அவளது அண்ணன் மகன்.. ஒன்றுவிட்ட, இரண்டு விட்ட என்று 'விட்ட'

சொந்தங்களை எல்லாம் அவள் சொல்லத் தயாராக இல்லை..

ஆரவாரமாக காரிலிருந்து இறங்கிய மேனகாவின் குடும்பத்தாரைத் திரும்பிப் பார்ப்பாரில்லை.. அவளது அண்ணன் மகன் என்று சொல்லிக் கொண்டிருக்கும் அரவிந்தனோ அவர்களைக் கவனிக்காமல் பூர்ணிமாவை நோட்டமிட்டுக் கொண்டிருந்தான்.. மேனகாவின் மகள் ஊர்மிளா விலையுயர்ந்த சுரிதாரில் மினுக்கினாள்..

'அங்க திரும்பி உன் அத்தை மகளைப் பாருடா..' பூர்ணிமா சைகை செய்தாள்..

அரவிந்தன் தேன் குடித்த சிங்கமானான்.. என்னவோ அவனைப் பார்த்து அவள் ஜாடை செய்து விட்டதைப் போல கண்களில் ஓர் மின்னல்.. என்னடா இது என்று பயந்து போனாள் பூர்ணிமா.. அவள் ஒன்றை நினைத்தால் அவன் ஒன்றை நினைக்கிறானே..

'சீக்கிரமா இங்கேயிருந்து ஓடிப் போகனும்..'

நினைத்தவை எல்லாம் நடந்து விட்டால் தெய்வத்தின் அனுக்கிரகம் நமக்கு இருப்பதாக அல்லவா ஆகிவிடும்..? அப்பேற்பட்ட கருணாமூர்த்தியா நம் கடவுள்..? நாம் எதை நினைக்கிறோமோ அதை நடக்க விடாமல் செய்தால்தானே கடவுளுக்கு சக்தி இருப்பதாக நாம் நம்புவோம்..?

கடவுளும் அரசியல்வாதிகளைப் போலதான்.. காப்பதற்கு அவரது சக்தியை பிரயோகிப்பதில்லை..

"என்னா.. பூமா.. எப்புடியிருக்க..? போன திருவிழாவுக்கு வந்தப்பப் பாத்தது.. ம்ஹீம்.. அடிக்கடி வரனும்னு ஆசதான்.. முடியுதா..? கட்டிக் கொடுத்துட்டா பொறந்த வீட்டு நினப்ப மனசில இருந்து தூக்கி எறிஞ்சுடனும்ங்கிறதுதான பொம்பளைக நாம வாங்கி வந்த வரம்.." என்றபடி உறவுக்காரப் பெண்மணி ஒருத்தி பூமாவைப் பேச்சில் பிடித்துக் கொண்டாள்..

வயலூரில் பிறந்த அவள் மேலூரில் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள்.. திருமணமான புதிதில் தலைதீபாவளி, தலைப்பொங்கல், தலை ஆடி என்று பிறந்த வீட்டுக்கு வந்து போனவள் அடுத்து தலைப்பிரசவத்துக்கு வந்து சேர்ந்தாள்.. குழந்தையும், கையுமாக மேலூருக்கு பஸ் ஏறியவள்தான்.. அடுத்து வருடாவருடம் வரும் மாரியம்மன் திருவிழாவிற்கு மட்டும் வயலூருக்கு வந்து போவாள்..

"அடுத்தடுத்து ரெண்டு புள்ளைக பொறந்தாச்சு.. அப்புறம் என்ன..? செக்கில கட்டின மாட்டோட கதிதான்.. வீட்டச் சுத்திச்சுத்தி வந்து புருசன், புள்ளைக, மாமனாரு, மாமியாரு, நாத்தனாருகன்னு சவரட்சண பண்ணியே தேஞ்சு போயாச்சு.. இதுல பொறந்த வீட்டு நினப்ப எங்கிட்டு நினக்க..?" அலுத்துக் கொண்டவளின் அலுப்பு சொல்லில் வடிக்க இயலாததாக இருந்தது..

அவளும் பூமாவும் பள்ளியில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஒன்றாகப் படித்த தோழிகளாம்.. நகரும் நினைவின்றி பூமா கதை பேச நின்றுவிட.. பூர்ணிமாவுக்குச் சோதனையாக இருந்தது.. அவள் மட்டும் வீட்டைப் பார்த்து ஓடி விடலாம் என்றால் அந்தப் பெண்மணி பிரியமாக பூர்ணிமாவின் முகத்தை வருடி..

"உன் பொண்ணோட அழகு கூடிக்கிட்டே இருக்கு பூமா.. வீட்டுக்குப் போனதும் சுத்திப் போடு.. கண்ணு படப் போகுது.." என்று சொல்லிக் கொண்டிருந்தாள்..

இப்படிப் பரிவு காட்டுபவளின் கையைத் தட்டி விட்டு வீட்டைப் பார்த்து ஓடமுடியுமா..? அப்படி ஓடினால் மாதவனும் பூமாவும் சும்மா விட்டு விடுவார்களா..?

"என்ன பழக்கம்டி இது..? நம்ம சொந்தக்காரி.. என்கூடப் படிச்சவ வேற.. வருசத்துக்கொரு தடவ ஊருப் பக்கம் எட்டிப் பாத்துட்டுப் போறவ.. ஆசயாப் பேசினா இப்புடியா கையத்தட்டி விட்டுப் போவ..? ஆருகிட்ட இந்தப் பழக்கத்தப் பழகிட்ட வந்திருக்க..? பூமா பொம்பளப் புள்ளய வளத்து வைச்சிருக்கிற லட்சணத்தப் பாருன்னு வயலூரு சிரிக்கிறதுக்கா சிலுப்பிக்கிட்டுப் போன..?" என்று பூமா பிலுபிலுவெனப் பிடித்து ஆய்ந்து விடுவாள்..

"இது என்னம்மா மரியாதை கெட்டத்தனமா இருக்கு..? பிரசிடெண்டோட மக திமிருத்தனமா இருக்குன்னு ஊராளுக சொல்றாப்புல நடந்துக்கறியே.. நல்லாயில்லம்மா.." என்று மாதவன் பட்டென்று ஓர் வார்த்தை பேசி விட்டால் பூர்ணிமாவால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியாது..

'என்னத்தன்னு சொல்லுவேன்.. யாரு கண்ணு படுதோ இல்லயோ.. இவன் கண்ணு என்மேல பட்டுக்கிட்டு இருக்கே..'

எப்படி அதிலிருந்து தப்பிப்பது என்று புரியாமல் விழித்தாள் பூர்ணிமா.. நொடிக்கொருமுறை அவனைப் பார்ப்பதும்.. அதற்காகவே காத்திருந்த அவனது கண்கள் ஜொலிக்க அரள்வதும்.. அவளது பார்வையைக் கவ்வும் அவனது பார்வையிலிருந்து தப்பிக்கும் மார்க்கம் தெரியாமல் தவிப்பதுமாக ஒரு நூதனப் போராட்டத்தைப் போராடிக் கொண்டிருந்தாள் பூர்ணிமா..

நிற்கவும் முடியாமல் நகரவும் முடியாமல் மணித்துளிகள் யுகங்கள் போலக் கனத்து அவள்மீது சரிவதைப் போன்ற மாயையில் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தவளுக்கு ஒரு யுக்தி தோன்றியது..

மேனகாவின் அருகிலிருந்து ஊர்மிளாவின் கண்கள் யாரையோ தேடிக் கொண்டிருப்பதைக் கண்டு கொண்டாள்.

'யாரத் தேடுவா..? எல்லாம் இவளோட மா..மன்.. மகனத்தான் தேடுவா..'

பூமாவிடம் பேசிக் கொண்டிருந்த பெண்மணியிடம் முறுவலித்தவள்..

"இந்தா வந்துட்டேன் அத்த.." என்றபடி விரைந்து ஊர்மிளாவின் பக்கத்திலிருந்த கோமதியிடம்..

"என்னாடி கோமதி.. ஒன் மொளப்பாரி நல்லா வளரத்தான் செய்யும்.. அந்தா தெரியுதில்ல புளியமரம்.. அதுக்கு அந்தப் பக்கமா நிக்கிற மெட்ராஸ்காரன் மனசுக்கு தொட்டதெல்லாம் பட்டுத்தான் போகும்.. நாசமாப் போறவன்.. அவனும், அவன் மூஞ்சியும்.." பூர்ணிமா கை விரல்களை நெட்டி முறித்தாள்..

அவள் நினைத்ததைப் போல்தான் நடந்தது.. முகம் மாறிய ஊர்மிளா வேகமாக மரத்துக்குப் பக்கம் போனாள்..

'அப்பாடி.. இனி அத்தமக ரத்தினம் இவனக் காவல் காத்துக்குவா..'

"அத்தான்.. நீங்க இங்கேயா இருக்கறிங்க..? உங்களை எங்கேயெல்லாம் தேடறது..?" சிணுங்கியபடி ஊர்மிளா அரவிந்தனின் கையைப் பிடித்து இழுக்க முற்பட, நாசுக்காய் விலகியபடி மரத்தின் மறைவிலிருந்து வெளிப்பட்டான் அரவிந்தன்..

'போட்டா கொடுக்கிற..? காட்டிக் கொடுத்துட்ட இல்ல..'

நடப்பதை ஜாடையாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பூர்ணிமாவிடம் அவனது விழிகள் கேட்டன.. நமுட்டுச் சிரிப்புடன் அவனையும் ஊர்மிளாவையும் வேடிக்கை பார்த்தாள் அவள்..

'வேற என்னத்தடா செய்யச் சொல்ற..? என்னமோ கட்டிக்கப் போற முற மாமனப் போல அப்புடிப் பாக்கிற.. நீ பாக்கிற பார்வையில என் உடம்பெல்லாம் கூசிப்போகுதுடா.. உன்னக் கண்ட நாள் முதலா இந்தக் கததான்.. வழியில கால் தடுக்கி விழுந்தா கை கொடுத்துத் தூக்கக் கட்டிக்கிட்டவனப் போல வந்து நிக்கிற.. ஒன் ரோதன தாங்கலடா.. உனக்கு இவதான் லாயக்கு.. சாயம் பூசின உதட்டக் குவிச்சு அயித்தான், அயித்தான்னு பேசத் தெரியாத பச்சப் புள்ளயாட்டம் பசப்புவா.. அனுபவி.. ராஜா.. அனுபவி..' பூர்ணிமாவின் முகம் கடுத்தது.. அதில் அரவிந்தனின் முகம் மாறியது..

ஊர்மிளா அரவிந்தனின் தோளில் தொற்றிக் கொள்ள முனைந்தாள்.. அலுப்புடன நகர்ந்து நின்றான் அரவிந்தன்.. இப்படி மாட்டி விட்டு விட்டாயே என்ற கோபப் பார்வையுடன் பூர்ணிமாவை முறைத்தான்.. அவள் அலட்சியமாக உதட்டைச் சுழித்தபடி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

'இவ வீட்டிலதான இருக்கிற..? அத்த, அத்தன்னு இவளோட அம்மாவுக்கு பாடிகார்டா நிக்கறயில்ல..? உங்கப்பன் கூட ஒட்டிப் பொறந்த அத்தயாட்டம் பாசத்தயில்ல பிழியறீக.. அத்த மட்டும் இனிக்குது.. அத்த மக மட்டும் கசக்குதா..? உனக்கு இவதான் தோது மாமு.. இப்புடியே இவ கையப் புடிச்சுக்கிட்டு மெட்ராஸப் பாத்து ஓடிப் போயிருடி மாப்பிள்ள.. உன்னால என் ஆவி குறயுது..'

"ஏன் புள்ள பூர்ணிமா.. பேச வந்துட்டு என்னத்தயோ நினச்சுக்கிட்டு நிக்கிறவ..? எந்தக் கோட்டயப் புடிக்கத் திட்டம் போடறடி ஆத்தா..?" கோமதி குசும்பாக வினவினாள்..

"ஆமா புள்ள.. நான் கோட்டயப் புடிச்சுக் கொடிய ஏத்திட்டாலும்.. போவியா.." பூர்ணிமா புன்னகையுடன் தாயிடம் திரும்பினாள்..

அதுதான் ஊர்மிளாவிடம் அரவிந்தன் இருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுக்கும் வேலையைச் செவ்வனே செய்தாகி விட்டதே..

அத்தியாயம்- 15

"நான் போட்டு வைத்த காதல் திட்டம்

ஓகே.. கள்ளனே..!

ஏ கள்ளனே..! ஐ லவ் யுன்னு

சொன்னா உன் அத்த மகளே.."

வாய்விட்டுப் பாடியபடி இருட்டுச் சந்தில் திரும்பினாள் பூர்ணிமா.. அவள் வீட்டுக்குச் செல்லும் குறுக்குச் சந்து அது.. தெரு வழியாகப் போனால் சுற்றிப் போக வேண்டும்.. நேரமாகி விடும்..

உறவுக்காரியிடம் வாய் வளர்த்துக் கொண்டிருந்த பூமா வீட்டுக்குக் கிளம்புவதைப் போலத் தெரியவில்லை.. அக்கினிச் சட்டியை ஏந்தி வந்து கோவிலில் செழுத்தி

விட்டுத் திரும்பிய பார்த்திபன் அயர்வாக இருக்கிறதென்று கூறி வீட்டுக்கு ஓய்வெடுக்கப் போய் விட்டான்.. மாதவனுக்கு கோவிலில் வேலை வந்துவிட்டது..

"பிரசிடெண்டு ஐயா.." என்றபடி கோவில் திருவிழா சம்பந்தமாக அவரிடம் ஆலோசனை கேட்க அழைத்து விட்டதால் அவர் பூமாவையும் மகளையும் வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டுக் கோவிலுக்குள் சென்று விட்டார்..

"வாம்மா.. வீட்டுக்குப் போகலாம்.." கால் மாற்றி, மாற்றி நின்று வலித்ததில் பூர்ணிமா அனத்திக் கொண்டிருக்க..

"அடியாத்தி.. இந்தப் பிடுங்கு பிடுங்கறியேடி.. ஒன்னு செய்யி.. உங்கண்ணன் வீட்டுக்குத்தான் போயிருக்கான்.. நீ முன்னாடி போயி அவனுக்குக் காபித் தண்ணிய வைச்சுக் குடு.." என்று பூமா சொல்லி விட்டாள்.

"நீ..?"

"மெல்ல வர்றேண்டி.."

"விடியறதுக்குள்ள வந்துருவயில்ல.."

"ஏன் புள்ள.. வருசத்துக்கொருவாட்டி என் கூடப் படிச்சவளப் பாக்கறேன்.. அவகூட நின்னு பேசினா உனக்குப் பொறுக்கலியா..? நீ மட்டும் ஆத்துல குளிக்கப் போறேன்னு உன் ஜோட்டுப் பொண்ணுகளோட ஜோடி போட்டுக்கிட்டு நாளுப் பூராவும் ஆத்துத் தண்ணியக் கலக்கிட்டு வர்றியே.. நான் ஏன்னு கேட்டேனா..?"

"அதுக்கு..?"

"இப்ப நீயும் ஏன்னு கேக்காம வீட்டப் பாத்து நட.."

"விடியறதுக்குள்ள மொளப்பாரி எடுக்கனும்மா.. அப்புறம் மாவிளக்கும் எடுக்கனும்.. நெனப்பிருக்குல்ல.."

"ரெண்டையுமே நீதாண்டி எடுக்கனும்.. என்னச் சொல்றவ... இந்த வயசில நான் மொளப்பாரியத் தூக்கிக்கிட்டு வந்தா நல்லாத்தான் இருக்கும்.."

"இத அப்பாகிட்டச் சொல்லிப்பாரு.. நீ நடந்தாத்தான் நல்லா இருக்கும்ன்னு ஜொள்ளுவாரு.."

"போடி பேசாம.. இவ இருக்காளே.."

பூமா வெட்கம் கலந்த பெருமையுடன் மகளின் முதுகில் செல்லமாக ஒரு அடி வைத்து வீட்டைப் பார்த்துத் துரத்தி விட்டாள்..

"ஒன் மக சொல்றதும் நெசம்தான் பூமா... அண்ணனுக்கு ஒன்மேல இருக்க காதல் கூடிக்கிட்டேதான் போகுது.. குறயற மாதிரி தெரியலயே.."

பூமாவின் உறவுக்காரி சொல்ல அங்கே அடுத்த கட்ட உரையாடல் ஆரம்பமானது.. பூர்ணிமா விட்டால் போதுமென்று வீட்டைப் பார்த்து நடந்தாள்.. தெருக்கள் அமைதியாக இருந்தன.. ஊர் முழுவதும் கோவிலில் குழுமியிருக்க.. வீடுகளில் வெகு சிலரே இருந்தனர்..

'அண்ணன் அலுப்பாப் படுத்திருக்கும்.. காபித் தண்ணியப் போட்டுக் கொடுத்தா அதுக்குத் தெம்பா இருக்கும்..'

பூர்ணிமா நடையில் விரைவு கூட்டினாள்.. அவளது வீட்டிற்குச் செல்லும் குறுக்குச் சந்தில் இருள் படர்ந்திருந்ததை அவள் பொருட்படுத்தவில்லை.. அது அவளது ஊர்.. இரவாக இருந்தாலும் பகலாக இருந்தாலும் பெரிதான வித்தியாசம் ஏதுமில்லை.. இருள் நிரம்பிய இரவுப் பொழுதுகளில் அவள் அச்சமின்றி அந்தச் சந்தில் நடந்திருக்கிறாள்..

'வெரசா வீடு போய் சேரனும்..'

பாதிச் சந்தை கடந்தவளை இழுத்து அணைத்தது வலிமையான ஆண்கரம்.. திகிலுடன் வாய் விட்டுக் கத்தப் போனவளின் வாயைத் தன் வாய் கொண்டு மூடி அழுத்தமான முத்தமொன்றைப் பதித்த ஆண் உருவம் அரவிந்தன்தான் என்பதை நொடிப் பொழுதில் அவள் புரிந்து கொண்டாள்..

அவன் வேகத்துடன் அவளை இழுத்து அணைத்து இதழ்களில் இதழ் பதித்து முத்தமிட்டு விட்டதில் திக்பிரமை பிடித்து நின்று விட்டவளின் காதோரமாக முணுமுணுத்தான் அவன்..

"உன்னைப் பார்க்க ஆசைப்பட்டு வந்தவனை ஊர்மிளாவிடம் மாட்டி விடறேயேடி.. உனக்கு மனச்சாட்சியே இல்லையா..?"

தன்னுணர்வுக்கு மீண்ட பூர்ணிமாவின் உடல் நடுக்கத்தில் ஆடியது.. புயல் வேகத்தில் அவனை அடிக்க அவளது கை காற்றைக் கிழித்துக் கொண்டு பாய அநாசியமாக அதைத் தடுத்து அவளது கையை இறுகப் பற்றி விரித்து உள்ளங்கையிலும் முத்தம் பதித்து உல்லாசச் சிரிப்பைச் சிரித்தான் அரவிந்தன்..

"ச்சீ.." அருவெறுப்புடன் கையை இழுத்துக் கொண்டு முகம் சுளித்தாள் பூர்ணிமா..

"ஏன்..?" அவன் உறுமினான்..

"நீ செஞ்சு வைச்சிருக்கக் காரியத்துக்கு ஊரக் கூட்டி உன்ன பஞ்சாயத்தில நிப்பாட்டனும்.. ஏன்னா கேக்கிற..?"

"அதைச் செய் முதலில்.. பஞ்சாயத்தைக் கூட்டு.. இப்ப, இங்கே என்ன நடந்ததுன்னு சொல்லு.. அதுக்கப்புறம் அவங்க என்ன பனிஷ்மெண்ட் கொடுத்தாலும் எனக்கு அதைப்பத்திக் கவலையில்லைடி.. ஐ டோண்ட் கேர்.."

"வாடி, போடின்னா பல்லுப் பதினாறும் உதிர்ந்துரும்."

"அப்படித்தாண்டி கூப்பிடுவேன்.. முடிந்தா என் பல்லை அட்டாக் பண்ணு.. கமான்.. டூ இட்.."

"இருக்குடா உனக்கு.. என் அண்ணன்கிட்டச் சொன்னா உன் எழும்பை எண்ணிட்டுத்தான் மறுவேல பாக்கும்.."

பூர்ணிமா ஓடப் போனாள்.. அரவிந்தனின் கை வழி மறித்து அவளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.. கத்தப் போன வாயை அவனது கை மூட பூர்ணிமாவை திகில் பிடித்துக் கொண்டது.. எட்ட நின்று அவளை நோட்டமிட்டவன் கிட்ட வந்து அவளது கை தொடுவான்.. கட்டி அணைப்பான்.. முத்தம் கொடுப்பான் என்றெல்லாம் அவள் நினைத்துக்கூடப் பார்க்க வில்லையே..

சந்தடியில்லாத தெரு.. வீடுகளில் இருந்த மக்கள் ஊர்த்திருவிழாவைக் கொண்டாட கோவில் வாசலுக்குப் போயிருந்தார்கள்.. அங்கே ஒயிலாட்டம் நடந்து கொண்டிருந்தது.. அதைத் தொடர்ந்து கரகாட்டம் விடிய விடிய நடைபெறுவதாக இருந்தது.. கோவில் வாசலில் ரங்கராட்டினம், சுற்றி வரும் குதிரை பொம்மை வண்டி

என்று திருவிழாக் காலங்களில் மட்டும் களிக்கும் கேளிக்கை சாதனங்கள் நிறுவப் பட்டிருந்தன.. கோவில் வாசலின் இருபக்கமும் வரிசை கட்டி முளைத்திருந்த கடைகளில் மக்கள் வெள்ளம் அலை மோதிக் கொண்டிருந்தது.. பெண்களுக்கான வளையல், தலைப் பின்னலுக்கான ரப்பர் பேண்ட், பொட்டு மற்றும் அலங்கார சாதனங்கள் குவிந்திருந்த கடைகளில் போட்டி போட்டுக் கொண்டு பொருள்களைப் பெண்கள் வாங்க... அதற்கான பணத்தை அப்பா, அண்ணன், கணவன் என்ற வேறுபட்ட உறவுகளில் இருந்த ஆண்கள் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.. சிறுவர்களுக்கான பொம்மைகள், விளையாட்டுச் சாதனங்கள் விற்கும் கடைகளில் குழந்தைகள் அது வேண்டும், இது வேண்டும் என்று கைநீட்ட அப்பாமார்கள் அவசரமாகச் சட்டைப் பையில் கை விட்டுப் பணம் போதுமா என்று எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்..

இவை போக காபிக் கடை, வடை கடை, இட்லிக்கடை, மிளகாய் பஜ்ஜி கடை, காலிபிளவர் பஜ்ஜி கடை, என்று உணவுப் பொருள்களை விற்கும் கடைகளிலும் கூட்டம் நிரம்பி வழிந்தது..

அமைதியான கிராமங்கள் உயிர்த்தெழுவது இது போன்ற திருவிழாச் சமயங்களில்தான்..

"கற்பூர நாயகியே..! கனகவள்ளி..!

காளி..! மகமாயி..! கருமாரியம்மா..!"

என்று கணீர் குரலில் எல்.ஆர்.ஈஸ்வரி பாடும் அம்மன் பாடல்கள் ஒலிபெருக்கியில் ஒலிக்கும்.. அதைக் கேட்கும் போதே மக்கள் மனதில் உற்சாகம் கரை புரண்டோடும்.. ஒயிலாட்டம் பார்த்து, ரங்கராட்டினம் சுற்றி.. மனைவி, பெண் குழந்தைகளுக்கு வளையல், பொட்டு வாங்கிக் கொடுத்து அவர்கள் வயிறாரச் சாப்பிட இட்லியும், மிளகாய் பஜ்ஜியும் வாங்கி வந்து கோவில் முன்னால் இருக்கும் மைதானத்தின் மணல் வெளியில் ஜமுக்காளத்தை விரித்து உட்கார்ந்து கோவில் கோபுரத்தைப் பார்த்தபடி விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் நனைந்தபடி

சாப்பிடுவதில் உள்ள ஆனந்தத்தை வார்த்தைகளில் சொல்லி விடமுடியுமா..?

நகர மக்கள் பரபரப்பில் வாழ்பவர்கள்.. கிராம மக்களுக்கு அத்தகைய பரபரப்பு திருவிழா நாள்களில்தான் கிடைக்கும்..

இப்படி ஊர் முழுவதும் கோவில் வாசலில் கொண்டாட்டத்தில் மூழ்கியிருக்க.. பூர்ணிமா இருட்டுச் சந்தில் அரவிந்தனிடம் சிக்கியிருந்தாள்..

"ஊருக்குள்ள யாருமில்லை.. பாட்டுச் சத்தத்திலே நீ கத்தினாலும் யார் காதிலயும் விழுகாது.. ஸோ.. டோன்ட் வேஸ்ட் யுவர் எனர்ஜி.." அக்கறையாக ஆலோசனை சொன்னான் அரவிந்தன்..

அவளது வாயை மூடியிருந்த கையை அவள் வேகத்துடன் பிய்த்துத் தள்ள, நகர்ந்த அவனது கை வாகாக அவளது இடுப்பில் படிந்து அவளை இழுத்துக் கொண்டது..

"விடுடா என்ன.." அவள் திமிறினாள்..

அவன் விடவில்லை.. இறுக்கியிருந்த அவனது கை எழும்புகள் நொறுங்கும் அளவிற்கு அழுத்தமாக அவளது இடையில் பதிந்திருந்தது..

"பாவி.." பூர்ணிமா குமறினாள்..

"ஆசை வைப்பது பாவமா..?" அவன் கேட்டான்..

"எங்க அப்பாமேலயும், அண்ணன் மேலயும் பகையிருந்தா அவங்கள நேருக்கு நேரா மோதி ஜெயிச்சுக் காட்டனும்.. அத விட்டுட்டு அவங்களப் பழிவாங்க என்ன வழி மறிக்கற பாரு.. வீரனாடா நீ..? த்தூ.."

"ஏய்ய்.."

அவன் ஒற்றை விரலை உயர்த்தி அவளை எச்சரித்தான்..

"அரவிந்தன் யார்ன்னு உனக்குத் தெரியாது.. பிஸினெஸ்ஸில் கூட நேருக்கு நேரா நின்று மோதி ஜெயித்துக் காட்டுகிறவன்.. உன் அப்பாவும், அண்ணனும் என்ன பெரிய பிஸ்தாக்களா..? சொடக்குப் போடற நேரத்தில் அவங்களை உண்டு இல்லைன்னு பண்ணிக்காட்ட என்னால் முடியும்.."

"ஓ..! நீ அம்புட்டுப் பெரிய சண்டியரா..? ஒன் சண்டியர்த்தனத்த எல்லாம் உன் ஊரில வைச்சுக்க.. இது வயலூர்.. வந்து பாரு வட்டப் பாறைக்குன்னு வேட்டிய மடிச்சுக் கட்டிக்கிட்டு வெட்டருவாளத் தூக்கற ஜனங்க வாழற ஊரு.. ஒன் சண்டியர்தனமெல்லாம் இங்கே செல்லாது.. ஆம்பளைககிட்ட மோத முடியாம இருட்டுச் சந்துக்குள்ள பொம்பளப் புள்ளகிட்ட உன் பலத்தக் காட்டற பாரு.. ஆஹா.. நீதாண்டா பெரிய சண்டியரு.. உன்னப் போல சண்டியர நான் பாத்ததே இல்ல.."

அந்த நிலையிலும் அவனை இகழ்ச்சியாகப் பேசிய பூர்ணிமாவின் மனோ தைரியத்தில் அவனது விழிகளில் மின்னல் வந்தது.. இருளில் அவளால் அதைக் காண முடியவில்லை..

"இந்த ஆட்டிடுயுட் ஊர்மிளாவிடம் இல்லைடி.. ஏன்.. நான் இதுவரை பார்த்த எந்தப் பெண்ணும் உன் போல இல்லை.. உன்னை வழி மறிக்க உன் அப்பா, அண்ணனிடம் எனக்கு இருக்கும் பகைதான் காரணமா..? இல்லைடி.. உன்மீது எனக்கு இருக்கும் அளவு கடந்த காதல்தான் காரணம்.."

"என்னது..?"

மிருதுவாகப் பேசிய அரவிந்தனின் வசியக் குரலில் திகைத்துப் போனாள் பூர்ணிமா.. அவனது விரல்கள் வளவளப்பான அவளது கன்னங்களைத் தடவியதில் சிலிர்த்துத் தடுமாறி அவனது கைகளைத் தட்டி விட்டாள்.

"ஐ லவ் யு பூர்ணிமா..." வார்த்தைகளுக்கு வலிக்குமோ என்று அவன் மென்மையாகச் சொன்னான்..

"இந்தா பாரு.. காதல், கத்திரிக்கான்னு பினாத்திக் கிட்டு இருந்த.. நடக்கிறதே வேற.." பூர்ணிமா சீறினாள்..

"என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும்.. எனக்கு நீ வேண்டும்.. உனக்காகத்தான் நான் இந்த ஊரில் தங்கியிருக்கிறேன் பூர்ணிமா.. அதைக்கூட நீ புரிந்து கொள்ளவில்லையா..?"

"உன்னப் புரிஞ்சுக்காமலா..? நீ இந்த ஊர அழிக்க வந்த அரக்கன்னு உன்னக் கண்ட நொடியிலயே புரிஞ்சு போச்சே.. என்ன சொன்ன..? பிஸினெஸ்ஸில கூட நீ

நேருக்கு நேரா மோதி ஜெயிக்கிறவனா..? அப்படியாப் பட்டவன் ஏண்டா கள்ளத்தனமா உன்னோட நொத்தயோட நெலத்த வாங்கி எங்க ஊரு ஆத்துத் தண்ணியப் பாழடிக்கத் திட்டம் போட்ட..? பொன்னு விளயற விவசாய பூமியில கான்கிரிக்ட் கட்டிடம் கட்டத் திட்டம் போட்டவன்தானேடா நீ..? பெருசா நல்லவன் போல வேசம் கட்டற.. நம்பிருவேன்னு நினைச்சியா..? விவசாய வேல பாக்கறவங்கள பேக்டரி வேலைக்கு வர வைச்சு விவசாயத் தொழில ஒழிச்சுக்கட்ட வந்தவன்தானேடா நீ.. உன்ன எனக்குத் தெரியாதா..? கள்ளன்டா நீ.."

"பூர்ணிமா.."

"என் பேரச் சொல்லக்கூட ஒரு யோக்கியதை இருக்கனும்.. தராதரம் இருக்கனும்.. அது ரெண்டும் உனக்கு இல்ல.."

பூர்ணிமாவின் உடல் ஆத்திரத்தில் இன்னும் அதிகமாக நடுங்கியது..

அத்தியாயம்- 16

அரவிந்தனின் கையின் அழுத்தம் கூடியது.. அவனது சினத்தை அறிந்தும் பூர்ணிமா துளியும் அஞ்சவில்லை..

"நான் கள்வனாகவே இருந்துட்டுப் போறேன்.. இந்தக் கள்வன் உன்னைக் காதலிக்கிறான்.. பதிலுக்கு நீ இந்தக் கள்வனைக் காதலிக்கக் கூடாதா..?" அரவிந்தனின் குரலில் இறைஞ்சல் இருந்தது..

அவன் அவளிடம் இறைஞ்சுகிறானா..? காதலை யாசகம் கேட்கிறானா..? அவள் வேண்டுமென்று மண்டியிடு கிறானா..?

பூர்ணிமாவினால் நம்ப முடியவில்லை.. அரவிந்தனின் பார்வைகளையும், செயல்களையும் இளமைப் பருவத்துக்கேயுரிய சேட்டைகள் என்று தான் அவள் நினைத்திருந்தாள்... அவளது முறை மாப்பிள்ளைகள் அதுபோல வெறித்துப் பார்ப்பதுண்டு.. பார்த்திபன் தங்கையின் பக்கத்திலிருந்தால்..

"என்ன மாப்பிள்ள.. பார்வயெல்லாம் பலமா இருக்கு.. ஒன்கூட ஒரு குஸ்தி போட்டாத்தான் சரியா வரும் போல இருக்கே.." என்று சின்னச் சிரிப்புடன் மறைமுக எச்சரிக்கையை விடுத்து விடுவான்..

"ஹி.. ஹி.. மாப்பிள்ளைக்கு ஒரே லந்துதான்.."

பக்கத்தில் பூர்ணிமா இல்லாததைப் போன்ற பாவனையுடன் அவர்கள் சிரித்துச் சமாளிப்பார்கள்..

அதைப் போலதான் அரவிந்தனின் பார்வைகளும் என்று நினைத்திருந்தவளுக்கு, அவன் காவியக் காதலனைப் போலப் பேசியதைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது..

"கையை விடுடா.. ஆருகிட்டக் காதல் பேசற..?" என்று சீறினாள்..

"ஊஹீம்.. நீ என்னதான் கோபப்பட்டாலும் உன் கையை நான் விடுவதாக இல்லை.." உறுதியாகச் சொன்னான் அரவிந்தன்..

பூர்ணிமாவுக்கு அழுகை அழுகையாக வந்தது.. யாருமற்ற இருட்டுச் சந்தில் அரவிந்தனுடன் அவள் போராடிக் கொண்டிருக்கும் நிலை வந்து விட்டதில் துக்கித்தாள்..

"இது மட்டும் எங்க அப்பாவுக்கும், அண்ணனுக்கும் தெரிந்திருக்கனும்.." கண்ணீரை அடக்கிக் கொண்டு பல்லைக் கடித்தாள்..

"தெரிந்தா..? என்ன செய்வாங்க..?" அசாத்திய தைரியத்துடன் அவன் கேட்டான்.

"உனக்குத் திருவிழா கொண்டாடியிருப்பாங்க.."

"அதுதான் ஊரே ஒன்றுகூடி திருவிழாவைக் கொண்டாடிக்கிட்டு இருக்காங்க இல்ல.. அது போதும் டார்லிங்.."

'அழக்கூடாது..' தனக்குள் சொல்லிக் கொண்டாள் பூர்ணிமா..

அழுகை அவளை பலவீனப்படுத்திவிடும்.. அந்த பலவீனத்தை அவனுக்குக் காட்டிக் கொடுத்து விடும்.. அது கூடாது.. அவள் போராட வேண்டும்.. மாதவனின் மகள்,

பார்த்திபனின் தங்கை தோற்றுப் போய் விட்டதாக இருக்கக் கூடாது..

'இவனை எதுத்து நிக்கலன்னா நான் வயலூரில பொறந்து வளந்ததுக்கு என்ன அர்த்தமிருக்கு..?'

அரவிந்தன் அவளது முகத்தோடு முகம் வைத்தான்.. அவனது ஷேவிங் லோசனின் மணம் அவளை மயக்க முற்பட்டது... அவள் மூச்சை இழுத்துப் பிடித்தபடி

அவனது முகத்தைத் தள்ளி விட்டாள்.. சிறு குழந்தையின் விளையாட்டை ரசிப்பதைப் போல அவளது செய்கையை ரசித்துச் சிரித்தான் அவன்..

"உன்னோடு வாழ்ந்து பார்க்க எக்கச்சக்கமான காதல் எனக்குள் இருக்குடி.. இது தீராக் காதல்.."

"தீராக் காமம்ன்னு சொல்லு.."

"காதலில்லா காமம் சுகிக்குமா..?"

"ச்சீ.. கண்டதைக் கடியதைப் பேசிக்கிட்டு வராதே.. அதுக்குன்னுதான் உன் அத்தை மகள் இருக்காள்ல.. அவகிட்டப் போய் இந்தக் கண்றாவிய எல்லாம் பேசு.."

"அவ 'நீ' ஆகி விட மாட்டா பூர்ணிமா.. நீ தேவதை..! எனக்கே எனக்கானவ.. உன்னைக் கண்டதும் என் மனதில் தோன்றிய காதல் தீராக்காதல்தாண்டி.. அது நதித்தீரம்.. மூழ்கி, நனைந்து, நீந்தித் திளைக்க எனக்கு நீ வேண்டும் பூர்ணிமா.."

"என்னது..?"

கலவரமானாள் பூர்ணிமா... அவன் பேசும் வார்த்தைகள் காந்தம் போல அவளைக் கவர முயன்றன.. அவள் பயந்தாள்..

'இவன் வசியக்காரன்..' என்று மருண்டாள்..

அந்த வசியக்காரனின் வசிய வார்த்தைகளில் தான் வசியப்பட்டு விடுவோமோ என்று நடுங்கிப் போனாள்..

"இந்த யுகம் முடிந்தாலும் தீராக் காதல்டி என் காதல்.."

அவன் அவளைக் கட்டியணைத்து கூந்தலில் சூடியிருந்த மல்லிகையின் நறுமணத்தை முகர்ந்தான்.. பூர்ணிமா

பிடிவாதமாக தலையை ஆட்டி அவன் வாசம் பிடிப்பதைத் தடுத்தாள்..

"கள்ளத்தனமா பொம்பளப்புள்ளயக் கட்டிப் புடிச்சுக்கிட்டு காதல்ன்னு பினாத்தறயா..? இது வெறிடா.."

"வெறியா..?" அவன் முகம் சுளித்தான்..

"இப்படிக் கூட நீ பேசுவாயா..?"

"இதுக்கு மேலயும் பேசுவேண்டா.. காதலாமில்ல காதல்.. காதலைச் சொல்கிற முகரையைப் பாரு.."

"ஏண்டி..? என் முகத்துக்கென்ன குறைச்சல்..?"

இருளுக்குக் கண்கள் பழகி விட்ட நிலையில் கோட்டோவியம் போல அவன் தெரிந்தான்.. நிழலோவியம் போல அவனது முகம் அவளை வசீகரித்ததில் அவள் அரண்டு போனாள்..

'ஆத்தி.. இந்தக் கள்ளன் பொம்பளப் புள்ள மனச அலைக்கழிக்கிற ஆணழகனாச்சே..' மூச்சுத் திணறினாள்..

"பதில் சொல்லுடி.." அவன் தூண்டினான்..

"உன் முகத்துக்கென்ன குறைச்சல்ன்னா கேக்கிற..? கள்ளத்தனமா பொம்பளப் புள்ளய மடக்கிச் சரசம் பேசறவன் முகம், மூக்கும் முழியுமா இருந்தாலும் மட்டக் கண்றாவியாத்தான் தோணும்.."

"ஓ..! அப்ப, நான் 'கள்வன்' னே நீ டிசைட் பண்ணிட்ட..?"

"அதத்தானடா இம்புட்டு நேரமும் கத்திக்கிட்டு இருக்கேன்..? காதில விழுகாததப் போலவே பாவ்லா பண்றதில நீ மன்னன்டா.."

"நான கள்வனா.. இல்லை மன்னனா..? எதுதான் நான்..? பர்ஸ்ட் இதை நீ டிசைட் பண்ணு.."

"யாரு 'நீ'ன்னு நான் முடிவு பண்ணிக்கிட்டு இருக்க எனக்கு வேல வெட்டியே இல்ல பாரு.. நீ எவனா இருந்தா எனக்கென்ன..?"

"அப்ப நான் 'கள்வன்' இல்லை.. 'கிங்..' அப்படி நீ டிசைட் பண்ணிட்டதா நான் எடுத்துக்கவா..?"

"ஏய்ய்.. இருட்டுச் சந்தில பொம்பளப்புள்ள கையைப் புடிச்சு இழுக்கிற நீயெல்லாம் மன்னனாடா..? சரியான கள்ளன்டா நீ.."

"ஸோ.. ஐ ஆம் எ 'கள்வன்..'..?"

"ஆமாண்டா.. போடா.."

"போகிறதா..? உன்னை விட்டு விட்டா..? நெவர்.."

அவள் எதிர்பாராத தருணத்தில் இறுக்கி அவளது கன்னத்தில் அவன் 'உம்மா'க் கொடுத்ததில் பூர்ணிமா பதறிப் போனாள்..

"கள்வனின் காதல் இப்படித்தாண்டி இருக்கும்.. இந்தக் கள்வனைக் கொஞ்சம் காதலிடி.."

அவளது முகத்தோடு முகம் பதித்தான்.. வெறுப்புடன் அவனது முகத்தை அவள் தள்ளி விட்டாள்.. சிரித்தபடி தன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தவன் கை விரல்களில் தெரிந்த குங்குமத்தில்..

"உன் நெற்றியில் குங்குமம் வைத்திருக்கிறயா..?" என்று கேட்டான்..

பூர்ணிமாவுக்கு 'பகீர்' என்று இருந்தது.. அது கோவிலில் அவள் இட்டுக் கொண்ட குங்குமம்..

'அது எப்படி இவன் நெற்றிக்குப் போனது..?'

"உன் நெற்றியிலிருந்த குங்குமம் என் நெற்றிக்கும் வந்து விட்டது.. நீ எப்போடி என்னிடம் வருவ..?"

"ஒருநாளும் வரமாட்டேன்.." உறுதியுடன் சொன்னாள் பூர்ணிமா..

"ஷ்யூரா வருவ.. அப்படி நீ வரலைன்னா நான் உன்னை என்னிடம் வர வைப்பேன்.." அரவிந்தனும் உறுதியாகக்

கூறினான்..

"நினைத்துக்கிட்டே இரு.."

"உன்னைத்தானே..? நீ சொல்லியா உன்னை நான் நினைக்கனும்..? டிவெண்டி ஃபோர் அவர்ஸீம் உன் நினைவுதான் கண்ணம்மா.."

"கண்ணம்மான்னு கொஞ்சின.. கன்னம் பழுத்திரும்."

"நீ கொடுக்கும் முத்தத்தினால்தானே.."

"அடேய்.."

ஆங்காரத்துடன் அவனது தலைமுடியைக் கொத்தாகப் பிடித்து ஆட்டினாள் பூர்ணிமா.. செல்லக் குழந்தையின் சேட்டையை விரும்பி ஏற்பதைப் போல, அவளது கைபிடிக்குள் தனது முடியை ஒப்புக் கொடுத்து ரசித்துச் சிரித்து அவளது கடுப்பைக் கிளப்பி விட்டான் அரவிந்தன்..

"நான் உன்னுடையவன் பூர்ணிமா.. என் தலைமுடி முதல் பாதம் வரை உன் புராப்பர்ட்டி.. விருப்பம் போல விளையாடு.."

பூர்ணிமா அவன் முடியை விட்டு விட்டாள்.. உடல் கூச ஒதுங்க முற்பட்டாள்.. முடியவில்லை.. அவனது கை வளைவில் இருந்தவள் ஒதுங்கினால் அது அவனது மார்பில் சாய்ந்து முகம் புதைத்துக் கொள்வதைப் போல ஆகித் தொலைக்கிறதே..

"ச்சீ.. உன்னை எனக்குப் பிடிக்கலைன்னு எத்தனை முறை சொன்னாலும் உன் மர மண்டையில ஏறவே ஏறாதாடா..?"

"உனக்குப் பிடித்தாலும் பிடிக்கவில்லை என்றாலும் உன்னுடன் வாழ்ந்து பார்ப்பதில் இருக்கிறதடி வாழ்வின் கலை.. இதைச் சொல்லிப் புரிய வைக்க முடியாதுடி பூர்ணிமா.. வாழ்ந்து பார்த்துத்தான் தெரிஞ்சுக்கனும்.. என்னுடன் வாழ வா பூர்ணிமா.."

"வேண்டாம்டா.. வெறுப்பேத்தாதே.. நான் கொலகாரியா மாறிருவேன்.. என்ன விட்டிரு.. கலை அது இதுன்னு இந்தக் கருமாந்திரத்துக்குப் பேர் கொடுக்காதே.. வாழ்தலின் கலையாம் கலை.. இவனெல்லாம் கலையப் பத்திப் பேசறான் பாரு.. அதுதான் கொடுமடா சாமி.."

"நான் கலைஞன் பூர்ணிமா.. உன் ரசிகன்.. உபாசகன்.. நான்தான் கலையைப் பத்திப் பேசனும்.."

"கலைஞனா..? நீ கள்ளன்டா.."

"ஒகே.. உனக்கு அந்த நேம்தான் பிடிக்கிறதுன்னா அப்படியே இருந்து விட்டுப் போகிறேன்.. நீ எதுவாக எனை நினைக்கிறாயோ அதுவாக ஆவேன் நான்.. ஆர் யு ஹேப்பி டியர்..?"

"டியர், டியர்ன்னு டயர ஓட்டினா எனக்குக் கடுப்புக் கிளம்பிரும்.. சொல்லிட்டேன்.."

"நீ சொல்லி நான் கேட்காமல் இருப்பேனா பூர்ணிமா..? 'டியர்'ன்னு கூப்பிட்டா உனக்குப் பிடிக்காதுன்னா அப்படி உன்னைக் கூப்பிடவே மாட்டேன்.. போதுமா..? "

"போதாது.. உன்னயும் எனக்குப் பிடிக்காது.. உன் ஊரப் பாத்து ஓடியே போயிடு.."

எப்படிப் பேசினாலும் அவளது மனம் அவன் பக்கம் திரும்பவே திரும்பாது என்பதை அழுத்தமாக நிரூபித்தாள் அவள்.. விழி மூடிப் பெருமூச்சு விட்ட அரவிந்தனின் மூச்சுக்காற்று அவளது முகத்தைச் சுட்டது.. காலமென்னும் கடலினில் கரை சேரப் பிடித்துக் கொண்டிருக்கும் தோணி போல அவளை இறுக்கிப் பற்றினான் அவன்.. இன்னாரை இன்ன நேரத்தில் இந்த இடத்தில் சந்திக்க வேண்டும்

என்பது விதி வகுத்திருக்கும் கட்டளை.. அதன்படி அவன் அவளை வயலூரின் ஏரிக்கரையில் மரத்தடியில் சந்தித்திருக்கிறான் என்பதை அவள் புரிந்து கொள்ள மாட்டாளா என்று ஏக்கம் கொண்டது அவன் மனது..

"உன் நெற்றி மீது என் நெற்றியை ஈஷி நான் தீற்றிக் கொண்ட குங்குமம் என் காதலை உன்னிடம் சொல்ல வில்லையா பூர்ணிமா..?"

மென்மையாக அவளது முடிகோதிக் கேட்டவனின் வார்த்தைகளில் வழிந்த காதலில் அவள் தடுமாறினாள்.. பூ ஒன்று மலர்வதைப் போல அவளது இதயத்தில் இருந்த ஏதோ ஒன்று மலர யத்தனித்து அவளை மருட்டியது.. வன்மையான ஆண்கள் மத்தியில் வளர்ந்தவள் அவள்.. வன்மையற்ற மென்மை காட்டி.. வார்த்தைகளில் காதல் மேவி.. அவன் அவளை மயக்க யத்தனித்தான்... கண்ணீரற்ற காதல் சொல்லும் வசீகரத்தில் அவனுக்கு நிகர் வேறு எவருமில்லையென்று மருண்டு விழித்தாள் பூர்ணிமா.. அவன் தரும் காதலை வேறு எவராலும் தர இயலாது என்று அவளை எண்ண வைக்க யத்தனிக்கிறான் என்று அவள் கோபம் கொண்டாள்..

"தூண்டில் போடறயா..? இதுக்கெல்லாம் மசியற ஆள் நானில்ல.. உன் அத்தமக ரத்தினம்கிட்ட இந்த தூண்டில வீசு.. ஆச ஆசயா சிக்குவா.. நான் சிக்க மாட்டேன்.."

அவளது கோபத்தில் அவன் பின்வாங்கவில்லை.. அதற்கும் பதில் சொன்னான்..

"தூண்டில் நானாக இருக்கும் போது என்னிடம் சிக்கிவிட ஏண்டி தயங்குகிற..?"

"டேய்.."

"உனக்கொன்னு தெரியுமா.. என் அம்மாவுக்கு அடுத்து என்னை 'டேய்'ன்னு கூப்பிடற ஒரே பெண் நீதான்.. வேறு யாருக்கும் இந்த தைரியம் வராது.."

"அறிவு கெட்டவனே..! நான் ஒன்னும் உரிமயில 'டேய்'ன்னு சொல்லலைடா.. உன்மேல இருக்கிற ஆங்காரத்தில 'டேய்' ன்னு திட்டறேண்டா.. அதுக்குப் போயி சந்தோசப்படற..? கள்ளன், கள்ளன்.."

"இது சந்தோசம் இல்ல டார்லிங்.. சொக்கிப் போகிறேன்.. நான் உன் கள்வன்தான்.. உன் உள்ளத்தைக் கவர நினைக்கும் உன் உள்ளங்கவர் கள்வன்.."

'எப்புடிப் பந்தப் போட்டாலும் திருப்பி அடிச்சுக்கிட்டு இருக்கானே.. முடியலடா சாமி..' ஓய்ந்து போனாள் பூர்ணிமா..

அதுதான் சமயமென்று அவளது இதழ் தேடி அவன் இதழ் பதிய வேகத்துடன் அவனைத் தள்ளி விட்டாள்.. அவன் மீதான வெறுப்பும் கோபமும் அதிகரித்தன.. அவள் ஓய்ந்து கிடக்கும் வேளையில் முத்தமிட முனைந்த இரக்கமற்ற அரக்கன் அவன் என்று குமிறியது அவள் மனது..

"முத்தம் கொடுக்கிறது உனக்குப் பிடிக்கலைன்னா கண்களை மூடிக்க.. எனக்குப் பிடிச்சிருக்கு.. நீ எதிர்த்தாலும் நான் உனக்கு முத்தம் கொடுத்துக்கிட்டே தான் இருப்பேன் கண்ணம்மா.."

அவளை மூச்சு முட்டும் அளவிற்கு இறுக்கிக் கொண்டவனின் கைகளில் கிள்ளினாள் அவள்.. அவன் சிரித்து மயக்கினான்..

"இந்தக் கள்வனைக் காதலி பூர்ணிமா.." என்று கெஞ்சினான்..

"விட்டுத் தொலைடா.."

அடக்கி வைத்திருந்த அழுகை பீறிட்டு வெளிப்பட பூர்ணிமா தேம்பி அழுதாள்.. முரட்டு ஆண்மகனை தேகபலத்தால் வெல்ல முடியாத தோல்வியில் கதறினாள்.. அரவிந்தன் அவளை விட்டுவிட்டான்.. அடுத்த நொடியில் சிட்டாகப் பறந்தவள் அவளது வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே பாய்ந்தாள்.. செல்போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்த பார்த்திபன் தங்கை வந்த கோலத்தில் பதறிப் போனவனாக செல்போனை அணைத்து விட்டு..

"பூரணி.." என்று தங்கையிடம் விரைந்தான்..

"அண்ணா.." அவனைக் கட்டிக் கொண்டு விசும்பினாள் பூர்ணிமா.. அவளது உடல் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தது..

"என்னம்மா ஆச்சு..?" பார்த்திபன் துடித்தான்..

சிங்கம் போல அவனிருக்க அவனுடன் பிறந்த தங்கை பயந்து ஓடி வருவதா..? அதைப் பார்த்துக் கொண்டு அவன் பேசாமல் நிற்பதா..? அப்படி நின்றால் அவன் ஆண்மகன் ஆவானா..?

அத்தியாயம்- 17

"என்ன நடந்ததுச்சுன்னு சொல்லும்மா.."

வெறி கொண்ட சிங்கமாக உறுமினான் பார்த்திபன்.. நிதானித்தாள் பூர்ணிமா.. எந்தவிதச் சேதாரமும் இல்லாமல் அவள் தப்பித்து வந்து விட்டாள்.. இப்போது போய் நடந்த நிகழ்வுகளைப் பார்த்திபனிடம் சொன்னால் பிரளயம் வெடித்து விடும்..

'வேண்டாம்..' இமைப் பொழுதில் மனதுக்குள் தீர்மானித்தாள் பார்த்திபனின் தங்கை..

"பயமா இருந்துச்சுண்ணா.." மனதின் பயத்தைச் சொன்னாள்..

"பயமா..? எதுக்கு பயம்..? ஏன் பயந்த..? அம்மாவும் அப்பாவும் உன் கூடத்தான இருந்தாங்க..? அவங்க எங்கே..?"

"அப்பாவுக்கு திருவிழா வேலை.. கோவிலில இருக்கார்.. அம்மா மேலூர் அத்தகிட்ட பேச்சில நின்னுட்டாங்க.. நான் மட்டும் வீட்டுக்குத் தனியா வந்தேனா.. ஊருக்குள்ள நடமாட்டமில்ல.. இருட்டுச் சந்துக்குள்ள தெரியாத்தனமா நுழைஞ்சுட்டு வெளியே வர்றதுக்குள்ள பாடாய் பட்டுட்டேன்.." உண்மையைத்தான் அவள் ஒப்பித்தாள்.. அரை குறை உண்மை..

"ஏம்மா.. படிச்ச புள்ள.. இப்புடியா தன்னந்தனியா வர்றப்ப இருட்டுச் சந்துக்குள்ள நுழைவ..? தெருவோட சுத்தி வந்தா பயந்திருப்பியா..? எப்பவும் நேர்வழி நம்மச் சுத்தி விட்டாலும் பயமுறுத்தாம சேர்க்க வேண்டிய இடத்தில நம்மச்

சேர்த்திரும்.. குறுக்கு வழி அப்படியில்ல.. குரவளயப் பிடிச்சிரும்.."

பார்த்திபன் தங்கையை உட்கார வைத்து விட்டு அவள் தடுக்கத் தடுக்க அடுப்படிக்குப் போய் அடுப்பைப் பற்ற வைத்துப் பாலைக் காய்ச்சினான்.. சூடான

பாலை ஆற்றித் தம்ளர்களில் ஊற்றி எடுத்து வந்தவன் தங்கையிடம் ஒரு தம்ளரைக் கொடுத்து விட்டுத் தான் ஒரு தம்ளரை எடுத்துக் கொண்டுப் பக்கத்தில் உட்கார்ந்தான்..

"சுடு பாலக்குடி.. தெம்பு வரும்.."

தமையனின் பாசத்திலும் கவனிப்பிலும் நெகிழ்ந்து போனவளாக பூர்ணிமா மான்குட்டியைப் போன்ற மிரண்ட பார்வையுடன் பாலைப் பருக ஆரம்பித்தாள்.. பயம் குறைந்து தெம்பு வருவதைப் போல்தான் இருந்தது.. அவளைப் பரிவுடன் பார்த்த பார்த்திபனின் பாசமலர் பார்வையில் வாத்சல்யம் நிறைந்திருந்தது..

'என் தங்கை..' மயிலிறகாய் மனம் வருடியது அவன் பார்வை..

வாசலில் பேச்சு சப்தம் கேட்டது.. அண்ணனும் தங்கையும் திரும்பிப் பார்த்தார்கள்.. மாதவனும், பூமாவும் சிரித்துப் பேசியபடி வீட்டுக்குள் வந்தார்கள்.. பார்த்திபனின் முகம் கடுமையைப் பூசிக் கொண்டது.. மாதவனைப் பார்த்தவன்..

"நீங்க கோவிலில இருந்ததா பூரணி சொல்லுச்சேப்பா.." என்றான்..

"கோவிலிலதாம்ப்பா இருந்தேன்.. உங்கம்மா மேலூரு தங்கச்சிக்கிட்டப் பேசி முடிச்சுட்டு வீட்டுக்கு வரக் கிளம்பினா.. தனியா வர்றாளேன்னு துணைக்கு வந்தேன்.." இயல்பாக பதில் சொன்னார் மாதவன்..

"அம்மா தனியா வருதுன்னு துணைக்கு வரத் தெரிஞ்ச உங்களுக்கு தங்கச்சி தனியா வந்தப்ப துணைக்கு வந்து வீட்டில விட்டுட்டுப் போகனும்னு தோணலியாப்பா..?" கடிந்து கொண்டான் பார்த்திபன்..

"பூரணி தனியாவா வீட்டுக்கு வந்துச்சு..?" முகம் மாறிய மாதவன் மனைவியை முறைத்தார்..

"வயசுப் பொண்ண ராத்திரி நேரத்தில தனியா வீட்டுக்கு அனுப்பி வைச்சுட்டு உன் உறவுக்காரிகூட பேச்சு என்ன வேண்டிக்கிடக்கு பேச்சு..? உனக்குக் கொஞ்சம் கூடப் பொறுப்பில்ல பூமா.."

இரவுப் பொழுதின் இதமான தென்றல் காற்று உடலை வருட.. திருவிழா நாளின் குதூகலத்துடன்.. கணவருடன் சேர்ந்து தனிமையில் உரையாடியபடி வீட்டுக்குவந்த சந்தோசம் நொடிப் பொழுதில் தொலைந்து விட குற்றவாளியாகி கையைப் பிசைந்தாள் பூமா..

"இருடி.. சேர்ந்து போகலாம்ன்னு நான் சொன்னேங்க.. இவதான் காலு வலிக்குதுன்னு பறப்பா பறந்தா.. சரிடி.. வீட்டுக்குப் போன்னு சொல்லிப்புட்டேன்.. வருசத்துக்கொரு தரம் வர்றவ.. கோவிலிலதான் பாத்துக்க முடியுது.. அந்தப் பேச்சக்கூடப் பேச முடியலன்னா என் பொழப்பு என்ன பொழப்பு..?" தனது சுதந்திரத்திற்கு பூமாவும் சீறி விட்டாள்..

"உன்னப் பேச வேணாம்ன்னு ஆருடி சொன்னது..? புள்ளயத் தனியா என்னத்துக்கு வீட்டுக்கு அனுப்பி வைச்சேன்னுதான் கேட்டேன்.. அதுக்கு என்னவோ உரிமக்குரல் எழுப்பறவ..?"

"நான் உரிமக்குரல எழுப்பிட்டாலும்.. கழுதையில.. நீங்களும் உங்க மகனும் என்னன்னு கேட்டுட்டுத்தான் வேற சோலியப் பாப்பீகளாக்கும்... பொழுது விடியறதுக்குள்ள எந்திரிச்சுச் சாணியக் கரச்சு வாசத் தெளிச்சுக் கூட்டிப் பொருக்கிக் கோலம் போடறதில ஆரம்பிக்கிற வேல, நடுச்சாமத்தில அடுப்படிய சரி பண்ணி கட்டய சாய்க்கிறப்பதான் நிக்குது.. அப்பவும் வேல செய்ய ஆரம்பிச்சா செஞ்சுக்கிட்டேதான் இருக்கனும்.. வீட்டில இருக்கிற பொம்பளகளுக்கு வீட்டு வேல ஓயவே ஓயாது.. உதவிக்கு ஒரு ஆளில்ல.. ஒற்ற மனுஷியா பாடாப் படறேன்.. அத ஏன்னு கேக்க ஆளில்ல.. வருசத்துக்கொரு தரம் பாக்கிற உறவுக்காரிகிட்ட நின்னு பேசினத ஏன்னு கேக்க மட்டும் அப்பாவும், மகனும் ஜோடி போட்டுக்கிட்டு வர்றீக.. எம் பொழப்பு இந்த அளவுக்கு கேணப் பொழப்பாப் போச்சில்ல..?" உணர்ச்சிப் பெருக்கில் தொண்டை அடைக்க அதற்கு மேல் பேசமுடியாமல் முந்தானைச் சேலையில்

கண்களைத் துடைத்தபடி அடுப்படிக்குள் அடைந்து கொண்டாள் பூமா..

மாதவனுக்கு மனது தாளவில்லை.. திருவிழா நாளும் அதுவுமாக மனைவியைக் கோபித்து அவளது சந்தோசத்தைக் கெடுத்து விட்ட குற்ற உணர்வுடன் மகனைப் பார்த்தார்..

"அவ வேணும்னு செய்திருக்க மாட்டாப்பா.. அவ சொல்றதும் நாயம்தான..? ஒன் அம்மா கொணத்தப் பத்தி ஒனக்குத் தெரியாதா..? வீடு.. வீட்ட விட்டா வயலுன்னு இருக்கிற மனுஷி.. என்னைக்காவது அக்கம் பக்கத்து வீட்டுத் திண்ணையில உக்காந்து ஊர்க்கதய அவ பேசி நீ பாத்திருக்கயா..?"

பார்த்திபனுக்கு 'முணுக்' கென்று கோபம் வந்து விட்டது.. அவன் என்னவோ பூமாவின் மீது தேவையில்லாத பழியைப் போட்டு விட்டதைப் போல மாதவன் மனைவியைத் தாங்கிப் பேசியதில் தலையில் அடித்துக் கொண்டான்..

"ஏம்ப்பா.. கொஞ்சமாச்சும் யோசிச்சுப் பேசறிகளா..? இதில இவரு ஊரு பிரசிடெண்டு வேற.. உங்க பொஞ்சாதிய யாரு குத்தம் சொன்னது..? தங்கச்சிய ஏன் தனியா அனுப்பி வைச்சீங்கன்னு உங்ககிட்டதான நான் கேட்டேன்..? நீங்க என்னத்துக்கு அம்மா மேல குத்தம் சொன்னீக..?"

"அவளும், பூரணியும் ஒன்னா வீட்டுக்கு வர்றாங்கங்கிற நெனப்பிலதான் நான் கோவில் வேலயப் பாக்கப் போனேம்ப்பா.."

"சரி.. திருவிழா வேலயப் பாக்கப் போனவரு எப்புடி அம்மாவுக்குத் துணையா வீட்டுக்கு வந்தீங்க..?"

"ஏம்ப்பா.. என்ன இது கேள்வி மேல கேள்வியாக் கேக்கிறவன்..? கோவில் வாசல்ல நின்னுக்கிட்டு இருந்தப்ப உங்கம்மா தனியா வீட்டுக்குக் கிளம்பினதப் பாத்தேன்.. இருடி துணைக்கு வர்றேன்னு சேந்து வந்தேன்.. இது ஒரு குத்தமாப்பா..?"

"உங்க மேல யாருப்பா குத்தம் சொன்னது..? அம்மாவும் இப்படித்தான்.. எகனைக்கு மொகனையா, எக்குத்தப்பா,

எதையோ புரிஞ்சுக்கிட்டு மடமடன்னு வாய்க்கு வந்ததப் பேசிட்டுப் போகுது.. நீங்க இப்புடிப் பேசறிங்க.. அம்மா கூட துணைக்கு வந்ததில குத்தமில்ல.. துணைக்கு வந்தவரு பூரணி எங்கேன்னு அம்மாகிட்ட விசாரிக்காததுதான் தப்பு.."

"நான் விசாரிக்கிறதுக்கு முன்னாடியே ஒங்கம்மா விவரம் சொல்லிட்டாள்ல.."

"என்னன்னு..?"

"பூரணி அப்பவே வீட்டுக்குப் போயிட்டாங்கன்னு சொன்னா.."

"செமத்தியான விவரம்ப்பா.. நீங்க ரெண்டு பேரும் வெவரமான புருசன், பொஞ்சாதிதான்.."

பார்த்திபன் மறுபடியும் தலையில் அடித்துக் கொண்டு அடுப்படிக்குள் நுழைந்தான்.. இட்லிக் குண்டாவை அடுப்பில் ஏற்றி இட்லி வார்த்துக் கொண்டிருந்த பூமாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.. மகனைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. தாயின் முகத்தைக் கூர்ந்து பார்த்த பார்த்திபன்..

"இப்ப என்னத்துக்கு அழுகிற..?" என்று அதட்டினான்..

"டேய்.. அதட்டற வேலய எல்லாம் வைச்சுக்காத.. பத்து மாசம் வயித்தில சுமந்து, பெத்து, வளத்த ஆத்தாள அதட்டற அளவுக்கு நீ பெரிய மனுசனாகிட்டயா..? என்னக் கேள்வி கேட்க நீ ஆருடா..? அந்த உரிம உங்கப்பாவுக்கு மட்டும்தான்.. நினப்பில வைச்சுக்க.." சிலிர்த்தாள் பூமா..

"என்ன மட்டுமாம்மா பத்து மாசம் சுமந்த..? பூரணியைச் சுமக்கலயா..?" நிதானமாக கேட்டான் பார்த்திபன்..

"இப்ப என்ன நடந்து போச்சுன்னு இந்தக் குதி குதிக்கிற..? இந்தா இருக்கிற கோவிலில இருந்து வீடு வரைக்கும் உன் தங்கச்சி தனியா நடந்து வந்துட்டா.. அதுக்காடா இம்புட்டு ஆர்ப்பாட்டம்..? இது என்ன அறியாத ஊரா..? இல்ல.. உந்தங்கச்சிதான் இதுக்கு முன்னால தனியா நடந்து வந்ததில்லையா..? பொறந்து வளந்த சொந்த ஊருக்குள்ள ரெண்டு தெரு தள்ளியிருக்கிற வீட்டுக்கு இவன் தங்கச்சி தனியா வந்துட்டாளாம்.. அதுக்கு ஊரக் கூட்டறான்.. போடா

போ.. இவந்தான் தங்கச்சியத் தாங்கறவன்.. என் அண்ணன்மார்க எல்லாம் இதுக்கு மேல என்னத் தாங்குவாங்க.. ரொம்ப பேசின.. சேலய ஒதறிக் கட்டிக்கிட்டு என் பொறந்த வீட்டப் பாத்துப் போயிக்கிட்டே இருப்பேன்.. என்ன..? போக்கிடம் இல்லாத அநாதன்னு உங்கம்மாவ நினச்சுட்டியா..?" ஆங்காரத்துடன் இட்லிக் குண்டாவை மறந்து வெளியேறப் போனாள் பூமா..

"கல்யாண வயசில மகனையும், மகளையும் வைச்சுக்கிட்டு நீ பொறந்த வீட்டுக்கு கோவிச்சுக்கிட்டுப் போறேன்னு கிளம்பற.. நேரம்மா.. இத்தன நாளா பூரணி தனியா வீட்டுக்கு வந்திருக்குதுதான்.. இன்னைக்கு மட்டும் ஏம்மா நம்ம தெருவுக்கும் அடுத்த தெருவுக்கும் இடையில இருக்கற இருட்டுச் சந்தப் பாத்துப் பயந்து ஓடி வந்துச்சு..?"

ஆத்திரத்துடன் அடுப்படியை விட்டு வெளியேறப் போன பூமா அப்படியே நின்று விட்டாள்..

"பார்த்தி.." பதட்டத்துடன் மகனருகில் வந்தாள்..

"என்னடா சொல்ற..?" அவள் குரல் நடுங்கியது..

பிறந்து வளர்ந்த ஊரில், இரவு பகல் பேதமின்றி அச்சமின்றி உலவி வந்த அவளது மகள் இருட்டுச் சந்தைக் கடக்கப் பயந்து ஓடி வந்தாளா..?

"ஆமாம்மா.." தலையை அசைத்தான் பார்த்திபன்..

"இருட்டைப் பாத்துப் பயப்படறவளா நம்ம பூர்ணி..? இல்லயேப்பா.. தினமும் வந்து போற சந்து.. அதில வர என்ன பயம்..?"

"அதத்தான் நானும் கேக்கறேன்.. அது ஓடி வந்த வேகத்தப் பாத்தா இருட்டைப் பாத்து பயந்து வந்ததைப் போல இல்லம்மா.. வேற எதையோ பாத்துப் பயந்து வந்திருக்கு.."

"மகமாயி.." பூமா வாய் பொத்தினாள்..

அவள் மனதில் என்னென்னவோ சிந்தனைகள் ஓடின..

"ஏம்ப்பா.. காத்துக் கருப்புன்னு எதையாச்சும் கண்டு பயந்திருப்பாளோ..?"

"நம்ம ஊரில காத்து, கருப்பா..? சும்மாயிரும்மா.. இத்தன நாளா இருட்டுச் சந்துக்குள்ள அது வர்றப்ப பயமுறுத்தாத காத்தும் கருப்பும், மாரியம்மன் கோவில் திருவிழாவப்ப பயமுறுத்த வந்திருச்சுகளா..? இது அம்மன் உலா வர்ற ஊர்ம்மா.."

"வேற என்னவா இருக்கும்..?"

"எதுவோ இருக்கு.. பூரணி என்னன்னு சொல்ல மாட்டேங்குது.. அது ஓடிவந்த வேகத்தில என்னவோ ஏதோன்னு துடிச்சுப் போயி எந்திருச்சேன்.. அண்ணா, அண்ணான்னு நடுங்குது.. எதுவும் சொல்ல வாய் வரல.. பாலக் காச்சி சூடாக் குடிக்க வச்சேன்.. அதுக்கப்புறம்தான் அதுக்குப் பேச்சே வந்துச்சு.. இத்தன வருசத் திருவிழாவில இதப் போல நடந்ததே இல்லயேம்மா.."

பூமா அடுப்படி வாசலில் நின்று முன்னறையில் உட்கார்ந்திருந்த மகளைப் பார்த்தாள்.. நடந்து கொண்டிருந்த சண்டைக்கும் அவளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்பதைப் போல விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தாள் பூர்ணிமா.. அவள் மனது அங்கு இல்லை என்பதை பூமா கண்டு கொண்டாள்.. அலைபாயும் மகளின் மனதை இனம் கண்டு கொண்ட தாயின் மனது கலங்கியது..

'மெகாலு பிடிச்ச மாதிரி இருக்காளே..'

பூர்ணிமா அப்படி இருப்பவளல்ல.. அவள் இருக்குமிடத்தில் உயிர்ப்பு இருக்கும்.. எதையாவது பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் இருப்பாள்.. மாதவன் உம்மென்று உட்கார்ந்திருக்கிறார் என்றால் அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.. பூமாவின் மனத்தாங்கலும், என்றைக்கும் இல்லாமல் பார்த்திபன் இன்று எதிர்த்துப் பேசி விட்ட வருத்தமும் ஒன்று சேர்ந்ததில் அவர் விட்டத்தை வெறித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்.. பூர்ணிமாவிற்கு என்ன வந்தது..? அப்படியே இருட்டைப் பார்த்து அவள் பயந்து ஓடி

வந்திருந்தாலும் வீட்டுக்குள் வந்த பின்னால் தெளிந்திருக்க வேண்டாமா..?

கிராமத்துத் தாய்மார்கள் சூட்சுமம் அறிந்தவர்கள்.. எந்த ஒரு சிறு விசயத்தையும் அலட்சியப் படுத்தாமல் ஆராயக் கூடியவர்கள்.. ஓடுகிற ஆற்று நீரில் ஒன்பது சுளுவைக் கண்டு பிடிப்பவர்கள்... விட்டுத்தள்ளு கழுதையை என்று எதையும் தள்ளி விட மாட்டார்கள்..

"நான் பாத்துக்கறேண்டா பார்த்தி.."

"இதத்தான் சொல்ல வந்தேன்.. என்ன ஏதுன்னு காதுல போட்டுக்காம நீ பொறந்த வீட்டுக்குப் பொட்டியக்கட்டக் கிளம்பற... கொஞ்சமாச்சும் பொறுப்போட இரும்மா.."

"இம்புட்டு நாளா இப்புடி எதுவும் நடந்ததில்லயேடா.. அந்த நினப்பில பேசிட்டேண்டா தம்பி.."

"எதுக்கெடுத்தாலும் பொசுக்குன்னு பொட்டியக் கட்டக் கிளம்பாத.. இம்புட்டு நாளா நிம்மதியா இருந்தாப்பிலயா இபபோ இருக்க முடியுது..? ஊருக்குள்ள எவனெவனோ வந்து போறான்.. நாமதான் சூதானமாக இருந்துக்கனும்.. நானும் பார்த்துக்குவேன்ம்மா... இருந்தாலும் நாளு பூரா தங்கச்சிகூட என்னால இருக்க முடியுமா..? உன்னாலதான் அது முடியும்மா.."

"ஏண்டா தம்பி.. இம்புட்டுத் தூரத்துக்கு நீ சொல்லனுமா..? நான் ஒரு கூறுகெட்ட கூதர.. நீ என்னத்துக்கு சொல்ல வர்றன்னு புரிஞ்சுக்காம வாயில வந்தத வச்சுத் தள்ளிட்டேன்.. இப்ப என்னன்னு தெரிஞ்சு போச்சில்ல.. இனி பூரணியை விட்டு இந்தப் பக்கம், அந்தப் பக்கம்ன்னு ஒரு எட்டுக்கூட எடுத்து வைக்க மாட்டேம்ப்பா.. நீ கவலப்படாத.."

"இல்லம்மா.. இப்பவும் நமக்கு என்னான்னு ஏதும் தெரியல.. அத மறந்திராத.. ஒன்னு மட்டும் நிச்சயம்மா.. நம்ம பூரணி இருட்டப் பாத்து பயந்து ஓடி வரல.."

பார்த்திபனின் மனம் எதையெதையோ நினைத்தது.. பூமாவின் மனம் அதையதைத்தான் நினைத்தது.. தாயும் மகனும் மனக் கலக்கத்துடன் அவர்கள் தங்கமென வளர்த்து வரும் பூர்ணிமாவைப் பார்த்தார்கள்..

அத்தியாயம்- 18

"மாரியம்மா..! மாரியம்மா..
திரிசூலியம்மா..! நீலியம்மா..!"

கோவிலில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கியில் பாடல் உரக்க ஒலித்துக் கொண்டிருந்தது.. இருள் பிரியாத காலை அது.. பின்னிரவு என்று கூடச் சொல்லலாம்.. விடிவதற்குள் அம்மனுக்கான மொளைப்பாரிகளையும், மாவிளக்குகளையும் கோவிலுக்கு கொண்டு வந்து விடுவார்கள்.. அதிகாலைச் சூரியனின் கதிர்கள் கீழ்வானில் படியும் போது கோவில் வாசலில் பொங்கல் வைப்பதற்கான ஆயத்தங்கள் ஆரம்பமாகி விடும்.

முதலில் எடுக்க வேண்டிய 'மொளப்பாரி' எனப்படும் பயிர் வகைகள் வளர்க்கப்பட்ட மண்சட்டிகளைத் தலையில் வைத்துப் பெண்கள் ஊர்வலமாக கோவிலுக்குச் செல்லத் துவங்கியிருந்தார்கள்.. வீட்டுக்கு ஒரு மண்சட்டி என்று கொடுக்கப் பட்டு அதில் விதைக்கத் தானியங்களையும் கொடுத்து விடுவார்கள்.. ஊருக்குப் பொதுவான ஒரு மண்டபத்தில் மொளப்பாரிகள் வளர்க்கப்படும்.. திருவிழா தினத்தன்று அவரவரின் மொளப்பாரிகளை அந்தந்த வீட்டின் பெண்கள் தலையில் ஏந்தி ஊர்வலமாக கோவிலுக்கு வந்து அம்மன் முன்னால் மொளப்பாரிகளை இறக்கி வைத்துக் கும்மியடித்துப் பாடுவார்கள்..பொதுவாக வயதுப் பெண்கள்தான் மொளப்பாரிகளை சுமந்து வருவார்கள்.. வயதுப் பெண்கள் இல்லாத வீடுகளில்

அடுத்த தலைமுறைப் பெண்கள் மொளப்பாரி எடுப்பார்கள்..

மாதவனின் குடும்பத்திற்கான 'மொளப்பாரி'யை பூர்ணிமா தலையில் சுமந்து வந்தாள்.. அந்த பின்னிரவு நேரத்திலே ஊரே குளித்து புத்தாடை அணிந்து அலங்காரம் செய்து கொண்டு கோவிலைச் சுற்றிக் கொண்டிருந்தது..

பூர்ணிமா ரோஜா வண்ணத்தில் அடர்நீல வண்ணத்தில் அடர்த்தியான ஜரிகை பார்டர் கொண்ட பட்டுப் பாவாடையும், அடர்நீல வண்ணத்தில் ரவிக்கையும் தாவணியும் அணிந்திருந்தாள்.. காதுகளில் ஜிமிக்கி.. கழுத்தில் கெட்டியான தங்கச் செயின்... அஷ்ட லட்சுமிகளில் கஜலட்சுமியாக மகாலட்சுமி இருக்கும் வடிவம் கொண்ட டாலருடன் இருந்தது.. கைகளில் குலுங்கும் தங்க வளையல்கள்.. சோழவந்தான் ஆற்றுத் தண்ணீரில் குளித்து வளர்ந்தவளின் கூந்தல் கருமை நிறத்துடன் அடர்த்தியாக நீண்ட பின்னலுடன் முழங்கால்களைத் தாண்டித் தொங்கியது.. அவள் நடக்கும் போது பின்னல் ஆடியதில் கூட்டத்தோடு கலந்து நின்று அவளைப் பார்த்துக் கொண்டிருந்த அரவிந்தனின் மனமும் சேர்ந்து ஆடியது.. நீண்ட பின்னலில் மல்லிகைச் சரத்தைச் சூடியிருந்தாள்.. மொட்டுக்களாக இருந்த மல்லிகையின் சரம் அவளது தோள்களில் வழிந்து அலாதியானதொரு சோபையை அளித்துக் கொண்டிருந்தது.. பெரிய கரு விழிகளில் மை தீட்டியிருந்தாள்.. பிறை வடிவ நெற்றியில் அடர் சிகப்பில் ஸ்டிக்கர் பொட்டு.. அரவிந்தனுக்கு அவளைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை.. அவளை அள்ளியணைத்துக் கொள்ள அவனது கைகள் பரபரத்தன.

"தலமேல.. பூங்கரகம் - என்
        தாய் கொடுத்த மணி மகுடம்.."

ஊர்வலமாக போய்க் கொண்டிருந்த மங்கையரின் உச்சந்தலைகளில் பூங்கரகமாய் மொளப்பாரி பானைகள் வீற்றிருந்தன.. அவற்றை இறுக்கிப் பிடித்துக் கொண்ட மங்கையர்கள் அந்த ஊர்வலத்தின் கதாநாயகியாக தங்களை கற்பனை பண்ணிக் கொண்டு ஒய்யாரமாக விழிகளைச் சுழற்றித் தங்களைக் கவனிக்கும் காளையர்கள் யார் யார் என்பதை ஓரக் கண்களால் கணக்கெடுத்து வைத்துக் கொண்டார்கள்..

அன்னநடை போட்டு ஒயிலாக மொளப்பாரிகளை சுமந்து நடந்த பெண்களின் ஊர்வலத்திற்கு முன்னால், பின்னால், பக்கவாட்டில் பெட்ரோமேக்ஸ் லைட்டுகள் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சியடி சுமந்து வரப்பட்டன.. அதைச் சுமந்து கொண்டிருந்த ஆண்கள் மொளப்பாரி ஊர்வலத்திற்கு பாதுகாவலர்கள் போல நாலா பக்கமும் இடைவெளி விட்டு காவல் காத்து நடந்தார்கள்.. மொளப்பாரி ஊர்வலத்தின் முன்னால் கரகக் குழுவினர் ஆடியபடி சென்றார்கள்.. ஊர்வலம் போன பாதையின் இருபுறமும் ஊர் மக்களும், விருந்தினர்களும், அக்கம் பக்க கிராமத்து மக்களும் குழுமி நின்று 'மொளப்பாரி' யை வேடிக்கை பார்த்தார்கள்..

பூமா பூர்ணிமாவை ஒட்டியபடி இணை பிரியாமல் நடந்து சென்றாள்.. பூர்ணிமா உற்சாகமாக இருந்தாள்.. இருட்டுச் சந்தைப் பார்த்து பயந்த பயம் அவளுக்கு மறந்து விட்டிருந்தது.. புத்தாடையும், பூச்சூடலுமாக அந்த பின்னிரவுப் பொழுதில் மொளப்பாரியைச் சுமந்து கொண்டு பெண்களுடன் கூட்டமாக கோவிலுக்குச் செல்வதைக் குதூகலமாக கொண்டாடிக் கொண்டிருந்தாள்..

"செல்லாத்தா..! எங்கள் மாரியாத்தா..!"

ஒலிபெருக்கியில் உற்சாகமாக எல்.ஆர் ஈஸ்வரி பாடி அழைத்தார்.. அருகில் மொளப்பாரி சுமந்து வந்த மல்லிகா பூங்காவனத்தைச் சுட்டிக் காட்டி..

"இவ தலையில இருக்கிற முடிதான் வளர மாட்டேங்குதுடி பூரணி.. வருசாவருசம் இவ வளக்கிற மொளப்பாரி மட்டும் எம்புட்டு நீளமா வளந்திருக்குன்னு பாரேன்.." என்று கிசுகிசுத்ததில் பூர்ணிமா வாய் விட்டுச் சிரித்தபடி யதேச்சையாகக் கூட்டத்தைப் பார்த்தாள்..

அங்கே செல்போனை உயர்த்தி சிக்னல் பார்ப்பது போல அரவிந்தன் அவளைப் படம் பிடித்துக் கொண்டிருந்தான்.. பூர்ணிமாவின் முகம் மாறி விட்டது.. சிலுசிலுவென உடலைத் தழுவிய தென்றல் காற்றின் குளுமையையும் மீறி வியர்த்தது.. பயத்தில் முகம் வெளுக்க அவளது சிரிப்பு வந்த சுவடில் மறைந்து விட்டதை அரவிந்தன் நின்று கொண்டிருந்த வரிசைக்கு எதிர் வரிசையில் நின்று கொண்டிருந்த பார்த்திபன் பார்த்து விட்டான்.. அவனது முகம் பயங்கரமாக மாறியது.. பூமா அரவிந்தனைப் பார்க்கவில்லை.. பயத்தில் கால்கள் தள்ளாடிய மகளைத்தான் அவள் பார்த்தாள்..

'என்ன.. இப்பப் போயி இவளுக்கு வேர்த்திருக்கு..?' துணுக்குற்றாள்..

"பூரணி.. என்னம்மா..? தலயக் கிலய வலிக்குதா ஆத்தா..?" கவலையுடன் வினவினாள்..

"இல்லம்மா.."

"அப்புறம் ஏன் ஆத்தா ஒனக்கு இப்புடி வேர்த்திருக்கு..?"

"தெரியலம்மா.."

பூமாவுக்கு மனதைப் பிசைந்தது.. மகளின் மாற்றத்திற்கான காரணம் எதுவாக இருக்கக் கூடும் என்று யோசித்து

யோசித்து அவளுக்குத்தான் தலைவலி வந்தது.. கோவில் வாசலை ஊர்வலம் நெருங்கி விட்டிருந்தது..

"கற்பூர நாயகியே..! கனகவள்ளி..!
காளி..! மகமாயி..! கருமாரி அம்மா..!"

எல்.ஆர் ஈஸ்வரியின் கரும்புக்குரல் அவர்களை வரவேற்றது.. சந்நீதியின் முன்னால் மொளப்பாரிகளை இறக்கி வைத்த பெண்கள் அதைச் சுற்றி வந்து கும்மியடித்துப் பாட ஆரம்பித்தார்கள்.. தாவணியை இழுத்துச் செறுகிக் கொண்டு பூர்ணிமாவும் கும்மியடிப்பதில் இணைந்து கொண்டாள்.. பூங்காவனம் பின்னலைத் தூக்கி முன்னால் விட்டுக் கொண்டு கும்மியடித்ததில், மல்லிகா பூர்ணிமாவிடம்..

"சவுரி முடிக்கு இருக்கிற சலம்பலப் பாரேன்.." என்றாள்..

பூர்ணிமா திருவிழவின் கொண்டாட்டத்திற்குள் திரும்பினாள்.. அந்த நொடிகளின் சந்தோசம் அவளுக்குள் புகுந்து கொண்டது.. உற்சாகத்துடன் கும்மியடித்தாள்..

"ஆத்தோர சோழவந்தான்..
அதையடுத்த வயலூரு..
வயலூரு சனங்களுக்கு
ஒரு குறயுமில்ல மாரியாத்தா.."

கும்மியடித்த பெண்களில் வயதில் மூத்த பெண்மணி உரத்த குரலில் முதலில் பாட மற்ற பெண்கள் அதையடுத்துக் கோரஸாக இணைந்து பாடினார்கள்..

"காவல் காக்க நீயிருக்க..
தேனூரு சிவன் இருக்க..
எளியகுரு சித்தரோட
அருளிருக்கு எங்க கூட.."

பூங்காவனத்தின் நீண்ட பின்னல் சுழன்று அவள் பின்னால் கும்மியடித்துக் கொண்டிருந்த மல்லிகாவின் முகத்தில் அடித்ததில் அவள் ஆத்திரமாகி, 'ஒட்டு முடியை உறுவி விடுவேன்.. சூதானம்..' என்று சைகை செய்தாள்.. அவசரமாக பின்னலைப் பிடித்து பூங்காவனம் பத்திரப் படுத்திக் கொண்டதில் பூர்ணிமா பல்வரிசை தெரியப் புன்னகைத்தாள்.. அவளது புன்னகையின் அழகை ரசித்துப் பார்த்த அரவிந்தனுக்கு அதன் முன் எந்நகையும் நிற்க முடியாது என்று தோன்றியது..

"தென்னையில இளநீரு..
தேனூரு, வயலூரு..
வாழத்தோப்பு வாழ வைக்க..
வாழ்ந்திருக்கோம் உன் நிழலில்.."

மொளப்பாரி எடுத்து முடித்த பெண்கள் 'மாவிளக்கு' எடுக்க வீடுகளுக்குச் சென்றார்கள்.. அரிசி மாவு இடித்து, கருப்பட்டியில் ஏலக்காய் சேர்த்துப் பதமாக காய்ச்சி அதில் மாவைப் போட்டு பிசைந்து உருட்டி விளக்காக்கி நடுவில் பள்ளம் வைத்து நல்லெண்ணை ஊற்றித் திரியிட்டு விளக்கேற்றித் தட்டுக்களில் அதை வைத்துத் தலையில் சுமந்து செல்வதே 'மாவிளக்கு எடுப்பது..'

தயார் செய்து வைக்கப்பட்டிருந்த மாவிளக்கை ஏந்தியபடி ஒவ்வொருவரும் தத்தம் வீடுகளில் காத்திருக்க.. ஊரின் கடை கோடியிலிருந்த வீட்டிலிருந்து முதல் மாவிளக்கை ஏந்திய பெண்ணுடன் 'மாவிளக்கு' ஊர்வலம் ஆரம்பமானது.. மொளப்பாரி ஊர்வலம் போல இந்த ஊர்வலத்திலும் பெட்ரோமேக்ஸ் லைட்டுகள் காவலுக்கு வர, பாதையின் இருபக்கமும் வேடிக்கை பார்க்கும் மக்கள் கூட்டம் நடந்து வந்தது.. ஊர்வலத்தின் முன்பு கரக ஆட்டக் குழுவினர் ஆடிக் கொண்டிருக்க ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் மாவிளக்கை ஏந்திய பெண்கள் சேர்ந்து கொள்ள கோவிலை நெருங்கும் போது பின்னிரவின் இருளை

விரட்டும் நட்சத்திரக் குவியல்களாக பெண்கள் ஏந்தி வந்த மாவிளக்குகளின் வெளிச்சப் புள்ளிகள் மின்னின..

மாவிளக்குகள் கோவில் சந்திதானத்தில் வரிசை கட்டி வைக்கப்பட்டவுடன் அம்மனுக்கு அபிசேக, ஆராதனையும், தீபாதரனையும் நடந்தேறின.. விழாக்கால அலுப்புடன் அவரவரின் மாவிளக்குத் தட்டுக்களுடன் பெண்கள் கூட்டம் கலைந்து அவரவரின் வீடுகளை நோக்கிச் சென்றார்கள்.. மல்லிகாவுடன் பேசியபடி நடந்த பூர்ணிமா பாதையின் ஓரமாக நின்றிருந்த அரவிந்தனைக் கண்டதும் கால்கள் பின்னத் தேங்கி நின்று விட்டாள்.. அவளது கண்கள் பூமாவைத் தேடின..

"என்னடி.. நின்னுட்ட..?" மல்லிகா கேள்வியாகப் பார்த்தாள்..

"நீ போ மல்லி.."

"நீ..?"

"அம்மா கூட வர்றேன்.."

"இதென்னடி கூத்தா இருக்கு..? நீ என்ன தொட்டியில படுத்துக்கிடக்கிற பச்சப்புள்ளயா..? அம்மா முந்தியப் பிடிச்சுக்கிட்டு ஒளிஞ்சுக்கிறவ.. எப்போ இருந்துடி அம்மாவத் தேட ஆரம்பிச்ச..?"

'நேத்து ராத்திரியில இருந்துதான்..' மனதுக்குள் சொல்லிக் கொண்டாள் பூர்ணிமா.. அரவிந்தனின் ஆவேசமான அணுகுமுறையைக் கண்ட பின்னும் அவனிடம் தனியாக சிக்கிக் கொள்வதில் அவளுக்கு உடன்பாடில்லை..

மகளும் அவளது தோழியும் பேசிக் கொள்வதை கேட்டபடி அங்கு வந்த பூமாவின் மனதில் புயலடித்தது.. மல்லிகா கேட்ட கேள்வியைத்தான் அவளது மனமும் கேட்டது.. அவளது மகள் எதற்காக தாயின் துணையைத் தேட ஆரம்பித்திருக்கிறாள்..?

மாதவன் வயலூரின் பிரசிடெண்ட், பணக்காரர் என்றாலும் அடிப்படையில் அவர் ஒரு விவசாயி.. வயலிலும், தென்னந்தோப்பிலும் இருப்பவருக்கு பூர்ணிமா சாப்பாடு

கொண்டு செல்வது உண்டு.. ஆளில்லாத ஒற்றையடிப் பாதையில் தன்னந்தனியாக ஒற்றையாகத்தான் போய் வருவாள்.. ஆற்றில் குளிக்க தோழிகள் வராவிட்டால் இவள் தனித்து நீந்திக் குளித்து விட்டு வந்ததுண்டு..

அப்போதெல்லாம் தாயின் துணையைத் தேடாத பூர்ணிமா இப்போது மட்டும் மல்லிகா சொல்வதைப் போல ஒளிந்து கொள்ளத் தாயின் முந்தானையைத் தேடுவது ஏன்..?

"என்ன மல்லி.. ஒன் ஜோட்டுப் பொண்ணு என்ன சொல்றா..?"

தோழிகளின் உரையாடலைக் கேட்காததைப் போல அவர்களுடன் சேர்ந்து கொண்டாள் பூமா.. தாயைக் கண்டதும் பூர்ணிமாவின் முகத்திலிருந்த பயம் அகல்வதை கூட்டத்தோடு கூட்டமாக கலந்து நின்ற பார்த்திபன் கவனித்தான்.. தங்கையை பயமுறுத்துவது எது என்பதை ஓரளவுக்குத் தெரிந்து வைத்திருந்ததினால் அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது..

'இதுக்குத்தான் இந்த மெட்ராஸ்காரன் இங்க டேரா போட்டிருக்கானா..? எடுபட்ட பய.. அப்பன் மேலயும் மகன் மேலயும் இருக்கற ஆத்திரத்தில அவுக வீட்டுப் பொண்ணக் கைப்பத்தலாம்ன்னு நினைக்கிறானா..? இது வயலூருடா.. சோழவந்தான் பூமி.. எங்க ஊரு மண்ணையும் பொண்ணையும் உசிரக் கொடுத்துக் காக்கிற வம்சம்டா எங்க வம்சம்.. ஒன் அத்தகாரி மேனகா போல மண்ணயும் பொண்ணயும் ஒனக்குத் தார வாத்துக் கொடுக்கத் தவமிருக்கிற ஈனப் பிறவிகன்னு எங்கள நினைச்சியா..? வெட்டருவாளத் தூக்குனா வீசாம அதக் கீழே இறக்க மாட்டோம்டா.. யாரு வீட்டுப் பொண்ணுகிட்ட வம்பு வளக்க நினைக்கிற..? பொளந்துருவேன் பொளந்து..'

கனல் வீசும் முகத்துடன் அவன் தாயையும், தங்கையையும் தொடர்ந்து வீட்டுக்குப் போனான்.. திருவிழா சமயத்தில் அரவிந்தனிடம் வம்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்று ஊர்ப் பெரிய மனிதனின் மகனாக தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டாலும் சினத்தில் சிவந்திருந்த கண்கள்

அரவிந்தனைச் சுட்டெரிப்பதைப் போல எச்சரிக்கத் தவறவில்லை..

அத்தியாயம்- 19

"என்னடா தம்பி சொல்லுற..?"

அதிர்ச்சியுடன் வாய் பொத்தினாள் பூமா.. மகன் சொன்ன செய்தியில் அவளுக்கு மூச்சை அடைத்தது..

மேனகாவைக் கண்டாலே பூமா காத தூரத்துக்கு விலகிச் செல்வாள்.. அவளது அண்ணன் மகன் பூமாவின் மகளிடம் வம்பு வளர்க்கிறானா..?

"ஆமாம்மா.." உறுதியாக தலையை அசைத்தான் பார்த்திபன்..

"நீயா எதையாச்சும் சொல்லாதப்பா.. இது பொம்பளப் புள்ள விசயம்.. சூதானமாப் பேசனும்.. முள்ளு மேல சேல பட்டாலும் சேல மேல முள்ளு பட்டாலும் சேதம் முள்ளுக்கில்லடா மகனே.. சேலைக்குத்தான்.. இத நினைப்பில வைச்சுப் பேசுப்பா.."

"எனக்குத் தெரியாதாம்மா..? இல்லாதத நான் சொல்லுவேனா..? மொளப்பாரி ஊர்வலத்தில நம்ம பூரணி நடந்து வர்றதயே வைச்சு கண்ணு வாங்காம பாத்துக்கிட்டு வர்றான்.. இவனப் பாத்தா பூரணி திகிலடிச்சதப் போல ஆகிருது.."

"ஆத்தி.. அதான் என் புள்ளக்கி வேர்த்துச்சா..?"

"அந்த அளவுக்கு தங்கச்சி பயந்து போயிருக்குன்னா இந்தக் காவாலிப்பய என்னத்தையோ செஞ்சு தொலச்சிருக்கான்ம்மா.. இல்லேன்னா இவனக் கண்டு பூரணி மிரளாது.."

பூமா கலங்கிப் போனாள்.. மேனகா தன் மகளை அரவிந்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்து விடும் கனவில் இருக்கிறாள் என்பதை அவள் அறிவாள்.. ஊர் முழுவதும் ஊர்மிளாவுக்குத்தான் அரவிந்தன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள்.. மாதவனைக் கைபிடிக்கும்

கனவு பூமாவினால் கலைந்து விட்டதைப் போல, அரவிந்தனுக்குத் தன் மகளைக் கொடுக்கும் கனவு பூமாவின் மகளால் கலைந்து விட்டால் அவளால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியுமா..? பகை முடிக்க அவள் எந்த எல்லைக்கும் போகத் தயங்க மாட்டாளே..பூமா இப்படி நினைத்தால் அவளது மகன் வேறொரு கோணத்தில் நினைத்து வைத்தான்.

."அவனப் பத்தி விசாரிச்சுட்டேன்ம்மா.. நினச்சத நடத்திக் காட்டனும்ங்கிற வெறி புடிச்சவனாம் அவன்.. அதுக்காக எதை வேண்டும்னாலும் சொய்வானாம்.."

'மேனகாவோட அண்ணன் மகன் வேற எப்படியிருப்பான்..?'

"தோத்துப் பழக்கமில்லாதவனாம்மா.."

'ஆத்தி.. ஜெயிக்கிறதுக்காக என் மகளக் கடத்திருவானோ..'

எந்த நேரத்தில் இதை நினைத்தாளோ.. பின்னாளில் அரவிந்தன் அதைத்தான் செய்து வைத்தான்.. எதனால் இதை நினைத்தாள் என்று பூமாவிற்கேத் தெரியவில்லை.. நடக்கப் போகும் நிகழ்வின் அறிகுறி நம்மையும் அறியாமல் நினைவுகளில் புலப்பட்டு விடுவதுண்டு..

"அவன் மொத முறையா தோத்திருக்கிறது அப்பாகிட்ட மட்டும்தான்ம்மா.. என்மேல ஆங்காரமா இருக்கான்.."

"பார்த்தி.." பூமாவின் குரல் நடுங்கியது..

"நீ என்னப்பா சொல்ல வர்ற..?"

"எம்மேலயும், அப்பா மேலயும் இருக்கிற வன்மத்தில பூரணிகிட்ட வெளையாடிப் பாக்க நினைக்கிறானோன்னு சந்தேகப் படறேம்மா.."

பூமா உறைந்து போனாள்.. பார்த்திபன் ஒன்றைக் கணித்தால் அது மிகச் சரியான ஒன்றாக இருக்கும் என்பதை அவள் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறாள்.. அரவிந்தன் அந்த ஊருக்கு வந்த போதே அவன் வெட்டியாக மேனகாவின் பின்னால் வருபவனல்ல.. அவனது நோக்கம் வேறாக இருக்கக் கூடும் என்பதைச் சரியாக யூகித்துச் சொன்னவன் பார்த்திபன்..

"ஏன் சாமி.. நம்ம வீட்டுப் புள்ள என்ன ரோட்டிலயா நிக்குது.. ?அவ மேல கண்ண வைச்சா நாம கையக்காலப் பதம் பாத்துருவோம்ன்னு அவனுக்குத் தெரியாதா..?"

மண்மணம் மாறாத கோபத்தோடு கேட்டாள் பூமா.. தெனாவெட்டு கொண்டவர்கள் கிராமத்து மக்கள்.. தேவைப்பட்டால் கையிலிருக்கும் கல்லைக் கூட ஆயுதமாக பயன்படுத்தி எதிரியின் மண்டையைப் பிளக்கும் பெண்கள் வாழும் ஊர் வயலூர்..

"அவன் தெனாவெட்டுப் புடிச்சவன்ம்மா.. பணத்திமிருல ஆடிப் பாக்கறான்.. திருவிழா முடியட்டும்ன்னு இருக்கேன்.. அப்புறம் பாரு.. அவனுக்கொரு திருவிழாக் கொண்டாடி முடிச்சுப் புடறேன்.."

மகன் சொன்னதைச் செய்பவன் என்று பூமாவுக்குத் தெரியும்.. பார்த்திபன் கை வைத்தால் என்னவெல்லாம் தகராறுகள் கிளம்புமோ என்ற கலக்கம் அவளது மனதைச் சூழ்ந்தது..வாழ்க்கையை வாழ்க்கையாக வாழத்தான் எல்லோரும் ஆசை கொள்கிறார்கள்.. அந்த வரம் வாய்க்க வேண்டுமே.. திமிர் பிடித்த மேனகா மாதவன்மீது ஆசை வைத்தாள்.. அவரோ பூமாவின் மீது காதல் கொண்டு அவளைக் கரம் பிடித்தார்.. இதை வரம் என்பதா..? கொடுப்பினையென்று கொண்டாடுவதா..? மாதவனைப் போன்ற ஓர் உத்தமமான காதல் கணவன் கிடைத்தது பூமாவிற்கு வரம்தான்.. கொடுப்பினைதான்.. அதைக் கொண்டாடி வாழ அவளால் முடிந்ததா..? மேனகாவின் ஆசையைத் தான் கலைத்து விட்டோமே என்ற குற்ற உணர்வு இன்னும் அவளை அரித்துத் தின்று கொண்டிருக்கிறதே..

காலம் காயத்தை ஆற்றும் மருந்துதான்.. மேனகாவின் மனக் காயம் ஏன் இன்னும் மாறவில்லை..? மாதவன் பூமாவை மணம் முடித்துக் கொண்ட செய்தியைக் கேட்டதும் ஓடி வந்து பார்த்தாளே.. அப்போது மேனகாவின் விழிகளில் தெரிந்த ஆத்திரமும், வன்மமும் ஒரு துளியும் குறையாமல் இப்போதும் இருக்கிறதே.. காலம் ஏன் மேனகாவை மாற்ற வில்லை..? அவளது மனக்காயத்தை ஆற்றவில்லை..?

விடை தெரியாத கேள்விகளை முன் வைத்து விளையாடிக் களிக்கிறது விதி..! நாளை என்ன நடக்கும் எது நடக்கும் என்பதை யாரறிவார்..?

வாழ்க்கை பி.எஸ் வீரப்பாவைப் போல 'ஹா, ஹா' வென உரத்துச் சிரித்து மிரட்டுவதில் களைத்துப் போனாள் பூமா.. வாழ்க்கையில் வாழ்க்கைக்குத் தெரியாமல் ஓடி, ஒளிய இடமேது..?

போதும், போதும் எனும் அளவிற்கு மனது குழப்பங்களாலும், பயங்களாலும் திணறிக் கொண்டிருந்தது.. அரவிந்தனை பார்த்திபன் பார்த்துக் கொள்வான் என்று தைரியம் கொள்ள முடியாமல் என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்ற மனப் போராட்டம் எனும் சிலந்தி வலைக்குள் சிக்கிக் கொண்டாள் பூமா..

பார்த்திபன் தீரன்.. அரவிந்தனைப் பந்தாடி விடுவான் என்பதில் கடுகளவும் சந்தேகமில்லை.. அடி வாங்கும் அரவிந்தன் வயலூரை விட்டுப் போய் விடுவானா..? பூர்ணிமாவைப் பின் தொடர்வதை நிறுத்தி விடுவானா..? இதில்தான் பூமா சந்தேகம் கொண்டாள்.. பூர்ணிமாவின் எதிர்காலத்தைக் குறித்த கவலை முதன் முதலாக அவளது மனதில் எழுந்தது.. மாதவனைப் போன்ற பராக்கிரமசாலிக்கு மகளாகப் பிறந்தவள், பார்த்திபனைப் போன்ற அண்ணனுக்குத் தங்கையானவள்.. அவளைப் பற்றிக் கவலைப்பட என்ன இருக்கிறது என்ற பூமாவின் இறுமாப்பு ஆட்டம் கண்டது..

அரவிந்தனை பார்த்திபன் கை வைத்தால், எதற்காக அவனை இவன் அடிக்க கை வைத்தான் என்ற கேள்வி எழும்பாதா..? ஒரு சிறு பொறி கிடைத்தாலும் போதும்.. மேனகா அதை ஊதிப் பெரும் நெருப்பாக்கி விடுவாள்.. அவளுடைய அண்ணன் மகள்மீது கை வைத்தால் சும்மா விடுவாளா..? ஊசி இடம் கொடுக்காமல் நூல் நுழையுமா என்ற கேள்வியை அவள் எழுப்பி விட்டால் பூர்ணிமாவின் நடத்தையில் கரும்புள்ளி வைக்கப் பட்டு விடுமே.. மேனகா அதற்காகத்தானே காத்திருக்கிறாள்..? பழைய வன்மத்தோடு கூடுதலாக அவளது மகளை மறுத்து அரவிந்தன் பூமாவின் மகளிடம் மயங்கி விட்ட வன்மமும்

சேர்ந்து கொள்ளுமே.. பூர்ணிமாவின் எதிர்காலம் கேள்விக் குறியாகி விடுமே..

நினைக்க, நினைக்க குழப்பம்தான் அதிகரித்தது.. மனதில் மலையேறி அமர்ந்து கொண்டதைப் போல கனத்தது.. சோர்வு நிரம்பி வழிந்த பொழுதாய் அந்தப் பொழுது விடிந்திருந்தது. எங்கோ கால வெளியற்ற சூன்ய வெளியில் சிக்கிக் கொண்டிருப்பதைப் போலக் களைத்துச் சரிந்தது மனது.. எதைப் பற்றியும் யோசிக்காமல் நிம்மதியாக வாழ்ந்த வாழ்வில் இதுபோன்ற சிக்கல்களும் முளைக்கக் கூடும் என்பதில் நிம்மதியை இழந்து தவித்தாள் பூமா.. மகளைப் பார்த்தாள்..

புதுப்பாவாடைத் தாவணி.. கசங்கும் என்று கூட யோசிக்காமல் வெறும் தரையில் படுத்து விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தாள் பூர்ணிமா.. முதல் நாள் இரவிலிருந்து இதைத்தான் செய்கிறாள் என்பதை நினைவு கூர்ந்தாள் பூமா.. விட்டத்தில் அப்படி என்னதான் இருக்கிறது என்று அண்ணாந்து பார்த்தாள்.. அவளது சிற்றறிவுக்கு எதுவும் புலப்படவில்லை.. வானிலை ஆராய்ச்சியைப் பற்றி தொலைக்காட்சி செய்திகளில் கேட்டிருக்கிறாள்.. விட்டத்து ஆராய்ச்சியைப் பற்றி இப்போதுதான் அறிகிறாள்..

தாயின் கவலை நிரம்பிய பார்வையை உணராமல் எங்கோ வெறித்துக் கொண்டிருந்தாள் பூர்ணிமா.. முதல் நாள் இரவில், இருட்டுச் சந்தில், முதன் முதலாக அவள் உணர்ந்த ஆணின் ஸ்பரிசம் அவளை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.. உதடுகளில் அவனது முத்தத்தை உணர்ந்தவள் திடுக்கிட்டுப் போனாள்.. அவனைத் தள்ளி விட யத்தனித்தவளுக்கு அவள் வீட்டில்தான் படுத்திருக்கிறாள் என்ற நினைவு திரும்பியது..

'முடிவற்ற பெருங்கனவு..!'

முடித்து வைப்பது யார்..? அவனா..?

மனம் எழுப்பிய இந்தக் கேள்வியில் அரண்டு போனாள் பூர்ணிமா..

'இந்தக் கள்வனைக் காதலிடி..' காதோரமாக அவனது குரல் கிசுகிசுத்ததில் உடல் தூக்கிப் போட்டு வியர்வை துளிர்த்தது.. தாவணியில் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்..

குளிர்பனியில் சில்லிட்டிருந்த தரையைத் தொட்டுப் பார்த்தாள் பூமா.. ஐஸ் கட்டிகளை அடுக்கி வைத்ததைப் போல இருந்தது..

'இந்தச் சில்லுத் தரயில படுத்திருக்கவளுக்கு எப்புடி வேர்க்கும்..?'

பூமா எழுந்து வாசலுக்குப் போனாள்.. விடிந்து கொண்டிருந்த வேளையில் ஊர்ப் பெண்கள் கோவிலின் முன்னால் பொங்கல் வைக்கத் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.. வாசலில் நின்று வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பார்த்திபன் தாயின் காலடியோசை கேட்டுத் திரும்பினான்..

"என்னம்மா.. இங்க வந்து நிக்கிற..? பொங்க வைக்கப் போகனுமில்ல..?"

மொளப்பாரி சுமக்கவும், மாவிளக்கு எடுக்கவும் வீட்டில் உள்ள வயதுப் பெண்களையும், சிறுமிகளையும் அனுப்பி வைக்கும் கிராமத்துத் தாய்மார்கள், பொங்கல் வைக்க மட்டும் அவர்களைத் தவிர்த்துத் தாங்களே செல்வார்கள்.. இல்லையென்றால்.. வீட்டின் மருமகள்களை அனுப்பி வைப்பார்கள்..

இதன் பின்னால் ஓர் தாத்பர்யமே உள்ளது.. வீட்டில் பிறந்த பெண்கள் புகுந்த வீட்டிற்குச் செல்லும்வரை அடுப்பங்கரையின் வெப்பமும், ஆவியும் தாக்காமல் பூப்போல இருக்கட்டும் என்ற வாத்சல்யம்தான் காரணம்.. கிராமங்களில் வயதுப் பெண்களை வெளியில் விட மாட்டார்கள்.. இதுபோன்ற திருவிழாக் காலங்களில் அவர்களை புத்தாடை அணிய வைத்து, சேர்த்து வைத்திருக்கும் நகைகளைப் போட்டு அலங்காரப் பதுமைகளாக மொளப்பாரி, மாவிளக்கை எடுக்க வைத்தால் ஊர்வலத்தில் நடந்து வரும் திருமண வயதுப் பெண்களை, மாப்பிள்ளைகளைப் பெற்றவர்களும்,

திருமண வயதில் இருக்கும் ஆண்களும் பார்த்து வைத்துக் கொள்வார்கள்.. திருவிழா முடிந்தவுடன் அவர்கள் மனதில் குறித்து வைத்திருக்கும் பெண்களின் வீடுகளுக்கு முறைப்படி பெண் கேட்டுப் போவார்கள்.. அதற்காகத்தான் மொளப்பாரி, மாவிளக்கு எடுக்கும் ஊர்வலத்திற்கு வயதுப் பெண்களை அனுப்பி வைப்பது..அத்துடன் அம்மனுக்கான அலுப்பில்லாத கைங்கர்யத்தை அவர்கள் செய்து அம்மனின் ஆசியைப் பெறுவார்கள் அல்லவா..?

'நாலையும் யோசிக்கனும்..'

கிராமத்தின் பெரியவர்கள் அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் இவை.. நான்கையும் யோசிக்க வேண்டும் என்று அவர்கள் அறிவுறுத்துவதில்தான் எத்துனை உண்மை அடங்கியிருக்கிறது.. நான்கையும் யோசித்துச் செயல்பட வேண்டும் என்று அவர்கள் சொல்லும் அறிவுரைகள் அத்தனையும் நான்கு திசைகளுக்குள் இருக்கும் உலகில் வாழப் போதுமான நெறிமுறைகள்.. இதை அன்றைய கிராமவாசிகள் உணர்ந்து வாழ்ந்ததினால் அவர்களது வாழ்க்கை கலாச்சாரத்துடன் சிறப்பாக இருந்தது.. இன்றுதான் கிராமங்களும் அழிந்து கிராமியக் கலாச்சாரமும் காணாமல் போய் கொண்டிருக்கிறதே..

"இந்தா.. இப்பப் போயி பொங்கப் பானய தூக்கிக்கறேம்ப்பா.. ராத்திரியே அத விலக்கிக் கழுவிக் காய வைச்சு, மஞ்ச குங்குமம் வைச்சுத் தயாராத்தான் எடுத்து வைச்சிருக்கேன்.. அரிசி, பருப்பு, நெய், பால், முந்திரி, கருப்பட்டியெல்லாம் சருவச்சட்டியில எடுத்து வைச்சாச்சு.. மாவிளக்கு எடுக்கப் போனப்பவே நாம பொங்க வைக்க வேண்டிய இடத்தில அடுப்பக் கூட்டி வைச்சிட்டுத்தான் வந்தேன்.. பால்கார முனியப்பன்கிட்ட விறகுக்கட்ட கொடுத்து விட்டுட்டேன்.."

"சரிம்மா.. இப்ப ஊர்வலம் வந்திரும்.. மசமசன்னு நிக்காத.."

பூமா வீட்டுக்குள் போகாமல் தேங்கி நின்று மகனின் முகத்தைப் பார்த்தாள்.. பார்த்திபன் புருவங்களை உயர்த்தினான்..

"பார்த்தி.."

"சொல்லும்மா.."

"அந்த அரவிந்தன அடி கை வைக்க வேணாம்ப்பா.."

"பின்ன..? அவனக் கொஞ்சச் சொல்றியா..?"

பார்த்திபனுக்கு கோபம் வந்து விட்டது.. அவனே எப்போது திருவிழா முடியும், அந்த அரவிந்தனை இழுத்துப் போட்டு மிதிக்கலாம் என்று வெறி, வெறியாக இருக்கிறான்.. அவனிடம் போய் பூமா இப்படி ஒரு கோரிக்கையை வைத்தால் கேட்டுக் கொண்டு சும்மாவா இருப்பான்..?

"நான் சொல்றதக் கேளு பார்த்தி..”

பூமா கெஞ்சினாள்.. தொலைவில் பொங்கல் பானைகளுக்கான ஊர்வலம் ஆரம்பித்து விட்டதற்கான மேளச்சப்தம் கேட்டது.. பரபரப்புடன் மகனைப் பார்த்தாள் பூமா..

அத்தியாயம்- 20

ஊர்வலம் நெருங்குவதற்குள் மகனிடம் சொல்ல வேண்டியதை சொல்லி முடித்து விடவேண்டும் என்ற பதைப்பு பூமாவிற்கு.. அவள் பொங்கல் வைக்கச் சென்று விட்டால் அடுத்தடுத்து வேலைகள் ஆரம்பித்து விடும்.. பார்த்திபன் கோவில், ஆறு, வயல், தோழர்கள் என்று வெளியே சென்று விடுவான்.. கிராமத்தில் ஆண்களை வீட்டில் பிடித்து வைக்க முடியாது.. அவர்கள் ஊர் சுற்றிகள்..

பொங்கல் வைத்து முடித்தவுடன் கரகம், ஆட்டம், பாட்டம் ஆரம்பமாகி விடும்.. விடிய விடிய நாடகம் நடக்கும்.. மறுநாள் வீட்டு வீட்டிற்கு கறிச்சோறு.. அசைவ விருந்தில் உள்ள அத்தனை வகைகளையும் சமைத்து உண்ணுவார்கள்.. மூன்றாம் நாள் திருவிழா முடிந்து விட திருவிழா கொண்டாட வந்திருந்த உறவினர்கள் தத்தம் ஊர்களுக்கு பெட்டியைக் கட்டி விடுவார்கள்.. கலகலவென

இருந்த ஊர் வெறிச்சோடிக் காணப்படும்.. மெல்ல இயல்பு வாழ்க்கைக்கு ஊர் திரும்பும்..

அப்போது மகனிடம் உட்கார்ந்து ஆற அமர பேசிக் கொள்ளலாம் என்று விட்டு விடமுடியாது.. பார்த்திபன் ரத்தம் கொதித்தவன்.. அரவிந்தன் தனியாக அகப்பட்டு விட்டால் அடி கை வைத்து விடுவான்.. அவன் அப்படிச் செய்து விடாமல் பூமா தடுத்து விட வேண்டும்..

"கொஞ்சச் சொல்லல பார்த்தி.. ஒதுங்கச் சொல்றேன்.." பூமா தவியாய் தவித்தாள்..

"எப்புடிம்மா ஒதுங்க முடியும்..? இருட்டுச் சந்துக்குள்ள வந்த தங்கச்சி ஏம்மா பயந்து ஓடி வந்துச்சு..? இருட்டப் பாத்துப் பயந்துச்சுன்னு சொல்லிராதே.. இல்லேன்னு உனக்கும் புரியும்.. எனக்கும் தெரியும்.. இருட்டப் பாத்துப் பயப்படறது இல்ல எந்தங்கச்சி.. அவன வெட்டிப் போட்டாத்தான் என்மனசு ஆறும்.. இந்த பார்த்திபனோட தங்கச்சி மேல அவன கண்ண வைப்பான்.. கைய வைப்பான்.. நான் பாத்துக்கிட்டு சும்மா இருக்கனுமா..? இதச் சொல்ல உனக்கு நாக்குக் கூசல..?"

"நான் பெத்த மகனே..!" மகனின் சீற்றத்தில் பூமா அழுதுவிட்டாள்..

அவளுக்கென்ன குறை..? ஆண்பிள்ளை சிங்கத்தைப் பெற்றெடுத்திருக்கிறாள்..

"ஒன் கோபம் எனக்கு இல்லைன்னா நெனைக்கிற..? இருக்குது ராஜா.. மலையளவு கோபம் என் மனசில இருக்கு.. ஆனா தம்பி.. இது பொம்பளப்புள்ள விசயம்.. பொத்தித்தான வைக்கனும்... அவன் மேல கை வைக்கனும்னா வேற ஏதாச்சும் ஒரு காரணத்தச் சொல்லிக் கையக் கால முறி.. அதுக்கு முன்னால ஒந்தங்கச்சிக்கு ஒரு மாப்பிள்ளயப் பாத்துக் கட்டிக் கொடுத்திரு சாமி.. ஒன்னக் கையெடுத்துக் கும்பிடறேன்.."

"ஏம்மா.. எந்தக் காட்டு பயலுக்கோ பயந்து எந்தங்கச்சிக்கு அவசர அவசரமா மாப்பிள்ளையப் பாக்கச் சொல்றியா..? அறிவோடதான் பேசறியா..? எந்தங்கச்சிக்கு நிறுத்தி, நிதானமா உலகம் பூரா சுத்திவந்து மாப்பிள்ளயத் தேடி

சீமையில கட்டிக் கொடுப்பேன்.. அத விட்டுட்டு போக்கத்த பயலுக்கு அஞ்சி பொழுது சாயறதுக்குள்ள எவனாச்சும் ஒரு மாங்கா மடயன மாப்பிள்ளையாக் கொண்டு வந்து நிப்பாட்ட மாட்டேன்.. புரிஞ்சுக்க.. இப்ப என்ன வேணும் உனக்கு.. அவன வெளிய தெரியாம அடிச்சுப் போடனும்.. அம்புட்டுத்தான.. அத நான் பாத்துக்கறேன்.. அந்தாபாரு.. பொங்கப்பான ஊர்வலம் வந்துருச்சு.. நீ கிளம்பு.."

"நீயும் வர்றியா..?"

"நான் எதுக்கு..? ஒனக்கு வெறக ஒடிச்சுக் கொடுத்து உலயத் தூக்கி வைக்க ஒத்தாசைக்குக் கூப்பிடறியா..? அதுக்கு அப்பா அங்கிருப்பார்.. ஆள விடு.. வீட்டில பூரணி தனியா இருக்கு.. எப்பவும் போல நம்ம வீடுதானன்னு நாம நம்பி விட்டிறக் கூடாது.. இந்தா இருக்கிற இருட்டுச் சந்து வரைக்கும் வரத் துணிஞ்சவனுக்கு வீட்டுக்கு வர எம்புட்டு நேரமாகும்..?"

"வந்திருவானா அவன்..?" பொங்கினாள் பூமா..

"இது.. இது.. இதுதான் எங்க அம்மா.. இப்புடியே இரு.. ஒருவேள அவன் வந்துட்டான்னா என்ன செய்யறது..? ஊரே எதுத்து நிக்க ஆத்தக் கலக்கப் பாத்தவன் வீட்டக் கலக்கப் பாவ புண்ணியம் பாப்பானா என்ன..? அவன் எதுக்கும் துணிஞ்சவன்.. நான் வீட்டில இருக்கேன்.. இனி ஆத்துக்குக் குளிக்கக் கூட பூரணிய அனுப்பாத.. நம்ம வீட்டுக் குழாயில தண்ணி ஆத்துத் தண்ணிய போலதான் பாஞ்சு வரும்.. அது வீட்டுக்குள்ளயே இருக்கட்டும்.."

துள்ளித் திரியும் கன்றுக்குட்டியைப் போல சுதந்திரமாக வலம் வந்த மகளின் சுதந்திரம் பறி போய் வீட்டுக் காவலில் வைக்கப்படப் போகிறாள் என்பதில் மனம் வெதும்பிப் போனாள் பூமா.. பெண்ணென்று பிறந்து விட்டால் இந்த நிலைதானா..?

"இப்புடியே எத்தன நாள் காவலிருப்ப பார்த்தி..?"

"எந்தங்கச்சிக்கு ஏத்த மாப்பிள்ள கிடைக்கிற வரைக்கும் காவலிருப்பேன்.. அதுக்கப்புறமா எந்தங்கச்சியக் கட்டிக்கிட்டுப் போறவன் காவலிருப்பான்.. போதுமா..? கிளம்பு.. கிளம்பு.."

பார்த்திபன் முடுக்கி விட்டதில் பூமா மனக் கலக்கம் மாறாமல் வீட்டுக்குள் சென்றாள்.. புதுப்பட்டுப் பாவாடை, தாவணியை மாற்றாமல் வெறுந்தரையில் படுத்து விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்த பூர்ணிமா அப்படியே உறங்கியிருந்தாள்.. பயந்த குழந்தை போல அரண்ட தோற்றத்துடன் உறங்கிக் கொண்டிருந்த மகளைக் கண்ட பூமாவின் மனதில் விசனம் வந்தது.. கண்ணீர் மல்கியது..

'பச்சப்புள்ள இவ.. ஆத்தா மகமாயி.. நீதான இவளக் காப்பாத்தனும் தாயி..'

கண்களைத் துடைத்துக் கொண்டு, பொங்கல் பானையை தலையில் ஏந்தி வாசலுக்கு வந்தாள்.. ஊர்வலத்தில் சேர்ந்து கொண்டு கோவிலுக்குப் போனாள்.. பொங்கல் வைத்து அம்மனுக்குப் படைத்து விட்டுப் பொங்கல் பானையுடன் வீட்டுக்குத் திரும்பியவளுடன் மாதவன் வந்து சேர்ந்து கொண்டார்.. மனைவி கையிலிருந்த சருவத்தை அவர் வாங்கிக் கொள்ள..

"என்ன.. பிரசிடெண்டு ஐயா.. பொஞ்சாதிக்கு கூஜா தூக்கறிகளாக்கும்..?" என்று அவருடைய முறைக்காரி ஒருத்தி கேலியாகக் கேட்டாள்..

"நல்லாப் பாரு ஆத்தா.. இது கூஜா இல்ல.. சருவம்.." கையிலிருந்த பாத்திரத்தைத் தூக்கிக் காண்பித்தார் மாதவன்..

"அப்ப.. பொஞ்சாதிக்குக் கூஜாத் தூக்க மாட்டிங்கன்னு சொல்லுறீக.." அவள் குறும்பாகச் சிரித்தாள்..

"இது கூஜா இல்லேன்னுதான புள்ள சொன்னேன்.. எம் பொஞ்சாதிக்குக் கூஜாத் தூக்க மாட்டேன்னு சொல்லவே இல்லியே.. பொஞ்சாதிக்குக் கூஜாத் தூக்காத புருசன் இந்த உலகத்தில ஆரு இருக்கா..?"

"எங்க ஊரு பிரசிடெண்டு இருக்காருன்னுல்ல நெனச்சோம்.."

"ஒன்ன ஆரு புள்ள அப்புடி நெனக்கச் சொன்னது..? ஊருக்குத்தான் பிரசிடெண்டு.. வீட்டில எம்பொஞ்சாதிக்குப் புருசன்.."

"அப்பா.. ஒங்க பெரும தாங்கல மாமோவ்.. ஒலகத்தில இல்லாத ரதியக் கட்டிப்புட்டிக.. இந்தத் தாங்கு தாங்கறிகளே.."

அந்தப் பெண்மணி பொறாமையுடன் கடந்து போக.. மாதவன் மனைவியைப் பார்த்துச் சிரித்தார்.. அவள் பதிலுக்குச் சிரிக்காமல் உம்மென்று இருந்ததில்..

"நானாடி அவகிட்டப் பேசினேன்..? அவளா வந்து வம்புக்கு இழுத்தாப் பதிலுக்கப் பேசாம என்னடி செய்யறது..?" என்று நியாயம் கேட்டார்..

"போதும்.. போதும்.. பேசாம வாங்க.. மகனும், மகளும் கல்யாணத்துக்கு நிக்கிறாங்க.. இதில இவரு, மொறப் பொண்ணுகூட பல்லக்காட்டிப் பேசினதுக்கு நான் பொறாமப் பட்டுட்டேனாம்.. முடியலடா சாமி.." முறைத்தாள் பூமா..

"அதச் சிரிச்சுக்கிட்டுத்தான் சொல்லுறது.."

பூமா சிரிக்கவில்லை.. மனதெல்லாம் கவலை வியாபித்திருக்கையில் எங்கேயிருந்து சிரிப்பு வரும்..?

அது புரியாத மாதவன் மனைவியின் மௌனத்திற்கான காரணம் என்னவாக இருக்க முடியும் என்ற ஆழ்ந்த யோசனையில் ஆழ்ந்தார்.. யோசனையின் முடிவு முதல் நாள் இரவு பார்த்திபன் கோபித்துக் கொண்டதால் வந்த மௌனம் என்று உரைக்க மனைவிக்குத் தேறுதல் சொன்னார்..

"ஒரு வயசுக்கு மேல புள்ளகள கண்டிக்க முடியாதுடி பூமா.."

"இப்ப என்னத்துக்கு இதைச் சொல்றீக..?"

"பார்த்திபன் பேசினது தப்புத்தான்.."

"எப்பப் பேசினது..?"

"நேத்து ராத்திரி.."

"அப்பப் பேசினது அப்பவே முடிஞ்சிருச்சு.. அவன் அதுக்குப் பின்னால ஆயிரம் பேச்சுப் பேசினான்.. அது உங்களுக்குத் தெரியுமா..?"

"எங்க தெரியுது..? அதான் அவன் அடுப்படிக்கு வந்து அம்மாகாரிகிட்ட மட்டும் குசுகுசுன்னு ரகசியம் பேசறானே.. அப்பனக் கண்டா மட்டும் கையக் கட்டிக்கிட்டுத் தள்ளி நிக்கிறான்.. மரியாதையாம்.. அப்பனுக்கும் மகனுக்கும் நடுவில மரியாதை என்னடி வேண்டிக்கிடக்கு..?"

மாதவனின் குரலில் அப்பட்டமான பொறாமை தொனித்தது.. இது வேறா என்ற ரீதியில் அலுப்புடன் பார்த்து வைத்தாள் பூமா.. இதற்கு என்ன அர்த்தம் என்று குழம்பியபடி வீட்டுக்குப் போய் சேர்ந்த மாதவன், மகனிடம்..

"இன்னைக்கு இவ ஒரு மார்க்கமா இருக்காப்பா.." என்று மனைவியைப் பற்றிக் குற்றப் பத்திரிக்கை வாசித்தார்..

பார்த்திபன் அதற்குப் பதில் சொல்லாமல் பலத்த சிந்தனையுடன் இருந்தான்.. மாதவனுக்கு இம்சையாக இருந்தது..

'இவன் பல மார்க்கமா இருக்கானே..'

மகளைப் பார்த்தார்.. அவள் தூக்கம் கலைந்து எழுந்து உட்கார்ந்து தலையைப் பிடித்துக் கொண்டிருந்தாள்..

'திருவிழா கொண்டாடற வீடு போலவா என்வீடு இருக்கு..? ஆளுக்கொரு மார்க்கமாத் திரியுதுகளே..'

பேசாமல் கோவிலிலேயே இருந்திருக்கலாம் என்று தோன்றியது அவருக்கு.. ஜே.ஜே என்ற மக்கள் கூட்டத்தையாவது பார்த்துக் கொண்டிருந்திருக்கலாம்.. அதை விட்டு விட்டுச் சர்க்கரைப் பொங்கலைத் தின்னும் ஆசையில் வீட்டுக்கு வந்தது தவறாகி விட்டது..

"டீ போடும்மா.. பூரணிக்குத் தலை வலிக்குது போல.."

பார்த்திபன் உத்தரவிட்டான்.. இது ஏன் தனக்குத் தோன்றவில்லையென்று தன்னைத்தானே மானசீகமாகக் குட்டிக் கொண்டார் மாதவன்.. அவரும்தான் இரவு முழுவதும் கண்விழித்துத் திருவிழா வேலைகளில் ஈடுபட்டிருந்தார்.. அவருக்கு 'டீ' வேண்டாமா..?

'இவனப் பாரு.. அப்பா வந்திருக்கார்.. அவருக்கு டீ போடும்மான்னு சொல்லாம தங்கச்சிக்கு டீ கேக்கறான்..'

அதிலொன்றும் அவருக்கு மனத்தாங்கல் இல்லை.. மகன் தங்கை மீது காட்டும் பாசத்தில் மகிழ்ந்துதான் போனார்.. அவரது மகன் மிகச் சிறந்த அண்ணன்..

"தல வலிக்காம என்ன செய்யும்..? நேத்து ராத்திரி சாப்பிட்டது.. விடிய விடிய கரகம் பார்த்து, மொளப்பாரி சுமந்து, மாவிளக்கு எடுத்துன்னு களச்சுப் போயி கிடக்கிறவளுக்கு வயித்தில எதையாச்சும் போட்டுட்டு டீயைக் குடுக்கனும்தம்பி.."

திருவிழாவை வேடிக்கை பார்க்கப் போயிருந்த விருந்தினர்களும் வந்துவிட, பூமா முன்னறையில் பந்திப் பாயை விரித்து இலைகளைப் போட்டாள்.. எப்போதும உதவிக்கு வரும் பூர்ணிமா சோர்ந்து அமர்ந்திருக்க..

"இதென்னடி ஆத்தா.. இந்தப் புள்ள மெகாலு புடிச்சதனமா உக்காந்திருக்கு..?" என்றாள் பொன்னம்மா..

பொன்னம்மா மாதவனுக்கு அத்தை முறையாக வேண்டும்.. மதுரைக்காரி.. அவளது மகளைக் கட்ட வேண்டிய மாதவன் தவறிப் (?) போய் பூமாவைக் கட்டி விட்டார் என்று பொருமுவாள்.. திருவிழாவுக்கு அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் வந்து இறங்கி விடுவாள்.. திருவிழாவின் மூன்று நாள்களிலும் மூவாயிரம் நொட்டனைகளைச் சொல்லிப் பூமாவை வெறுக்கடித்து விட்டுத்தான் மதுரைக்கு பஸ் ஏறுவாள்..

"தூக்கக் கலக்கத்தில இருக்கா பெரியம்மா..." எரிச்சலுடன் பொன்னம்மாளை விட்டுவிட்டு மாதவனை முறைத்தாள் பூமா..

"பெரியம்மாவா..? ஆருக்கு ஆரு பெரியம்மா.. உங்கம்மாவும் நானும் ஒரே வயசுதான்.. பத்துமாசம் முன்னால பொறந்துட்டேன்ங்கிறதுக்காக பெரியம்மான்னு பட்டம் கொடுத்துருவியா..?" சிடுசிடுத்தாள் பொன்னம்மா..

இப்படியொரு நியாயத்தை எங்கேயும் கேட்டதில்லை என்று பொன்னம்மாவுக்குத் தெரியாமல் மறைவில் நின்று தலையில் அடித்துக் கொண்டு பேச்சு திசை மாறிவிட்ட நிம்மதியுடன் மடமடவென இலைகளில் சர்க்கரைப்

பொங்கலையும் மாவிளக்கு எடுக்கப் பிணைந்த மாவையும் பரிமாறி விட்டு இட்லிகளை வைக்க ஆரம்பித்தாள் பூமா..

"நாளைக்குத்தான கறி விருந்து..?" பொன்னம்மாவுக்கு இட்லியும், சட்னி, சாம்பாரும் தொண்டையில் இறங்கவில்லை..

"ஊர் வழக்கம் அப்படித்தான் பெரியம்மா.." அழுத்தமாகச் சொல்லி விட்டு அடுத்து அவள் வாயைத் திறப்பதற்குள் அடுப்படிக்குள் புகுந்து விட்டாள் பூமா..

விருந்தினர்களை உபசரித்து விடலாம்.. இங்கிதம் என்றால் கிலோ என்ன விலையென்று எல்லை கடந்து அவர்கள் பேசும் பேச்சுக்களையும், கேட்கும் கேள்விகளையும், மூட்டி விடும் சண்டைகளையும்தான் சமாளிக்க முடிவதில்லை.. பூமாவுக்கு மூச்சு முட்டுவதைப் போல இருந்தது.

அத்தியாயம்- 21

வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு புல்லட்டில் ஏறப் போன பார்த்திபன் நடந்து செல்வதைப் போல மிக மெதுவாக சைக்கிளில் வந்து கொண்டிருந்த கந்தவேலைக் கண்டதும் நிதானித்தான்.. கந்தவேலின் முகம் ஞானியைப் போல இருந்தது..

'என்னடா இது.. புதுசாக் கல்யாணமானவன் இப்புடி வர்றான்..? விட்டாக் காவியக் கட்டிக்கிட்டு, சதுரகிரி மலப்பக்கம் சித்தரத்தேடிக்கிட்டு கிளம்பிருவான் போல இருக்கே.. என்னா கோராமையா இருக்கும்..? திருவிழாவுக்கு இவனோட மாமனாரு வீட்டில இருந்து மச்சினிச்சிக, படையா வந்து இறங்கியிருந்தாளுகளே.. கட்டினாக் கந்தவேலு பொண்ணக் கட்டினதப் போல அழகழகா மச்சினிச்சிக இருக்கிற வீடாப் பாத்துப் பொண்ணக் கட்டனும்னு அவனவன் பொறாமப்பட்டு வெந்து போனான்.. இவன் என்னடான்னா, சீக்கு விழுந்த கோழியப் போல சைக்கிள் மிதிச்சுட்டு வர்றான்..'

திருவிழா முடிந்து மூன்று நாள்களாகியிருந்தன.. வெறிச்சோடிப் போயிருந்தது ஊர்... திருவிழாக் கொண்டாட்டங்களில் திளைத்திருந்த மக்கள் அன்று

தான் காடு, கரை, கழனிப்பக்கம் தலை காட்ட ஆரம்பித்திருந்தார்கள்.. அன்று ஞாயிறு என்பதால் பார்த்திபன் நெல் வயலைப் பார்வையிட்டுப் போக வந்திருந்தான்..

"கீச்.. கீச்.."

கந்தவேல் ஓட்டி வந்த சைக்கிளுக்கே பொறுக்கவில்லை போல.. சத்துப் போதாதைப் போல அவன் மிதித்த மிதியில் சப்தம் போட்டு வைத்தது..

"ஏம்ப்பா.. புதுசாக் கல்யாணமானவன் இப்புடியா முகத்தத் தொங்கப் போட்டுக்கிட்டு இருப்ப..? இப்பத்தான் ஊர்த்திருவிழா முடிஞ்சுருக்கு.. திருவிழாவுக்கு ஒன் மாமனார் வீட்டில இருந்து மச்சினிச்சிக எல்லாம் வந்திருந்தாளுக.."

"கூடவே தடிமாட்டுத் தாண்டவராயன் போல மச்சினனும் வந்திருந்தானே.. அத நீ பாக்கலியா..? சும்மா அவளுக பக்கம் பாத்தாக்கூடப் பொலி போடறதப் போல மொறச்சுக்கிட்டே இருந்தான்ப்பா.. சோறு திங்கக்கூட வீட்டுப் பக்கம் போக பயமா இருந்துச்சு..."

"ஹா.. ஹா.. இது வேறயா..?"

"ஆமாம்ப்பா.. அது தெரியாம, ஒனக்கென்னடா.. ஒன்னுக்கு ரெண்டா மச்சினிச்சிக வந்திருக்காளுகன்னு நம்ம சேக்காளிப் பயலுக வெறுப்பேத்திட்டானுகப்பா... மச்சினனாப் பொறந்ததும் பொறந்தானே.. இதுகளுக்குத் தம்பிகாரனா பொறந்து தொலைச்சிருக்கக் கூடாதா..? அண்ணனாப் பொறந்து தொலச்சிருக்கான்.."

"கொடுமதான் போ.."

"வன்கொடுமடா பார்த்தி.."

"மாமனாரும், மாமியாரும் தங்கமானவுகளாச்சே.."

"வெளிப்பார்வைக்கு அப்படித்தான் தெரியும்.."

"உள்பார்வைக்கு எப்படித்தான் தெரியுது..?"

"அந்தக் கொடுமய ஏம்ப்பா கேக்கிற.. மாமனாரு வீட்டில இருந்து வந்ததுக தனியா வராம, சின்ன மாமனாரு

குடும்பம், பெரிய மாமனாரு குடும்பம்ன்னு வேனப் புடிச்சு வந்து இறங்கிருச்சுக.."

"விடுப்பா.. ஜனக்கட்டான குடும்பம்.. ஆளு பேருமா வீடு இருந்தா ஊருக்குள்ள மதிப்புதானேப்பா..?"

"ஊருக்குள்ள மதிப்புத்தான்.. அதுககிட்டத்தான் எதுவும் கிடைக்கல.."

"என்னப்பா சொல்ற..? மருமகனத் தாங்கற ஊராச்சேப்பா நம்ம ஊரு..?"

"அதுக என்னவோ அதுகள நான் தாங்கனுமங்கிறதப் போல முகத்த வைச்சுக்குச்சுகப்பா.. எனக்குப் பொண்ணக் கட்டிக் கொடுத்திருக்குதுகளாம்.."

"அதுக்கு..?"

"காலத்துக்கும் நான் பாதபூஜ பண்ணனும்னு நினைக்குதுக போல.. என் வீட்டுக்காரி திருவிழா ஆரம்பிக்கிறதுக்கு எட்டு நாளைக்கு முன்னாடியே எங்கிட்டச் சொல்லி வைச்சுட்டா.."

"என்னன்னு..?"

"அவ பொறந்த வீட்டாளுக முன்னால கெத்தாவும் இருக்கனுமாம்.. பந்த பாசமாவும் இருக்கனுமாம்.. அவளோட அப்பா வீட்டில கூட பரவாயில்லயாம்.. பொண்ணக் கொடுத்துட்டேமேன்னு பொறுத்துப் போயிரும்களாம்.. சித்தப்பன், பெரியப்பன் குடும்பத்தில ஏகத்துக்கும் சலம்பல் பண்ணும்ங்களாம்.."

"நல்லாத்தான சொல்லிக் கொடுத்திருக்கு..? அப்புறம் என்ன..?"

"ஏம்ப்பா நீ வேற.. ஒன்னு.. கெத்தா இருன்னு சொல்லித் தொலைக்கனும்.. இல்லேன்னா பந்தபாசமா இருன்னு சொல்லித் தொலைக்கனும்.. ரெண்டையும் கலந்து இருடான்னு சொன்னா ஒரு மனுசன் என்னப்பா பண்ணுவான்..?"

பார்த்திபனுக்குத் தெரியவில்லை.. அவன் என்ன முன்னே, பின்னே கல்யாணம் பண்ணி வாழ்ந்தா பார்த்திருக்கிறான்..? திருமண வாழ்வென்றால் இத்தனை சிக்கல்கள் இருக்கக் கூடுமா என்று வியப்பில் ஆழ்ந்தான் அவன்.. கந்தவேல் எப்படித்தான் மாமனார் வீட்டினரின் வருகையைச் சமாளித்தான் என்று அறிந்து கொள்ள அவனுக்கு ஆவல் வந்து விட்டது.

"நீ என்னப்பா பண்ணின..?"

"ஒட்டுக்கா வேனப் புடிச்சு அதுக வந்து இறங்குச்சுகளா..? நான் வாசப்பக்கம் நின்னுருந்தேன்.. கெத்தாவும் இருக்கனும், அதே சமயம் பந்தபாசமாவும் இருக்கனுமுன்னு வீட்டுக்காரி சொல்லி வைச்சிருக்காள்ல.. அதுனால குத்து மதிப்பா தலய மட்டும் அசச்சு வைச்சேன்.."

"அசத்திட்ட போ.."

"என்னத்த அசத்தினேன்..? அது அசரல பார்த்திபா.. பதிலுக்கு தலய ஆட்டாம விறப்பா இருந்துச்சுக.. சரி.. கெத்தக் காட்டிட்டோம்.. இனி பந்தபாசத்தக் காட்டுவோம்ன்னு ஏதோ ஓர்விதமா சிரிச்சு வைச்சேன்.."

"பயந்துருச்சுகளோ.."

"என்னான்னு தெரியலப்பா.. ஒன்னுக்கொன்னு பாத்துக்கிட்டு குசுகுசுன்னு காதக் கடிச்சுகுதுக.. நம்ம ஊரு பக்கத்துல இப்புடியெல்லாம் இல்லேங்குதுக.."

"அடப்பாவமே..! நீ நம்ம ஊருதானப்பா..? வேத்துக் கிரகத்துல இருந்தா குதிச்சிருக்க..?"

"அதுக அப்புடித்தான் பாத்து வைச்சுச்சுகப்பா.. வேற வழியில்லாம, மத்தவுகள வரவேற்கிறதப் போல 'வாங்க'ன்னு பொத்தாம் பொதுவா சொல்லி வைச்சுட்டேன்.."

"அப்பவாவது அடங்குச்சுகளா..?"

"எங்கேப்பா..? எங்காதுபட, உரக்கச் சத்தமா, அதுகளுக்குள்ள பேசிக்கிற மாதிரி, 'மாப்பிள்ள என்ன, ஒரு மார்க்கமா இருக்காரு..? விசாரிச்சுப் பொண்ணக் கொடுத்திருக்கனும்..'ன்னு சொல்லுதுகப்பா.."

"அடக் கடவுளே..! என்னப்பா சொல்ற..?"

பார்த்திபன் திகைத்துத்தான் போனான்.. இப்படி முன்னாடி போனால் கடிப்பதும், பின்னாடி போனால் உதைப்பதுமாக இருந்தால் ஒரு மனிதன் என்னதான் செய்வான்..? கந்தவேல் சைக்கிள் மிதித்து வந்த லட்சணத்தை நினைத்துப் பார்த்தான்.. மாமனார் வீட்டினரின் வருகை ஒரு மருமகனின் சக்தியை உறிஞ்சிவிடும் சக்தி வாய்ந்ததோ..

"நீ பேசறதப் பாத்தாக் கல்யாணம் கட்டிக்க யோசிக்கனும் போல இருக்கேப்பா.."

"ரொம்பவும் யோசிக்கனும் பார்த்தி... சூதானமாக பொண்ணத்தேடு... பொண்ணு மூக்கும் முழியுமா இருக்காளேன்னு அவசரப் பட்டுத் தலய ஆட்டிராதே.. மாமனாரோட குடும்பம் எப்படியாப்பட்ட 'லந்து' செய்யற குடும்பம்ன்னு நாலாபக்கமும் விசாரிச்சுட்டுப் பொண்ணக் கட்டு.. அப்புடி விசாரிக்காம தாலியக் கட்டிட்டேன்னு வைய்யி.. ஒன் பொழப்பும் என் பொழப்பப் போல ஆகிரும்.. என் சைக்கிளு போடற சத்தத்த ஒன் புல்லட்டும் போடும்.."

'என்னாது..?'

அரண்டு போன பார்த்திபன் தன் புல்லட்டைப் பார்த்தான்.. அது கீச், கீச் சென்று சப்தம் போடுவதைப் போல கற்பனைக் காட்சி கண்களில் விரிந்ததில் தோளைக் குலுக்கி..

"முடியலப்பா.." என்று சிலிர்த்தான்..

"சமாளிக்க முடியலதான் பார்த்தி.. ம்ஹீம்.. ஆளுகளா அதுக..? எப்புடித் தப்பிக்க நினச்சாலும் விடாம தாக்குதுகப்பா.. முடியல.. சேதாரம் நிச்சயம்.."

புலம்பி முடித்த கந்தவேல் சைக்கிளை 'எங்கே போகும், இந்தப் பாதை..?' என்ற ரீதியில் தொடுவானைப் பார்த்தபடி.. 'பொன்னே, பூவே' என்று மிதித்தபடி சென்றான்.

'எப்புடி இருந்தவன், எப்புடி ஆகிட்டான்..?'

பார்த்திபன் நண்பனை நிறுத்தி எங்கே போகிறாய் என்று கேட்கத்தான் நினைத்தான்.. கடைசி நொடியில் மனம் மாறி 'பாவம்.. இவனே கால் போன பக்கம் போகலாமுன்னு நிம்மதியத் தேடிப் போயிக்கிட்டு இருக்கான்..

திருவிழாவுக்கு வந்த கூட்டம் திருவிழா முடிஞ்சு மூணு நாளாகியும் பொட்டியக் கட்டாம டேரா போட்டிருந்தா ஊர விட்டு ஓடாம என்ன செய்வான்..?' என்று விட்டு விட்டான்..

புல்லட்டைக் கிளப்பி சாலைக்கு வந்தவன், சற்றுத் தொலைவில் அரவிந்தனின் கார் நிற்பதைக் கவனித்தான்.. கண்கள் சிவந்தான்.. ஆள் நடமாட்டமில்லாத சாலையில் காரை நிறுத்தி விட்டு இறங்கிக் காரில் சாய்ந்து நின்று செல்போனில் பேசிக் கொண்டிருந்த அரவிந்தனை மோதுவதைப் போலப் புல்லட்டைக் கொண்டு சென்று அவனை உரசி நிறுத்தினான்.. ஒதுங்க முயலாமல் திரும்பிப் பார்த்த அரவிந்தனின் தைரியத்தில் பார்த்திபனின் கோபம் அதிகரித்தது..

அத்தியாயம்- 22

காலைக் காற்று சில்லென ஆற்று நீரின் ஈரப்பசையைச் சுமந்து வந்து முடியைக் கலைத்ததில் தலையைக் கோதி விட்டபடி செல்போனில் பேசிக் கொண்டிருந்த அரவிந்தன் அவனை உராய்ந்தபடி புல்லட் வந்து நின்றதில் திரும்பிப் பார்த்தான்.. கோப முகத்தோடு இருந்த பார்த்திபனைக் கண்டதும்..

"ஓ.." என்றபடி செல்போனை அணைத்து விட்டு..

"என்ன..? உனக்கு டிரைவிங் தெரியாதா..?" என்று அமர்த்தலாக வினவினான்..

"டிரைவிங்கும் தெரியும்.. ஃபைட்டிங்கும் தெரியும்.." கனல் வீசும் பார்வையுடன் சொன்னான் பார்த்திபன்..

"ஈஸிட்..? அப்புறம் எதுக்காக ஸ்கூல் மாஸ்டரா ஆகியிருக்கிற..? சினிமாவில் ஸ்டண்ட் மாஸ்டராப் போயிருக்கலாமில்ல..?" அலட்டிக் கொள்ளாமல் கேட்டான் அரவிந்தன்..

"உன்கிட்டேயெல்லாம் நின்னு பேசிக்கிட்டு இருக்கேன் பாரு.. அந்தத் திமிருடா உனக்கு.." பார்த்திபன் புல்லட்டை

நிறுத்தி விட்டு அரவிந்தனின் மீது பாய்ந்து அவனது சட்டைக் காலரைக் கொத்தாகப் பிடித்தான்..

அரவிந்தன் திமிறித் தன் சட்டையை விடுவித்துக் கொண்டு பார்த்திபனின் மார்புமீது கை வைத்துத் தள்ளி நிறுத்தினான்..

"ஐ டோண்ட் லைக் இட்.." கண்டிப்புடன் சொன்னான்.

"உன் லைக்கப் பத்தி எனக்குக் கவலயில்லடா.. மெட்ராஸ்காரனுக்கு எங்க ஊரில் என்னடா வேல..?"

"எத்தனையோ இருக்கும்.. தட்'ஸ் மை பெர்சனல்.. அதையெல்லாம் உன்னிடம் சொல்லனும்னு கட்டாயமில்லை.."

"நீ என்னத்தயோ கிழிச்சுட்டுப் போன்னுதான் உன்ன இத்தன நாளா ஊருக்குள்ள உலாத்த விட்டுக்கிட்டு இருந்தேன்.. திருவிழா சமயம்ன்னு பேசாம இருந்தா நீ எல்ல மீறிப் போய்க்கிட்டு இருக்க.. உன்ன மென்னியத் திருகினாத்தான் என் மனசு ஆறும்டா.."

பார்த்திபன் மறுபடியும் அரவிந்தனின் மீது பாய யத்தனிக்க.. அரவிந்தன் விலகித் தன்னைக் காத்துக் கொண்டான்..

"கண்ட்ரோல் யுவர் செல்ஃப் பார்த்திபன்.. உனக்கு மட்டுமில்லை.. எனக்கும் ஃபைட்டிங் தெரியும்.. மைண்ட் இட்.." என்று அறிவுறுத்தவும் செய்தான்..

"அதையும் இன்னைக்குப் பார்த்துரலாம்டா.. வயலூருக்கு வயலை வாங்க வந்தப்பவே உன்ன ஓட ஓட விரட்டியிருக்கனும்.."

"ஹ.. நீயென்ன இந்த ஊருக்கே கிங்கா..? என்னை இந்த ஊரில் இருக்கக் கூடாதுன்னு விரட்டுவதற்கு நீ யார் மேன்..?"

இந்தக் கேள்விக்கு பார்த்திபன் எதையாவது சொல்லியிருக்கலாம்... அதை விட்டு விட்டு... அவனையுமறியாமல்...

"உன் மச்சான்டா.." என்று சொல்லி விட்டான்..

அரவிந்தனின் விழிகளில் ஒளி வெள்ளம் பாய்ந்தது..

"தட்'ஸ் தி பாயிண்ட்.." என்று அவன் மகிழ்ந்து போனதில்..

"டேய்.." என்று அவனைக் கட்டிப் புரண்டு ரோட்டில் உருண்டு விட்டான் பார்த்திபன்..

அரவிந்தன் விட்டுக் கொடுக்காமல் சரிக்குச் சரியாக மோதிக் கொண்டிருக்க அது ஆக்ரோசம் மிகுந்த சண்டையாக இருந்தது.. ஒரு கட்டத்தில் பார்த்திபனை உதறித் தள்ளி விட்டு விலகி நின்று மூச்சு வாங்கினான் அரவிந்தன்.. சிவந்த கண்களுடன் ஒற்றை விரலை உயர்த்தி அவனை எச்சரித்தான் பார்த்திபன்..

"உன் சரசத்தயெல்லாம் வேற எங்காச்சும் காட்டு.. எந்தங்கச்சி பக்கம் உன் பார்வ போச்சுன்னா நடக்கறதே வேற.. ஒன்னப் பொலி போடாம விட மாட்டேன்.. சூதானமா ஊர் போய் சேரு.."

"ஓ.." புரிந்து கொண்ட பாவனையில் தோள்களைக் குலுக்கிய பார்த்திபன், இடுங்கிய கண்களுடன்..

"போகலைன்னா..?" என்று வினவினான்..

"ஒன்னப் பொலி போட்டு இந்த மண்ணில புதைப்பேண்டா.."

"அதுக்குப் பதில் உன் தங்கையை எனக்கு மேரேஜ் பண்ணிக்குடுத்து விடலாமே.. நான் அவளுக்கு முறை மாப்பிள்ளைதானே.."

அமைதியாகத்தான் கேட்டான் அரவிந்தன்.. பார்த்திபனின் முகம் பயங்கரமாக மாறிவிட்டது.. முடியாது எனும் வகையில் தலையசைத்தான்..

"ஏன்..?" புருவங்கள் முடிச்சிடக் கேட்டான் அரவிந்தன்..

"நீ ஆசைப்பட்டுப் பெண் கேட்கலைடா.. இந்த ஊரில கூல்டிரிங்க் பேக்டரியைக் கட்ட உன் அத்தையின் நிலங்களை விலை பேசின.. என் அப்பாவும், நானும் அதை தடுத்து விட்டோம்.. ஊர் எங்க பின்னாலே நிக்குது.. அதை உடைக்க நீ எங்க வீட்டுக்கு மருமகனா வரப் பிளான் பண்ற.. என்னையென்ன முட்டாள்ன்னு நினைச்சியா..? எந்தங்கச்சி புருசன எங்கப்பாவும் நானும் எதுக்க மாட்டோம்.. உன் இஷ்டப்படி இந்த ஊரில பேக்டரியக் கட்டி ஆத்துத்

தண்ணிய நாசம் பண்ணிரலாம்ங்கிற நினப்புத்தானடா உனக்கு..? அது நடக்காதுடா.. ஒரு நாளும் உனக்கு நாங்க பெண் கொடுக்க மாட்டோம்.."

"இல்லை பார்த்திபன்.. நான் கூல்டிரிங் பேக்டரியை இந்த ஊரில் ஆரம்பிக்கனும்ங்கிற புராஜெக்டை டிராப் பண்ணிட்டேன்.. உன் கெஸ்ஸிங் சரியானதுதான்.. பூரணிக்காகத்தான் இங்கே இருக்கிறேன்.. ஐ லவ் பூர்ணிமா.. பிலிவ்.. மீ.. அவளை எனக்கு மேரேஜ் பண்ணிக்கொடு.."

"முடியாதுடா.." உறுதியுடன் மறுத்து விட்டான் பார்த்திபன்..

அது பூர்ணிமாவுக்கு வினையாக முடிந்து விட்டது.. யாருமில்லாத வேளையிலே அரவிந்தன் பூர்ணிமாவின் வீட்டுக்குள்ளேயே வந்து விட்டான்..

"எவ்வளவோ கெஞ்சினேன்டி.. உன் மீது எனக்கு இருக்கும் ஆசையின் அளவை உன் அண்ணன்தான் புரிந்துக்கலை.. நீயாவது என்னை புரிந்து கொள் பூர்ணிமா.. என் காதலை புரிந்து கொள்.." இறைஞ்சினான் அரவிந்தன்.

பூர்ணிமா பதட்டத்துடன் சுற்று முற்றும் பார்த்தாள்.. உச்சிப் பொழுதில் ஊர் நடமாட்டமில்லாமல் இருந்தது.. வயலுக்குப் போயிருந்தவர்கள் வெயிலுக்கு மரத்தடியில் ஓய்வெடுத்து விட்டு வெயில் தாழத்தான் வீடுகளுக்குத் திரும்புவார்கள்.. வயதில் முதிர்ந்த ஆண்கள் சாவடியில் படுத்திருக்க மற்றவர்கள் வீடுகளில் அடைந்திருப்பார்கள்..

பூர்ணிமாவின் வீட்டிலும் அப்படித்தான் இருந்தது.. மாதவன் வயலுக்குப் போயிருந்தார்.. பார்த்திபன் மதிய உணவுக்கு வீட்டுக்கு வந்து விட்டு பள்ளிக்குத் திரும்பிச் சென்று விட்டான்.. மகன் சாப்பிட்டு விட்டுப் போனதும் கணவருக்கும் தனக்குமான மதிய உணவைக் கூடையில் எடுத்துக் கொண்டு..

"கதவைத் தாப்பாப் போட்டுக்கிட்டு வீட்டுக் குள்ளேயே இரு.. சோத்தைச் சாப்பிட்டுட்டு சித்த நேரம் தூங்கறதா இருந்தாத் தூங்கு.. இல்லேன்னா புத்தகம் படி.. அப்பாவுக்கு மதியச் சோத்தக் கொடுத்துட்டு வந்துர்றேன்.." என்று கிளம்பியிருந்தாள் பூமா..

"நானும் உன்கூட வர்றேம்மா.." சிணுங்கினாள் பூர்ணிமா..

"இந்த வேகாத வெயில்ல வயக்காட்டுக்கு ஏன் வரனும்ங்கிற..? வயசுப் பொண்ணு.. நெழல்ல இருந்து பழகு.." பூமா மகளை அதட்டி விட்டுப் போய் விட்டாள்..

கதவைத் தாழ் போட்டு விட்டு சமையலறைக்குப் போன பூர்ணிமாவுக்குத் தனித்துச் சாப்பிடச் சோம்பலாக இருந்தது.. பசியில்லை.. பார்த்திபன் சாப்பிடும்போது சேர்ந்து சாப்பிட்டிருக்கலாம்.. தமையனுக்குப் பரிமாறும் ஆர்வத்தில் மறந்து விட்டாள்.. பூமாவோ கணவருடன் வயலோரமாக இருக்கும் தென்னந்தோப்பில் கால்வாய் நீரில் கால்களை நனைய விட்டபடி சாப்பிடும் நினைவோடு மகளை மறந்துக் கிளம்பி விட்டாள்..

பூர்ணிமாவுக்கு அலுப்பாக இருந்தது.. தனிமை அவளைக் கொன்றது.. மல்லிகா, பூங்காவனத்தோடு ஆற்றில் குளிக்கப் போகும் வழக்கம் அரவிந்தனின் புண்ணியத்தால் நிறுத்தப்பட்டு விட்டது.. தோழிகளைப் பார்க்க அவர்களின் வீடுகளுக்குச் செல்லக்கூட தடை வந்து சேர்ந்து விட்டது.. பூர்ணிமா இல்லச் சிறையில் அடைபட்டிருந்தாள்..

'எல்லாம் அவனால வந்ததுதான்.. அண்ணனுக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கு.. எப்புடின்னுதான் தெரியலை..'

அன்று அரவிந்தனோடு பார்த்திபன் ரோட்டில் மல்லுக் கட்டிப் புரண்டதைச் சாலையில் சென்றவர்கள் விலக்கி விட்டு அரவிந்தனுடன் சண்டைக்குப் போயிருக்கிறார்கள்.. புழுதி படிந்த சட்டையுடன் வீட்டுக்கு வந்த பார்த்திபனை மாதவன் கடிந்து கொண்டார்..

"பேச்சோட நிறுத்திக்கனும் பார்த்தி.. அடி கை வைக்கிறது சரியில்லப்பா.. பாக்கறவன் நாக்கு மேலப் பல்லப் போட்டு எதயாச்சும் பேசிப்புடுவான்.. ஊருக்காக நீ கை வைச்சன்னு ஆருக்குத் தெரியும்..?"

பார்த்திபன் நிமிர்ந்து தகப்பனாரின் பார்வையை நேருக்கு நேராகப் பார்த்தான்.. தீர்க்கமான அவனது பார்வையில் மாதவன் திகைத்தார்.

"என்னய்யா..?"

"இல்லப்பா.. நான் ஊருக்காக அவன் மேல கை வைக்கல.."

"பின்னே..?"

"இது வேறப்பா.. உங்களுக்குப் புரியாது.. காலா காலத்தில நாம தங்கச்சிக்கு மாப்பிள்ளயப் பாத்துக் கட்டிக் கொடுத்துரனும்ப்பா.."

"பார்த்தி.."

மாதவன் மட்டுமல்ல.. அறைக்குள் நின்றிருந்த பூர்ணிமாவும் திடுக்கிட்டாள்.. அவளுக்கு மட்டும் தெரிந்திருந்த ரகசியத்தை அவளது அண்ணன் எப்படி உணர்ந்தான்..? அதைவிட அவளது தகப்பனார் திடுக்கிட்டதைப் போல தாய் திடுக்கிடவில்லையே.. ஏன்..?

பூமாவின் முகத்தில் அப்பியிருந்த கவலையில் மாதவன் யோசனையானார்.. அடுத்து வந்த நாள்களில் அவருக்கு விவரம் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.. பூர்ணிமாவை வீட்டுக்குள் அடைப்பதை அவர் ஆட்சேபிக்கவில்லை..

பூர்ணிமாவுக்காக மாப்பிள்ளை தேடும் படலம் ஆரம்பமாகிவிட்டது..

"அவசரம்ன்னு 'காணான், கோனான்' கிட்டயெல்லாம் எந்தங்கச்சியத் தள்ளி விட முடியாது.. கவர்ண்மெண்டு வேல பாக்கிறவனாப் பாத்துக் கட்டிக் கொடுக்கனும்ப்பா.. சேத்து வைச்சிருக்க அம்புட்டுக் காசயும் கொட்டிச் சீர் செய்யலாம்.. லோன் அப்ளை பண்ணியிருக்கேன்.. அந்தக் காசு வந்தா தங்கச்சிக்கு வைசத்தில அட்டிக வாங்கிரலாம்ன்னு இருக்கேன்... சுத்துப்பட்டியில இம்புட்டுச்

சீர்வரிச எவனும் செஞ்சதில்லன்ன பேசனும்ப்பா.. அப்படியாப்பட்ட இடமா பாத்து, ஊர்மெச்ச தங்கச்சிக்குக் கல்யாணம் பண்ணி வைக்கனும்.."

பார்த்திபனின் வார்த்தைகளில் பாசம் வழிந்தது.. பூர்ணிமா நெகிழ்ந்தாள்.. அவள் மீதான அண்ணனின் பாசத்தில் அவளது கண்கள் கலங்கின..

அத்தியாயம்- 23

'எல்லாம் சரிதான்... இப்புடி வீட்டுக்குள்ள போட்டுப் பூட்டி வைக்கிறதத்தான் தாங்க முடியல..'

மாடிக்குப் போனாள்.. நீண்ட ஹாலும், இருபக்க அறைகளுமாக அந்தக் காலபாணியில் மாடி இருந்தது.. அங்கும் தனிமை அவளை அச்சுறுத்த, மொட்டை மாடிக்குப் போனாள்.. அங்கே தொட்டிகளில் செடி வளர்க்கிறாள்..

'அட..! இன்னைக்கு ஒரு ரோசாப்பூ பூத்திருக்கே..'

மனதுக்குள் குதூகலம் வந்தது.. ரோஜாச் செடியருகே போய் பூவைத் தொட்டுப் பார்த்தாள்..

"உன்னை விட ரோஜா அழகில்லை.."

காதருகே ஒலித்த குரலில் உடல் தூக்கிப் போடத் திரும்பிப் பார்த்தாள்.. அவளை ஒட்டி உரசியவாறு அரவிந்தன் நின்றிருந்தான்..

'இவன் எப்புடி இங்க வந்தான்..?'

பூர்ணிமாவுக்குக் கண்ணைக் கட்டியது... அரை மயக்கத்தில் சரிந்தவளை இழுத்துக் கொண்டு மாடிப்படிக்கட்டில் இறங்கிப் பாதிப் படிகளில் உட்கார்ந்து அவளைத் தன் மடியில் சரித்துக் கொண்டான் அரவிந்தன்.. வந்த மயக்கம் ஓடோட, பதறி விலகினாள் பூர்ணிமா..

"பாவி.. எப்புடிடா என் வீட்டு மொட்டை மாடிக்கு வந்த..? ஆராச்சும் பாத்தா, ஒன்ன விட்டிருவாங்கடா.. என்னத்தான் குத்தம் சொல்லுவாங்க.. நான் கூப்பிட்டுத்தான் நீ வந்திருக்கன்னு கத கட்டி விட்டிருவாங்கடா.."

"கூல் பேபி.. அப்படிக் கதை கட்டி விட்டா நான் விளக்கம் சொல்றேன்.. உன்னைப் பார்க்கிற ஆசையில நான்தான் மாடிவிட்டு மாடி தாவி இங்கே வந்தேன்னு டெமான்ஸ்ட்ரேசனே பண்ணிக் காட்டி விடுகிறேன்.. யு டோனட் வொர்ரி டார்லிங்.."

"மாடி விட்டு மாடி தாவி வந்தியா..? நீயென்ன குரங்கா..?"

"இதுதானே வேண்டாம் என்கிறது.. என் முகத்தைப் பார்த்துச் சொல்லு.. என்னைப் பார்த்தால் குரங்கு போலவா இருக்கிறது..?"

பூர்ணிமாவின் முகத்தைத் தொட்டுத் திருப்பி விழியோடு விழி கலந்தான் அரவிந்தன்.. ஓர் நொடி தன்னையுமறியாமல் அவன் முகத்தை உற்றுப் பார்த்தவளுக்கு இவன்தான் எவ்வளவு அழகு என்ற மயக்கம் ஏற்பட்டது.. மறுநொடியில் அந்த மயக்கத்தை உதறித் தள்ளியவள் தள்ளி நின்று..

"ஆரும் பாக்கறதுக்குள்ளப் போயிரு.. உன்னக் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக்கறேன்.. எங்கப்பா இந்த ஊருக்குள்ள மானம், மரியாதை, கௌரவத்தோட வாழ்ந்துக்கிட்டு இருக்காரு.. அதக் குழி தோண்டி புதைச்சிராத.. எங்கண்ணன் சிங்கம் போல தலை நிமிர்ந்து சுத்திக்கிட்டு இருக்கு.. அத ஒரு சொல்லக் கேக்க வைச்சுராதே.. கெஞ்சிக் கேக்கறேன்.. போயிரு.." என்று அழுக ஆரம்பித்து விட்டாள்..

அவளது கண்ணீரில் அவன் பெருமூச்சு விட்டான்..

"இதை விட அதிகமா உன் அண்ணனிடம் கெஞ்சினேன் பூர்ணிமா.. உன்னைப் பெண் கேட்டேன்.. அவன் புரிஞ்சுக்கலை.. நீயாவது என் காதலைப் புரிந்துக்கோடி.." மன்றாடும் குரலில் சொன்னான்..

"காதலா..?" வேப்பங்காயைக் கடித்து விட்டதைப் போல முகம் சுளித்தாள் பூர்ணிமா..

"இந்தாரு... பொறுமையாய் பேசிக்கிட்டு இருக்கேங்கிறதுக்காக கண்டதையும், கடியதயும் சொல்லாதே... எங்கண்ணன் எனக்காக மாப்பிள்ள

பாத்துக்கிட்டு இருக்கு.. நாளன்னைக்கு என்னப் பொண்ணு பாக்க வரப் போறாங்க.." சீறினாள்..

"தெரியும்.." இறுக்கமான குரலில் சொன்னான் அரவிந்தன்..

"தெரிஞ்சுமா குரங்கப் போல மாடி விட்டு மாடி தாவி வந்திருக்க..?" ஏளனமாக கேட்டாள் பூர்ணிமா..

"ஆமாம்.." அரவிந்தனின் குரலில் புயலை உள்ளடக்கிய அமைதி இருந்தது.. கல்லைப் போன்ற கடின முகத்துடன் இருந்தவனின் மனதில் ஓடிய எண்ணங்களை பூர்ணிமாவால் கணிக்க முடியவில்லை.. அது எதுவாக இருந்தால் என்ன என்ற அலட்சியத்துடன் அவள் அவனுக்கு மாடியை நோக்கிக் கை காண்பித்தாள்..

"போ.."

"போகவா..?"

"போகாம இங்க உக்காந்து விருந்து சாப்பிடப் போறயா..?"

"ஆமான்னு சொன்னால் என்னடி பண்ணுவ..?"

அவனது கண்களில் வேட்டையாடும் சிங்கத்தின் வேட்கை தெரிந்தது.. உச்சி முதல் உள்ளங்கால்வரை அவளை அவன் பார்த்த மேய்ச்சல் பார்வையில் அவள் நடுங்கிப் போனாள்.. இருட்டுச் சந்து நினைவுக்கு வந்து அவளைக் கலவரப் படுத்தியது..

'ஆத்தி.. அன்னைக்குப் பாத்த மாதிரியே பாத்துத் தொலைக்கிறானே.. ஆரும் வீட்டில இல்லயே.. என்னத்தச் செய்யுவேன்.. எப்புடித் தப்பிப்பேன்..?'

ஓட்டமாக கீழே இறங்கி ஓடி வீட்டுக் கதவைத் திறந்து தெருவில் பாய்ந்து கூச்சலிட்டு விடலாம்.. பட்டப்பகலில், ஊருக்குள் இருப்பவர்கள் காவலுக்கு வந்து விடுவார்கள்.. அப்படி அவள் ஓட முடியாமல் வில்லங்கமாக அவன் மொட்டை மாடி வழியாக வீட்டுக்குள் நுழைந்து வைத்திருக்கிறானே.. அவள் வீட்டுக் கதவைத் திறந்து தெருவுக்கு வரும் போது, வீட்டுக்குள் இருந்து அவன் வெளிப்பட்டு விட்டால் வேறு வினையே வேண்டாம்..

போய்விடு என்று அவனைக் கெஞ்சுவதைத் தவிர பூர்ணிமாவுக்கு வேறு வழியே தெரியவில்லை..

"என்னைக் காதலிக்கிறேன்னு சொல்லு.. மேரேஜ் பண்ணிக்கிறேன்னு பிராமிஸ் பண்ணு.. நாளைக்கு மறுநாள் உன்னைப் பெண் பார்க்க எவனோ ஒருவன் வருவதை தடுத்து நிறுத்து.. நான் போகிறேன்.." அவன் அடம் பிடித்தான்..

"உனக்கென்ன கிறுக்கா பிடிச்சிருக்கு..?"

"யெஸ்.. உன்மேல் எனக்குப் பைத்தியம்தான்.. ஏன் என்னைக் காதலிக்க மறுக்கிறாய் பூர்ணிமா..? எனக்கு அழகில்லையா..? படிப்பில்லையா..? பணமில்லையா..? இல்லை, உன்னை மேரேஜ் பண்ணிக் கொள்ளும் உறவுமுறைதான் இல்லையா..? நான் உன் சொந்தக்காரன் தானே..?"

"இந்தா.. இந்த சொந்த பந்தத்தயெல்லாம் உன் அத்தமக ரத்தினம்.. ஊர்மிளா இருக்காள்ல.. அவகிட்ட வைச்சுக்க.. எனக்கு ஒன் சொந்தமும் வேணாம்.. பந்தமும் வேணாம்.."

"ஏண்டி..?"

ஆத்திரத்துடன் கேட்டான் அரவிந்தன்.. அவனது முகத்தில் கடினம் வந்திருந்தது.. எதையோ அவன் செய்யப் போகிறான் என்று பூர்ணிமாவின் உள்ளுணர்வு உணர்த்தியது.. அவள் நகர்ந்து நின்று கொண்டாள்..

"ஏன்னு கேட்டா என்னன்னு சொல்றது..? நீ பட்டினத்துக்காரன் வெளிநாட்டுக்கெல்லாம் போயி படிச்சுட்டு வந்தவன்.."

"ஸோ வாட்..? நீயும் டிகிரி ஹோல்டர்தானே.."

"ஒன் பவிசுக்கு இது பத்தாது.. எம்மேல உனக்கு ஆசைங்கிறது இடிக்குது.. என் அப்பாமேலயும், அண்ணன் மேலயும் இருக்கிற கோவத்துக்கு பழி தீத்துக்க என்னக் காதலிக்கிறேன்னு பொய் சொல்றன்னு என் மனசுக்குள்ள ஒரு பட்ஷி சொல்லுது.."

"அதை விரட்டு முதலில்.." அவன் உறுமினான்..

"நீ என்னதான் மிரட்டினாலும் எனக்கு ஒம்மேல ஆச வராதுப்பா.. கிளம்பு.. கிளம்பு.."

பூர்ணிமா மறுபடியும் கைநீட்ட, அரவிந்தன் அவளது கையைப் பிடித்து இழுத்தான்.. நிலை குலைந்து சரிந்தவளின் வளவளப்பான இடுப்பில் கை வைத்து தன்னுடன் இறுக்கிக் கொண்டு அவளது முகத்தின் மீது கவிழ்ந்தான்.. இதழோடு இதழ் பதிந்த முத்தத்தின் ஸ்பரிசத்தை மறுபடியும் உணர்ந்தவளின் மூச்சுத் திணறியது.. ஆழ்கடலில் அமிழ்வதைப் போல இருந்தது..

"காதலிக்கிறேன்னு சொல்லிக்கிட்டே இருக்கேன்.. 'போ, போ'ங்கறியேடி.. நீ இல்லாமல் போகிறதுக்கா மாடி விட்டு மாடி தாவி ரிஸ்க் எடுத்து வந்திருக்கிறேன்..?"

அரவிந்தனின் கைக்குட்டை பூர்ணிமாவின் நாசியில் அழுத்தியது.. ஏதோ ஓர்வித நெடியை சுவாசித்தவள் நினைவிழந்து தொய்ந்தாள்.. அவளைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டவன் மொட்டை மாடியின் கைபிடிச் சுவர்களைத் தாண்டிக் கடைசி வீட்டில் இறங்கிக் கீழே போனான்... அது மேனகாவின் கணவரான தெய்வேந்திரனின் வீடுகளில் ஒன்று.. புதிதாகக் கட்டப் பட்டிருந்த பங்களாவில் இருந்து கொண்டு அந்த வீட்டை திருவிழாக் காலங்களில் வரும் உறவினர்கள் தங்குவதற்காக பயன்படுத்திக் கொண்டிருந்தார்.. பூர்ணிமாவைப் பார்வையிட அந்த வீடுதான் தோது என்று அரவிந்தன் அந்த வீட்டின் பழமை பிடித்துப் போய் விட்டதாகக் கூறி மாடியறையில் தங்கியிருந்தான்.. திருவிழாவுக்கு வந்த உறவினர்களை தேவேந்திரன் வேறு ஒரு வீட்டில் தங்க வைத்துச் சமாளித்து அனுப்பி வைத்தார்..

அந்த வீட்டில் அவன் இருந்தது பார்த்திபனுக்கும், மற்றவர்களுக்கும் தெரியாது.. மேனகாவின் வீட்டில் நாள் முழுவதும் இருப்பவன் காரை அங்கே விட்டு விட்டு இருட்டியபின்பு நடந்து வருவான்.. யாரும் அவன் அங்கு வந்து போனதைப் பார்த்ததே இல்லை.. பகலில் வீட்டில் பூட்டுத் தொங்குவதால் அந்த வீட்டில் யாரும் இல்லையென்றே நினைத்திருந்தார்கள்.. இரவில் வரும் அரவிந்தன் விளக்கை எரியவிட மாட்டான்.. இருட்டில் மாடி

விட்டு மாடி தாவி பூர்ணிமாவின் வீட்டு மொட்டை மாடிக்கு வந்து விடுவான்.. ஒன்றையொன்று ஒட்டிக் கொண்டு கட்டப் பட்டிருக்கும் கிராமத்து மாடி வீடுகளில் கைபிடி சுவர்கள் மட்டுமே மாடிகளின் எல்லைகளை வரையறுக்கும்.. மற்றபடி இந்தக் கோடி வீட்டு மொட்டை மாடியிலிருந்து, அந்தக் கோடி வீட்டு மொட்டை மாடி வரை எளிதாகப் போய் வந்து விடலாம்..

மின்னல் வேகத்தில் கைபிடிச் சுவர்களைத் தாண்டிக் கீழே இறங்கிப் போனவன் மறக்காமல் மொட்டை மாடியின் கதவை உள் பக்கமாகப் பூட்டி விட்டுக் கீழே இறங்கினான்.. மாடி ஹாலை ஒட்டியிருந்த பெரிய அறையைத்தான் அவன் உபயோகப் படுத்திக் கொண்டிருந்தான்.. அங்கிருந்த கட்டிலில் பூர்ணிமாவைப் படுக்க வைத்துத் தலையணையை சரி செய்தான்.. ஒரு பூவைப் போல உறங்கிக் கொண்டிருந்தவளின் அழகில் ஈர்க்கப்பட்டவன் குனிந்து அவளது நெற்றியில் முத்தம் பதித்து விட்டு..

"ஐ ஆம் ஸாரிடி.." என்று முணுமுணுத்தான்..

"நோ அதர் வே பூர்ணிமா.. உன்னை நான் காதலிக்கிறேன்னு எத்தனை முறை சொன்னேன்..? நீ நம்பவில்லை.. உன் அண்ணனிடம் கெஞ்சினேன்.. அவன் கேட்கவில்லை.. உன்னை வேறு ஒருவனுக்கு மேரேஜ் பண்ணிக் கொடுக்க டிசைட் பண்ணிப் பெண் பார்க்க வரச் சொல்லி விட்டான்.. மேரேஜ் பிக்ஸ் ஆன பின்னால் உன்னைக் கடத்தினால் உன் குடும்பத்துக்கு அது மிகப் பெரிய 'இஷ்யூ' ஆகி விடும்.. அதனால்தான் இன்றைக்கே கடத்தி விடனும்னு டிசைட் பண்ணிட்டேன்.. நான் என்னடி செய்யட்டும்..?"

மயங்கிக் கிடந்தவளிடம் நியாயம் கேட்டான்.. பூர்ணிமா தன்னுணர்வு இல்லாமல் கிடந்தாள்.. அவளது நாசியருகில் மறுபடியும் மயக்க மருந்தில் தோய்க்கப்பட்டக் கைக்குட்டையைக் காட்டினான்.. சீரான அவளது சுவாசம் மயக்க மருந்தை உள்வாங்கி அவளை ஆழ்ந்த மயக்கத்திற்குக் கொண்டு போனது.. ஜன்னல் கதவுகள் சரியாக மூடப் பட்டிருக்கின்றனவா என்று சரிபார்த்து விட்டுத் திரைச் சீலைகளை இழுத்து விட்டு மூடியவன்

கட்டிலின் பக்கத்திலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து மணி பார்த்தான்.. மதியம் மணி இரண்டு என்றது..

'லேட் பண்ண வேண்டாம்.. இதுதான் சரியான டைம்..'

அன்றுதான் பகலில் அந்த வீட்டுக்கு வந்திருந்தான்.. காரை வீட்டின் பக்கவாட்டில் நிறுத்தியிருந்தான்.. எதிர் வீடு, பக்கத்து வீடுகளில் இருந்தவர்கள் முறைத்தார்கள்.. இவன் கண்டு கொள்ளாமல் வீட்டுக்குள் வந்து விட்டான்.. கதவைப் பூட்டிவிட்டு மாடிக்குப் போனவன்.. அங்கேயிருந்து பூர்ணிமாவின் வீட்டு மொட்டை மாடியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.. நண்பகலிலும் மாலையிலும் பூர்ணிமா மொட்டை மாடிக்கு வருவாள் என்பதை அவன் அறிந்து வைத்திருந்தான்.. அன்று அவளைக் கடத்த வேண்டும் என்று முடிவு செய்திருந்ததால் நண்பகலில் மொட்டை மாடிக்குச் சென்று காத்திருந்தான்.. பூர்ணிமாவும் வந்தாள்.. சந்தடியில்லாமல் கைபிடி சுவர்களைக் கடந்து அவளைக் கைப்பற்றிக் கடத்திக் கொண்டு வந்து விட்டான்.

மலர்க்கொடி போல கிடந்த பூர்ணிமாவின் கேசத்தைக் கோதி விட்டான்... அவனது பெட்டியை எடுத்துத் துணிகளையும் அவனது பொருள்களையும் சேகரித்து அடுக்கி வைத்தான்.. பெட்டியுடன் இறங்கி வாசல் கதவைத் திறந்து காருக்கு வந்து டிக்கியைத் திறந்து, பெட்டியைப் போட்டவன் குனிந்தபடி நோட்டமிட்டான்.. எதிர்வீடு, பக்கத்து வீடுகளில் நடமாட்டம் தெரியவில்லை..

வீட்டுக்குள் வந்து மாடியேறி பூர்ணிமாவைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு இறங்கியவன் வீட்டின் பின்பக்கக் கதவைத் திறந்து அதன் வழியாக வெளியே வந்து பக்கவாட்டுப் பக்கம் நிறுத்தியிருந்த காரின் பின்பக்கக் கதவைத் திறந்து பூர்ணிமாவைப் படுக்க வைத்தான்.. சடுதியில் வீட்டுக்குள் போய் பின்பக்கக் கதவை அடைத்து விட்டு முன் பக்கம் வந்து கதவைப் பூட்டியபோது எதிர்வீட்டிலிருந்த வேலாயுதம் வெளியில் வந்தார்.. அரவிந்தன் அவரைப் பார்த்தபடி காரில் ஏறினான்.. மாடுகளைப் பிடித்துக் கொண்டு வந்த சோணாச்சலம் அரவிந்தன் காரில் ஏறுவதைக் கண்காணித்தபடி..

"என்னா... பெரியப்பா... சூறாவளிக்காத்து சொழட்டியடிக்க முடியலன்னதும் திரும்பிப் போகுது போல.." என்று வேலாயுதத்திடம் சத்தமாகச் சொன்னான்.

"ஆமாண்டா மகனே.. வயலூரில இது பாச்சாப் பலிக்காதுன்னு வந்த வழியே திரும்பிப் போகுதப்பா.." என்று சோணாச்சலத்தின் பேச்சுக்கு எசப் பேச்சுப் பேசினார் வேலாயுதம்..

இருவருமே காரின் பின்சீட்டில் படுக்க வைக்கப் பட்டிருந்த பூர்ணிமாவைப் பார்க்கவில்லை.. கார் பறந்து, மேனகாவின் வீட்டிற்குச் சற்றுத் தள்ளி நின்றது.. வயல் பக்கம் போகலாம் என்ற எதிரே வந்த தேவேந்திரன் இவனது காரைக் கண்டதும் ஓடவும், ஒளியவும் எங்கே இடம் கிடைக்கும் என்று அவசரமாகப் பார்வையால் துழாவ ஆரம்பித்தார்..

'இவன்கூட நின்னு பேசறத ஊர்க்காரனுக பார்த்தானுகன்னா என்ன உக்கார வைச்சு உபதேசம் பண்ணியே உசிரக் குறைச்சிருவானுகளே.. வீட்டுக்குள்ள மட்டும் ஓறவுப் பயிர வளத்தாப் போதாதாடா மச்சினன் மகனே..?'

அரவிந்தன் காரை விட்டு இறங்கி அவரிடம் வந்ததும் இனி ஓடவும் முடியாது, ஒளியவும் முடியாது என்பதைப் புரிந்து கொண்டு அசடு வழிய..

"ஹி.. ஹி.. வாங்க மாப்பிள்ள.." என்று மென்று விழுங்கினார்..

"அர்ஜண்டா நான் கோயம்பத்தூர் போக வேண்டியிருக்கு மாமா.." என்றான் அரவிந்தன்..

"அதுக்கென்ன..? போயிட்டு வாங்களேன்.." சந்தோசமானார் தெய்வேந்திரன்..

"வீட்டுச் சாவியக் கொடுத்துட்டுப் போகலாம்ன்னு வந்தேன்.." அரவிந்தன் சாவியை நீட்டுவதற்குள் அதைப் பறித்துக் கொண்ட தேவேந்திரன் கையசைத்து 'டாட்டா' காண்பித்தார்..

"அத்தை, ஊர்மிளா, மகேந்திரனிடம்.." அரவிந்தன் வேண்டுமென்றே இழுத்தான்..

"நான் சொல்லிக்கறேன் மாப்பிள்ள.. நான் சொல்லிக்கறேன்.." சத்தியம் பண்ணாத குறையாக தவ்வினார் தேவேந்திரன்..

அவனை ஊரை விட்டு அனுப்புவதில் அவர் காட்டிய உத்வேகத்தில் சிரிப்பு வந்தது அரவிந்தனுக்கு.. தள்ளி நின்றிருந்த தேவேந்திரனும் காரின் பின்சீட்டில் படுக்க வைக்கப்பட்டிருந்த பூர்ணிமாவைப் பார்க்கவில்லை..

காரில் ஏறித் தேவேந்திரனுக்கு கையாட்டி ஆசுவாசம் அளித்து விட்டுச் சாலையில் பறந்த அரவிந்தனுக்குள் உல்லாசம் புகுந்தது.. விசிலடித்தபடி காரை விரட்டியவன் திரும்பிப் பார்த்தான்.. நிச்சலனமாகப் படுத்திருந்தாள் பூர்ணிமா.. இனி அவள் அவனுடையவள் என்ற நிச்சயத்தில்..

"போட்டு வைத்தக் காதல் திட்டம்..

ஓகே.. கண்மணி.."

என்று பாடியபடி கோவைக்குச் செல்லும் நான்குவழிச் சாலையில் காரைத் திருப்பினான் அரவிந்தன்..

ஆழ் மயக்கத்தில் இருந்த பூர்ணிமாவுக்கு விழிப்பு வந்தபோது அவள் நுரை போன்ற மெத்தையின் மீது படுத்திருந்தாள்.. விட்டத்தில் வேலைப்பாடுகளுடன் கூடிய வெள்நிற விளக்குகள் ஒளிர்ந்ததில் கலவரமாகி எழுந்து அமர்ந்து சுற்றிலும் பார்த்தவளுக்குத் திகில் வந்தது..

ஆடம்பரமான பெரிய அறை அது.. சுவர் முழுவதும் விரிந்திருந்த ஜன்னல்களைக் கனத்த திரைச்சீலை மறைத்திருக்க.. அறையில் பட்டோடபம் நிறைந்திருந்தது.. பெரிய கட்டில்.. கட்டிலருகே சோபாக்கள் என்று அவள் அன்றுவரை பார்த்திராத ஆடம்பரப் பொருள்களுடன் அறை இருந்தது..

'நான் எங்க இருக்கேன்..?'

அச்சுத்துடன் அவள் பார்வையைச் சுழட்டிய போது அறைக்கதவு திறந்தது.. காபிக் கோப்பையுடன் வந்த அரவிந்தன் எதுவுமே நடக்காததைப் போல இயல்புடன் அவளிடம் காபிக் கோப்பையை நீட்டி..

"நீ அசைய ஆரம்பித்ததும் காபி போடப் போயிட்டேன்.. சூடாக் காபியக் குடி.. அப்புறம் பிரஷ் ஆகிட்டு டின்னர் சாப்பிடலாம்.. ஓகே..?" என்றான்..

அப்படியே காபிக் கோப்பையைத் தட்டி விடும் வேகம் வந்தாலும் உடலில் தெம்பு இல்லாததால்..

"பாவி.." என்று பல்லைக் கடித்தாள் பூர்ணிமா..

"என்ன வேண்டுமானாலும் திட்டிக்க.. ஐ டோன்ட் கேர்.. உன்னை என்னிடம் கொண்டு வந்து விடனும்னு நினைச்சேன்.. செய்து விட்டேன்.. அது போதும் எனக்கு.." அலட்டிக் கொள்ளாமல் சொன்னான் அரவிந்தன்..

"எங்கேடா கொண்டு வந்திருக்கிற..?"

"ஊட்டி டியர்.."

அரவிந்தன் சொன்ன பின்புதான் குளிரை உணர்ந்தாள் பூர்ணிமா.. அறையில் ஹீட்டர் போடப் பட்டிருந்தது.. அவளைக் கனத்த கம்பளி போர்த்தியிருந்தது.

"ஊட்டியா..?" ஸ்தம்பித்துப் போனாள் பூர்ணிமா..

வயலூர் எங்கே.. ஊட்டி எங்கே.. இங்கே அவள் இருக்கிறாள் என்பதை அவளது குடும்பத்தினர் எப்படி அறிவார்கள்..?

அத்தியாயம்- 24

"அடப்பாவி..!"

பூர்ணிமாவின் கோபத்தைத் தோள்களைக் குலுக்கிப் புறம் தள்ளிய அரவிந்தன் அவளருகில் அமர்ந்து கேசத்தைக் கோத முயன்றான்.. உடலில் மிச்சம் மீதியிருந்த மொத்தத் தெம்பையும் ஒன்று சேர்த்துத் திரட்டி அவனது கையைத் தட்டி விட்டாள் பூர்ணிமா.. ஆத்திரத்தில் அவளுக்கு மூச்சிரைத்ததில் கைகள் இரண்டையும் உயர்த்தி..

"ஓ.கே.. ஓ.கே.. கூல்.." என்றான் அரவிந்தன்..

"எங்கண்ணனுக்கு மட்டும் இது தெரிஞ்சது.. உன்னைப் பொலி போட்டுட்டுத்தான் வேற சோலியப் பாக்கும்.."

"தட் ஸேம் டயலாக்... உன் அண்ணனும் இதைத்தான் சொன்னான்.. வாட்'ஸ் தி மீனிங் ஆஃப் பொலி போடறது..?"

"உன்னைப் போட்டுத் தள்ளறதுதான் மீனிங்டா.."

"ஈஸிட்..? இந்த டயலாக்கை உன் அண்ணன் சொல்லலாம்.. நீ சொல்லக் கூடாது கண்ணம்மா.."

"கண்ணம்மா, கிண்ணம்மான்னு கொஞ்சற வேலய வைச்சுக்கிட்ட... எண் அண்ணன் முகத்த பாக்க முடியாட்டியும் பரவாயில்லன்னு ஊட்டி மலமேல இருந்து குதிச்சிருவேன்.."

"இதுக்குப் போய் இத்தனை கோபமா...? பூர்ணிமான்னு கூப்பிடுடான்னு சொன்னாக் கூப்பிட்டுட்டுப் போறேன்.. யு நோ.. பூர்ணிமாங்கிற உன் பெயர் கொள்ளை அழகு.." இடைவெளி விட்ட அரவிந்தன்..

"உன்னைப் போலவே.." என்ற கிறக்கத்துடன் பார்த்தான்..

அவளுக்கு அடிவயிறு கலங்கியது.. என்னதான் தைரியசாலி போல காட்டிக் கொண்டாலும் தான் கடத்தப் பட்டு ஊட்டியில் கொண்டு வந்து கிடத்தப் பட்டிருக்கிறோம் என்ற உண்மையில் அவள் கதி கலங்கிப் போயிருந்தாள்.. அவள் இருந்த அறையைப் பார்த்தால் ஸ்டார் ஹோட்டல்களின் அறையைப் போல இருந்தது.. தொலைக்காட்சித் தொடர்களிலும், திரைப்படங்களிலும் தான் அவள் அதுபோன்ற அறைகளைப் பார்த்திருக்கிறாள்.

பூர்ணிமாவின் மனம் வயலூரில் இருந்த அவளது பழமையான வீட்டின் மாடியறையை நினைத்து ஏங்கியது.. பல தலைமுறைகளைப் பார்த்த தேக்குக் கட்டில்..

அதில் உலகம் பஞ்சைக் கடைந்தெடுத்துத் தயாரிக்கப் பட்ட மெத்தை.. காதியில் வாங்கிய போர்வை, விரிப்பு, தலையணை என்று அவளுக்குப் பழக்கப்பட்ட படுக்கையை உடல் தேடியது.. இதமாக உடலைப் பிடித்து விட்ட நுரை மெத்தையை வெறுத்தாள்.. புரண்டு எழுந்தாள்..

"விழுந்து விடாதே.." அரவிந்தன் தடுத்தான்..

"எனக்குத் தெரியும்.. உன் சோலியப் பாரு.." என்று சொல்லியபடி கட்டிலை விட்டு இறங்கியவள் தள்ளாடி விழப் போனாள்..

"சொன்னேனில்ல.." சட்டெனக் கைநீட்டி அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான் அவன்..

"உன்னைப் போல ஒருத்தன நான் பாத்ததே இல்ல.." தட்டாமாலை சுற்றிய தலையைப் பிடித்த வண்ணம் பொருமினாள் பூர்ணிமா..

"என்னப் போல நான்தானே இருக்க முடியும்..? ஸோ, என்னைப் போல் ஒருவன் இருக்கவும் முடியாது.. நீ பார்த்திருக்கவும் முடியாது..." குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தவளுக்குக் கம்பளியைப் போர்த்தி விட்டான் அரவிந்தன்.. கதகதப்பாக இருந்ததில் கம்பளிக்குள் புதைந்து கொண்டாள் பூர்ணிமா..

"சூடாக் காபியக் குடின்னு சொன்னாக் கேட்கனும்.. மயக்கம் குறையாம இருக்கிற சமயத்தில அடம் பிடிக்கலாமா..?" என்னவோ அவள் மயக்கத்தைத் தானாக இழுத்துக் கொண்டதைப் போல அரவிந்தன் பேசியதில் அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது..

"கள்ளன்டா நீ.. மயக்க மருந்த மூஞ்சியில வைச்சு அழுத்திப் பொம்பளப் புள்ளயக் கடத்திட்டு வந்திட்டு, காப்பாத்திக் கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கிறவனப் போல நாயம் பேசற..? எங்கேயிருந்துடா இந்த வித்தயக் கத்துக்கிட்ட..?" எரிந்து விழுந்தாள்..

"உன்னக் கண்ட நொடியில், உலகத்திலிருந்து அத்தனைக் கள்ளத்தனங்களும் என் மனதில் புகுந்து கொண்டன கண்மணி.."

கவிதை சொல்லி அவளைக் கடுப்பேற்றியபடி காபிக் கோப்பையை பலவந்தமாக அவளது வாயில் வைத்துப் புகட்டினான் அவன்..

மறுக்கும் சக்தியில்லாமல் காபியை விழுங்கி வைத்தாள்.. சூடாக தொண்டையில் இறங்கிய காபி உடலுக்கு புது தெம்பைக் கொடுத்து அவன் சொன்னது உண்மைதான் என்பதை ஊர்ஜிதம் செய்தது..

"பேசாமப் படு.."

கண்மூடிப் படுத்திருந்தவளின் கம்பளியை இழுத்துப் போர்த்தி விட்டு அறையை விட்டு வெளியேறினான் அரவிந்தன்.. எழுந்து கொள்ள வேண்டும்.. ஜன்னலை மறைத்திருக்கும் கனத்த திரைச்சீலையை விலக்கி அவள் எங்கே சிறை வைக்கப்பட்டிருக்கிறாள் என்பதை பார்த்து விடவேண்டும் என்றெல்லாம் மனது தப்பிக்கும் மார்க்கங்களைத் தேடும் திட்டங்களை வகுக்க, உடல் அதற்கு ஒத்துழைப்புக் கொடுக்காமல் அசதியுடன் கூடிய அயர்வைக் கொடுத்தது.. பூர்ணிமாவின் இமைகள் கனத்தன.. அவள் தூக்கத்தில் அமிழ்ந்தாள்..

கதகதப்பான கரங்களின் ஸ்பரிசத்தை அவளது கன்னங்கள் உணர்ந்ததில் விழிப்பு வந்து விட்டது.. இமைகளைத் திறந்து பார்த்தாள்.. அவள் முகத்தருகே முகத்தை வைத்துக் குனிந்திருந்த அரவிந்தன் அவளது கன்னங்களைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தான்..

"என்ன..?" தூக்கம் கலையாமல் கேட்டாள்..

"ஜஸ்ட் டூ மினிட்ஸ்.. அப்படியே எழுந்து உட்கார்ந்து இந்த இட்லியைப் பிய்த்து வாயில் போட்டுக்க.. காலையில் சாப்பிட்டவள்.. இப்ப மிட் நைட்டாகிருச்சு.. வெறும் வயிறாய் இருக்கிற.." பரிவுடன் சொன்னான் அரவிந்தன்.

"உன் அக்கறயில இடி விழ.." பூர்ணிமா தள்ளாடியபடி கம்பளியை உதறி விட்டுக் கட்டிலை விட்டு இறங்கினாள்.

"ம்ப்ச்.. இப்ப எதுக்காக கட்டிலை விட்டு இறங்குகிற..? கட்டிலில் உட்கார்ந்தபடி சாப்பிடுன்னு சொன்னேனில்ல.." அவன் அதட்டினான்..

"கொஞ்சம் அடங்கறியா..? காலையில இருந்து சாப்பிடாம கிடக்கிறேனாம்.. கரிசனப்படறான்.. சாப்பிட விடாமக் கடத்திக்கிட்டு வந்துட்டு மனச்சாட்சியே இல்லாம பேசறதப் பாரு.. எப்புடிடா இப்புடிப் பேசற..?"

"வாயை யூஸ் பண்ணித்தான்.. நான் அடங்கறது இருக்கட்டும்.. நீ கொஞ்சம் அடங்கி உட்கார்ந்து சாப்பிடு பூர்ணிமா.."

பூர்ணிமா அடங்கி உட்காரவில்லை.. குடிபோதையில் தள்ளாடுபவளைப் போலத் தள்ளாடியபடி..

"பாத்ரூம் எங்கே..?" என்று தேடினாள்..

"இதோ இங்கே இருக்கு.." அரவிந்தன் சுட்டிக் காட்டிய அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டு விட்டு முகத்தைக் கழுவ வாஷ் பேஷின் குழாயைத் திறந்தாள்.. ஐஸ் கட்டியைப் போல சில்லென்ற தண்ணீர் கைகளில் பட்டதில் உதறலெடுத்தது..

"ஹாட் வாட்டர் குழாய் இருக்கு.. அதை யூஸ் பண்ணு.." கதவுக்கு வெளியேயிருந்து அரவிந்தன் குரல் கொடுத்தான்..

'எந்தக் குழாயில வெந்நீர்தண்ணி வருது..?'

பூர்ணிமா இரண்டு குழாய்களையும் திருகிப் பார்த்து சுடுநீரைக் கண்டு பிடித்தாள்.. முகம் கழுவி வெளியே வந்தவளுக்குத் தலை சுற்றல் குறைந்திருந்தது.. நிதானமாக நடக்க முடிந்தது.. கட்டிலில் உட்கார்ந்து கம்பளியைப் போர்த்திக் கொண்டவளிடம் இட்லிகள் இருந்த தட்டை நீட்டினான் அரவிந்தன்.. வேண்டாமென்று மறுக்க முடியாமல் பசி வயிற்றைக் கிள்ள பூர்ணிமா அவசரகதியில் தட்டில் இருந்த இட்லிகளைக் காலி செய்தாள்.. பார்த்துக் கொண்டிருந்த அரவிந்தனின் விழிகளில் வழிந்த காருண்யத்தில்..

"பெரிசா.. இட்லி கொடுத்த வள்ளல்ன்னு மனசுக்குள்ள நினைப்பு..? ம்ம்ம்..?" என்று எகத்தாளமாக கேட்டாள்..

சிறு மழலையின் சேட்டையை ரசிப்பதைப் போல அவளது கோபத்தை ரசித்த அரவிந்தன் சூடான பால் கப்பை

எடுத்துக் கொடுத்தான்.. மறுக்காமல் வாங்கிக் குடித்து விட்டு காலிக் கோப்பையை அவனிடம் நீட்டியவள்..

"எனக்குச் சர்வர் வேல பாக்கனும்னு உனக்கென்ன தலயெழுத்து..?" என்று வருத்தப்படுவதைப் போல இகழ்ச்சியாக கேட்டு வைத்தாள்..

"சர்வர்..?" கேலியாக அவன் புருவங்களை உயர்த்தி விட்டு..

"குட் நைட்.." என்றபடி எழுந்து கொண்டான்..

"இந்த நட்ட நடு ராத்திரியில இட்லி சுட்டுக் கொடுத்திருக்காகளே.. செமத்தியான ஓட்டலத்தான் பிடிச்சிருக்க.." பாராட்டைப் போல அவனது வாயைக் கிளறினாள் பூர்ணிமா..

"நாம் ஹோட்டலில் ஸ்டே பண்ணியிருக்கோம்ன்னு நினைத்து விட்டாயா..? இல்லை.." என்றான் அரவிந்தன்.

"பின்னே..?" பூர்ணிமா விடவில்லை..

"இது என்னுடைய பங்களா.." நிதானமாக அவன் சொன்னான்..

"உன் வீடா..?" விழி விரித்த பூர்ணிமா..

"நீ மெட்ராஸ்காரனாச்சே.." என்று கேட்டாள்..

"சென்னையில இருக்கிறவனுக்கு ஊட்டியில் பங்களா இருக்கக் கூடாதா..? எங்க ஃபேமிலிக்குச் சொந்தமா ஊட்டி, கொடைக்கானல், சிம்லா வில பங்களாக்கள் இருக்கு.. டெல்லியிலும், மும்பையிலும் அபார்ட்மென்ட்ஸ் இருக்கு.. கோயம்பத்தூரில் தாத்தாவோட புராப்பர்ட்டிஸ் இருக்கு.. கோபிச்செட்டிப் பாளையம் பக்கத்தில ஃபார்ம்ஹவுஸ் இருக்கு.. ஏற்காட்டில எஸ்டேட் இருக்கு.. இன்னும்.." அரவிந்தன் அடுக்கிக் கொண்டிருக்க..

"போதும்.. போதும்.." என்று இடைமறித்த பூர்ணிமா.

"நீ உன்னோட அப்பாம்மாவுக்கு ஒற்றைப்புள்ளன்னு சொன்னாகளே.." என்று சந்தேகம் கேட்டாள்..

"உண்மைதான்.." என்றான் அரவிந்தன்..

"உன் ஒரு ஆளுக்கு எதுக்கு இத்தனை வீடுக..? ஊருக்கொரு வீடு வைச்சிருக்கியே.. ஊருக்கொரு

பொண்டாட்டி கூடக் குடும்பம் நடத்தறியோ..?" அறியாப் பெண்ணைப் போல இமை கொட்டினாள் பூர்ணிமா..

அரவிந்தன் அவளை உறுத்துப் பார்த்தான்.. 'ஹ' எனும் விதமாக உதட்டைக் கோணிய பூர்ணிமா அலட்சியமாக அவனது பார்வையை எதிர்கொண்டாள்..

அத்தியாயம்- 25

"ஆமாண்டி.." பல்லைக் கடித்த அரவிந்தன்..

"ஊட்டிக்கு எவளும் கிடைக்கலை.. அதுதான் உன்னைக் கடத்திக் கொண்டு வந்திருக்கிறேன்.. என்ன..? குடும்பம் நடத்தவா..?" என்றபடி ஒரடி எடுத்து வைத்தான்..

"கிட்ட வந்து என்னத் தொட்டேன்னு வைய்யி.." பூர்ணிமா எச்சரித்தாள்..

"என்னடி பண்ணுவ..?" உறுமினான் அரவிந்தன்..

"ஃபேனில் தூக்குப் போட்டுத் தொங்கிருவேன்.. ஏன் இம்புட்டு நேரமா அதச் செய்யாம இருக்கேன்னு கேக்கறியா..? கண் காணாத இடத்தில நான் செத்துத் தொலைச்சிட்டா என் அப்பாம்மாவும், அண்ணனும் ஊராளுகளுக்கு என்ன பதிலச் சொல்லுவாங்க..? பூரணி செத்தாலும் அது கௌரவமான சாவா இருக்கனும்.. அதுதான் அவளப் பெத்து வளத்த ஆத்தாளுக்கும், அப்பனுக்கும்.. தூக்கி வளத்த அண்ணனுக்கும் அவ செய்யற கைம்மாறு.. அதனாலதான் பேசாம இருக்கேன்.. ஆருன்னு நினச்ச..? நான் பூர்ணிமாடா.. மாதவனோட மக.. பூமா வயித்தில பொறந்தவ.. பார்த்திபனோட தங்கச்சி.. என்னத் தொட்டுத் தூக்கிட்டு வந்துட்ட இல்ல.. இத எப்புடிச் சரி செய்யறதுன்னு எனக்குத் தெரியும்டா.. எதயும் யோசிக்காம கேணச்சி போல இங்க இருக்கேன்னு நினச்சிராதே.."

"ஊஹிம்..? எப்படிச் சரி செய்வ..?"

"அது எதுக்கு உனக்கு..?"

"இட் இஸ் மை பிராப்ளம் டியர்.."

"இல்லடா.. அது என் பிரச்னை.. போ, போ.. சும்மா குடும்பம் நடத்திருவேன்னு பூச்சாண்டி காட்டாம, குளிருக்கு இதமாக் கம்பளிய இழுத்துப் போத்திக்கிட்டுத் தூங்கு.."

பூர்ணிமாவின் ஏளனத்தில் அரவிந்தனின் விழிகள் பளபளத்தன.. அவனை அவள் சவாலுக்கு அழைத்து விட்டதைப் போலச் சிலிர்த்தான்..

"கம்பளிதான் குளிரைப் போக்கும்ன்னு இல்லை பூர்ணிமா.. உன்னை இழுத்துப் போர்த்திக்கிட்டாலும் குளிருக்கு இதமா கதகதப்பாத்தான் இருக்கும்.. போர்த்திக்கவா..?"

"நாளைக்கே என்னப் புதைச்ச இடத்தில புல்லு முளைச்சிரும்.. பரவாயில்லயா..?"

"மிரட்டறயாடி..?"

"ஆமாண்டா.. மிரட்டறேன்தான்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?"

"உன் மிரட்டலுக்குப் பயந்தவனில்லைடி இந்த அரவிந்தன்.."

"ஹ..! உன் வீரத்தத்தான் பார்த்துட்டேனே.. ஆளில்லாத நேரமாப் பாத்து வீடு புகுந்து பொம்பளப் புள்ளயத் தூக்கறதுதான உன் வீரம்.. மாவீரன்தான் நீ.."

பூர்ணிமா மெச்சிய மெச்சுதலில் அரவிந்தனின் முகம் கருத்தது..

"வேறு என்ன செய்கிறது..?" சினந்தான்..

"நேர்மையாக உன்னிடம் என் காதலைச் சொன்னேன்.. நீ ஏற்றுக்கலை.. உன் அண்ணனிடம் பெண் கேட்டேன்.. அவன் முடியாதுன்னு மறுத்ததுமில்லாம உனக்கு மாப்பிள்ளை தேட ஆரம்பித்துட்டான்... பொறுமையாக காத்திருந்து உன் குடும்பத்துக்கும் உனக்கும் என்னைப் புரிய வைத்து என் குடும்பத்தோடு வந்து பெண் கேட்டு மேரேஜ் பண்ணிக் கொண்டு போக எனக்கும் ஆசைதான்.. எங்கே..? அதற்கு நீயும், உன் அண்ணனும் வழி விடாம அடைத்து

வைத்துட்டிங்களேடி.. நாளை மறுநாள் உன்னைப் பெண் பார்க்க வருபவன் மேரேஜை ஃபிக்ஸ் பண்ணிவிட்டுப் போய் விட்டால் அதற்குப் பின்னால் உன்னை நான் பெண் கேட்பது என்பது சிக்கலாகி விடுமேடி.. என்னால் உன்னை எவனுக்கும் விட்டுக் கொடுக்க முடியாது.. தொட்டுத் தூக்கி வந்து விட்டேன்.. அதற்காக நீ என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள்.. ஐ டோன்ட் கேர்.. நீதான் எனக்குக் கள்வன்னு நிக் நேம் வைத்திருக்கிறயே.. கள்வன் இதைத்தானே செய்வான்..?"

அரவிந்தன் விளக்கை அணைத்து விட்டு அறையை விட்டு வெளியேறி விட்டான்.. அவன் மனதைப் புண்படுத்தி விரட்டி விட்டு விட்ட வெற்றியைக் கொண்டாட முடியாமல் பூர்ணிமா விசும்பி அழ ஆரம்பித்தாள்.. விடியும்வரை அவளது கண்ணீர் நிற்கவில்லை..

காலையில் காபியுடன் வந்த அரவிந்தனின் பார்வை அவளது வீங்கிய இமைகளையும்.. சிவந்திருந்த கண்களையும்.. இமையோரம் விளிம்பு கட்டியிருந்த கண்ணீரையும்.. ஆராய்ச்சியாகப் பார்த்தது.. பூர்ணிமா உதட்டைக் கடித்தபடி அவனை முறைத்தாள்... தோள்களைக் குலுக்கியவன் காபிக் கோப்பையை நீட்டினான்.. கம்பளியிலிருந்து வெளிப்பட்ட பூர்ணிமா காபியைக் குடித்து விட்டு எழுந்து நடந்து ஜன்னலின் திரையை விலக்கினாள்.. பிரமித்தாள்..

பூங்காவைப் போன்ற தோட்டம் அவளை அயர வைத்தது.. அலங்கார மலர் வளைவுகளும், டூம் விளக்குகளும், ஆங்காங்கே உட்காரப் போடப்பட்டிருந்த மரபெஞ்சுகளும், நீச்சல் குளமும் என்று பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத இயற்கையழகோடு தோட்டம் அவளை ஈர்த்தது..

"பிடிச்சிருக்கா..?" அரவிந்தனின் மூச்சுக் காற்று அவளது முதுகைச் சுட்டது.. சட்டென விலகினாள்..

"தோட்டத்தைச் சொன்னேன்.." விசமமாக சிரித்தான்.

சுட்டெரிப்பதைப் போல அவனைப் பார்த்தபடி குளியலறையை நோக்கிச் சென்றாள்.. அரவிந்தன் சுவர் அலமாரியின் பக்கமாகக் கைகாட்டினான்..

"உனக்கான மாற்று டிரஸ், ஸ்வெட்டர்ஸ் எல்லாம் வாங்கி வைத்திருக்கிறேன்.. நேற்று ஆன் தி வே'யில் பர்ச்சேஸ் பண்ணியது.. குளித்து டிரஸ் சேன்ஜ் பண்ணி முடித்ததும் கீழே வா.. நாம சேர்ந்து பிரேக் பாஸ்ட் சாப்பிடலாம்.."

காலம் காலமாக சேர்ந்து வாழ்பவர்களைப் போல அவன் பேசியதில் அவள் கண் சிவந்தாள்.. அதைப் பொருட்படுத்தாத புன்சிரிப்புடன் அவன் சென்று விட்டான்.. அறையை மூடித் தாழிட்டவள் அவன் காட்டிய அலமாரியைத் திறந்து பார்த்தாள்.. சுரிதார், சேலையென்று வகை வகையாக அடுக்கப் பட்டிருந்தன.. பாவாடை தாவணியில் இருப்பவளுக்கு சுரிதாரில் விருப்பமில்லை.. சேலையை எடுத்துக் கொண்டாள்.. அதற்குப் பொருத்தமாக ரெடிமேட் ஜாக்கெட் இருந்ததில் இவன் எல்லாவற்றையும் யோசித்துச் செயல்படுகிறான் என்ற கசப்பு மனதில் வந்தது..

குளித்து, சேலை கட்டி, ஸ்வெட்டர் ஒன்றை எடுத்துக் கொண்டு அறைக் கதவைத் திறந்தவளுக்கு 'ஆ' வென வாய் பிளக்க வேண்டும் போல இருந்தது.. மாடி ஹால் உயர் தரமான சோபாக்களுடன் மிரட்டியது.. அகன்ற மாடிப் படிகளில் இறங்கியவளை ஹால் சோபாவில் உட்கார்ந்திருந்த அரவிந்தன் ரசித்துப் பார்த்தான்.. பூர்ணிமாவின் முகம் கன்றியது..

"பர்ஸ்ட் டைம் உன்னை ஸாரியில் பார்க்கிறேன்டி. சூப்பரா இருக்கிற..?" அரவிந்தன் ஆசையாசையாக அருகில் வந்தான்..

"மாத்திக்க வேற துணியில்லன்னு நீ எடுத்து வைச்சிருந்தத உடுத்திக்கிட்டு வந்திருக்கேன்.. ரொம்பத்தான் உருகி வழியாத.." பூர்ணிமா கண்டிப்புடன் விலகினாள்..

"ஓகே.. கூல்.." வழக்கமான வார்த்தைகளும்.. வழக்கமான தோள் அசைப்புமாக விலகிக் கொண்ட அரவிந்தன்..

"டைனிங் ஹால் அங்கே இருக்கு.. கமான்.." என்று வழிகாட்டி அழைத்துச் சென்றான்..

வசந்த மாளிகை போல இருந்தது அந்தப் பங்களா..

'இவனும் வசந்த மாளிகை சினிமாவில வர்ற ஜமிந்தாரப் போல பெரிய பணக்காரன்தான்.. நானும் அதில வர்ற ஹீரோயின் போல மிடில் கிளாஸ் பொம்பளப் புள்ளதான்..'

மனதில் ஓடிய எண்ண வோட்டத்தில் திடுக்கிட்டாள் பூர்ணிமா.. ஏன் இப்படிப்பட்ட ஒப்பிடல் அவளது மனதில் வந்தது..?

"சிட்டவுன் பூர்ணிமா.."

அரவிந்தன் அவளுக்காக நாற்காலியை இழுத்துப் போட்டதில் பரிமாறக் காத்திருந்த பெண்மணி வியப்பாகப் பார்த்து வைத்தாள்..

'இவ என்னைப் பத்தி என்னன்னு நினைப்பா..?' பூர்ணிமாவின் உடல் கூசியது..

"எனக்கு உட்கார்ந்துக்கத் தெரியும்.." சிடுசிடுப்புடன் உட்கார்ந்தாள்..

பூரி கிழங்கு, வடை, பொங்கல் என்று காலை டிபன் சுவையாக இருந்தது.. ரசித்து உண்ணும் நிலையிலா பூர்ணிமா இருந்தாள்..? பசிக்கு உண்டு விட்டு கை கழுவ எழுந்தவள்..

"உங்ககிட்டப் பேசனும்.." என்றாள்..

அவள் காட்டிய திடிர் மரியாதையில் புருவங்களை உயர்த்தியவன்.. "அதற்காகத்தானே காத்திருக்கிறேன்.." என்றான்..

நீச்சல் குளத்தின் கரையில் இருந்த மர பெஞ்சில் அவன் உட்கார பூர்ணிமா தள்ளி அமர்ந்தாள்.. அவன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க அவள் நீச்சல் குளத்தின் நீரை வெறித்துக் கொண்டிருந்தாள்.. அவளது முகத்தில் மாறி மாறிப் படிந்த உணர்வலைகளைப் படிக்க முயன்றபடி மௌனமாக அவன் இருந்தான்.. வெகு நேரம் கழித்து மௌனம் கலைத்த பூர்ணிமா..

"என் அண்ணனுக்குத் தகவல் சொல்லி வரச் சொல்லுங்க.." என்றாள்..

'முடியாது..' என்பதைப் போல தலையசைத்தான் அரவிந்தன்..

"நான் உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறேன்.. என் அண்ணன் உங்ககிட்ட சண்டை போடாது.. என்னை உங்களுக்கு கட்டி வைக்கும்.. நம்புங்க.." பூர்ணிமா மன்றாடினாள்..

"ஆர் யு ஷ்யூர்..?"

"உங்க கையடிச்சுச் சத்தியம் பண்ணித்தரேன்.. நீங்க ஆசப்பட்டதப் போல நம்ம கல்யாணம் நடக்கும்.. அதுக்கு நான் எங்க வீட்டுக்குப் போயாகனும்.. புரிஞ்சுக்கங்க.."

"பிராமிஸ் பண்ணு.."

அரவிந்தன் கை நீட்டினான்.. அவன் நீட்டிய வலக் கரத்தின் மீது தன் கரத்தை வைத்துச் சத்தியம் செய்து கொடுத்தாள் பூர்ணிமா.. அரவிந்தன் செல்போனை எடுத்தான்..

அத்தியாயம்- 26

ஊரெல்லாம் தங்கையைத் தேடி ஓய்ந்து போய் தென்னந் தோப்பில் சரிந்திருந்த பார்த்திபனுக்கு அரவிந்தனிட மிருந்து போன் வந்தது.. எடுத்துப் போசியவன் கண்கள் சிவக்க..

"டேய்.. எங்கடா இருக்க..?" என்று கத்தியபோது..

"அண்ணா.." என்ற தீனமான பூர்ணிமாவின் குரல் கேட்டது..

"பூரணி.." பார்த்திபன் பதறினான்..

"உனக்கு ஒன்னும் ஆகலையே.."

"இல்லேண்ணா.. நான் பத்திரமாத்தான் இருக்கேன்.. நீ பயப்படாதே.."

பூர்ணிமாவின் தெளிவான பேச்சில் பார்த்திபனுக்குச் சந்தேகம் வந்தது.. அந்த அரவிந்தனே ஒரு ஆள் மயக்கி.. அவனிடம் தங்கை மயங்கி விட்டாளோ.. விருப்பப்பட்டு அவனுடன் போய் விட்டாளோ..

"பூரணி..?"

"நீ என்ன நினைக்கிறேன்னு புரியுது.. நான் உன் தங்கச்சி.. மனச அலய விட்டதில்ல.. இனி விடவும் மாட்டேன்.."

"அப்புறம் எப்புடிம்மா..?"

"நீ கிளம்பி வா.. எல்லாத்தையும் நேரில சொல்றேன்.."

"எங்கேம்மா வரச் சொல்ற..?"

"ஊட்டிக்கு.."

"ஊட்டிக்கா..? அங்க எப்புடிம்மா போன..?"

"நானா வரலை அண்ணா.."

அரவிந்தன் தூக்கிக் கொண்டு வந்து விட்டான் என்பதை எப்படிச் சொல்வது என்று தெரியாமல் தவித்தாள் பூர்ணிமா..

"அந்த அரவிந்தன் கிட்ட எப்புடிம்மா அகப்பட்ட..?" பார்த்திபன் கண்டு பிடித்திருந்தான்.. அது பூர்ணிமாவுக்கு ஆறுதலாக இருந்தது..

"வீட்ட விட்டு வெளியில் போகாம இருந்தவள வீட்டுக்குள்ள வந்து சிறையெடுத்து வந்தாச்சு.. தன்னினவு இல்லாம மயக்கத்தில இருந்தவள காரில தூக்கிப் போட்டு ஊட்டிக்கு கொண்டு வந்திருக்காக.."

"என்ன நெஞ்சழுத்தம் அவனுக்கு.. இப்பவே கிளம்பி வர்றேன் தங்கச்சி.. அங்க வந்து அவனப் புரட்டி எடுக்கறதில அவன் ஊட்டி மலயில இருந்து தல குப்புறக் குதிச்சிரனும்.."

"அப்புடி எதுவும் செஞ்சிராத அண்ணா.."

"பூரணி..?"

பேசுவது தன் தங்கைதானா என்ற கோபம் எழுந்தது பார்த்திபனுக்கு.. எப்படிப்பட்ட காரியத்தை செய்து வைத்திருக்கிறான் அந்த அரவிந்தன்.. வீடு புகுந்து பெண்ணைத் தூக்கிக் கொண்டு போயிருக்கிறான்.. அவனைச் சும்மா விடுவதா..? அதைப் பாதிக்கப்பட்ட அவனது தங்கையே சொல்கிறாளே.. ஏன்..?

அவள் காணாமல் போனதினால் பார்த்திபனும், அவனது குடும்பமும் பட்ட பாடை அவள் அறிவாளா..? வயலுக்குப் போயிருந்த பூமாவும், பள்ளிக்குப் போயிருந்த பார்த்திபனும் ஒரே நேரத்தில் வீடு திரும்பி விட்டு, பூட்டிக் கிடந்த வீட்டைத் தட்டித் தட்டி ஓய்ந்து போனார்களே.. அவர்களது கை வலியை விட மனது பதைத்த பதைப்புத்தானே அவர்களுக்குப் பெரிதாக இருந்தது.. அக்கம் பக்கத்தினருக்கு தெரிந்து விடக் கூடாது என்று சன்னக்குரலில் மகனிடம் பதறினாளே அந்தத் தாய்..

"நான் வயலுக்குப் போறப்ப கையாட்டிட்டு உன் தங்கச்சி உள்தாப்பாப் போட்டுக்கிட்டத என் கண்ணால பாத்தேண்டா மகனே.. அதுக்கப்புறம்தான் வயலுக்குப் போனேன்.. இப்ப கதவத் திறக்காம இருக்கிறான்னா மருந்தக் கிருந்தக் குடிச்சுத் தொலச்சிட்டாளோ.. மனசு பதறுதப்பா.."

"அது ஏம்மா அப்புடிச் செய்யப் போகுது..?"

"தெரியலயேப்பா... செய்யாத தப்புக்கு அவள வீட்டுக்குள்ள போட்டு பூட்டுறோம்ன்னு மனசு வெறுத்துட்டாளோ..?"

'அப்படியும் இருக்குமோ..' சந்தேகம் தட்டிய மறுகணமே அரவிந்தன் சத்தமில்லாமல் ஜன்னல் கம்பிகளைப் பிடித்துத் தாவியேறி மாடி.. கைப்பிடிச் சுவரில் தொற்றிக் குதித்து விட்டான்.. திறந்திருந்த மாடிக் கதவு அவனுக்கு பதட்டத்தை உண்டு பண்ண விரைவாக படியிறங்கி வாசல்கதவைத் திறந்து பூமாவை உள்ளே அழைத்துக் கொண்டான்..

"என்னய்யா சொல்ற..? மாடிக் கதவு தொறந்து கிடக்குதா..? அடி நான் பெத்த மகளே..!" சத்தமில்லாமல் நெஞ்சு

நெஞ்சாக அடித்துக் கொண்டு வீடு முழுவதும் மகளைத் தேடித் தோற்று மயங்கித் தரையில் விழ்ந்தாள் பூமா..

மாதவனுக்குப் போன் போனது.. அவர் விழுந்தடித்துக் கொண்டு வீட்டுக்கு ஓடி வந்தார்.. பூமாவை மயக்கத்திலிருந்து எழுப்பி உட்கார வைத்து விட்டுத் தகப்பனும் மகனும் விவரம் சொல்லாமல் ஊர் முழுவதும் பூர்ணிமாவைத் தேடினார்கள்..

"மல்லி.."

"என்ன மாமோய்.. மகளக் கண்ணில காட்டாம பொத்திப் பொத்திப் பூட்டி வைச்சுக்கிட்டு மல்லியாமில்ல மல்லி.. பூர்ணிமா என்ன செய்யறா..?"

கேட்பதற்கு முன்பே பூர்ணிமா அவளைத் தேடி வரவில்லை என்பதைச் சொல்லி விட்டாள் மல்லிகா..

"நாளான்னைக்கு அதப் பொண்ணு பாக்க வரப் போறாகன்னு பூமா மகள வெளியில விடாம தூங்க வைச்சிருக்காம்மா.."

"கொடுத்து வைச்ச மகராசி.. எங்கம்மாவும் இருக்கே.. என்னப் பொண்ணு பாக்க வந்தாத்தான் ஊருப்பட்ட வேலக் கழுதய எல்லாம் எந்தலயில கட்டும்.." பொறாமையுடன் நடையைக் கட்டினாள் மல்லிகா..

அடுத்ததாக அகப்பட்டாள் பூங்காவனம்..

"மருமகளே.." என்ற ஒற்றைச் சொல்லைத்தான் சொல்லியிருப்பார்..

"என்னயா மாமா கூப்பிட்டிக..? ஒங்க மகன் என்னக் கட்டிக்க ஒப்புக்கிட்டாகளா..? என்னைக்கு பாக்கு வெத்தல மாத்திப் பரிசம் போடப் போறிகளாம்.. இதச் சொல்லக் கூடாதுன்னுதான் இந்தப் பூர்ணிமா கண்ணில படாம வீட்டுக்குள்ள ஒளிஞ்சுக்கிட்டு ஆட்டம் காட்டறாளாக்கும்.. இருக்கட்டும்.. நாளைக்கு நாத்தனாகாரியா மாறினவுடனே இந்த மதினியோட ஆட்டம் எப்புடியிருக்கும்ன்னு

காட்டறேன்.." என்று எதிர்காலத் திட்டத்தை வகுத்துப் பரவசப் பட்டுப் போனாள் பூங்காவனம்..

'நல்லவேளை.. பார்த்திபன் பக்கத்தில இல்லை..'

அடுத்த வார்த்தையை பூங்காவனம் சொல்வதற்குள் அவசரகதியில் நடந்தோடித் தப்பித்தார் மாதவன்.. ஆக, பூங்காவனத்தின் வீட்டிலும் பூர்ணிமா இல்லையென்பது உறுதியாகி விட்டது.. காடு, கரை, வாய்க்கால், வரப்பு, ஆறு, தோப்பு என்று அத்தனை இடங்களிலும் பாக்கி வைக்காமல் சல்லடை போட்டுத் தேடியாகி விட்டது.. பூர்ணிமா எங்குமே இல்லை..

"எப்புடிடா மகனே..? பூட்டிக் கிடக்கிற வீட்டில இருந்து எம்மக எப்புடிக் காணாமப் போயிருப்பா..?" பூமா ஈனஸ்வரத்தில் கேட்டாள்..

"வீடுதான் பூட்டியிருந்துச்சும்மா.. மாடிக் கதவு தொறந்துதான் இருந்துச்சு.. அத மறந்து போனியா..?" பார்த்திபன் முகத்தில் கோபம் கொந்தளித்தது..

"நீ என்ன சொல்ல வற்றப்ப..?" மாதவனின் மீசை துடித்தது..

"கயவாளிப்பய.. மாடி வழியா வீடு புகுந்து தங்கச்சியத் தூக்கிட்டு போயிருக்கான்ப்பா.." பார்த்திபனின் ரத்தம் கொதித்தது.. பூர்ணிமாவும் அதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தாள்..

"நீங்க ஏழுகடல், ஏழுமல தாண்டி என்னக் கொண்டு போயி ஒளிச்சு வைச்சாலும் என் அண்ணன் நான் எங்கேயிருக்கேன்னு ஈஸியாக் கண்டு பிடிச்சுரும்.."

"அதுக்கு கடத்திக்கிட்டுப் போனது நான்தான்னு தெரியனுமே.."

"அத இந்நேரம் என் அண்ணன் கண்டு புடிச்சிருக்கும்.. இம்புட்டு நேரமாவா கண்டு புடிக்காம இருக்கும்..? என் அண்ணன் ஓடற தண்ணியில ஓம்போது சுளுக்கெடுத்திரும்.. வீட்டுக்குள்ள இருந்த தங்கச்சி

காணாமப் போயிட்டான்னா அவ காத்தோட கரைஞ்சிருப்பான்னு நினக்கிற ஆளில்ல என் அண்ணன்.."

அவள் வார்த்தைக்கு வார்த்தை என் அண்ணன்.. என் அண்ணன் என்று பாச நெகிழ்ச்சியுடன் பேசியதில் பொறாமை கொண்டான் அரவிந்தன்..

"இதில் என்ன பெருமை இருக்குன்னுதான் எனக்குப் புரியலை.. நீயென்ன கற்பூரமா..? காற்றில் கரைந்து போக.. நீ காணாமல் போனதற்கு என்ன காரணம்ன்னு கெஸ் பண்ணத் துளியளவு அறிவு இருந்தால் போதும்.. பெரிசா இண்டலிஜென்ட் மேனா இருக்கனும்ன்னு அவசியமில்லை.. அது போலதான் உன்னைக் கடத்தியது நானாகத்தான் இருக்கனும்ன்னு உன் அண்ணன் கெஸ் பண்றதும்... உன்னைப் பெண் கேட்டிருக்கிறேன்... உனக்காக அவனுடன் நடுரோட்டில் கட்டிப் புரண்டு சண்டை போட்டிருக்கிறேன்.. என் ஸ்டேட்டஸ் என்னன்னு இப்ப உனக்குத் தெரிந்திருக்கும்.. என் லெவலுக்கு உன் அண்ணனோடு புழுதியில் உருண்டு சண்டை போட்டிருக்கேன்னா என் காதலின் லெவல் என்னன்னு உனக்கு வேண்டுமானால் புரியாமல் இருக்கலாம்.. உன் அண்ணனுக்கு நிச்சயமா புரிந்திருக்கும்.. இதற்கு என்ன புத்திசாலித்தனம் வேண்டியிருக்குன்னுதான் எனக்குப் புரியலை.." என்ற அரவிந்தன்..

"என்னை விட்டால் யாருமில்லை..

கண்மணியே..! உன்னைக் கடத்திவர.."

என்று இமைசிமிட்டி பாடினான்.. இமைகளைச் சிமிட்டாமல் அவனை உறுத்துப் பார்த்த பூர்ணிமா, அவள் அவனது பாடலை ரசிக்கவில்லையென்பதை மௌனமாக உணர்த்தினாள்..

அரவிந்தனின் யூகமும் சரியானதாகத்தான் இருந்தது.. அரவிந்தன்தான் பூர்ணிமாவைக் கடத்திக் கொண்டு போயிருக்கிறான் என்பதை உடனடியாக யூகித்து விட்டான் பார்த்திபன்..

"நான்தான் உன்னைக் கிட்நாப் பண்ணியிருக்கேன்னு உன் அண்ணன் கண்டு பிடிச்சிருக்கலாம்.. பட்.. உன்னை எங்கே

கொண்டு வந்திருக்கேன்னு அவ்வளவு ஈஸியாக் கண்டு பிடித்துவிட முடியாது டியர்.." அரவிந்தன் அறிவுறுத்தினான்..

"ஏன், ஏன், ஏன்..? உங்க வீடுக எங்கெங்கே இருக்குன்னு என் அண்ணன் அலசி ஆராஞ்சு கண்டு புடிச்சிரப் போகுது.." பூர்ணிமா மூக்கை விடைத்தாள்..

"சென்னையிலும், கோயம்பத்தூரிலும் தான் எனக்கு வீடுகள் இருக்கு, சொந்தபந்தம் இருக்கிறாங்கன்னு உன் அண்ணன் கண்டு பிடிக்கலாம்.. மத்தபடி ஊட்டி, கொடைக்கானல், சிம்லான்னு அவன் யோசிக்கக்கூட மாட்டான்.." தெள்ளத் தெளிவாக உரைத்தான் அரவிந்தன்.

அது உண்மைதானே என்பதில் பூர்ணிமாவுக்கு வெறி, வெறியாக வந்தது..

அத்தியாயம்- 27

"உடனடியாக வேணும்னா என் அண்ணனால கண்டு பிடிக்க முடியாமப் போகலாம்... ஆனா, மெட்ராஸிலயும், கோயம்பத்தூரிலயும் நீங்க எம்புடலைன்னா அடுத்து எங்கெங்கே நீங்க போவிங்கன்னு என் அண்ணன் தேட ஆரம்பிச்சிரும்.." அடித்துச் சொன்னார் பூர்ணிமா..

"மே..பி.. அப்படி அவன் வருகிறப்ப, நீ எனக்குச் சொந்தமாகியிருப்ப.." தீவிரமான முகபாவனையுடன் சொன்னான் அரவிந்தன்..

பூர்ணிமா அவனை வெறித்துப் பார்த்தாள்.. அவன் என்ன சொல்ல வருகிறான் என்பதை புரிந்து கொள்ள முடியாத முட்டாளா அவள்..? வெறிச்சோடிய அவளது பார்வையில் என்ன கண்டானோ..

"நான் வில்லன் இல்லடி.." என்று தழைந்த குரலில் சொன்னான் அரவிந்தன்..

"நீங்க எனக்கு ஹீரோவும் இல்ல.." பூர்ணிமா தீர்மானமாகச் சொன்னாள்..

பார்த்திபன் எப்போது வருவான் என்றிருந்தது அவளுக்கு.. அவள் காணாமல் போய் விட்ட செய்தியை ஊருக்குத் தெரியாமல் மறைத்தபடி அவளைத் தேடிக் கொண்டிருந்த குடும்பத்தினரிடம் சேர்ந்து விடவேண்டும் என்று அவள் துடியாய் துடித்தாள்.. அவள் மயக்கத்திலிருந்த ஒருநாளில் அவளது குடும்பம் என்ன பாடுபட்டதோ.. எங்கெல்லாம் அவளைத் தேடி அலைந்தார்களோ என்ற நினைவு அவளை அலைக்கழித்தது.. அந்தநிலை நீடித்தால் என்ன ஆகும் என்ற துயரத்தில்தான் அவள் அந்த முடிவை எடுத்தாள்.. அரவிந்தனிடம் சொல்லி பார்த்திபனுக்குப் போன் செய்து அவள் இருக்குமிடத்தைத் தெரிவித்தாள்..

அரவிந்தன்தான் பூர்ணிமாவைக் கடத்தியிருக்கிறான் என்பதில் பார்த்திபனுக்குக் கடுகளவும் சந்தேகமில்லை.. அவன் அதிவேகமாக யோசித்தான்.. தாயை எச்சரித்தான்..

"ஊருக்குத் தெரியக் கூடாதும்மா.. நீ உளறிக் கொட்டினாலும் கொட்டிருவ.. குளிரும் காச்சலும் ஒட்டுக்கா வந்துருச்சுன்னு இழுத்துப் போத்திக்கிட்டு வீட்டுக்குள்ளேயே முடங்கிக்க.. அப்பா.. நீங்க அம்மாவ ஆஸ்பத்திரிக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போகனும்னு சாக்குப் போக்கச் சொல்லி ஊருப் பஞ்சாயத்தயெல்லாம் தள்ளி வையுங்க.. பூரணி நம்ம வீட்டுக்கு வந்து சேருகிற வரைக்கும் நீங்க ரெண்டு பேரும் வீட்ட விட்டுக் காடு, கரப் பக்கம் கூடப் போகக்கூடாது.. வயலு, வாய்க்கா, தோப்பு துரவbல்லாம் நான் பாத்துக்கறேன்.."

"நீ பள்ளிக்கூடத்துக்குப் போகனுமேப்பா.."

"லீவு போட்டுடறேம்ப்பா.."

"ஊருப் பிரச்சனகளத் தீத்து வைக்கிறவன், வீட்டுப் பிரச்னயப் பாத்துக்க மாட்டேனாப்பா..? நீ பள்ளிக் கூடத்துக்குப் போ.. நான் பூரணியத் தேடறேன்.."

"இல்லப்பா... அது சரிப்படாது... உங்களால முடியாதுன்னு நான் சொல்லல.. யாருக்கும் தெரியாமத் தேடனும்னா நீங்க இதில இறங்கக் கூடாது.. ஆருக்காச்சும் சந்தேகம் வந்துரும்.. அப்புறம் அம்மாவ வேறக் காவக் காக்கனும்..

நீங்க இதில தலக்கொடுக்காம இருக்கறதுதான் சரின்னு தோணுதுப்பா.."

ஆத்திரத்தில் வேட்டியை மத்துக் கட்டிக் கொண்டு வீச்சரிவாளைத் தூக்கத் துடித்த மாதவன் மகனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டார்.. அவன் தகப்பன்சாமி.. தந்தைக்கே உபதேசம் செய்த முருகக் கடவுளைப் போன்றவன்.. அவன் சொல்வதும், செய்வதும் சரியானவையாகவே இருந்திருக்கிறன.. ஆதலினால்..

"சரிப்பா.. நீ சொல்றபடியே செஞ்ரலாம்.." என்றார்..

"முதல்ல நாளான்னைக்குப் பொண்ணுப் பாக்க வர்ற மாப்பிள்ளை வீட்டுக்குப் போனப் போட்டு பூரணிக்கு உடம்பு சரியில்ல.. ஆஸ்பத்திரிக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போகனும்.. அதனால பொண்ணப் பாத்துப் பரிசம் போடறத இன்னொரு நாளைக்குத் தள்ளி வைச்சிரலாம்ன்னு தகவல் சொல்லிருங்க.."

"ஏம்ப்பா.. பூமாவுக்குத்தான குளிரும், காச்சலும்ன்னு சொல்லனும்..?"

"அது ஊருக்கு.. இது மாப்பிள்ள வீட்டுக்கு.."

"ரெண்டு பக்கமும் எகனைக்கு மொகனையாப் பேசினா சரிப்படுமா மகனே..? ஒன்னு போலச் சொல்லிட்டா என்ன..?"

"ஊராளுககிட்ட பூரணிக்கு குளிரும் காச்சல்ன்னு சொன்னா.. நோயாளிப் பொண்ணுன்னு பட்டம் கட்டி விட்டிருவாகப்பா.. அம்மான்னா ஒன்னும் சொல்ல மாட்டாங்க.. பாக்க வர்றவகள அம்மாவத் தொந்தரவு பண்ண வேணாம்ன்னு திருப்பி அனுப்பி வைக்கிறது உங்க பொறுப்பு.. பூரணி எங்கேன்னு கேட்டா.. ராத்திரி முழுக்க அம்மாவப் பக்கத்தில இருந்து பாத்துக்கிருச்சு.. ஒற்றை ஆளாச் சோறாக்கிக் குழம்பு வைச்சுன்னு வீட்டு வேலயப் பாத்துட்டு அலுப்பில மாடியில கண்ணசைந்திருக்குன்னு கத சொல்லுங்க.. கேள்வி கேக்காம போயிருவாங்க.."

பார்த்திபன் நான்கையும் யோசித்துச் செயலாற்றினான்.. தெளிவாகத் திட்டம் தீட்டினான்.. மாப்பிள்ளை வீட்டாரைத் தடுத்து நிறுத்தி வைத்தான்.. ஊருக்குத் தெரியாமல் பூர்ணிமா எங்கேயிருக்கிறாள் என்று தேட ஆரம்பித்தான்..

அதே தெருவிலிருந்த தேவேந்திரனின் வீட்டிற்கு அரவிந்தன் வந்து போனானா என்று விசாரித்தான்.. மற்ற நாள்களில் இரவில் அவன் வந்து போனதை எவரும் பார்த்திருக்கவில்லை.. பார்த்திபனுக்கே அது தெரியாதே.. தெரிந்திருந்தால் சுதாரித்திருப்பானே.. வீடு பூட்டிக் கிடந்ததில் அசட்டையாக இருந்து விட்டான்..

"அந்தப் பய ஊர விட்டு ஓடிப் போயிட்டான்ப்பா.. மத்தியானம் வாக்கில எதுத்தாப்புல இருக்கிற தேவேந்திரன் வீட்டில இருந்து வந்து காருக்குள்ள ஏறுனான்... சோணாச்சலம் இந்தப் பக்கமா மாட்டப் புடிச்சுக்கிட்டு வந்தானா.. அவனக் கண்டதும் எங்கிட்ட ஜாடை பேசினான்.. நானும் எசஜாடை பேசினேனா.. பயபுள்ள காரில ஏறி ஓடிப் போயிட்டான்லல.." வேலாயுதம் தானாக வந்து அவர் சொல்லும் விவரம் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணராமலே விவரம் சொன்னார்..

'நான் நெனச்சது சரிதான்.. அவன் இந்தத் தெருவுக்கு மட்ட மத்தியானத்தில வந்து போயிருக்கான்..' பார்த்திபனின் முகம் இறுகியது..

"தனியாத்தான் போனானா மாமா..?" சாதாரணமாகக் கேட்பதைப் போலக் கேட்டான்..

"வேற யாரு கூட போவா..? தனியாத்தான் போனான் மாப்பிள்ள.. அவன் அத்தமக ரத்தினத்தக் கூடக் கூப்பிட்டுட்டுப் போயிருப்பானோன்னு கேக்கறியா..? கூடப் போக அது தயாராத்தான் இருக்கு.. அனுப்பி வைக்க அதோட ஆத்தாளும் தயாராத்தான் இருக்கு.. இவன் கூப்பிட்டுக்கிட்டுப் போகனுமே.. அவளக் கண்டா பயபுள்ள எட்டடி தூரத்துக்கு எட்டிப் போய் நிக்கிறானே.." பார்த்திபனின் கேள்விக்கு விளக்கமான பதிலைச் சொன்னார் வேலாயுதம்..

'தனியாப் போனானா..?' இருக்காதே என்று யோசனையானான் பார்த்திபன்..

அரவிந்தன் பூர்ணிமாக் காணாமல் போன மதிய வேளையில் அந்தத் தெருவிற்கு வந்து போயிருக்கிறான்..

தனியாக எப்படிப் போயிருப்பான்..? அப்படியென்றால் பூர்ணிமா என்ன ஆனாள்..?

"அவன் கார இந்தத் தெருவில நான் பாக்கலயே மாமா.."

பார்த்திருந்தால் அவனைத் தெறித்து ஓட விட்டிருக்கலாமே என்ற கோபத்தில் பார்த்திபனின் நரம்புகள் புடைத்தன..

"பயபுள்ள கார வாசப்பக்கமா நிப்பாட்டாம, சந்துக்குள்ள நிறுத்தியிருந்தான் மாப்புள்ள.. வாசப்பக்கம் காரு நின்னா, நம்ம ஊரு பயலுக, கல்ல விட்டு எரிஞ்சு கண்ணாடிய உடைச்சிருப்பானுகள்ல.. அந்த பயம் மனசில இருக்குதப்பே.."

'பூரணிய பின்வாச வழியாத் தூக்கிட்டு வந்து சந்துக்குள்ள நின்ன காரில ஏத்தியிருப்பான்..' பார்த்திபன் கண்டு பிடித்து விட்டான்..

அரவிந்தன்தான் என்பது உறுதியாகி விட்ட பின்பு புயல் வேகத்தில் சென்னையிலிருந்த நண்பனை போனில் அழைத்து விவரம் இன்னதென்று கூறாமல் அரவிந்தனைப் பற்றி விசாரித்துச் சொல்லச் சொன்னான்.. ஒரு மணி நேரத்தில் பதில் சொன்ன நண்பன் அரவிந்தன் சென்னையில் இல்லையென்பதையும் சேர்த்துச் சொன்னான்..

"பெரிய பணக்காரன் பார்த்திபா.. ஃபாரின் அது, இதுன்னு சுற்றிக்கிட்டே இருப்பானாம்.. இப்பச் சென்னையில அவன் இல்லை.." சென்னை நண்பனுக்கு நன்றி சொல்லி விட்டு கோயம்பத்தூரிலிருந்த வேறு ஒரு நண்பனுக்குப் போன் போட்டான்.. அங்கும் அரவிந்தன் இல்லையென்ற தகவல் வந்ததில் அடுத்து என்ன செய்வது, எங்கு தேடுவது என்று வெறி கொண்டு விடிய, விடிய அரவிந்தனைப் பற்றித் தெரிந்த நண்பர்களிடம் அவன் துப்புத் துலக்கிக் கொண்டிருந்த போதுதான் ஊட்டியிலிருந்து பூர்ணிமா அவனுக்குத் தகவல் கொடுத்தாள்..

பார்த்திபன் காற்றைவிட வேகமாக வாடகைக் காரில் பயணித்து ஊட்டியில் பூர்ணிமா சொன்ன விலாசத்தை அடைந்த போது சூரியன் நடுவானில் பவனி வந்தான்.. உச்சி வெயிலென்று உணர முடியாமல் ஆதவனை மேகங்கள் மறைத்ததில் சில்லென்று இருந்த மலைப்பிரதேசம் ஏஸியின் குளிராய் பார்த்திபனைத் தொட்டுத் தழுவினாலும் அவனுக்குக் கோபத்தில் வேர்த்துக் கொட்டியது.. அரவிந்தனின் பங்களாவில் நுழைந்த கையோடு..

"டேய்ய்.." என்று அவனது சட்டைக் காலரைப் பிடித்தவனை..

"விடு.. அண்ணா.." என்று விலக்கித் தோட்டத்துப் பக்கமாக இழுத்துச் சென்றாள் பூர்ணிமா..

"என்னை விடு பூரணி.. எம்புட்டுத் தைரியமும், தெனாவெட்டும் இருந்தா இவன், நம்ம வீடு புகுந்து உன்னத் தூக்கிட்டு வருவான்..? ஆருன்னு நினச்சான்..? பார்த்திபன்டா.. எந்தங்கச்சி மேல கை வைச்சவன் தலய எடுக்கலன்னா.."

அதற்கு மேல் தமையனைப் பேச விடாமல் அவனது வாயை இறுகப் பொத்திய பூர்ணிமா கண்ணீர் வழியும் விழிகளுடன்..

"சொல்லாத அண்ணா.. அப்படிச் சொல்லாத.." என்று மன்றாடினாள்..

சொல்வது தன் தங்கைதானா என்ற கோபத்துடன் புருவங்களை நெரித்தான் பார்த்திபன்..

"நான்தான் அண்ணா சொல்றேன்.. இவரை எதுவும் செய்யாதே.."

"இவரா..?"

"ஆமாம்.. இவர்தான்.. கட்டிக்கப் போறவரை அவன், இவன்னா சொல்லச் சொல்ற..? நீயும் அப்பாவும் என்ன

அப்படி வளக்கலயே அண்ணா.. மரியாதை கொடுத்துப் பேசனும்னு சொல்லியில்ல வளத்திருக்கீங்க.."

"பூரணி..!"

பார்த்திபன் ஸ்தம்பித்தான்.. யாரை, யாருக்குக் கல்யாணம் செய்து கொடுப்பது..? தொட்டுத் தூக்கி வந்தவனை வெட்டிச் சாய்க்கச் சொல்லாமல் அவனுக்கு என்னைக் கட்டி வைத்து விடு என்கிறாளே அவனது தங்கை..!

"நீ என் தங்கச்சிதானம்மா..?"

தமையனின் கேள்விக்கு விரக்திப் புன்னகையுடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள் பூர்ணிமா.. அவளது விழிகளில் தெளிவு இருந்தது..

அத்தியாயம்- 28

பூர்ணிமாவின் உதடுகள் துடித்தன.. சொல்லில் வடிக்க முடியாத உணர் வலைகளை அவளது முகத்தில் கண்டான் பார்த்திபன்.. தங்கையின் மனது படும் பாட்டையும், உயிர் துடிக்கும் துடிப்பையும் அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது... இந்த வேதனைக்குக் காரணமானவனுக்குத் தண்டனை கொடுக்காமல் பரிசளிப்பதா..? அதுவும் பார்த்திபனின் தங்கையைக் கொடுப்பதா..?

"என்னைக்குமே நான் உனக்குத் தங்கச்சிதான் அண்ணே.. அப்படித்தான் இருப்பேன்.. இந்தக் கல்யாணம் அவரோட வெற்றியில்ல அண்ணே.. நம்ம கௌரவம்.. அதுக்கான பாதுகாப்பு.."

"என்னம்மா சொல்ற..?"

"அவர்கூட வாழறதுக்காக என்னைக் கட்டிக் கொடுக்கச் சொல்லலை.. நம்ம குடும்ப கௌரவம் அழிஞ்சுறக் கூடாதுங்கிறதுக்காக கட்டிக் கொடுக்கச் சொல்றேன்.. மத்தபடி உனக்குள்ள இருக்கற ஆத்திரமும் ஆங்காரமும்

கொஞ்சம் கூடக் குறையாம என் மனசிலயும் இருக்குண்ணே.."

தங்கை சொல்ல வருவதை பார்த்திபனால் யூகிக்க முடிந்தது..

"இவரை வெட்டிப் போட்டுட்டுட்டு என்ன கூப்பிட்டுக்கிட்டுப் போவ.. உன்கூட ஊருக்கு வந்த பின்னால என்னப் பத்தி என்னென்ன பேசுவாகன்னு நினச்சுப் பாத்தியா..?"

"நீ காணாமப் போனது ஆருக்கும் தெரியாதும்மா.."

"ஆனா இவர ஊருக்கே தெரியுமேண்ணா.. இந்த மனுசனுக்கு ஒன்னுன்னா சும்மா விட்டிருவாகளா..? போலிஸீ துப்புத் துலக்கி நம்ம வீட்டு வாசலுக்கு வந்து நின்னா என்ன செய்யறது..? வாழ வேண்டிய நீயும், நிலச்சு நிக்க வேண்டிய நம்ம குடும்ப கௌரவமும் என்ன ஆகிறது..? எந்தவிதச் சேதாரமும் இல்லாம நான் திரும்பி வந்திருக்கேன்னு நம்ம ஊரு சொல்லுமா..? சொல்லு.. சும்மா தூக்கிட்டுப் போனதுக்கா அவளோட அண்ணங்காரன் வெட்டிச் சாச்சிருப்பான்னு இந்த உலகம் சந்தேகத்த எழுப்பும்.. நம்ம ஒறவு சனங்களே முன்னாடி விட்டுப் பின்னாடி பொறணி பேசுவாக.. நான் கட்டயில போற வரைக்கும் மாறாத களங்கமா அந்தப் பேச்சு என்னக் கொன்னு தின்னுரும்.. தப்புச் செய்யாத நான் எதுக்குண்ணே தண்டனய அனுபவிக்கனும்..? வேணாம்ண்ணே.. இவருக்கே என்னக் கட்டி வைச்சிரு.. அதுக்குப் பின்னால பாரு.. நான் யாருன்னு காட்டறேன்.. இஷ்டமில்லாத பொண்ணத் தூக்கிட்டு வந்தா இருந்து வாழந்திருவான்னு நினக்கிறாரே.. அந்த நினப்ப உடச்சுக் காட்டறேன்.. உந்தங்கச்சியா நம்ம வீட்டுக்குத் திரும்பி வந்துடறேன்.."

"அப்ப மட்டும் ஊர் வாய் சும்மா இருக்குமாம்மா.. உன்ன வாழாவெட்டின்னு சொல்லும்.. அதுக்கா உன் அண்ணனா

கூடப் பொறந்திருக்கேன்..? உன்ன வாழ வைக்கத்தான் இந்த அண்ணன் இருக்கேன் பூரணி.."

"வாழ்க்கையா..? இவரோடவா..? போ.. அண்ணா.."

பூரணியின் முகத்தில் வெறுப்பு அப்பிக் கிடந்தது.. பார்த்திபன் திடுக்கிட்டான்.. இப்படிப்பட்ட வெறுப்பை மனம் முழுக்க நிரப்பியிருக்கும் தங்கை அரவிந்தனோடு எப்படி வாழ்வாள்..?

ஒரு தமையனாக தங்கையின் நலனை மட்டும் சிந்தித்தான் அவன்..

"வேண்டாம் பூரணி.. அவனை நான் ஒன்னும் செய்யலை.. இப்போதைக்கு விட்டு விட்டுப் போகிறேன்.. எப்ப அவனத் தட்டனும்னு காத்திருந்து போட்டுத் தாக்கிக்கறேன்.. ஆனா நீ சொல்றது மட்டும் வேண்டாம்.. நாம ஊருக்குப் போகலாம்.. நாளைக்கு வர்றதா இருக்கற மாப்பிள்ள வீட்டுக்காரங்கள வரச் சொல்லிக் கல்யாண தேதிய முடிவு பண்ணிரலாம்.. அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாணத்த நடத்தி உன்ன உன் புருசன் வீட்டுக்கு அனுப்பி வைச்சுட்டு இவனுக்குத் திருவிழாக் கொண்டாடிக்கிறேன்.."

அரவிந்தனின் பலம் தெரியாமல் பேசுகிறானே என்று துயரப்புன்முறுவல் பூத்தாள் பூர்ணிமா.. அரவிந்தனை அணுகுவது என்பது அத்தனை எளிதானதா..? பார்த்திபன் பலவான்தான்... அரவிந்தன் அவனுக்குச் சமமான பலவானாயிற்றே... கூடுதலாக பார்த்திபனைவிட பணபலமும் செல்வாக்கும் உள்ளவன்.. பூர்ணிமாவும், பார்த்திபனும் இருப்பது அரவிந்தனின் பங்களாவில்.. அவனை மீறி அண்ணனும், தங்கையும் வெளியேறி விட முடியுமா..? யாருக்கும் தெரியாமல் தங்கையை அழைத்துக் கொண்டு போய்விட வேண்டும் என்று பார்த்திபன் தனியாக கிளம்பி வந்திருக்கிறான்.. அத்துடன் பூர்ணிமா கொடுத்த வாக்குறுதி என்று ஒன்று இருக்கிறதே.. அவளது

வாக்குறுதியின் மீது நம்பிக்கை வைத்துத்தானே அவள் இருக்கும் இடத்தை அவளது அண்ணனுக்குத் தெரிவிக்க அரவிந்தன் சம்மதித்தான்..

"நீ சொல்கிறபடி நீ பார்த்திருக்கிற மாப்பிள்ளைக்கே நான் கழுத்த நீட்டறேன்னு வைச்சுக்க.. இவரு என்னத் தூக்கிட்டு வந்தத நான் மறச்சு வாழ்க்க நடத்தனும்.. என்னைக்காவது ஒருநாள் இது அந்த மனுசனுக்குத் தெரிஞ்சா, ஒரு ராத்திரி உன்னத் தொடாம உத்தமனப் போலத் தள்ளி நின்னான்னு நீ சொல்றத நம்பச் சொல்றயான்னு என்னக் கேக்கக்கூடாத கேள்விய எல்லாம் கேட்டு வப்பான்.. அதக் கேட்டுக்கிட்டு நான் உயிரோட இருப்பேன்னா நினக்கிற..?"

"பூரணி.."

பார்த்திபன் பதறிப் போய் தங்கையை அணைத்துக் கொண்டான்.. அண்ணனின் தோள்களில் சாய்ந்திருந்த தங்கை உறுதியுடன் பேசினாள்..

"களங்கப்பட்டவங்கிற பேருக்கு, வாழாவெட்டிங்கிற பட்டம் எவ்வளவோ மேல் அண்ணா... புருசன்கூட கோவிச்சுக்கிட்டு பொறந்த வீட்டுக்கு வந்து வாழற பொண்ணுகள்ல ஒருத்தியா நானும் இருந்துட்டுப் போறேன்.. மாட்டேன்னு சொல்லிறாத அண்ணா.."

கால்களில் விழுந்து கதறும் தங்கைக்கு அவன் என்ன பதிலைச் சொல்வான்..? மனதைக் கல்லாக்கிக் கொண்டு தங்கையின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்தான்.. அரவிந்தனை மறுநாள் பெண் கேட்டு குடும்பத்துடன் வரச் சொல்லிவிட்டுத் தங்கையுடன் வயலூருக்குக் கிளம்பினான்.. கிளம்புவதற்கு முன்..

"உன்னை என் வாழ்நாளில் மன்னிக்கவே மாட்டேண்டா.. எழுதி வைச்சுக்க.. என்னைக்குமே நீ எனக்கு எதிரிதான்.." என்று அரவிந்தனின் முகம் பார்க்காமல் சொல்லி விட்டுத்தான் கிளம்பினான்..

அத்தியாயம்- 29

அறையைச் சுற்றிய பார்வையைச் சுழல விட்டாள் பூர்ணிமா.. மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருந்த கட்டிலும்.. அதைச் சுற்றித் தொங்க விடப்பட்டிருந்த மலர்ச்சரங்களும் அது முதலிரவு அறையென்று நாணத்துடன் கட்டியம் கூறி அவளை வரவேற்றன.. பூர்ணிமா அடிமேல் அடியெடுத்து வைத்து அன்னப்பதுமை போல மெல்ல நடந்தாள்.. அவளது பிரத்யேக அலங்காரத்தை ஆவலுடன் பார்த்த அரவிந்தனின் கண்கள் அவளை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தன.. கம்மங் கொல்லையை காளைமாடு பார்க்கும் மேய்ச்சல் பார்வை அது.. பூர்ணிமா உடல் கூசினாள்.. வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

'நினைத்ததைச் சாதிச்சுட்டானில்ல..' மனம் கசந்தாள்..

பூர்ணிமாவுடன் பார்த்திபன் வயலூருக்குத் திரும்பிய போது இருட்டியிருந்தது.. ஊருக்கு வெளியே ஆள் நடமாட்டமில்லாத இடத்தில் தங்கையுடன் இறங்கிக் கொண்டு வாடகைக் காரை அனுப்பி வைத்து விட்டான்.. மகன் போனில் சொல்லியிருந்ததால் அங்கே புல்லட்டுடன் காத்திருந்தார் மாதவன்... தங்கையுடன் பார்த்திபன் புல்லட்டில் ஏறிக் கொள்ள.. அவர் வயலில் இருந்து வருவதைப் போல நடந்து வர ஆரம்பித்தார்.. புயல் வேகத்தில் புல்லட் ஊருக்குள் பாய்ந்தது.. தங்கையுடன் வீட்டு வாசலில் இறங்கியவனைக் கண்ட வேலாயுதம்..

"என்ன மாப்புள.. உங்க ஆத்தாளுக்கு காச்சல்ன்னு சொன்னியே.. இப்ப எப்படி இருக்கு..?" என்று கேட்டு வைத்தார்..

"நல்லா இருக்கு மாமா.. எந்திரிச்சு உக்காந்துருச்சு.."

"நீ எங்கே தங்கச்சிகூட ஊரச்சுத்திட்டு வர்ற..?"

"என்னயும் தங்கச்சியயும் பாத்தா ஊர்சுத்திக மாதிரியா இருக்கு..? அம்மாவுக்கு மாத்திர வாங்கிட்டு, நாளைக்கு பூரணியப் பொண்ணு பாக்க வர்றவுகளுக்கு விருந்தாக்க

வேண்டிய சாமானுகளயும் வாங்கிட்டு வரப் போயிருந்தோம் மாமா.."

மாதவன் முன்யோசனையுடன் வீட்டில் இருந்த சாமான் பைகளை புல்லட்டில் தொங்க விட்டிருந்தார்.. அவற்றைக் கையில் எடுத்தபடி கதை சொல்லி விட்டுத் தங்கையை வீட்டுக்குள் சேர்த்து விட்டான் பார்த்திபன்..

மறுநாள் அரவிந்தான் தன் குடும்பத்துடன் பெண் கேட்டு வந்தபோதுதான் பெருங்கலாட்டா உருவானது.. மேனகா ஒருபக்கம் தன் மகளைக் கட்ட வேண்டிய முறை மாப்பிள்ளையை பூமாவின் மகள் வளைத்துப் போட்டு விட்டதாகக் கத்த, ஊர் மக்கள் பணத்தைப் பார்த்து மாதவன் மயங்கி ஊர் நலனைப் பின்னுக்குத் தள்ளி விட்டதாகக் சப்தம் போட்டார்கள்.. பார்த்திபனுக்குத் தலை வேதனையாக இருந்தது..

"தாயைப் போலப் பிள்ளை.. நூலைப் போல சேலை.. அம்மா எதைச் செய்தாளோ.. அதைத்தானே மகளும் செய்வாள்..? தாய் சொல்லிக் கொடுத்த பாடம் அப்படி..?" இகழ்ச்சியாக மேனகா பேசிய பேச்சில் கூனிக் குறுகிப் போனாள் பூமா..

"பார்த்து மேனகா... ஜாக்கிரதை... இது என் சம்பந்தியின் வீடு.. அண்ணான்னு என்னிடம் சொந்தம் கொண்டாடனும்னா மரியாதையா நீ பேசின பேச்சுக்கு மன்னிப்புக் கேளு.. உன் மகளை அரவிந்தனுக்குப் பிடிக்கவில்லை.. பூர்ணிமாவைத்தான் பிடித்திருக்கிறது.. அதற்காக என் மருமகளை நீ வாய்க்கு வந்தபடி பேசுவாயா..? அதைக் கேட்டுக்கிட்டு நாங்க சும்மா இருப்போம்னு நினைத்தாயா..?" ராமகிருஷ்ணனின் கோபத்தில் மேனகா நடுநடுங்கி விட்டாள்..

அவரது தயவில்தான் அவளது சென்னை வாழ்க்கையே நடக்கிறது.. அதுவும் பறிபோய் விட்டால் அவள் ஊர்மிளாவின் மனதுப்படி எப்படி மாப்பிள்ளை தேட முடியும்..? வயலூரில் வாழ்ந்தால் வயலும், வாழ்வும் என தேவேந்திரன் உபதேசித்து மேனகாவை அவளது தாய் தேவேந்திரனின் தலையில் கட்டி வைத்ததைப் போல ஏர் உழுகும் உழவன் மகன் தலையில் ஊர்மிளாவைக் கட்டி

வைத்து விட மாட்டாரா..? எப்படியும் அரவிந்தன் கை நழுவிப் போய் விட்டான்.. பூர்ணிமாவை அவன் திருமணம் செய்து கொள்வது என்று முடிவாகி விட்ட பின்பு அவனை மேனகா பகைத்துக் கொள்வதால் அவளுக்கு என்ன

லாபம் வந்து விடப் போகிறது..? அவளே ஒட்டுண்ணி.. ராமகிருஷ்ணனின் தயவில் பிழைப்பவள்.. இருப்பதை காபந்து பண்ணிக் கொள்ள வேண்டுமானால் அவள் வாயைத் திறக்காமல் இருப்பதே சாலச்சிறந்தது..

மேனகாவை ராமகிருஷ்ணன் அடக்க.. வயலூர் மக்கள் கொதித்தார்கள்..

"ஏம்ப்பா.. ஏய்ய்.. உனக்கு என்ன அறிவு கெட்டுப் போச்சா..? நம்ம ஊரு ஆத்துத்தண்ணியவும், ஊத்துத் தண்ணியவும் பாழடிச்சுட்டு, பொன் விளையற

மண்ணில காங்கிரிட்டு கட்டிடத்த எழுப்ப வந்தவனுக்கு ஒந்தங்கச்சியக் கட்டிக் குடுக்கனும்ங்கிற... அய்யா.. பிரசிடெண்டு அய்யா.. பணங்காசுக்கு மத்த சனங்க மயங்கலாம்.. நீங்க மயங்கலாமுங்களா..? ஊரே உங்கள நம்பி நிக்கிறப்ப, நீங்க இப்புடி எதிராளிக்குப் பொண்ணக் கட்டிக் கொடுக்கப் போறிகளே.. நாங்க உங்களுக்கு முக்கியமில்லைங்களா..?"

மாதவனையும், பார்த்திபனையும் முற்றுகையிட்டவர் -களுக்கு அரவிந்தன் பதில் சொன்னான்..

"இங்கே பாருங்க.. இந்தக் கல்யாணமே வயலூரோட நலனுக்காகத்தான் நடக்கப் போகுது.. பூர்ணிமாவை எனக்குப் பிடித்திருந்தது.. பெண் கேட்டேன்.. வயலூரில் கூல்டிரிங்க் பேக்டரி ஆரம்பிக்க நினைத்தவனுக்குப் பெண் கொடுக்க முடியாதுன்னு பார்த்திபனும், பிரசிடெண்ட் சாரும் மறுத்துட்டாங்க.. எப்போதும் இந்த மண்ணுக்குத் தீங்கு விளைவிக்க மாட்டேன்.. இங்கே கூல்டிரிங்க் பேக்டரி ஆரம்பிக்க மாட்டேன்னு

நான் சத்தியம் செய்து கொடுத்ததால பெண் கொடுக்க ஒப்புக்கிட்டு வரச் சொல்லியிருக்கிறாங்க.. அவங்களுக்கு அவங்க வீட்டு பெண்களின் வாழ்க்கையை விட இந்த

ஊரின் நலன்தான் முக்கியமாம்.. அப்படிப்பட்டவங்களுக்கு நீங்க என்ன கைம்மாறை செய்யப் போறீங்க..?"

வயலூர் மகிழ்ந்து போனது.. ஊரே ஒன்றுகூடி அவர்கள் வீட்டுத் திருமணம் போல அரவிந்தன், பூர்ணிமாவின் திருமணத்தை நடத்திக் கொடுத்தது.. பூர்ணிமாவுக்காக பார்த்திபன் பார்த்து வைத்திருந்த கவர்ண்மெண்ட் வேலை பார்க்கும் மாப்பிள்ளை மட்டும்..

"பணக்கார மாப்பிள்ள கிடைச்சதினாலதான் உங்க தங்கச்சிக்கு உடம்பு சரியில்லாமப் போச்சா பார்த்திபா..?" என்று கேட்டு வைத்தான்..

சம்மட்டி அடியாய் பார்த்திபனின் மனதில் அடி விழுந்தது.. வாக்குத் தவறியனின் மனம் அரவிந்தனின் மீதான வன்மத்தில் கொதித்தது..

அத்தியாயம்- 30

"ஏண்டி.. அங்கேயே நிற்கிற..? பக்கத்தில் வா..."

போதை நிரம்பிய விழிகளுடன் இரு கரங்களையும் விரித்து அழைத்தான் அரவிந்தன்.. கழுத்தில் அவன் காலையில் கட்டியிருந்த தாலிச்சரடு மஞ்சள் மணத்துடன் புரண்டு அவள் மனதில் ஏதோ மாயத்தை நிகழ்த்தியது.. பட்டு வேட்டி, சட்டையுடன் இருந்தவனின் புதுவிதமான அழகு அவனை மீண்டும், மீண்டும் பார்க்கத் தூண்டியதில் திடுக்கிடலுடன் கூடிய கிறக்கம் அவளை ஆக்ரமித்தது.. மயக்கம் தரும் அவனது ஆண்மை ததும்பிய அழகுத் தோற்றம் மறக்கடிக்க யத்தனித்தது அவன் மீதான வெறுப்பை..

அவள் அசையாமல் நிற்க அழுத்தமான காலடிகளுடன் அவன் அவளை நெருங்கினான்.. அறைக் கதவை மூடித் தாழிட்டவன் மறுநொடியில் அவளை அவனது ஆவேச

அணைப்பில் சிக்க வைத்தான்.. பூர்ணிமா மூச்சுத் திணறத்திமிறினாள்.

"கரை காணாக் காதல்டி உன் மீதான என் காதல்.. கரை காணவும் நான் விரும்பவில்லை.. வா.. இரண்டு பேரும் மூச்சுத்திணற காதலில் மூழ்குவோம்.." அவளது காதருகில் கிசுகிசுத்தான்..

போராட்ட களத்தில் போராட சக்தி வேண்டும்.. 'போராட வேண்டாம், தோற்று விடு' என்று கூவும் மனதுடன்.. உருகும் உடலுடன்.. எப்படிப் போராடுவது..?

அவளைத் தொட்ட அவனது கைவிரல்கள் அவளது உடலெங்கும் பரவி ஊர்ந்ததில் அவள் நடுங்கினாள்.. தடுக்கும் வகையறியாமல் தவித்தாள்.. முதன் முதலாக.. உணரும் ஆணின் ஸ்பரிசம்.. செவிவழிக் கதைகளின் நிதரிசன தரிசனம்.. அச்சத்துடன் விலக முற்பட்டு முடியாமல் அவனது கைகளுக்குள் அடங்கினாள்.. அவனது தேடுதலில் இவளது உடல் கூசி உருகிக் காணாமல் போய் கொண்டிருந்தது..
"வேண்டாம்.." அவள் கெஞ்சினாள்..

ஒப்பனையில்லாத சோர்வு நிரம்பிய அவளது அழகிய விழிகளில் தெரிந்த அச்சம் அவனை ஈர்த்தது.. புரியாதவைகள் புரியத் தொடங்குவதில் உண்டாகும் அச்சம் அது.. ஆணை ஈர்ப்பது.. அவனையும் ஆகர்ஷித்தது.. அவளது விழிகளின் மருளலில் அவன் கிறங்கிப் போனான்.

"ஏண் வேண்டாம்..? எனக்கு நீ வேண்டுமே.." அவன் கொஞ்சினான்..

"பாதகா..! என் விருப்பத்துக்கு மதிப்பே இல்லையா..?" அவள் பொங்கினாள்..

"என் விருப்பத்தை நீ மதிக்காதபோது, உன் விருப்பத்தை நான் ஏன் மதிக்கனும்..? சண்டை போட்டாலும் நீதாண்டி எனக்கு வேண்டும்.. என்னருகில் நீ இருந்தால் போதும்.. உன்னுடன் நான் வாழும் வாழ்வு எனக்குச் சொர்க்கம்டி.."

"எனக்கு நரகம்.."

"சொர்க்கம்ன்னு உன் வாயால் நீயே சொல்லுவாய்.."

"கனவு காண வேணாம்.. ஒருநாளும் நான் அதைச் சொல்லமாட்டேன்."

"ஒரு நாளில் நீ அதைச் சொல்லுவாய்.. இப்போது என் மீதான வெறுப்பை வளர்த்துக் கொண்டிருக்கிறாய்.. உன் மனம் முழுவதும் என்மீதான வெறுப்புத்தான்.. என் மீதான வெறுப்பெனும் இரும்புத்திரையை ஊடே நிறுத்தி அந்தப் பக்கம் நீ.. இந்தப்பக்கம் நான்.. என ஒளிந்து கண்ணாமூச்சி விளையாட்டை விளையாடுகிறாய்.. அதை உடைத்து இந்தக் கள்வனைக் காதலி.. இந்த வாழ்க்கையை என்னுடன் வாழ்ந்து விடு.."

"காலத்துக்கும் அது நடக்காது.."
"இப்போது நடந்து கொண்டிருக்கிறதே.."

அவளை அவன் ஆக்ரமித்துக் கொண்டே கேட்ட கேள்வியில் அவளது வெட்கம் சிறடிகத்து சிலிர்த்தது.. மூச்சு விடவும் அனுமதி மறுத்து அவளைப் பற்றி அவளது மேனியில் அவன் படர்ந்த போது தன்வயமிழந்து தன்னுணர்வை இழந்தாள் அவள்.. விழித்துப் பார்த்த போது அவன் அவளை ஆண்டு முடித்திருந்தான்.. திருப்தியான தொரு நெற்றி முத்தத்துடன் அவள் மீதிருந்து அவன் புரண்டு விலகிய போது அவளது கன்னத்தில் கண்ணீர் தாரைகள் கோலமிட்டன..

"ம்ப்ச்.. அழக்கூடாது.."

அதட்டியபடி அவளது கண்ணீரைத் துடைத்து விட்டவன் ஓய்ந்து கிடந்தவளின் முகம் பற்றி இழுத்து முத்தமிட்டான்..

"உங்களை முழு மனதா நான் ஏத்துக்கலை.. என் தலைவிதி இது.. உங்க பலத்தைக் காட்டி என்னைத் தோக்கடிச்சிருக்கீங்க.." கண்ணீருடன் திக்கித் திணறினாள்..

"ஸோ வாட்..?" நிதானமாகக் கேட்டான் அரவிந்தன்.

"நீ யாரோ ஒருத்தி இல்லையே.. யு ஆர் மை வொய்ஃப்.."

"பொண்டாட்டின்னா..? அவ விருப்பமில்லாம பெண்டாளலாமா..?"

"உன் விருப்பத்துக்காக காத்திருந்தா வேலைக்கு ஆகாதுடி.. பிடிவாதக்காரிடி நீ.. ஜென்மம் முழுக்க என்னை உன்னிடம் நெருங்க விட்டிருக்க மாட்ட.."

அவனது சரியான கணிப்பில் அவளுக்குக் கோபத்துடன் கூடிய மெச்சுதல் வந்தது.. அவனிடம் தோற்று ஓய்ந்து கிடந்தவளை அணைத்து முதல் புள்ளி வைத்து அவன் கோலமிட ஆரம்பித்ததில் இரக்கமற்ற கள்வன் அவன் என்று அவள் வெறுத்துப் போனாள்.. யானை புகுந்த வனம்.. அவனது கைகளில் அகப்பட்டுக் கொண்ட அவளது உடல்.. விடியும் வரை உறக்கத்தை மறந்து சூறையாடியது அவனது வேட்கை..

சூரியனின் கதிர்கள் ஜன்னல் திரைக்கு அப்பால் வெளிச்சப் புள்ளிகளைக் காட்டியும் அவன் அவளை விட்டு விலக மறுத்தான்.. நல்லவேளையாக கதவைத் தட்டிய காபியின் அழைப்பு அவளைக் காப்பாற்றியது..

"நீ இரு.." அவன் எழுந்து சட்டையை மாட்டிக் கொண்டே கதவருகே போன போது இவள் மின்னல் வேகத்தில் குளியலறைக்குள் பாய்ந்து தாழிட்டு விட்டாள்.

காபியுடன் திரும்பி வந்தவன் அவளைக் காணாமல் புருவங்களை உயர்த்தினான்.. குளியலறையிலிருந்து வந்த தண்ணீரின் சப்தத்தில் சிரித்துக் கொண்டான்.. குளித்து

முடித்து வந்தவளை அவன் காதலுடன் நெருங்க முற்பட.. விலகி உடைமாற்றி வெளியே போய் விட்டாள்.. ஹாலில் இருந்த பூமாவும், பார்த்திபனும்.. அனுபமாவுடன் ஏதோ பேசிக் கொண்டிருக்க தயங்கி நின்றாள்.. மருமகளை அன்புடன் பார்த்த அனுபமா..

"பூஜையறையில் விளக்கேத்தும்மா.." என்றாள்..

கோடிஸ்வரக் குடும்பத்தில் ஒற்றை மகளாய் பிறந்தவள்.. கோடிஸ்வரக் குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டிருப்பவள்.. எந்தவிதக் கர்வமும் இல்லாமல் பாசம் காட்டியதில் பூர்ணிமாவினால் மறுக்க முடியாமல் போய் விட்டது.. பூமாவும், பார்த்திபனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.. அரவிந்தன் மாடியிலிருந்து இறங்கி வந்தான்.. மருமகன் முன்னிலையில் உட்காருவது மரியாதையல்ல என்ற வயலூர் வழக்கப்படி பூமா எழுந்து சேலை முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டு மகனின் பக்கத்தில் நின்று கொண்டாள்.. பார்த்திபன் அசையக்கூட இல்லை..

"ஏன் எழுந்துட்டிங்க.. உட்காருங்க.." என்றான் அரவிந்தன்..

"இல்லைங்க தம்பி.." என்று சொல்வதற்குள் பூமாவுக்கு வியர்த்து விட்டது..

அனுபமாவுக்கு வேடிக்கையாக இருந்தது.. ரசித்துச் சிரித்தாள்.. பூமாவின் முகம் வெட்கத்தில் சிவந்து விட்டது.. சமாளித்துக் கொண்டாள்..

"தங்கச்சியையும், மாப்பிள்ளையையும் மறுவீட்டு விருந்துக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போகனும்.. அதுக்காகத்தான் அப்பாவை ஊருக்கு அனுப்பி வைச்சுட்டு அம்மாவும், நானும் மட்டும் இங்கே தேங்கி நின்னோம்.." அரவிந்தனின் முகம் பார்க்காமல் அனுபமாவிடம் சொன்னான் பார்த்திபன்..

"வாட்'ஸ் யுவர் ஒப்பினியன் அரவிந்த்..?" மகனிடம் கேட்டாள் அனுபமா..

"நோ அப்ஜெக்சன் மாம்.. பட்... ஒன்லி டூ டேஸ் தான் மறுவீட்டு விருந்தில் இருக்க முடியும்.. மறுநாளே நாங்க ஹனிமூனுக்கு சுவிட்சர்லாந்துக்குக் கிளம்பியாகனும்.."

அரவிந்தன் சம்மதம் அளித்ததில் பூர்ணிமாவுக்குள் உணர்வலைகள் புரண்டன..

அத்தியாயம்- 31

"வெளிநாட்டுக்கா..? நீ போறயா..?" வாய் பிளந்தாள் பூங்காவனம்... பொறாமையில் வெந்தவள் என்ன செய்வதென்று தெரியாமல் அவளது சவுரி முடியைச் சுழற்றியடித்தாள்..

"ஏரோப்பிளேனில பறப்பியா..?" மல்லிகாவின் பொறாமை அப்பட்டமாகத் தெரிந்தது.. பூர்ணிமாவுக்குத் துயரமாக இருந்தது..

அரவிந்தன் மகிழ்ச்சியாக இருந்தான்.. பூர்ணிமாவின் துயரத்தைக் கண்டு கொள்வதாகவே இல்லை... அவளைச் சுற்றிச் சுற்றி வந்தான்... பார்த்திபன் அரவிந்தனுடன் பேசவில்லை.. தங்கையின் துயரத்தில் மனம் வெதும்பினான்.. மாதவன் பெரிய மனிதர்.. நான்கும் தெரிந்தவர்.. அரவிந்தன் செய்திருந்த செயலில் மனம் கொதித்திருந்தாலும் அவன் இன்று மருமகனாகி விட்டான் என்பதினாலும் ஊருக்கு அரவிந்தனால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்ற உத்திரவாதத்தினாலும் 'வாங்க, சாப்பிடுங்க..' என்பதைப் போன்ற உபசார வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்.. அதற்கு மேல் பேசுவதில்லை.

பூமா பெண்.. தாய்.. மகளின் வாழ்க்கை இனி அரவிந்தனுடன்தான் என்பதில் தெள்ளத் தெளிவாக இருப்பவள்.. மனதார்ந்த பாசத்துடன் அரவிந்தனை வரவேற்று உபசரித்தது அவள் மட்டும்தான்.. பூர்ணிமாவை அரவிந்தனுக்கான பணிவிடைகளைச் செய்யச் சொல்லி அதட்டிக் கொண்டேயிருந்தாள்..

"அவனுக்கு எதுக்கும்மா எந்தங்கச்சி சேவகம் செய்யனும்..?" பார்த்திபன் சண்டைக்கு வந்த போது மகனைத் தீர்க்கமாக ஓர் பார்வை பார்த்து விட்டு..

"ஏன்னா... உந்தங்கச்சி இப்ப அவரோட பொண்டாட்டி.." என்று ஆழ்ந்த குரலில் பதில் சொன்னாள்.

"எப்புடிம்மா இப்புடிப் பேசற..? அவன் செஞ்சு வச்சிருக்கிற வேலைக்கு அவன வீட்டில சேக்கிறதே தப்பு..? இதில் மாப்பிள்ள மரியாத வேற நடக்கனுமாக்கும்..?" பார்த்திபன் சீறினான்.

"கொஞ்சமாச்சும் கூடப்பொறந்தவ வாழனும்ங்கிற அக்கறயோட பேசுப்பா... அவரு செஞ்ச தப்புக்கு பிராயச்சித்தம் பண்ணிட்டாருள்ல... அப்புறமும் அதப்பத்தியே பேசிக்கிட்டு இருந்தா எப்புடி தம்பி..? உந்தங்கச்சி வாழ்க்கய நினச்சுப் பாருய்யா.."

"எந்தங்கச்சி கழுத்தில தாலியக் கட்டிட்டா அவன் செஞ்சது தப்பில்லன்னு ஆகிருமா..? அதக் கடத்திக்கிட்டுப் போயி கழுத்தில கத்திய வச்சுக் கல்யாணம் கட்டியிருக்கான்ம்மா.. அத மறந்துட்டியா..?"

"மறக்காம நினச்சுக்கிட்டே இருந்தா உந்தங்கச்சி எப்புடி வாழுவா பார்த்தி..?"

மகனுக்கு எடுத்துச் சொல்லிப் புரிய வைக்க பூமா போராடிக் கொண்டிருந்தபோதுதான் உணர்ச்சி வேகத்தில் வார்த்தைகளை விட்டு விட்டான் பார்த்திபன்..

"எந்தங்கச்சி ஒன்னும் அவன்கூட வாழறதுக்காக தாலியக் கட்டிக்கல.."

பூமாவும், 'காபித்தண்ணி' வேண்டும் என்பதற்காக சமையலறைக்குள் நுழைந்த மாதவனும் ஒருமித்த குரலில்.

"என்னது..?" என்று பதறிப் போனார்கள்..

"ஆமாம்ப்பா.. ஊட்டியில தங்கச்சியக் கைப்பத்திக் கிட்ட மறுநிமிசமே அவன் சங்க அறுத்துப் போட்டுறனும்னு துடியாய் துடிச்சேன்.. தங்கச்சி விடல.. எங்கையக் கட்டிப் போட்டிருச்சு.. அவனுக்கு கழுத்தை நீட்டினாத்தான் அதோட மானம், மரியாதை நிலைக்கும்ன்னு அழுதுச்சு.. கட்டிக்கிட்ட பின்னால அவன்கூட வாழமாட்டேன்.. நம்ம வீட்டில வாழா வெட்டியா இருந்துக்குவேன்னு சொல்லுச்சு.. களங்கப்பட்டவங்கிற பேருக்கு இன்னாரோட

பொண்டாட்டிங்கிற மரியாதயோட வாழாவெட்டியா இருக்கிறது மேல் அண்ணான்னு கதறுச்சு.. அதனாலதான் அவனச் சும்மா விட்டேன்.."

"இதையேம்ப்பா எங்கிட்டச் சொல்லலை..?"

"சொல்ல முடியலப்பா.. அம்மாவும் நீங்களும் ஆயிரம் நாயம் பேசுவீக.. அதக் காது கொடுத்துக் கேட்டுக்கிட்டு கேத்தரவாடா இருக்க என்னால முடியாது.."

"கூடப் பொறந்தவன் வேற பேச்சாடா இது..? நீ வாத்தியார் வேற.."

"கூடப் பொறந்தவன்ங்கிறதினாலதான் என் கொடலு பதறுதுப்பா.. வாத்தியாரா இருந்தா கோபத்த மூட்ட கட்டி சோழவந்தான் ஆத்தோட போயிருன்னு வீசிரனுமா..?"

"இப்ப என்னதான் சொல்ல வர்ற..?"

"சுவிட்சர்லாந்தாமே.. சுவிட்சர்லாந்து.. பீத்திக்கிட்டு அலையறான்.. எந்தங்கச்சி அவன்கூடப் போகாதுப்பா.. நம்ம வீட்டிலதான் இருக்கும்.."

"எத்தன நாளைக்கு..?"

"காலம் பூராவும்.. அது கழுத்தில தாலி ஏறனும்னு தான் நானும் பல்லக் கடிச்சுக்கிட்டுப் பொறுமையா இருந்தேன்.. வரமாட்டேன்னு சொல்ற எந்தங்கச்சிய இழுத்துப் பாக்கட்டும்.. அப்புறம் இருக்கு அவனுக்கு.."

பார்த்திபன் வேட்டியை மடித்துக்கட்டிக் கொண்டு கோபாவேசமாக வெளியில் போய் விட்டான்.. பூமா இடிந்து போய் உட்கார்ந்து விட மாதவன் அவள் தலையில் கை வைத்து ஆறுதல் படுத்தினார்..

"முள்ள முள்ளால எடுக்கிற ஊரு இது பூமா.. உன் மகனயும், மகளயும் எப்புடி வழிக்குக் கொண்டு வரனும்னு எனக்குத் தெரியும் புள்ள.. நம்பு.."

"எப்புடிங்க அயித்தான்..? இதுக ரெண்டும் கூட்டுக் களவாணிகளா இருந்துருக்குதுகளே.. எங்கிட்ட ஒற்ற வார்த்த மூச்சு விடலயே.."

"அதுக மட்டும்தான் கூட்டுப் போடனுமா..? நாம போடக்கூடாதா..?"

மாதவன் சுழலுக்குப் பொருந்தாத சரசம் பேச.. பூமா கோபம் கொண்டாள்..

"இங்க, மக வாழாவெட்டியா நின்னுருவாளோன்னு பதறிக்கிட்டு இருக்கேன்.. நீங்க.. சரசம் பேசறிகளா..? பெத்ததுகதான் சரியில்லன்னா, கட்டிக்கிட்டது அதுக்கும் மேல இருக்கு..?"

"ஆருடி இது..? கூறுகெட்டவ..!"

"ஆருன்னு நீங்களே கேட்டுப்புட்டு பட்டமும் கொடுக்கறிகளாக்கும்..?"

"பூமா..! ஒற்ற வார்த்த சொல்லாம காரியம் சாதிக்க அதுகளுக்கு மட்டும்தான் தெரியுமா..? நமக்குத் தெரியாதா..? சோழவந்தான் மூக்கையாவுக்குப் போனப் போடுடி.."

மாதவன் மர்மக்குரலில் சொல்ல.. பூமாவின் முகம் மலர்ந்து விகசித்தது.. கணவரை காதலுடன் கூடிய மர்மப் பார்வை பார்த்தவள்..

"அட.. ஆமாமில்ல.. முள்ள முள்ளால எடுத்திருவோம் அயித்தான்.." என்றாள்..

சோழவந்தான் மூக்கையா பூமாவிற்குப் பெரியப்பா மகன்.. அவருடைய மகள் கல்யாணி, பார்த்திபன்தான் கணவனாக வர வேண்டும் என்று தவமிருக்கிறாள்.. பார்த்திபனும், அவளும் காதலர்கள்.. பாக்கு வெற்றிலை மாற்றிப் பரிசம்தான் போடவில்லை.. மற்றபடி பார்த்திபனுக்குத்தான் கல்யாணி, கல்யாணிக்குத்தான் பார்த்திபன் என்பது உறுதி செய்யப்பட்ட ஒன்று.. தங்கையின் திருமணத்திற்குப் பின்னர்தான் தன் திருமணம் என்று பார்த்திபன் சொல்லி விட்டதினால் மூக்கையாவும் பூர்ணிமாவுக்காக முனைப்பாக மாப்பிள்ளை தேடிக் கொண்டிருந்தார்... இப்போது பெண்ணும், மாப்பிள்ளையும் வெளிநாட்டிற்குக்

கிளம்பப் போகிறார்கள்.. அவர்கள் மறுவீட்டு விருந்துக்கு வந்திருக்கும் போதே திருமணத் தேதியைக் குறித்து நிச்சயதார்த்தத்தை நடத்தி விட வேண்டும் என்ற பூமாவின் அழைப்பில் அவர் ஊரையே திரட்டிக் கொண்டு வயலூருக்கு வந்து இறங்கி விட்டார்.

பார்த்திபன் தோப்புக்குப் போயிருக்க.. பூமா மகளை இழுத்துக் கொண்டு மொட்டை மாடிக்குப் போய் நெடுஞ்சாண்கிடையாக மகளின் கால்களில் விழுந்தாள்..

"அம்மா.." என்று பதறிய மகளிடம் முந்தானையை விரித்து மடிப்பிச்சை கேட்டாள்..

"நீ வாழாவெட்டியா வீட்டில நின்னுட்டா உங்கண்ணன் கல்யாணம் பண்ணிக்காம தனி மரமா நின்னுருவான் பூரணி.. மடிப்பிச்சை கொடு.. இந்தக் கல்யாணம் நடக்கலைன்னா கல்யாணி என்ன ஆவான்னு நினச்சுப்பாரு.. அவளுக்கு ஒன்னுன்னா உங்கண்ணன் தாங்கிக்குவானா..? நாங்கதான் உசிரோட இருப்போமா..? பொறந்த வீடு வாழறதும், அழியறதும் இப்ப உங்கையில தான் இருக்கு மகளே.."

பூர்ணிமா என்ன செய்வாள்..? அவளால் என்ன செய்ய முடியும்..? இந்தியப் பெண்கள் என்றும் உறவுகளால் கைது செய்யப்பட்டவர்கள்.. தோப்பிலிருந்து திரும்பி வந்த பார்த்திபனிடம் மன்றாடி திருமணத்திற்கு சம்மதிக்க வைத்துவிட்டு அரவிந்தனுடன் சுவிட்சர்லாந்துக்குப் பயணமானாள் அந்தப் பேதை..

அத்தியாயம்- 32

"க்வா.. க்வா.."

குழந்தையின் அழுகுரலில் கண்விழித்துப் பார்த்தாள் பூர்ணிமா.. கட்டிலுக்கு அருகிலிருந்த தொட்டிலில்

மலர்க்கொத்தாக அவளது மகன் படுத்திருந்தான்.. தாய்மை நெஞ்சில் சுரக்க.. பூர்ணிமாவின் இதயம் படபடத்தது.. மகனைத் தொட முயன்றாள்..

"அலட்டிக்காத.. குட்டியை மத்தவங்க பாத்துக்குவாங்க.. ஒன் ஆர் டூ டேஸில உன் உடம்பு தேறிடும்.. அப்ப குட்டியைத் தூக்கிக்கலாம்.." அவளது முடிகோதி காதல் கணவனாக அவளது கன்னம் தட்டினான் அரவிந்தன்..

வேண்டாம் என்று மறுக்க முடியாமலும், வேண்டும் என்று ஏற்க முடியாமலும் மனதுக்குள் போராடினாள் பூர்ணிமா.. இது முடிவில்லாப் போராட்டம் என்று மனது சோர்ந்தது.. இன்று மட்டும்தான் என்றில்லை.. என்று பூமாவின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து அரவிந்தனைப் பின்பற்றினாளோ.. அன்றிலிருந்து இந்தப் போராட்டம் தான்.. பார்த்திபனிடம் மனமறிந்து பொய் சொன்னாள்..

"கழுத்தில தாலி விழுந்து அவர்கூட ஒர்நாள் வாழ்ந்துட்டேன் அண்ணா.. ஓர்யுகம் சேர்ந்து வாழ்ந்ததைப் போல மனசு நிறைஞ்சுருக்கு.. அவரில்லாத வாழ்க்கைய என்னால நினச்சுக்கூடப் பார்க்க முடியாது.. அடிக்கடி வயலூருக்கு வந்துபோக முடியாதுன்னு சொல்றாரு.. இப்ப சுவிட்சர்லாந்து... அதுக்கடுத்து மெட்ராஸ்.. உங்கல்யாணத்துக்குத்தான் வர முடியும்.. உன் நிச்சயத்தில கலந்துக்கனும்னு ஆசையா இருக்குண்ணா.. மாட்டேன்னு சொல்லிராதே.."

இதுதான் பெண் மனமா என்று தங்கையின் மனம் அறியாமல் திகைத்துப் போனான் பார்த்திபன்.. தங்கைக்காக திருமணத்திற்கு ஒப்புக் கொண்டான்.. பெற்றவள் கேட்டுக் கொண்டதை செய்து முடித்து விட்ட பூர்ணிமா மொட்டை மாடிக்கு ஓடித் தனிமையில் கதறி அழுததை ஒளிந்திருந்து பார்த்த பூமா துயரத்தை முந்தானையால் வாய் பொத்தி தடுத்து நிறுத்தி விட்டு.. மனதைக் கல்லாக்கிக் கொண்டு மருமகன் இருந்த அறைக்கு வந்தாள்.. செல்போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்த அரவிந்தன் அதை அணைத்து விட்டு, வியப்புடன் மாமியாரைப் பார்த்தான்.. பூமா அதுவரை அவன் முகம் பார்த்துப் பேசியதில்லை..

"மருமகனும் மகனப் போலதான் தம்பி.." பூமா பேச்சை ஆரம்பித்தாள்..

"அஃப்கோர்ஸ்.. நானும் உங்களை அம்மாவாகத்தான் நினைக்கிறேன்.."

"சந்தோசம் தம்பி.. ஒரு அம்மாவா இதச் சொல்றேன்.. பூரணி மனசு காயப்பட்டிருக்கு.. அது ஆறி உங்க மேல நிலச்சு நிக்கனும்னா நீங்க குழந்த பெத்துக்கறத தள்ளிப் போடாதிங்க.." சட்டென வெளியேறிவிட்டாள் பூமா..

அரவிந்தன் சிந்தனையுடன் மொட்டை மாடிக்கு வந்தான்.. தனித்து அழுது கொண்டிருந்த பூர்ணிமா அவனைக் கண்டதும் வெறுப்புடன் வானம் பார்த்தாள்..

"இங்கே உட்கார்ந்து என்ன பண்ணிக்கிட்டு இருக்கிற..? க்விக்.. க்விக்.. ஆப் அன் அவரில நாம கிளம்பியாகனும்.." என்று அவசரப்படுத்தினான்..

"எங்கே..?" முறைத்தாள் பூர்ணிமா..

"என்னடி கொஸ்டின் இது..? நம்ம வீட்டுக்குடி.."

"என்னால் இப்ப வரமுடியாது.. கொஞ்ச நாளைக்கு இங்கதான் இருப்பேன்.."

"முடியாது.." அழுத்தமாகச் சொன்ன அரவிந்தன் அவளருகில் வந்து குனிந்து..

"ஒன்னு நீ கிளம்பியாகனும்... இல்லேன்னா உன்னைக் குண்டுக் கட்டாக் கட்டித் தூக்கிக் காரில் போட்டுக்கிட்டு நான் போயாகனும்... அன்னைக்கு யாருக்கும் தெரியாம உன்னக் காரில தூக்கிப் போட்டுக்கிட்டுப் போனேன்.. இன்னைக்கு எல்லோருக்கும் தெரியறதைப் போலத் தூக்கிட்டுப் போவேன்.. யாரும் என்னைக் கேள்வி கேட்க முடியாது.. ஐ ஆம் யுவர் ஹஸ்பெண்ட்.."

பூர்ணிமா இயலாமையுடன் எழுந்து புறப்பட்டாள்.. வீடு முழுவதும் உறவினரின் கூட்டம்.. அவள் மனதில் அரவிந்தனின் மீது வெறுப்பு இருப்பதை பார்த்திபன் அறிந்து விட்டால் உடனடியாக திருமணத்தை நிறுத்தி விடுவான்.. பூர்ணிமாவையும் வயலூரில் நிறுத்தி

விடுவான்.. அது கூடாது.. கல்யாணியின் கனவு நிறைவேற வேண்டும்..

சுவிட்சர்லாந்து கனவு தேசமாக இருந்தது.. அவள் கனவிலும் நினைக்காத பயணம்.. அவளது அதிகபட்ச ஆசை எதிர்காலக் கணவனுடன் புல்லட்டில் உட்கார்ந்து அவனது தோளில் முகம் புதைத்துக் கதை பேசியபடி பயணிக்க வேண்டும்..

அவள் விமானத்தில் பயணம் செய்யப் போகிறாள் என்று காதில் கேட்டதற்கே பூங்காவனமும், மல்லிகாவும் பொறாமையில் பொசுங்கிப் போனார்கள்.. பூர்ணிமாவோ பற்றற்ற துறவியைப் போல எதிலும் மகிழ்வு கொள்ளாமல் இயந்திரம் போல அரவிந்தனுடன் சுவிட்சர்லாந்துக்கு பறந்து திரும்பி வந்தாள்.. அனைத்து நொடிகளிலும் இயந்திரமாக இருக்க முடிபவளால், அவன் நெருங்கும் போது மட்டும் அப்படியிருக்க முடியவில்லை.. தீப்பற்றிக் கொண்டதைப் போன்ற ஓர் உணர்வு உடலெங்கும் பரவுவதைத் தடுக்க முடியவில்லை.. அவன் தொட்டு அணைக்கும் போது நெகிழும் உடலையும், மனதையும் கட்டுப்படுத்த முடியவில்லை..

'நான் தோற்றுக் கொண்டிருக்கிறேன்..'

இந்த எண்ணம் அவளது மனதை அரித்துத் தின்றது.. அவள் தனித்துத் தன் துயரத்தில் மூழ்க முடியாமல் அனுபமா அவளை வீட்டு நிகழ்வுகளில் பங்கெடுக்க வைத்தாள்.. கோடிஸ்வரி என் என்ற மமதையில்லாமல் மருமகளைக் கொண்டாடும் மாமியாரை எதிர்த்து நிற்பது எப்படி..? அனுபமா அருமையான மனுஷியாக இருந்தாள்.. பெற்ற மகளைப் போல மருமகளிடம் அன்பு காட்டினாள்.. பதிலுக்கு பூர்ணிமாவின் மனதிலும் பாசம் சுரந்தது.. அவள் பூமாவை அனுபமாவிடம் கண்டாள்..

"அரவிந்தனுக்குத் தேவையானதை நீதான் செய்யனும் பூர்ணிமா... அவனுக்குப் பெட்காபி கொடுக்கிறதில இருந்து, சர்வ் பண்றதுவரை உன் பொறுப்புத்தான்.." என்ற மாமியாரின் கட்டளையை மீற முடியாமல் பணிந்தாள்..

அரவிந்தன் அவளை ஆட்டுவித்தான்.. அவளது விலகலைத் துளியும் சட்டை செய்யவில்லை.. உடற்பயிற்சி செய்து கொண்டிருப்பவனிடம் காபியும், பேப்பரும் கொண்டு வந்து கொடுத்தவளின் கையைப் பற்றி இழுத்து மேலே சரித்துக் கொண்டான்.. திடகாத்திரமான அவனது உடலில் சரிந்திருப்பவளின் உணர்வுகள் கரையுடைக்கவா என்று கேட்டுப் படுத்தி வைத்தன.. அந்தத் தோல்வியும் வந்து விடுமோ என்று அவள்

பயந்து போனாள்.. இருக்கும் துன்பம் போதாதா..? இன்னொன்றையும் இழுத்துக் கொள்ள வேண்டுமா..? திமிறி விலக முயன்றவளை அவன் விடுவித்தால்தானே.. காதோரம் மீசை உரச..

"எங்கே.. ஐ லவ் யு சொல்லு.." என்று கொஞ்சினான்.

"ஐ ஹேட் யு.." திமிறியபடி சொன்னாள்..

"உம்மா கொடுடி.." அவளிடம் கேட்டுவிட்டு அவன் 'உம்மா' கொடுத்தான்..

"விடுங்க என்னை.." கோபத்துடன் அவள் திமிறினாள்.

அந்தக் கோபம் எதற்காக..? அவனது செய்கை-யினாலா, இல்லை அவன் கேட்பதையெல்லாம் நிறைவேற்றவேண்டும் என்று ஆழ்மனம் ஆசைப்படு-வதினாலா..?

"இதுதானே வேண்டாம் என்கிறது.. காபி கொடுக்க வருகிற சாக்கில என்னை சைட் அடிக்கத்தானே வந்தே.. பார்க்கிற பார்வையிலேயே என்னை ஸ்வாஹா செய்த..

இப்ப என்னவாம்..? கட்டிப் பிடிக்கத்தானே ஆசைப்பட்ட.. கட்டிப்பிடிடி.."

தன்னையுமறியாமல் அவனைக் கட்டிப் பிடித்து விட்டு அவள் பதறி விலக அவன் கடகடவென்று ரசித்துச் சிரித்தான்.. பூர்ணிமாவின் உடல் உதறியது.. அங்கிருந்து ஓடிவந்து விட்டாள்... அடுத்த தோல்வியாக அவள் தாய்மையடைந்திருந்தது உறுதியானது.. மயங்கிச் சரிந்தவளைப் பரிசோதித்த லேடி டாக்டர்..

"கங்கிராஜீலேசன்ஸ் மிஸ்டர் அரவிந்தன்.. நீங்க அப்பாவாகப் போறிங்க.." என்று அவனுக்கு கை கொடுத்த போது இவளுக்கு வாழ்வே வெறுத்துப் போனது..

"எனக்குக் குழந்தை வேணும்.."

வேண்டாம் என்று முரண்டு பிடித்தவளிடம் அவன் தீர்மானமாகச் சொல்லி விட்டான்.. வீட்டில் விவரம் பரவி.. அனுபமாவும், ராமகிருஷ்ணனும் விருந்துக்கு ஏற்பாடு பண்ணி கொண்டாட ஆரம்பித்து விட்ட பின்பு அவளால் எதுவும் செய்ய முடியவில்லை..

பார்த்திபனின் திருமணத்திற்கு வயலூர் போய் வந்தார்கள்.. ஒன்பதாவது மாதம் வளைகாப்பு நடத்திய பூர்ணிமாவின் பிறந்த வீட்டினர் அவளைக் கையோடு அழைத்துக் கொண்டு கிளம்பியபோது சந்தோசமாக அவள் கிளம்பினாள்..

'இப்ப என்ன செய்யுவ..?' வெற்றிக் களிப்புடன் அவளது பார்வை கேட்டது..

அவனில்லாமல் அவள் மட்டும் வயலூரில் இருக்கப் போகிறாள் என்ற நினைவே தித்தித்தது..

அவன் வேண்டாம் என்றுதானே நினைத்தாள்.. அவனைப் பிரிந்து வரத் துடித்தாளே.. தலைப்பிரசவத்தைத் தாய் வீட்டில்தான் பார்த்தாக வேண்டும் என்ற நியதியைச் சுட்டிக்காட்டிப் பெற்றவர்கள் அவளை அழைத்துக் கொண்டு கிளம்பிய போது மகிழ்ந்து போனாளே.. அவனது அருகாமையிலிருந்து விலகிப் போவதை வெற்றியாக நினைத்தாளே.. இப்போது என்ன ஆனது..? ஏன் தவிக்கிறாள்..?

சென்னையிலிருந்து வந்தவுடன் எதையோ தொலைத்து விட்டு வந்திருப்பதைப் போல பூர்ணிமாவின் மனம் சுமையேற்று கனத்தது.. அவன்..

'நதி போல ஓடிக் கொண்டிருப்பது காதலில் மட்டுமே சாத்தியம்.. நீராக நீயும் இரு.. நானும் இருக்கிறேன்..' என்று செல்போனில் குறுஞ்செய்தி அனுப்பியபோது திரும்பத் திரும்ப அதை வாசித்தாள்..

தூக்கத்தில் அவன் நினைவில் தலையணையைக் கட்டி விட்டுப் பதறிக் கண்விழித்தாள்.. இரண்டே நாள்கள்தான்.. அவனைப் பார்க்க வேண்டும் என்று மனது ஏங்க ஆரம்பித்து விட்டது.. அவன் மீதான காதல் அவளை ஆட்டுவித்தது.. பிரிவில் தவித்துப் போனாள்.. 'ஓர் முறை வந்து செல்..' என்று மனம் புலம்பியது..

'அவசர வேலை.. கனடாவுக்குச் செல்கிறேன்..'

அவனிடமிருந்து வந்த குறுஞ்செய்தி அவளை சோர்வடைய வைத்தது.. ஒரு போன் கால் போதும்.. அவளது மனதைச் சொன்னால் அவன் கனடாப் பயணத்தை ரத்து செய்து விட்டு அவளிடம் ஓடி வந்து விடுவான்.. அவன் மீதான அவளது காதலை ஒப்புக் கொள்ள முடியாமல் தத்தளித்தது அவள் மனம்..

'இப்ப அவன் எங்கேயிருப்பான்..? என்ன செஞ்சுக்கிட்டு இருப்பான்..? என்ன நினைக்கிறானா.. இல்லயா..?' என்று பொருமினாள் பூர்ணிமா..

அவனைப் பற்றிய நினைவுகளால் நெய்யப்பட்ட பொழுதுகளைக் கடப்பது என்பது எளிதான ஒன்றல்ல.. இரவும் பகலும் அவை அவளை வதைத்தன.. அவனோடு பேசி, சிரித்து, குளித்து, பரிமாறி, உண்டு, சேர்ந்து உறங்கி என்று வாழும் வாழ்க்கையை வாழ ஏங்கியது அவள் மனது..

இவை போதாது என்று பூர்ணிமாவைப் பார்க்க திடிர் விஜயம் செய்தாள் மேனகா.. அழையா விருந்தாளியை வராதே என்று எப்படிச் சொல்வது..? மருமகனின்

'அத்தை' முறையில் இருப்பவளாயிற்றே என்று மாதவனும், பூமாவும் வேண்டாவெறுப்பாக தலையசைத்து வைத்தார்கள்.. பார்த்திபன் அதைக்கூட செய்யவில்லை.. வேலையிருப்பதைப் போல புல்லட்டைக் கிளப்பிப் போய் விட்டான்.. மகனை நிறுத்தி பின்னாடி தொற்றிக் கொண்டு மாதவனும் தப்பித்து விட்டார்.. ஆண்கள் வீட்டை விட்டு வெளிநடப்பு செய்து விடலாம்.. பெண்கள் எங்கே செல்வது..? ஓடவும் முடியாது.. ஒளியவும் முடியாது.. அவர்கள் வீட்டுச் சிறையில் அடை பட்டிருப்பவர்கள்.. பூமா பல்லைக் கடித்தபடி..

"கல்யாணி.. காபித் தண்ணியப் போடும்மா.." என்று மாமியாராக ஆணையிட்டாள்.. கல்யாணி அடுப்படிக்குப் போனாள்.. பூமா எங்கோ பார்த்தாள்..

"எங்க மருமகனுக்கு கழுத்தை நீட்டின உன் பெண் எங்கேயிருக்கா..?" அதிகாரமாக கேட்டாள் மேனகா..

"மாடியில.." ஒற்றை வார்த்தையில் பேச்சை முடித்துக் கொண்டாள் பூமா..

அதற்கு மேல் பூமாவிடம் பேசிக் கொண்டிருப்பது தனது அந்தஸ்துக்கு ஒவ்வாது என்பதைப் போல முகத்தைத் தோரணையாக வைத்துக் கொண்டு மாடிக்குப் போய் விட்டாள் மேனகா... தொலைந்தாள் என்று பூமா நிம்மதியாக, பூர்ணிமா மேனகாவிடம் அகப்பட்டுக் கொண்டாள்.. கையிலிருந்த பழப்பையை வைத்துவிட்டு..

"என்னடா.. சம்பந்தகாரங்க ஊரில நம்ம மேனகா இருக்கிறாளே.. மருமகளை ஒரு எட்டுப் பார்த்து நல்லாயிருக்கியான்னு கேட்டாளான்னு என் அண்ணனும், அண்ணியும் நினைப்பாங்க.. அதுக்காகத்தான் வந்தேன்.. இல்லேன்னா உன்னையெல்லாம் பார்க்க வரனும்னு இந்த மேனகா நினைக்க மாட்டா.." என்று ஆணவத்துடன் சொன்னாள்.. பூர்ணிமாவுக்கு எரிச்சல் வந்து விட்டது..

"இந்த பூர்ணிமாவும் நினைக்க மாட்டாள்.." வெடுக்கென்று சொன்னாள்..

"பதிலுக்குப் பதில் பேசறதில ஒண்ணும் குறைச்சலில்ல.. அவசரத்தில என் அண்ணன் மகன் உன் கழுத்தில தாலியைக் கட்டிட்டார்ங்கிற திமிரில பேசறியா..? ஆசை அறுபது நாள்.. மோகம் முப்பது நாள்.. இப்ப என்மக எங்கேயிருக்கா தெரியுமா..?"

கழுகைப் போல அவள் பார்த்த பார்வையில் பூர்ணிமாவுக்குத் 'திக்' என்று ஆகிப் போனது.. அடிவயிறு கலங்கியது.. மறைத்துக் கொண்டு அலட்சியம் போல முகத்தை வைத்துக் கொண்டாள்..

"அரவிந்தனோட கனடாவில இருக்கிறா.." மேனகா குண்டைத்தூக்கிப் போட்டாள்..

'இருக்காது..' பூர்ணிமாவின் மனம் அலறியது..

"அவர் ஃபாரின்ல படிச்சவரு.. சென்னையில பிறந்து வளந்தவரு.. உன்னைப் போல பட்டிக்காட்டுப் பெண்கூட காலம் பூரா வாழ்வாருன்னு கனவில கூட நினைச்சிராதே.. ஊர்மிளான்னா அவருக்கு உயிர்.. அவரோட டேஸ்ட் தெரிந்து வாழ்க்கை நடத்த என் மகளால்தான் முடியும்.. கூல்டிரிங்க் பேக்டரி ஆரம்பிக்க வந்தவரை உன்னோட அப்பாவும், அண்ணனும் என்னவெல்லாம் பேசினாங்க.. அதுக்குப் பழிவாங்கத்தான் இந்தக் கல்யாண நாடகம்.. என்ன ஒன்னு.. குழந்தை வராம பாத்திருக்கலாம்.. கை மீறி விட்டது போல.. பார்க்கலாம்.. இதுக்கும் அரவிந்தன் ஒரு யோசனையை வைத்திருப்பார்.. காத்துக்கிட்டு இரு.. அரவிந்தன் உன்னை டைவர்ஸ் பண்ணிட்டு ஊர்மிளாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் நாள் ரொம்பத் தூரத்தில் இல்லை.."

கல்யாணி கொண்டு வந்த காபித் தண்ணியைக் கூடக் குடிக்காமல் மேனகா போய் விட்டாள்.. முகத்தைச் சுளித்த கல்யாணி..

"இது இப்படிச் செய்யும்ன்னுதான் காபித்தண்ணியப் போடாம, கழனித்தண்ணியப் போட்டுக்கிட்டு வந்தேன்.. தடிமாட்டுக்கு அதத்தான குடுக்கனும்...?" என்று வினவியபடி நாத்தனாரின் பக்கம் திரும்பினாள்..

பூர்ணிமா இடுப்பைப் பிடித்தபடி சரிந்திருந்தாள்..

"பூரணி.." காபித் தம்ளரை அருகில் இருந்த ஸ்டூலில் வைத்து விட்டு பூர்ணிமாவிடம் ஓடினாள் கல்யாணி..

"அத்தை.." கல்யாணியின் அலறலில் மாதவனுக்கும், பார்த்திபனுக்கும் போனில் செய்தி பறந்தது.. பார்த்திபன் வாடகைக் காருடன் வந்துவிட மதுரையில் உள்ள

மருத்துவமனைக்கு பூர்ணிமாவை அழைத்துக் கொண்டு போனார்கள்..

"வலி வர இன்னும் டென் டேஸாவது ஆகும்ன்னு நினைத்தேனே.." என்ற லேடி டாக்டர் உடனடியாக பூர்ணிமாவை பரிசோதிக்க ஆரம்பித்தாள்..

"தங்கச்சி நல்லாத்தான் இருக்குன்னு நினைச்சேன்ம்மா.. அதனாலதான் வெளியே கிளம்பினேன்.." குற்றஉணர்வுடன் சொன்னான் பார்த்திபன்..

"நானும் அப்படித்தான் நினச்சேன் பூமா.." மாதவன் கையைப் பிசைந்தார்..

"நல்லாத்தான் இருந்தா.. அந்த மேனாமினுக்கி மேனகா உங்க தங்கச்சியப் பாக்கனும்னு மாடிக்குப் போனா.. மகராசி என்னத்தச் சொல்லிட்டுப் போனாளோ.. பூர்ணிமாவுக்கு வலி வந்திருச்சு.." கல்யாணி விரல்களை நெட்டி முறித்தாள்..

பூமா அனைத்துக் கடவுள்களிடமும் பிராத்தனை வைக்க.. பூர்ணிமாவுக்கு அழகான மகன் பிறந்து விட்டான்.. அரவிந்தனின் வீட்டிற்கு தகவல் போனது..

"மாப்பிள்ளை கனடாவில் இருப்பாரு.. இருந்தாலும் அவருக்கும் தகவலச் சொல்லனுமில்ல.." மாதவன் போன் போட்டார்..

'தனியா இல்லப்பா.. கூடவே அந்த ஊர்மிளாவும் இருக்காளாம்..' வேதனையுடன் நினைத்துக் கொண்டாள் பூர்ணிமா..

'எனக்குக் குழந்தை வேண்டும் என்று ஏன் கேட்டான்..? இதற்காகவா..?' மனது வெறுத்துப் போனது.. அவன் கேட்ட குழந்தையை அவள் பெற்றுக் கொடுத்து விட்டாள்.. அதைப் பார்க்க ஓடோடி வர அவன் இந்தியாவில் இல்லையே..

அத்தியாயம்- 33

கண்களில் வழிந்த நீரைக் கட்டுப் படுத்திக் கொண்டாள்.. பிள்ளை பெற்ற உடல் சோர்ந்திருந்தது.. இமைகளை மூடிக் கொண்டாள் பூர்ணிமா..

"க்வா... க்வா..." குழந்தையின் அழுகுரலில் கண்விழித்தவள் மலர் கொத்தாகத் தொட்டிலில் படுத்திருந்த மகனைத் தொட முயன்றாள்..

"அலட்டிக்காத.." அவளது கன்னம் தட்டிய அரவிந்தனின் ஸ்பரிசத்தில் விழி விரித்தாள்.. இவன் எப்படி இங்கே வந்தான்..? கனடாவில் இருந்தானே..

"குட்டியை மத்தவங்க பார்த்துக்குவாங்க.." பரிவுடன் அவன் முடிகோத அவளது மனம் கலங்கியது.. வேண்டாம் என்று தள்ள முடியாமலும், வேண்டும் என்று சொல்ல முடியாமலும் மனம் கலங்கிப் போனாள்..

'இவன் கனடாவில் இருந்தானே..' அவள் மனதில் எழுந்த சந்தேகத்தை கல்யாணி வாய் விட்டே கேட்டு விட்டாள்..

"நீங்க கனடாவில இருந்ததா மாமா சொன்னாரே அண்ணா.. அதுக்குள்ள எப்புடி வந்தீக..? மாமா போன் போட்டு ரெண்டு மணி நேரம்தான ஆகுது..? விட்டலாச்சார்யா சினிமாவில வர்ற மாதிரி டிஷ்ஷீன்னு வந்து நிக்கறீக.." மோவாயில் கை வைத்து அபிநயத்துடன் அவள் கேட்டதை ரசித்துச் சிரித்தான் அரவிந்தன்..

கல்யாணி அப்படித்தான்.. அவளது பெற்றோருக்கு இரண்டே பெண்கள்தான்.. மூத்தவளை சோழவந்தானிலேயே திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள்.. கல்யாணி இளையவள்...

அண்ணன் இல்லாத குறையை அரவிந்தனை வாய் நிறைய 'அண்ணா, அண்ணா' என்று அழைத்துத் தீர்த்துக் கொள்வாள்.. மனப் பூர்வமாக அவள் காட்டும் பாசத்தில் அரவிந்தன் நெக்குருகிப் போவான்..

மாதவனும், பார்த்திபனும் அரவிந்தனுடன் சகஜமாகப் பேசியதில்லை.. மாதவனாவது மகளைத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறோமே என்று அமைதியாகப் போய் விடுவார்.. பார்த்திபன் அப்படியில்லை.. பகையாளியைப் பார்ப்பதைப் போல அரவிந்தனை முறைத்து வைப்பான்.. கல்யாணி கணவனை அதட்டி வெளியே அனுப்பி விடுவாள்..

பூமா அரவிந்தனைக் கொண்டாடுபவள்.. பெண் மனதுக்குத் தெரியும்.. கட்டிக் கொண்ட கணவனின் மனதில் கயமை இருக்கிறதா.. காதல் இருக்கிறதா என்பது.. மாதவனின் விழிகளில் வழியும் காதலை அரவிந்தனின் விழிகளில் அவள் கண்டாள்.. பூர்ணிமாவை அவன் பார்க்கும் பார்வை ஆசை நிரம்பிய காதல் பார்வையாகத்தான் இருந்தது.. இதை உணர்ந்து மகள் கணவனுடன் சேர்ந்து பிழைக்க வேண்டுமே என்று அவளது தாய்மனம் தவியாய் தவித்தது.. வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் மகளுக்கு கிளிப்பிள்ளைக்குச் சொல்வதைப் போல எடுத்துச் சொன்னாள்..

"அவரு செய்தது தப்புத்தான் பூர்ணிமா.. ஆனா அவரு தப்பானவரில்ல.."

"அப்ப.. அவரு என்னத் தூக்கிட்டுப் போனது தப்பில்லன்னு சொல்றியாம்மா..?"

"நம்ம ஊரில இது நடக்கறதுதானடி..? கல்யாணிக்கு மட்டும் எங்கண்ணன் வேற இடத்தில மாப்புள்ள பாத்திருக்கட்டும்.. ஒங்கண்ணன்காரனும் கல்யாணியத் தூக்கிட்டு வந்துதான தாலி கட்டியிருப்பான்..?"

"அதுக்குக் கல்யாணியோட சம்மதம் இருக்குதும்மா.. அண்ணன் மேல அவ உசிரயே வைச்சிருந்தா.. நான் அப்புடியா..?"

இதைச் சொல்லும் போது மகளிடம் தெரிந்த சிறு தடுமாற்றம்தான் பூமாவுக்குப் பிடிமானமாக இருந்தது.. குழந்தை பிறந்தால் எல்லாம் சரியாகிப் போய்விடும் என்று திடமாக அவள் நம்பினாள்.. தன்னைத் தாயாக்கியிருப்பவனை நேசிக்காமல் மகள் இருப்பாளா..? இதுவும் பெண் மனம் அறிந்த ரகசியம்தான்..

"நான் கனடாவில இருந்து நேற்றுத்தான் ரிட்டர்ன் ஆனேன் கல்யாணி.. உடனே பூர்ணிமாவைப் பார்க்க வரனும் என்கிறதுக்காக ஏற்கனெவே பிளைட் டிக்கட் புக் பண்ணி வைத்திருந்தேன்.. நான் ஏரோடிராமில் இருந்த போது தான் மாமாவிடமிருந்து போன் வந்தது.." பூர்ணிமாவை பார்வையால் வருடியபடி சொன்னான் அரவிந்தன்..

"அப்படின்னா எப்படியும் இன்னைக்கு நீங்க இங்க வந்திருப்பீங்கன்னு சொல்லுங்க.." குதூகலமாக கேட்டாள் கல்யாணி..

"யெஸ்.. மை டியர் சிஸ்டர்.." பழையபடி பூர்ணிமாவின் மீது ஓர்பார்வை..

"பாருங்களேன்.. இன்னைக்கு நீங்க எப்படியும் வந்துருவீங்கன்னு உங்க மகனுக்குத் தெரிஞ்சிருக்குண்ணா.. அதனால உங்கள வரவேற்க ரெடியாக் காத்திருக்கான்.." கல்யாணி கை கொட்டி ஆர்ப்பரித்தாள்..

அப்படித்தானோ என்று பூர்ணிமாவுக்கும் தோன்றியது தான் விந்தையிலும் விந்தை.. அவன் ஊர்மிளாவுடன் கனடாவுக்குப் போயிருப்பதாக மேனகா சொன்னாளே.. அது பொய்யா..? அப்படித்தான் இருக்க வேண்டும் என்று மனது நிம்மதியடைய முடியாமல்..

"ஹாய் அத்தான்.." என்று கூவியபடி ஊர்மிளா உள்ளே வந்தாள்..

'இவளா..?' அசூசையுடன் அகன்று விட்டாள் கல்யாணி... அவளுக்குக் ஊர்மிளாவைக் கண்டால் அறவே பிடிக்காது.. அவளிடம் கேட்டால் ஊர்மிளாவை யாருக்குத்தான் பிடித்திருக்கிறது என்று கேட்பாள்.. ஊர்மிளா அரவிந்தனுடன் ஒட்டி உரசியபடி பேச.. அவன் சகஜமாகப்

பதில் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்த பூர்ணிமா மனம் வலிக்க..

'இவனுக்கும் இவளை ரொம்பப் பிடிச்சிருக்கு போல..' என்று தவித்தாள்..

பூர்ணிமாவையும் குழந்தையையும் பார்க்க வந்ததாகச் சொன்னவள் மருந்துக்குக் கூட அவர்கள் பக்கம் திம்பவில்லை.. அரவிந்தனின் மீது அப்புவது ஒன்றே குறியாக இருந்தாள்.. ஊடே பூர்ணிமாவை ஓரக்கண்ணால் பார்த்தபடி..

"கனடாவில கிளைமேட் சூப்பரா இருந்ததில்ல..?" என்று இமை கொட்டினாள்..

பூர்ணிமாவின் முகம் வெளுத்துப் போனது.. அவள் அஞ்சியபடியே..

"யெஸ்.." என்று அரவிந்தன் ஒப்புக் கொண்டான்..

'ஆக, மேனகா சொன்னது உண்மைதான்.. இவ இவர் கூடத்தான் கனடாவில இருந்திருக்கா..' பூர்ணிமாவின் மனம் நொறுங்கியது..

அரவிந்தனை அவள் வெறுத்தாலும், அந்தக் கள்வனின் கைகளில் அவள் உருகியதற்கான வலுவான காரணம் ஒன்று இருந்தது.. அந்தக் 'கள்வனின் காதலி..' அவள்தான் என்ற இறுமாப்பு.. நம்பிக்கை.. அது இன்று தகர்ந்து விட்டதில் அவளது இறுமாப்பு ஆட்டம் கண்டது.

அவள் மீது அவன் ஆசை கொண்டிருந்தது பொய்யா.. கர்ப்பிணியான மனைவியின் மீது அவனுக்கு ஆசை வரவில்லையா..? மாறி விட்டதா..?

பூர்ணிமாவின் மனம் கசந்தது.. அந்தக் கள்வனைக் காதலிக்க முனைந்தாளே.. அவன் மீதான நினைவை மாற்ற முடியாமல் போராடிக் கொண்டிருக்கிறாளே.. அவனோ அவள் அலுத்து விட்டாள் என்று வேறொரு மேனா மினுக்கியுடன் உலகம் சுற்றிக் கொண்டிருக்கிறான்..

அரவிந்தனை அவனது செல்போன் அழைத்தது.. இவன் பேசாமல் செல் போனுக்குத் தாலியைக் கட்டியிருக்கலாம் என்று எரிச்சலைடந்தாள் பூர்ணிமா.. அந்த எரிச்சல்

அவனது செல்போன் அழைப்பை நினைத்தா இல்லை அவனுக்கு அவள்மீது ஆசையில்லை என்பதை நினைத்தா என்பது அவளுக்கே தெரியவில்லை.. அரவிந்தன் போன் பேசுவது பூர்ணிமாவுக்கும் குழந்தைக்கும் தொந்தரவாக இருக்கும் என்ற நினைவில் வெளியில் செல்ல.. அதற்காகவே காத்திருந்த ஊர்மிளா குரூரம் கலந்த வெறுப்புடன் பூர்ணிமாவைப் பார்த்து..

"என்னுடன் தனியாப் பேசனும்னுதான் அத்தான் வெளியே போயிருக்கிறார்.. உன் மூஞ்சியப் பாக்கக் கூட அவருக்குப் பிடிக்கலை.. அத்தானும் நானும் நேற்றுத்தான் கனடாவில இருந்து ரிட்டர்ன் ஆனோம்.. என்னுடன் சேர்ந்து வருவதற்காகத்தான் முன்கூட்டியே இரண்டு டிக்கெட் புக் பண்ணியிருந்தார்.. இப்பவும் நாங்க சேர்ந்துதான் வந்தோம்.. இங்கேயும் அப்படியே வந்திருப்போம்.. அத்தான்தான் இப்போதைக்கு இதைக் காட்டிக்க வேண்டாம்ன்னு சொன்னார்.. ஸோ, அவர் முன்னாடி வர, நான் பின்னாடி வந்தேன்.. உனக்காக ஓடி வந்திருக்கிறார்ன்னு மனக்கோட்டை கட்டிக்காதே.. என்னை வயலூரில கொண்டு வந்து விடுவதற்காகத்தான் அத்தான் வந்திருக்கிறார்.." என்றாள்..

அவள் பேசிக் கொண்டிருக்கும்போதே அறைக்குள் வந்த அரவிந்தன்.. "ஊர்மிளா.. நீ இன்னும் உன் வீட்டுக்குப் போகவில்லையா..? அத்தை என்னிடம் கேட்கிறாங்களே.." என்று புருவங்களை உயர்த்தினான்..

'கேட்டுக்க..' என்பதைப் போல பூர்ணிமாவை ஓர்பார்வை பார்த்த ஊர்மிளா..

"உங்ககூட சேர்ந்தே இருந்துட்டேனா.. தனியாப் போக மனமில்லை அத்தான்.. அம்மாவிடம் அத்தானும் நானும் பிளைட்டில் வந்துக்கிட்டு இருக்கோம்.. அவருக்குப் பிடித்த நான்-வெஜ் அயிட்டங்களா சமைத்து வைக்கச் சொல்லி நம்ம 'குக்'கிடம் சொல்லுங்கம்மான்னு சொல்லியிருந்தேன்.. ஃபீஸ்ட் ரெடியா இருக்கும் அத்தான்.. வாங்க, போகலாம்.." என்று கெஞ்சினாள்..

"ஸாரி ஊர்மிளா.. எனக்கு வொர்க் இருக்கு.. அத்தையிடம் நான் ஸாரி சொன்னேன்னு சொல்லிவிடு.." அரவிந்தன் மறுத்து விட்டான்..

அப்போதும் ஊர்மிளா கிளம்பி விடவில்லை.. அரவிந்தனின் கழுத்தைக் கட்டித் தொங்காத குறையாக கொஞ்சிக் கொண்டிருந்தாள்.. எரிக்கும் பார்வையுடன் பார்த்திபன் உள்ளே வரவும்தான் அரண்டு போனவளாக இடத்தைக் காலி செய்தாள்.. பார்த்திபன் 'த்தூ..' என்று உமிழாத குறைதான்..

"பூர்ணிமா.. உன் புருசன்கிட்டச் சொல்லி வை.. கண்ட கருமாந்திரமெல்லாம் சொந்தம்ன்னு சொல்லிக்கிட்டு வந்து போகக்கூடாது... நேத்து இவளோட ஆத்தா

வந்து உன்னப் பாத்தா.. என்னாச்சோ, ஏதாச்சோ... நீ செத்துப் பொழச்சதப் போல புள்ளப் பெத்து பிழைச்சு எழுந்திருச்சிருக்கிற.. இப்ப மககாரி எந்த வினய இழுத்து விட இங்க வந்து போறான்னு கேட்டுச் சொல்லு.." என்று தங்கையிடம் சப்தம் போட்டான்..

அரவிந்தன் பதிலுக்கு சப்தம் போடுவானோ என்று கல்யாணி பயந்துபோய் கணவனை அடக்க முயன்றாள்.. ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக அரவிந்தன் பதிலுக்கு

சப்தம் போடவில்லை.. புருவங்கள் நெரிய மைத்துனன் சொன்னதைக் கேட்டுக் கொண்டான்.

அனுபமாவும் ராமகிருஷ்ணனும் பேரனையும், மருமகனையும் பார்க்க சென்னையிலிருந்து வந்திருந்தார்கள்..

"நம்மைப் போல ஏஸி, ஹீட்டர்ன்னு இருக்கிற வீடு இல்லண்ணா இந்த வீடு.. நீங்களும் அண்ணியும் நம்ம வீட்டுக்கு வாங்க.." மேனகா ஓடோடி வந்து உபசாரம் செய்தாள்..

"நம்ம வீடா..? உன் வீடுன்னு சொல்லு மேனகா.. வசதியைப் பார்த்தா எங்க வீட்டு நிழலுக்குப் பக்கத்தில் கூட உன்வீடு நிற்க முடியாது.. எங்க பேரனும், மருமகளும் எங்கே இருக்கிறாங்களோ.. அந்த இடம் எங்களுக்கு சொர்க்கம்.. வசதியைப் பார்த்திருந்தா மதுரையில் ஸ்டார் ஹோட்டலில்

ரூம் போட்டிருப்போமே.." அனுபமா இகழ்ச்சியுடன் மேனகாவைப் பார்த்தபடி அமர்த்தலாகச் சொன்னாள்..

பூமாவின் முன்னால் அனுபமா குறைவாகப் பேசி விட்டதில் மேனகாவுக்குப் பூமிக்குள் புதையுண்டு விடலாமா என்று இருந்தது.. அதைவிட மேனகாவை இகழ்ச்சியாகப் பேசிய அனுபமா பூமாவின் கையைப் பிடித்து சொந்தத்துடன் உரையாட ஆரம்பித்ததில் மேனகாவின் அடி வயிறு கொதித்தது.. பேச்சு பேச்சாக இருக்க பூமா விழியுயர்த்தி மேனகாவை இன்னமும் நீ இங்கேதான் நின்று கொண்டிருக்கிறாயா என்று கேட்பதைப் போல பார்த்து வைக்க மேனகாவின் சர்வாங்கமும் பதறின.. ராமகிருஷ்ணன் மனைவி சொன்னதை ஆட்சேபிக்காமல் பேரனைக் கொஞ்சிக் கொண்டிருந்தார்.. அரவிந்தனோ மேனகாவுக்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதைப் போல செல்போனில் பேசிக் கொண்டிருந்தான்..

'என் சொந்தக்காரனா இந்த ஊருக்குள்ள நுழைஞ்சவன்.. இன்னைக்கு நான் மூனாம் மனுஷி.. இதுக இவனுக்கு சொந்த பந்தம்..'

அங்கே நின்று வயிறெரிவதற்குப் பேசாமல் தன் வீட்டில் போய் விழுந்து விடுவதே உத்தமம் என்று நடையைக் கட்டப் போன போது பூர்ணிமா மாடிப்படியில் இறங்கி வருவதைக் கண்டு நின்று விட்டாள்..

'இவ என்ன இத்தனை அழகா இருக்கிறா..'

அதுவரை மேனகா பூர்ணிமாவை ஊன்றிக் கவனித்ததில்லை.. அவள் எப்போதும் தன்னைத்தவிர வேறு பெண்களின் அழகைக் கவனிக்க மாட்டாள்.. ஊர்மிளாவையே உற்றுக் கவனிக்காதவள் பூர்ணிமாவைக் கவனிப்பாளா..?

மஞ்சள் பூசித் தலைக்கு சீயக்காய் தேய்த்துக் குளித்து சாம்பிராணிப்புகை காட்டிக் காய வைத்த கூந்தலை நுனியில் முடிச்சிட்டு சந்தன நிற மேனியுடன் இறங்கி வந்தவளின் அழகு தாய்மைப் பொழிவுடன் தகதகத்தது.. மேனகாவைக் கண்டு கொள்ளாமல் செல்போனில் பேசிக் கொண்டிருந்த அரவிந்தன் போனை மறந்து மனைவியைத்

தாகத்துடன் பார்த்ததைப் பார்த்த மேனகா பொறாமையில் பொசுங்கிப் போனாள்.. பூர்ணிமாவைப் புண்படுத்தும் வெறி கொண்டாள்..

"அரவிந்த்..! நீங்களும் ஊர்மிளாவும் பிளைட்டில் ஒன்றாக வந்தபோது உங்களிடம் அவள் ஏதோ சொன்னாளாமே.. நான் கேட்டதற்கு 'இது எனக்கும் அத்தானுக்கும் இடையில் இருக்கிற சீக்ரெட்..'ன்னு சொல்கிறா.. அதுசரி.. என் அண்ணன் மகனுக்கும்

உனக்கும் இடையில் ஆயிரம் இருக்கும்.. எனக்கெதற்கு அதெல்லாம்ன்னு சொல்லிட்டேன்.. ஆம் ஐ கரெக்ட்..?"

பூர்ணிமாவை ஓரக் கண்ணால் பார்த்தபடி மேனகா கேட்டாள்.. அவளுக்கு அருகில் பூர்ணிமா இருந்தாள்.. அரவிந்தன் தள்ளி நின்றிருந்தான்.. செல்போனில் பேசிக் கொண்டே மனைவியை ரசித்துக் கொண்டிருந்தவன் மேனகா பேசியதைக் கேட்கவுமில்லை.. கவனிக்கவு மில்லை.. அது பூர்ணிமாவுக்குத் தெரியாதே.. முகத்தைச் சுளித்தபடி மாமனார், மாமியாரிடம் பேசப் போய் விட்டாள்.. மேனகாவுக்கு 'குளு குளு' என்று எரிந்தது..

'இஃது.. இப்படியே மெயின்டெயின் பண்ணு.. அரவிந்தனுடன் சிரித்து வாழ்ந்து விடலாம்ன்னு நினைத்துக் கூடப் பார்க்காதே..' வயிற்றெரிச்சல் தணிந்தவளாக வீடு நோக்கிக் கிளம்பிப் போனாள்..

அரவிந்தன் வயலூர்வாசியாகவே மாறிப் போனான்.. வாரத்திற்கு ஓர்முறை வருவது.. வந்தால் நான்கு நாள்கள் தங்குவது.. மாதவனின் தோப்பு துரவைச் சுற்றிப் பார்ப்பது என்று தலைக்கனமில்லாமல் இணக்கமாக பழகியவனிடம் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்க முடியாமல் மாதவன் பேசிப் பழக ஆரம்பித்தார்.. பூர்ணிமாவின் கணவன் என்பதினால் பார்த்திபனும் தன் கோபத்தைக் கை விட்டு 'வாங்க, போங்க' என்று ஓர்சில வார்த்தைகளைப் பேசி வைத்தான்.. மூன்று மாதங்கள் ஓடின.. மகனையும் மனைவியையும் சென்னைக்கு அழைத்துப் போக வந்த அரவிந்தனிடம்..

"என்னால் உங்ககூட வர முடியாது.." என்று திட்டவட்டமாக கூறிவிட்டாள் பூர்ணிமா..

கணவனுக்கும் மனைவிக்கும் வாக்குவாதம் வலுத்ததில் விசயம் வீடு முழுவதும் பரவியது.. 'பாவி மகளே..' என்று தலைதலையாக அடித்துக் கொண்ட பூமாவிடம்..

"அண்ணன் தனிமரமா நின்னுரும்ன்னு பயம் காட்டி இவரோட வாழ அனுப்பி வைச்சேம்மா.. நானும் போனேன்.. இப்ப அண்ணனுக்கு கல்யாணியோட கல்யாணமாகிருச்சு.. கல்யாணி ஏழுமாச கர்ப்பமா இருக்கா.. இதுக்கு மேல என்ன..? எதுக்காக நான் இவர்கூட வாழப் போகனும்..?"

இப்படியொரு நியாயத்தைப் பேசிய மனைவியை தீர்க்கமாகப் பார்த்த அரவிந்தன்..

"உன் அப்பாவுடன் உன் அம்மா எதுக்காக வாழ்கிறாங்கடி..? என் டாடியுடன் என் மம்மி எதுக்காக வாழ்கிறாங்க..? உன் அண்ணனுடன் கல்யாணி எதுக்காக வாழ்கிறது..? வாழ்க்கை உன்னையும் என்னையும் சேர்த்திருக்கிறது பூர்ணிமா.. நாம் சேர்ந்து ஜர்ன் பண்ணனும்.. அதுக்காக நீ என்னுடன் வாழ வரனும்.." என்றான்..

"முடியாது.." முரட்டுப் பிடிவாதத்துடன் மறுத்தாள் பூர்ணிமா..

"அப்படி நீ சொல்ல முடியாதுடி.. ஏன்னா நானும், நீயும் ஹஸ்பெண்ட் அண்ட் வொய்ப் மட்டுமில்லை.. இந்தக் குட்டிக் கண்ணனுக்கு அப்பா, அம்மாவா ஆகியிருக்கிறோம்.. மறந்து விடாதே.." அரவிந்தன் பூர்ணிமாவின் கையிலிருந்த மகனைச் சுட்டிக் காட்டினான்..

"இவன் என் பிள்ளை.." பூர்ணிமா மகனை இறுக்கிக் கொண்டாள்..

"நானில்லாமல் இவன் வரவில்லை.." அரவிந்தன் மகனைப் பறித்துக் கொண்டான்..

தாய், தகப்பன், அண்ணன், கல்யாணி என்று அனைவரும் இருக்கும் போது அரவிந்தன் பேசிய அந்தப் பேச்சு நாகரிகமற்றது என்ற லஜ்ஜை கலந்த கோபம் கொண்டாள் பூர்ணிமா.. தலை நிமிரக்கூட அவளுக்குச் சங்கடமாக இருந்தது.. வெட்கம் பிடுங்கித் தின்றது..

"கண்டவளோடு கனடாவில் அலைந்த புத்தி.. வேற எப்புடிப் பேசும்..? இப்படித்தான் தறி கெட்டுப் பேசும்.." என்று சீறிவிட்டாள்..

"கண்டவளோடு கனடாவில அலைந்ததேனா..?" அவனது கண்கள் இடுங்கின.. மனைவியை எரித்து விடுவதைப் போலப் பார்த்தான்..

"ஸோ.. என்னுடன் வர நீ மறுப்பதற்கான காரணம் என்மீது உனக்கு இருக்கும் வெறுப்பு இல்லை.. வேறு ஏதோ.. அது என்னன்னு எனக்குத் தெரிந்தாகனும்.. சொல்லு.. உன் மனதில் என்ன இருக்கு..?"

"உங்க மனதில் இருக்கிறதைப் போல அழுக்கு இல்லை..?"

"என்ன அழுக்கைக் கண்டு விட்ட..?"

"அதை உங்க அத்தை மக ரத்தினத்திடம் போய் கேளுங்க.."

"என் அத்தை மகள் ரத்தினமா..? ஹீ இஸ் தட்..?"

அரவிந்தன் புரியாமல் மற்றவர்களைப் பார்த்தான்.. மாதவனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.. மகளாக இருந்தாலும் இது கணவன், மனைவிக்குள் இருக்கும் போராட்டம்.. அவர் தலையிடக் கூடாது என்பது அவரது கொள்கையாக இருந்தது.. பார்த்திபனோ தங்கை காரணமில்லாமல் இந்த முடிவை எடுத்திருக்க மாட்டாள் என்ற கடுங்கோபத்துடன் அரவிந்தனை முறைத்துக் கொண்டிருந்தான்.. பூமா அழுது அழுது குற்றுயிரும் குலையுயிருமாக ஆகிஇருந்தாள்.. இவர்கள் அனைவருக்கும் ஈடு கொடுத்து நிதானத்தில் இருந்தது.. கல்யாணி மட்டும்தான்.. அவள் மெல்லிய குரலில் எடுத்துக் கொடுத்தாள்..

"இவ ஊர்மிளாவைச் சொல்கிறாள் அண்ணா.."

"ஊர்மிளாவையா..? அவளை என்ன கேட்க வேண்டியிருக்கிறது..? உனக்கும் எனக்குமான பேச்சில் இடையில் வர அவள் யார்..?"

"ஓ.." கண்கள் சிவக்க உதட்டை வளைத்து கோபத்துடன் அழகு காட்டினாள் பூர்ணிமா..

"இவரு அவகூட மாசக்கணக்கில கனடாவில குடும்பம் நடத்துவாராம்.. அத ஊரு உலகத்துக்கு மறைக்காம ஜோடி போட்டுக்கிட்டு ஏரோப்பிளேனில ரெண்டு பேரும் ஊர்வலமாக வந்து இறங்குவாங்களாம்.. இவேராட புள்ளய நான் பெத்துட்டேன்ங்கிறதுக்காக ஒப்புக்குச் சப்பாணியா என்ன ஓரம் கட்டி வைக்க வாடின்னு கூப்பிடுவாராம்.. நானும் கேணச்சியப் போல புள்ளயத் தூக்கிக்கிட்டு இவரு பின்னால ஓடனுமாம்.. என்ன ஆருன்னு நினைச்சாருன்னு கேளுண்ணே.."

பார்த்திபன் ஆத்திரத்துடன் ஏதோ பேச வாய் திறக்க..

"வேண்டாம் பார்த்திபன்.." என்று ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்தான் அரவிந்தன்..

"இது எங்களுக்குள் நடக்கும் வார்.. நீங்க பூர்ணிமாவின் அண்ணனாகவே இருந்தாலும் தேர்டு பெர்சன்தான்.. இண்டர்பியர் ஆகாதீங்க.. உங்க தங்கை சொல்கிற கம்ப்ளெயிண்ட்ஸ் எல்லாம் உண்மைதான்னு ப்ரூவ் ஆகிட்டா அப்ப என்னன்னு கேளுங்க.. பதில் சொல்கிறேன்.."

பார்த்திபன் பல்லைக் கடித்தபடி முறைப்புடன் மௌனமாக.. அரவிந்தன் செல்போனை எடுத்து ஊர்மிளாவின் நம்பரை அடித்து விட்டு ஸ்பீக்கரில் போட்டான்..

"ஹாய் அத்தான்.." ஊர்மிளாவின் உற்சாகக் குரல் எல்லோருக்கும் கேட்டது..

"ஊர்மிளா.. நான் வயலூர் வரனும்ங்கிற பிளானில் மதுரைக்கு வர ஏரோடிராம் வந்தப்ப நீயும் அங்கே இருந்தாயே.. தனியா ஏன் டிராவல் பண்ண நினைத்த..? அன்றைக்கே கேட்கனும்னு நினைத்திருந்தேன்.. எனக்கு மகன் பிறந்து விட்ட நியுஸ் கிடைத்த சந்தோசத்தில் மறந்து விட்டேன்.."

"அதுவா அத்தான்.. ஒரு இண்டர்வியூ அட்டெண்ட் பண்ண சென்னைக்கு வந்திருந்தேன்.. அம்மா இல்லாம சென்னையில இருக்க முடியலைன்னு வயலூருக்குத் திரும்பிட்டேன்.. தட்ஸ் ஆல்.. ஆமாம்.. நீங்க என்ன

கனடாவில இருந்து வந்ததும் வராததுமா வயலூருக்கு ஓடி வந்துட்டிங்க.."

"ஃபேமிலி மேன்ம்மா.. வொய்ப், குழந்தையின் ஞாபகம்.. பை.."

போனை அணைத்து விட்டு பூர்ணிமாவிடம் "போதுமா" என்று கேட்டான்.. அவளோ போதாது என்று தலையாட்டினாள்..

"உங்க நொத்தை சொன்னாளே.." என்று நொடித்தாள்..

"நொத்தையா..?" அரவிந்தன் கல்யாணியைப் பார்க்க.. அவள் சிரிப்பை அடக்கிக் கொண்டு..

"உங்க அத்தை மேனகாம்மாவைச் சொல்கிறா அண்ணா.." என்று மொழி பெயர்த்தாள்..

"அத்தையா..? அவங்க என்ன சொன்னாங்க..?"

"ஊம்..? அந்தம்மாளோட மகளும் நீங்களும் கனடாவில உல்லாசமா ஊர் சுத்திக் குடும்பம் நடத்திக்கிட்டு இருந்தீங்களாம்.. சேந்தே இந்தியாவுக்கு வந்துட்டு சேந்தே மதுரைக்குப் பிளேன் பிடிச்சு வந்தீங்களாம்.."

"சேச்சே.."

"இதை ஏன் சாமி எங்கிட்டச் சொல்றீக.. உங்க அழகு அத்தைகிட்டச் சொல்லுங்க.. அவுகதான் வண்ட, வண்டயா கத சொன்னாக.."

"சொன்னா.. நீ நம்பிருவியா..?"

"நம்பாம என்ன பண்ண..? பெத்த மகளப் பத்தியில்ல சொல்றாக..?"

பூர்ணிமாவின் கண்கள் கலங்கி விட்டன.. அவளது மனதிலிருந்த துயரம் தொண்டையைக் கவ்வியதில் பேச முடியாமல் திணறினாள்..

"இவ்வளவுதானா நீ..? யார் என்ன சொன்னாலும் கேட்டுக்குவியா..? உனக்குன்னு சுய புத்தியே கிடையாதா..? நான் உன்னைத் தூக்கிக் கொண்டு போனது தப்புத்தாண்டி.. 'நோ அதர் வே'ன்னு எத்தனை தடவைதான் சொல்வது..? உன் குடும்பத்தை மிரட்டவா தூக்கிக்

கொண்டு போனேன்..? நியாயமான முறையில் பெண் கேட்டேண்டி.. உன் அண்ணன் கொடுக்க முடியாதுன்னு சொல்லிட்டார்.. உனக்கு வேற இடத்தில் மாப்பிள்ளை பார்த்து விட்டார்.. மேரேஜ் பிக்ஸ் ஆகி விட்டால் நான் உன்னைப் பெண் கேட்பது கூட இஷ்யூ ஆகி விடும்.. அதனால் உன் குடும்பத்துக்கு ஒரு நெருக்கடியைக் கொடுக்கத்தான் கிட்நாப் பண்ணினேன்.. உன் பாயிண்ட் ஆஃப் வியூ பிரகாரம் நான் கள்வன்தான்.. பட்.. உன்னை மட்டும் காதலிக்கும் கள்வன்.. இந்தக் கள்வனின் காதலி நீ மட்டும்தாண்டி.. பிலிவ் மீ பூர்ணிமா.. பட்.. இந்த அத்தை.."

அரவிந்தன் கண்கள் சிவக்க ஊர்மிளாவுக்குப் போன் போட்டதைப் போல மேனகாவுக்கும் போன் போட்டு ஸ்பீக்கரை ஆன் செய்தான்..

"சென்னையில் இருந்து பேசறேன் அத்தை.."

"ட்ரு காலர்ல சோழவந்தான்னு காட்டுதே அரவிந்த்.."

தான் வித்தாரக்கள்ளி என்பதை நிரூபித்தாள் மேனகா.. ஆச்சரியப்பட்டு வாய் பொத்தி விழி விரித்தாள் கல்யாணி.. பூமாவுக்கும், பூர்ணிமாவுக்கும் அந்த ஆச்சரியமில்லை.. மேனகா எப்பேற்பட்டவள் என்று அவர்களுக்குத்தான் தெரியுமே.. பார்த்திபனுக்கு கொலை வெறிவந்தது.. மாதவன் தலையில் அடித்துக் கொண்டார்..

"சென்னைக்குப் போய்கிட்டு இருக்கேன் அத்தை.."

"தனியாவா அரவிந்த்..?"

"யெஸ் அத்தை.. அவ சரிப்பட்டு வர மாட்டா.. உன் பேரண்ட்ஸ் வீட்டிலேயே இருன்னு விட்டு விட்டுக் கிளம்பிட்டேன்.. நீங்க சொன்னதை நான் கேட்டிருக்கனும் அத்தை.. என் மேரேஜ் விசயத்தில் அவசரப்பட்டு விட்டேன்.."

வெறும் வாய் வார்த்தைகள்தான் அவை.. அவற்றைக் கேட்க முடியாமல் துடித்துப் போனாள் பூர்ணிமா.. மனைவியின் விழிகளில் ரண வலியைக் கண்ட அரவிந்தனின் இமை துடித்தது.. கட்டுப்படுத்திக் கொண்டான்.. கத்தி எடுக்காமல் ரணசிகிச்சை செய்ய முடியாது.. பூர்ணிமாவின் மனதில் விழுந்து விட்ட சந்தேக விதையை நீக்க இந்த நாடகம் அவசியம்..

"டேக் இட் ஈஸி அரவிந்த்.. நடந்ததை கனவா மறந்து விடுங்க.. உங்களுக்கு உங்க ஸ்டேட்டஸிலேயே ஆயிரம் பெண்கள் கிடைப்பாங்க.. இந்தப் பட்டிக்காட்டு பூர்ணிமா உங்களுக்கு மேட்ச் ஆகவே மாட்டா.." குதூகலத்துடன் சொன்னாள் மேனகா..

'பாவி..' கைவிரல்களை நெட்டி முறித்தாள் கல்யாணி..

"ஆயிரம் பெண்களை விடுங்க அத்தை.. உங்க மகள் கிடைப்பாளா..? அதைச் சொல்லுங்க.." அரவிந்தனால் பூர்ணிமாவைப் பார்க்க முடியவில்லை..

அவனது சட்டையைப் பற்றி உலுக்கி விடும் ஆவேசத்துடன் இருந்தாள் பூர்ணிமா.. அவளது கண்ணெதிரே, காது கேட்க அரவிந்தன் சொன்ன வார்த்தைகளை அவளால் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை..

"ஷி இஸ் வெயிட்டிங் ஃபார் யு.. அத்தானுடன் கனடா போகனும்னு ஆசையாய் இருக்கும்மான்னு சொன்னவ அவ.. நான்தான் உங்களிடம் அதைச் சொல்ல பயந்துக்கிட்டு பேசாமல் இருந்துட்டேன்.."

"ஏன் அத்தை.. சொல்லியிருக்கலாமே.."

"இன்னைக்குத்தான் இப்படிப் பேசறிங்க.. இதுக்கு முன்னாலே இப்படியா பேசினீங்க..? என்னவோ ஊரில் இல்லாத ரதியை மேரேஜ் பண்ணிட்டதைப் போல 'என் வொய்ப்' 'என் மாமனார்' 'என் மைத்துனன்' அப்படின்னு அவங்க வீட்டிலேயே கிடையாய் கிடந்தீங்க.. ஒரு காபி குடிக்க கூட எங்க வீட்டுப் பக்கம் வந்ததில்லை.. ஊர்மிளான்னு ஒருத்தி இருக்கிறாள் என்பதையே மறந்து போனதைப் போல நடந்துக்கிட்டிங்க.. இப்பவே இப்படின்னா குழந்தை பிறந்தவுடன் நீங்க டோட்டலா எங்களை மறந்து விடுவீங்கன்னு நினைச்சிருந்தேன்.. தேங்க் காட்.. நீங்க மயக்கத்தில இருந்து வெளியே வந்துட்டிங்க.."

"மயக்கமா..?"

"மயக்கம்தான் அரவிந்த்.. ஊர்மிளாவைப் போல அழகி ஒருத்தி உங்களுடன் சென்னையில இருந்து மதுரை வரை பிளைட்டில் டிராவல் பண்ணினா.. நீ எங்கே இங்க வந்த..?

எப்படி வந்த..? ஏன் வந்த..? அத்தை எங்கே..? அப்படி இப்படின்னு ஆயிரம் கேள்விகளைக் கேட்டு போரடிச்சுட்டிங்களாம்.. இதில் கனடாவை நாங்க எப்படி நினைத்துப் பார்க்கிறதாம்..?"

"அப்புறம் ஏன் அத்தை பூர்ணிமாவிடம் ஊர்மிளாவும், நானும் கனடாவில் உல்லாசமா சுத்திக்கிட்டு இருக்கிறோம்ன்னு பொய் சொன்னீங்க..?"

அரவிந்தன் நிதானமாகக் கேட்ட கேள்வியில் அதுவரை அவன் அவளிடம் போட்டு வாங்கியிருக்கிறான் என்ற உண்மை புரிந்து போனதில் நிலைகுலைந்து போனாள் மேனகா..

"அரவிந்த்.."

"ச்சே.. என் பெயரைச் சொல்லக்கூட உங்களுக்கு உரிமையும், தகுதியும் இல்லை.. இதை டாடியிடம் சொன்னால் போதும்.. ஒரு செகண்டில் உங்களுக்குக் கொடுத்திருக்கிற புராப்பர்ட்டீஸ் அத்தனையையும் பிடுங்கிடுவார்.. மகேந்திரனின் முகத்துக்காக விட்டு வைக்கிறேன்.. இனி என் முகத்தில் விழிக்காதீங்க.. என் கண் முன்னால் உங்களைப் பார்த்தால் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது.."

போனை அணைத்தவன் கோபம் குறையாமல் பூர்ணிமாவை முறைக்க அவள் நடுநடுங்கி அவன் கால்களைப் பற்றினாள்..

"விடுடி.. நானே கள்வன்.. என் காலை ஏன் பிடிக்கிற..?"

"இந்தக் கள்வனைக் காதலின்னு நீங்கதானே அத்தான் சொன்னீங்க..? நான் கள்வனின் காதலி.. கள்வனைக் காதலிப்பவள்.. காலை விடமாட்டேன்.. உங்களையும் விடமாட்டேன்.."

குடும்பத்தினர் இருப்பதையும் மறந்து அவள் தன் காதலை ஒப்புக் கொண்டதில் அரவிந்தனின் முகம் மிருதுவானது.. பூமா புத்துயிருடன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.. மாதவன் இளநகையுடன் வேறு பக்கம் பார்த்தார்.. பார்த்திபன் பகையை மறந்து அரவிந்தனின் தோள்மீது கை

போட்டான்.. கல்யாணி பூர்ணிமாவின் தோளைப் பற்றி எழுப்பி..

"போதும்.. போதும்.. காதலிச்ச காலத்திலயே எங்கண்ணன் உன்னக் கைவிடல.. இப்பத் தாலிகட்டி ஒரு புள்ளைக்கு அப்பாவாவும் ஆகிட்டார்.. இப்பப் போயி வீறாப்பக் காட்டுவாரா..? எழுந்திரு.." என்று சிரித்தாள்..

பெற்றோரிடமும், தமையனிடமும், கல்யாணியிடமும், பிறந்த ஊரிடமும் விடை பெற்று மகனுடன் அரவிந்தனின் காரில் ஏறிய பூர்ணிமா தன்னைப் புதுமணப் பெண் போல் உணர்ந்தாள்.. மதுரை நான்கு வழிச்சாலையில் கார் வேகமெடுத்தபோது நகர்ந்து கணவனின் தோள் மீது தலைசாய்த்தாள்.. சென்னையில் ஆரத்தி எடுத்து மருமகளையும், பேரனையும் பங்களாவுக்குள் அழைத்துக் கொண்டாள் அனுபமா.. வீட்டுக்குள் பாதம் பதித்த பூர்ணிமாவுக்குள் 'இது என் வீடு..' என்ற சொந்தம் எழுந்தது.. இரவில் அனுபமா பேரனைப் பார்த்துக் கொள்வதாகக் கூறிவிட மாடியேறி அரவிந்தனின் மார்பில் சாய்ந்தவளுக்கு..

'இதுதான் சொர்க்கம்..' என்று தோன்றியது.. இதைத்தானே அவனும் சொன்னான்..

'ஓர்நாள் என்னுடன் வாழும் வாழ்வை சொர்க்கம் என்று நீ சொல்லுவாய்..' என்றானே..

சந்தர்ப்பவசத்தால் அவன் அவளுக்கு 'கள்வன்' ஆனான்தான்.. அவனது அன்பினால் அந்த உள்ளம் கவர் கள்வன் அவனைக் காதலிக்கவும் வைத்து விட்டானே.. இதுதான் அன்பின் வலிமை என்பதோ..

- முற்றும் -